தமிழர் நாகரிக வரலாறு

— முதற் பகுதி —

விடி வெள்ளி

க. த. திருநாவுக்கரசு

எம். ஏ. (தமிழ்) எம். ஏ. (வரலாறு)

தொல்காப்பியர் நூலகம்,

202, ஜானி ஜான் கான் தெரு,

சென்னை–14

முதற் பதிப்பு : மார்ச்சு — 1962
(உரிமை பதிவு செய்யப்பெற்றுள்ளது)

வெளியீடு 20
விலை ரூபாய் 4—50

அச்சிட்டோர் :
முத்தையா அச்சகம்
202, ஜானி ஜான் கான் தெரு,
சென்னை-14.


நூலகத்தார் உரை

திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள் சென்னை மாநில அரசாங்கக் கல்வித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறையில் பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின்கீழ் தமிழ் நீதி நூல்களைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்.

அவர் வரலாறு பற்றியும், தமிழ்ப் பண்பாடு பற்றியும் சில நூல்கள் எழுதியுள்ளார். வரலாறு, தமிழ் ஆகிய இரண்டிலும் ஒரு சேரப் புலமையும் ஆர்வமும் உடைய அவர் பொதுவாக அறிவுலகுக்கும் சிறப்பாகத் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்ற முடியும். தமிழ்நாடு அவரை ஊக்குவிக்குமாக.

இந்நூல் தமிழர் நாகரிக வரலாற்றின் முதற்பகுதியே ஆகும். இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த பகுதிகள் இன்னும் சில ஆண்டுகளில் வெளிவரும்.

தொல்காப்பியர் நூலகத்தார்



ஆசிரியர் முன்னுரை

வரலாறு என்பது ஒரு பெருங்கடல். அக்கடலில் தோன்றி மறையும் நாகரிக அலைகள் எண்ணிறந்தன. அவற்றுள் ஒன்று தமிழர் நாகரிகமெனும் அலையாகும். அந்நாகரிக அலைகள் காலமெனும் கரையோரத்தில் கொண்டுவந்து ஒதுக்கியுள்ள மணிகள் பல. அவை உலகம் உள்ளளவும் மங்காமல் ஒளி வீசி, மன்பதையை மாண்புறச் செய்யும் என்பது திண்ணம்.

இந்நூலுள் 'நாகரிகம்' என்னும் சொல்லினை விரிந்த பொருளில் பயன்படுத்தியுள்ளேன். பொதுவாக 'நாகரிகம்' என்னும் சொல் நகர மக்களின் வாழ்க்கைப் பாங்கினை யுணர்த்துவதாகும். பேராசிரியர் கே. பி. ஜெயசுவால் 'நாகரிகம் என்பதனை நாகரீகம் எனப் பிரித்துக்கொண்டு, இந்தியாவில் நாகர், இனத்தைச் சார்ந்த மன்னராலும், மக்களாலும் நிறுவப்பெற்ற வாழ்க்கைமுறையே நாகரிகம், என்பர். இக்கோட்பாடு ஒருதலைச் சார்புடையதாகத் தோன்றுகிறது.

மேலை நாட்டினர் நாகரிகத்தினையும் (Civilization) பண்பாட்டினையும் (Culture) வெவ்வேறுகப் பாகுபடுத்தியுள்ளனர். நாகரிகம் என்பது நகர மக்கள் வாழ்க்கையில் அரும்பிய வாழ்க்கை நெறி என்பர். அத்தகைய வாழ்க்கை நெறியின் பயனே—மலர்ச்சியே பண்பாடென்பர். அப்பயனே மொழி, கலை, கடவுள் நெறி, மெய்யுணர்வு, சமுதாயப் பழக்க வழக்கங்கள் அரசியல் அமைப்புக்கள் முதலியவற்றின் மூலம் வெளிப்படுகின்றது. அவற்றுள் தனிப்பட்டயாதொன்றும் பண்பாடாகாது. அவையாவும் ஒருங்கு சேர்ந்தே பண்பாடெனும் மலராக மலர்ச்சியுறுகின்றன.

மக்களினம் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் பெற்ற விடுதலையின் பயனே பண்பாடாகும். இத்தகைய மாபெரும் விடுதலையை மக்களினம் பெற்றுச் சிறப்படையப் பயன்பட்ட—பயன்பட்டு வரும் கருவியே நாகரிகம் எனலாம். ஆகவேதான், உலகில் நாகரிகத்தினைக் காட்டிலும் பண்பாடு அளவால் சுருங்கியதாய், ஆனால், செறிவும் சிறப்பும் மிக்கதாய் விளங்குகின்றது.

நம் நாட்டில் மேலை நாடுகளைப் போன்று நாகரிகமும் பண்பாடும் வேறுபட்டு, விளங்காமல் ஒரு ரூபாய் நாணயத்தின் இருபக்கங்களைப்போன்று இரண்டறக் கலந்தும், இணைந்தும், இழைந்தும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் கருத்துக்களும், கோட்பாடுகளும் என்னுடைய சொந்தக் கருத்துக்களும், கோட்பாடுகளுமேயாகும். அவை அரசியலாரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தா. இந்நூல் தமிழகத்து அரசினரின் பணித்துறைச் சார்பான வெளியீடன்று. இந்நூல் வெளியிட இசைவு தந்தருளிய (Dis. No. 4438/59) தமிழகத்துக் கல்வித்துறை இயக்குனர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியினைச் செலுத்தும் கடப்பாடுடையேன்.

இந்நூலினை எழுதத் தொடங்கிய நாள்முதல் இன்றுவரை பலவகையில் பேருதவி புரிந்துவரும் எனது மனைவிக்கும், இந்நூலினை வெளியிட முன்வந்த தொல்காப்பியர் நூலகத்தாருக்கும், அழகுறஅச்சிட்டுதவிய முத்தையா அச்சகத்தாருக்கும் என்றும் என் நன்றி உரியதாகும்.

அண்ணாமலைநகர்
10—2—62

க. த. திருநாவுக்கரசு

உள்ளுறை

முதற் பிரிவு

1. வரலாறு தேவையா? ... 9
2. தமிழகத்தின் தொன்மை ... 24
3. தமிழகத்தின் இயற்கை அமைப்பு ... 53
4. வரலாற்றிற்கு முற்பட்டகாலத் தமிழகம் ... 82
5. தமிழரின் தாயகம் ... 105
6. தமிழகத்தின் நாட்டுப்பிரிவு ... 127

இரண்டாம் பிரிவு

7. விடிவெள்ளி ... 138
8. வாழ்வியல் ... 148
9. அரசியல் ... 203
10. தொழில் இயல் ... 229
11. அறிவு இயல் ... 235
12. இறை இயல் ... 267

வரலாறு

'கடந்த காலம் என்னும் எல்லையில்லாப் பெருவெளியில், காலத்தச்சன் காட்டியுள்ள அனுபவம் என்னும் மாபெரும் கோபுரமே வரலாறு. இப் பழம்பெரும் கோபுரத்தின் கொடுமுடியில் ஏறி, அங்கிருந்து அப்பெருவெளியின் முழுத் தோற்றத்தைக் காண முயல்வது எளிய செயலன்று. எனினும், இளைஞர்கள் ஆற்றல் மிக்கவர்கள். அவர்கள் முயன்றால் அப்பெருவெளியின் முழுத் தோற்றத்தையும் காணலாம்.

H. W. வான்லூன்

1

வரலாறு தேவையா?

"வரலாறு என்பது கடந்த கால நிகழ்ச்சிகளைத் தொகுத்து உரைப்பது அன்று; கடந்த கால நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு உரிய தொலைநோக்கியேயாகும்."

—டாக்டர் S. இராதாகிருட்டிணன்.

மக்களினம் நினைவுக்கு எட்டாத தொல்பழங்காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில், இன்று வரை அடைந்துள்ள வெற்றி தோல்விகளையும், பெருமை சிறுமைகளையும், வாழ்வு தாழ்வுகளையும், இன்ப துன்பங்களையும், ஏமாற்றங்களையும் சுவைபோடு முறையாகக் கூறும் தொடர்கதையே வரலாறு எனலாம்.

மனிதன் காட்டில் திரிந்து காய்கனி முதலியனதின்று விலங்குகளிடையே வாழ்ந்து வந்த காலம் முதற் கொண்டு, சமுதாய அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த நாகரிகத்தை அடைந்த காலம் வரை அவன் பெற்ற அனுபவக் கருவூலமாக விளங்குவதே வரலாறு.

தனி மனிதன் பிறமக்களோடு கொண்ட தொடர்பினையும் ஓர் இனத்தைச் சேர்ந்த் மக்கள் வேற்று இனமக்க

ளோடு கொண்ட உறவையும், அவர்கள் தங்களுக்குள் விட்டுக் கொடுத்துப் பொறுமையுடன் வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொண்டதையும் எடுத்து இயம்புவதே வரலாறு.

'மக்களின் வாழ்க்கை கடந்த காலத்தில் எப்படி இருந்தது?' என்பதை விளக்க முயலுவதே வரலாறு. உலகில் உள்ள கலைகள் அனைத்தையும் ஈன்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் போற்றி வளர்த்த பெருமை வரலாற்றிற்கு உரித்தாகும். இக்காரணத்தினால் தான் 'அறிவியலின் அன்னை' என்று வரலாற்றை அறிஞர் பாராட்டுகின்றனர்.

வரலாற்றின் பயன்

நம்முடைய உள்ளங்களிலிருந்து ஊற்றெடுக்கும் பேரார்வமே வரலாற்றிலிருந்து நாம் பெறக் கூடிய சிறந்த பயனாகும்" என்று கவிஞர் கதே (Goethe) மொழிந்துள்ளமை இங்கு நினைவு கூரத் தக்கது. நமது தனி வாழ்விலும் பொது வாழ்விலும் வழுக்கி விழாமல் எச்சரிக்கையுடன் இருப்பதற்குக் கடந்த காலத்திலிருந்து நாம்பெறும் படிப்பினைகள் பேருதவியாக உள்ளன. நம் முன்னோர்கள் செய்த பெருந்தவறுகள் எல்லாம் நம் வாழ்க்கைப் பயணத்தின் எல்லைக் கற்கள் அல்லவா? ஒரு நாட்டின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதன் கடந்த கால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று கூறின் அது மிகையாகாது. ஒரு நாட்டின் வரலாற்றைப் பொறுமையுடன் படிப்பவர்க்கு இவ்வுண்மை புலனாகாமல் போகாது.

கடந்த காலம் நிகழ்காலத்திற்கு அடிப்படை மட்டுமன்று; எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் நல்ல தொரு வழி காட்டியுமாகும். ஒரு நிகழ்ச்சி நிகழும் கணப் பொழுதிலிருந்து எதிர்காலம் என்பது பொங்கி எழுகிறது. இவ்வாறு முக்காலமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க இயலாதவாறு இணைந்தும் இழைந்தும், முறுகியும் முடுகியும் காணப்படுகின்றன.

கடந்த காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி வரலாறு. பன்னெடுங் காலமாகச் சேகரிக்கப்

பெற்ற 'அறிவுச் சுடர்கள்' வரலாற்றேடுகளில் செறிந்து காணப்படுகின்றன. அவற்றுல் நாம் பெரும் நன்மை அடையலாம். நிகழ் காலத்தினை நன்கு அறிந்து போற்று வதற்குக் கடந்த காலத்தைப் பற்றிய தெளிவான அறிவு இன்றியமையாததாகும். வரலாறு "தொலை நோக்கியாக" நமக்குப் பயன்படுகிறது. நிகழ்காலம் பல வகையில் இறந்த காலத்தின் தொடர்ச்சியாகத் தோன்றுகிறது. இதனுல், வரலாறு நிகழ்காலத்தின் அம்பிக்கைக்குரிய வழி காட்டியாக விளங்குகிறது.

வரலாற்றின் பண்பு

வரலாறு மக்களுடைய வாழ்க்கை, கடந்த காலத்தில் எப்படி இருந்தது என்பதை விளக்குமே ஒழிய, இப் பொழுது எவ்வாறு இருக்கிறது அல்லது கடந்த காலத் தில் எவ்விதம் இருந்திருக்க வேண்டும் என்பதை எடுத் துரைக்காது. பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கும் இன்பம் ஊட்டி, அவர்களுடைய உள்ள உணர்ச்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் அழகுக் கலைகளைப் போன்றதன்று வரலாறு. ஆயினும், அது கற்பிக்கும் படிப்பினையும், உணர்த்தும் அறநெறியும், புகட்டும் அறிவுரையும் இன்றைய சமுதாய வாழ்வில் உண்டாகும் சிக்கல்களைப் போக்கப் பயன்படுவன வாயுள்ளன. ஒரு நாட்டின் நல்லதோர் அரசியல்-பொரு ளியல் வாழ்வு, வரலாறு அமைத்துத்தரும் அடித்தளத்தின் மேல் சிறப்புடன் விளங்க முடியும்.

நமது நாட்டில் காணப்படும் பலவகை அமைப்புக்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்புக்கள் தோன்றி வளர்ந்த சூழ்நிலையை நாம் நன்கறிதல் வேண் டும். இவ்வாறே ஒவ்வொரு மொழி பேசும் மக்களுக்கும் உரிய தனிப்பண்புகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும். தமிழினத்திற்குரிய தனிப்பண்புகள் என்ன என்பதை நாம் அறிந்திராவிடில் நம்முடைய விருப்பு வெறுப்புக்களையும், உள்ள உணர்ச்சி களையும், இயல்பூக்கங்களையும், தெளிவாக நாமே உணர்ந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடியாது. மேலும், அவ் வெண்ணங்களும் உணர்ச்சிகளும் நம்முடைய உள்ளத்தில் எவ்வாறு குடி கொண்டன என்பதையும் ஆராய்ந்தறிய இயலாது. நாட்டிலே ஒரு நிகழ்ச்சி நடந்தால், அதைக்

கண்டு ஆந்திரர்கள் எதிர்ப்பு ஆரவாரம் செய்வதும், வங்காளிகள் வீறுகொண்டு எழுந்து கிளர்ச்சி செய்வதும், தமிழர்கள் 'நடப்பது நடக்கட்டும்' என்று பொறுமையுடன் இருப்பதும் எக்காரணத்தினால் என்பதை அறிய இயலாது. அதனை எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றது வரலாறு ஒன்றுதான். ஆகவே, வரலாறு ஒவ்வொரு நாட்டிற்கும் இன்றியமையாத் தேவையாகக் கருதப்படுகிறது.

வரலாற்று ஏடுகளில் தமிழகம் :

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் தொன்மை ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது. நாடென்பது நிலநலம், மொழி நலம், குடி நலம் என்னும் மூன்று சிறந்த உறுப்புக்களை உடையதாகும். தமிழகம் இம்மூவகை நலங்களைப் பெற்று இருக்கிறது. மேலும், பண்டைக் கால முதல் இன்று வரை பல வகை இன்னல்களையும் இடையூறுகளையும் எதிர்த்துப் போராடித் தனக்கெனச் சிறப்புடைய தனிப் பண்பாட்டையும், 'சீரிளமைத் திறம்' மாறுக் 'கன்னித்' தமிழையும் பேணிக் காத்து வருகின்றது. ஆனால், உலக வரலாற்று ஏட்டிலே அதற்கு உரிய இடம் தரப்படவில்லை. இந்திய வரலாற்றிலும் நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. பேராசிரியர் S. K. கோவிந்தசாமி பிள்ளை, "இந்திய வரலாற்றில் தென்னிந்தியா, மறந்தும் தாய்ப் பிள்ளையாகக் கருதப் பெற்று வருகிறது. புராணங்களையும் பழங்கதைகளையும் வரலாற்றுக்குத் தக்க ஆதாரமாகக் கொண்டு எழுதுபவர்கள், சரித்திர நிகழ்ச்சிகள் மலிந்த சங்க இலக்கியத்தைத் தென்னிந்திய வரலாற்றுக்கு ஆதாரமாய் ஏற்றுக் கொள்ளுவதில்லை,"[1] என்று மிக்க வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது.

அயலாரின் ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை அடைந்த பின், வரலாற்றுசிரியர்கள் இந்திய வரலாற்றில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்து புதிய முறையில் எழுதி வருகின்றனர். ஆயினும், அவர்கள் பண்டைத் தமிழகத்தின் வரலாற்றினை சீரிவாக எழுதுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். ஓர் அளவிற்கு இது உண்மையேயாகும். ஆயினும், பழங்கால

1. இந்தியர் வரலாறு. பக்கம்-172.

இந்தியாவில் எரதோடசு[1] அல்லது துசிடிடசு,[2] லிவி[3] அல்லது டாசிடசு[4] போன்ற வரலாற்றுசிரியர்கள் தோன்றவில்லை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நம் நாட்டு இலக்கியம் வழங்கும் கருத்துக்களைக் கொண்டு மக்களின் அன்றாட வாழ்க்கை, சமுதாய நிலை, சமயக் கோட்பாடு, கலை வளர்ச்சி முதலியவற்றில் எந்த நாட்டிற்கும் ஈடில்லாப் பழமைச் சிறப்புடைய நல்லதொரு வரலாற்றினை எழுத முடியும் என்ற தன்னம்பிக்கையுடன், வரலாற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுத முன் வருதல் வேண்டும்.

வரலாற்றின் ஊற்று

இருசகோதரிகள் : மக்களின் வாழ்க்கையை 'அடுத்தது காட்டும் பளிங்கு போல்' படம் பிடித்துக் காட்டுவது அந்நாட்டின் இலக்கியம் என்பர். எல்லா நாடுகளிலும் முதன் முதல் பாக்கள்—கதைகள்—வாயிலாகவே வரலாறுகள் தோன்றின. அவை மறைந்த மாவீரர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுவனவாய் அமைந்தன. உலகப் பெரும் புலவர்களுள் பொன்னுப் புகழுடன் விளங்கும் ஓமர் (Homer) இயற்றிய 'இலியத்' (Iliad), 'ஒடிசே' (Odyssey) போன்ற காப்பியங்களும் உரோமாபுரியின் மாண்புறு வர்ஜில் (Virgil) எழுதிய Aeneid 'ஜார்ஜிக்ஸ்' (georgics) போன்ற காப்பியங்களும், நம் தமிழ் மொழியில் உள்ள சங்க நூல்களும், வடமொழியின் ஆதிகாப்பியமாகிய வான்மீகி இராமாயணமும், "இலக்கியமும் வரலாறும் இணைபிரியாத இரு சகோதரிகள்" என்ற உண்மையை உலகுக்கு எடுத்துரைக்கின்றன. "வரலாறு உண்மையில் பாட்டாகவே இருக்கிறது. உண்மை நிகழ்ச்சிகளைச் செம்மையாக விளக்குவோமானால்

---

1. எரதோடசு (Herodotus) "வரலாற்றின் தந்தை' என்று புகழப்படும் கிரேக்க நாட்டுப் பழம்பெரும் வரலாற்றுசிரியன். (காலம் கி. மு. 484 கி. மு. 424.)
2. துசிடிடசு (Thusydides) நடுநிலை பிறழாது முதன் முதலில் "வரலாறு' என்ற நூலை எழுதிய கிரேக்கர். (காலம் கி. மு. 460—399.)
3. லிவி (Livy) உரோம நாட்டு வரலாற்றுசிரியன். உரோமப் பேரரசனை அகஸ்டசின் தோழன். [காலம் கி. மு. 59 கி. பி. 17.)
4. டாசிடஸ் (Tacitus) உரோமாபுரியின் வரலாற்றுசிரியர்களுள் முதன்மையானவன். (கி. பி. 55-120.)

அது புனைகதையைக் காட்டிலும் சுவையும் நயமும் உடைய தாக இருக்கும். ஆயினும், அதில் பாட்டின் பண்புகளைக் காண இயலாது. ஆனால், வரலாற்றில் பாட்டின் பண்புகள் செறிந்து உள்ளன'' என்று ஆங்கில அறிஞர் கார்லில் கருதுகின்றார்.

இந்தியருக்கு வரலாற்று உணர்ச்சி இல்லாதது ஏன்?

உலகில் உள்ள பல நாடுகளுக்கும், பல்வேறு மொழி பேசும் மக்களுக்கும் தனித் தனியான வரலாறுகள் இருக்கின்றன. ஆனால், நம் நாட்டில் வரலாற்றைப் போற்றிக் குறித்து வைக்கும் வழக்கம் இருந்ததில்லை. இதனைக் கண்ட மேனாட்டார், 'இந்தியருக்கு வரலாற்று உணர்ச்சியே கிடையாது' என்று குறை கூறினர். ''தனித்தனி மாந்தரின் பிறப்பு நாள் நாழிகை முதலியவற்றைக் குறித்து வைக்கும் பழக்கம் உள்ள நாட்டில், நாட்டின் பொதுவான வரலாற்றைக் குறிக்கும் பழக்கம் இல்லாதிருந்தது வருந்தத் தக்கதே''[1] என்று டாக்டர் மு. வரதராசனார் மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.

நம் முன்னோர்கள் வரலாற்றினை எழுதும் பழக்கத்தை வழக்கமாகக் கொள்ளாமைக்குரிய காரணத்தை நாம் தெளிவாக அறியமுடியவில்லை. பண்டைத் தமிழ்ச் சான்றோர் பரந்த அறிவும், தூய உள்ளமும், தெளிந்த உணர்வும் உடையவர்களாக வாழ்ந்தனர். தம் தனிப் பண்பினை மறந்து, மக்கள் சமுதாயத்தின் ஓர் உறுப்பாகவே தங்களை நோக்கினர். அவர்கள் ஓடும் போராற்றில் சிக்கிய சிறுதெப்பம் என்று தங்களைக் கருதினர். ஆற்றின் போக்கை எதிர்த்து நீந்தும் ஆற்றலற்று அதனோடு இணைந்து, ஆறு செல்லும் வழியே ஓடும் தெப்பம் போன்றது தங்களுடைய வாழ்க்கை என்று தெளிந்தனர். எனவே, தனி மனிதன் அடையும் பெயரும் புகழும், சீரும் சிறப்பும், பெருமையும் சிறுமையும் ஏதோ ஒரு முறைபற்றி வந்து அமைகின்றன என்பதை உணர்ந்தனர். ஆகவே பெருமைக்கும் சிறுமைக்கும் காரணமான முறை (ஊழ்) என்னும் ஒன்றையே போற்றித் தெளிந்தனர். அதனால் மாண்புமிக்க ஒரு சிலரைப் பெரியோர் என வியத்தலும் —வேறு சிலரைச் சிறியோர் என இகழ்தலும் வேண்டா

1. Dr. மு. வ.: மொழி வரலாறு-பக். 368.

என்ற மெய்யுணர்வுடன் அறநெறியில் நின்று மக்கள் இனத்திற்கு ஒல்லும் வகை எல்லாம் ஓயாது தொண்டாற்றினர். இவ்விழுமிய நோக்கம், நமது நாட்டுமக்களிடைப் பெரும்பாலும் வரலாற்று உணர்வு ஊற்றெடுக்கா வண்ணம் தடை செய்திருக்கலாம்.[1]

மேலை நாட்டு அறிஞர் ஒருவர் "இந்தியாவின் சிந்தனையாளர்களைப் போன்று பொதுவாகத் தமிழ்நாட்டு ஆசிரியர்களும், தாங்கள் எழுதிய நூற்களின் நிழலில் தங்கள் தனித்தன்மையை மறைத்துக் கொண்டனர். அவர்கள் தனி மனிதன் பெறும் புகழ், தனி மனிதன் ஒருவன் மட்டும் உயிர் வாழ்வதைப் போன்று பயனற்றது என்று கருதினர். தங்கள் நாட்டு இலக்கியத்தில் ஊடுருவிச் செல்லும் பொதுமை உயிராற்றல், தங்கள் நூற்களில் மிளிர்வதே தங்களுக்குச் சிறப்பு எனக் கருதும் மனநிலை உடையவராக வாழ்ந்தனர்" என்று கூறியுள்ள கருத்துக்கள் நம் முன்னோரின் நெஞ்சப்பாங்கினை ஓரளவு விளக்குகின்றன.

இந்திய வரலாற்றின் தொடக்கம் :

பண்டைத் தமிழ் நூற்களை வரலாற்றுக் கண் கொண்டு துருவிப்பார்த்து ஆராயும் பொறுமையும் தமிழினத்தின் மீது அன்பும், அவர்கள் வரலாற்றை வரைவதில் ஆர்வமும் கொண்டு முயன்றால், நல்லதொரு வரலாற்றை வரைய முடியும் என்ற உறுதியுடன் தொண்டுகள் பல புரிந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள், "வகைப்படுத்தி எழுதும் வரலாற்றாசிரியன் நெடுநாளைய வழக்கம்போல் கங்கைக் கரையில் இந்திய வரலாற்றைத் தொடங்காமல், கிருஷ்ணாவின் கரையிலோ, காவிரியின் கரையிலோ, வைகையின் கரையிலோ அவ்வரலாற்றைத் தொடங்க வேண்டும்"[1] என்று கூறியுள்ளார்.

முதன் முதலாக இந்திய வரலாற்றை முறையாக எழுதிய வின்சென் ஸ்மித் என்னும் பேராசிரியர்,

1. Thomas Caldwell : Illusion and Reality- பக். 26
ஒப்பு நோக்குக :
2. " The scientific Historian of India ought to begin his study with the basin of Krishna, of the Cauvery, of the Vaigai rather than with the gangetic plain, as it has been long, too long the fashion.—Some Mile Stones in the History of Tamil Literature, P. 62.

சுந்தரம் பிள்ளையின் மொழிகளைப் பொன்னே போல் போற்றித் தம்முடைய "பண்டை இந்திய வரலாற்றில்" எடுத்தாண்டது மட்டுமின்றி, "நம்முடைய கருத்தெல்லாம் நீண்ட நாட்களாக வடஇந்தியாவிலும், வடமொழி நூல்களிலும், ஆரியர் கொள்கைகளிலும் பதிந்து கிடந்து விட்டன; இனிமேலாவது ஆரியரல்லாதாரின் நாகரிகத்துக்குத் தக்க மதிப்பு அளித்தல் வேண்டும்"[1] என்று தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

வரலாறு அன்றும்-இன்றும்:

இத்தகைய அறிஞர்களின் பொருளுரைகளினால் தமிழகம் இன்று சில வரலாற்றுசிரியர்களின் கருத்தைக் கவர்ந்துள்ளது. மறுமலர்ச்சியுற்றிருக்கும் தமிழகத்திற்குத் தேவைப்படும் வரலாறு வெறும் அரசியலைப்பற்றியதன்று. மக்களாட்சியின் பயனாக வரலாற்றிற்குத் தரப்படும் புத்தம் புதிய விளக்கத்தின் அடிப்படையில் நாகரிகப் பண்பாட்டையும், வாழ்க்கை நெறியினையும் விளக்குவதாக இருக்க வேண்டும். போர் வெறி கொண்ட சிலர், வீரத்தின் பெயரால் போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியிட்ட துன்பக் கதையினைக் கூறுவதுதான் வரலாறு என்று கருதிய காலம் மாறி விட்டது : உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த பெருந்திரளான மக்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாடு சென்று குடியேறிய கதையும் செந்நீரை வியர்வை ஆக்கி அல்லும் பகலும் அரும்பாடுபட்ட மக்கள் உழைத்துப் பெற்ற செல்வத்தைக் குறுநிலத் தலைவர்கள் கொள்ளையிட்டதும் தான் வரலாறு என்று நம்பி வந்த காலம் மறைந்து விட்டது. அரசர்களின் அந்தப்புரங்களில் இருந்த ஆயிரக்கணக்கான ஆரணங்குகள் கற்பழிக்கப்பட்ட தொடர் கதையே வரலாறு என்று போற்றிய காலம் போய் விட்டது.

இன்றைய உலகம் சிறந்தது எனக் கருதும் வரலாறு "மக்கட் சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி ஆகியவற்றையும், தனி மனிதனுக்கும் சமுதாய வாழ்விற்கும் உள்ள தொடர்பினையும், வெவ்வேறு ஊழிகளில்பற்பல நாடுகள் நாகரிகத்தின் 'கொடுமுடியில்' வீறுடன் விளங்

1. Early History of India-P. 8.

கியதையும் தொகுத்து உரைப்பதாகும்.''[1] வரலாற்றின் கண்களாகக் கால வரன்முறையையும், நில இயலையும் கூறுவது வழக்கம் இவற்றுள் கால வரன்முறையைக் கணித்துக் கூற முடியாத காரணத்தினால் தமிழகத்தின் வரலாற்றை எழுத இயலவில்லை என்று கூறுவோரும் உளர், அவர்களுள், பேராசிரியர் பி. தி. சீநிவாச ஐயங்கார் ''கால வரன்முறை வரலாற்றிற்குக் கண்ணெனின் இந்திய வரலாறு எப்பொழுதுமே குருடாகத்தான் இருக்க வேண்டும்'' என்று. கூறியுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மக்கள் இனத்தின் கதையைக் கூறும் வகையில் வரலாறு எழுதுவோரே மக்கள் இனத்திற்குச் சிறந்த தொண்டாற்றுபவராவர். ஒவ்வொரு நூற்றாண்டிலும் மக்கள் வாழ்ந்த விதத்தினையும். சாதித்த அரும்பெருஞ் செயல்களையும், பெற்ற பேறுகளையும், இயற்கையின் ஆற்றலைத் தங்கள் நல்வாழ்விற்குத் துணையாக்கிக் கொண்ட தன்மையினையும், அரசியல் நெருக்கடியைக் கண்டு அஞ்சாது திறமையுடன், அவற்றைத் தீர்த்துக் கொண்ட முறையினையும் வரலாறு எடுத்தியம்ப வேண்டும். அரசியல் மாறுதல்கள் மக்கள் வாழ்க்கையில் தோற்றுவித்த சிக்கல்களையும், அந்நிலையில் மக்கள் தங்களது ஒன்றுபட்ட ஆற்றலைக்கொண்டு அயலார் ஆதிக்கத்திலிருந்து தங்கள் தாய்நாட்டை மீட்பதற்கு முயன்ற போதெல்லாம் அவர்கள் பெற்ற வெற்றியினைச் சொல்லோவியமாக்கிக் காட்ட வேண்டும்; அன்றைய மக்கள், சமுதாயமாகக் கூடி வாழப் பேருதவி புரிந்த உள்ளார்ந்த உணர்வுகளையும், காலத்திற்கேற்ப அறிவுரை வழங்கிய அறவோர்களின் கருத்தினையும் விளக்க வேண்டும். மக்கள் இடையே பொது உள்ளம் (General will) வளர்ச்சியுற்ற சூழலின் தன்மையினையும், பலவகை வேற்றுமைக்கு இடையே ஒற்றுமை காணுமாறு தூண்டிய இயல்பூக்கத்தையும் எடுத்தியம்ப வேண்டும். அறிவுக்கு ஊட்டமும் உள்ளத்திற்கு உரமும் ஊட்டி ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்னும் அனுபவ உண்மையை அறிவுறுத்தும் கருவூலமாகத் திகழ வேண்டும். இப்பண்புகள்

1. Dr. Arnold Toynbee : Civsiization on Trial-chap. II Arnold ' My View on History'.
2. P. T. S. Ayyangar, History of Tamils P-lvi.

செறிந்த பண்டைத் தமிழரின் அன்பு மலிந்த, அறஞ் சிறந்த, இன்பம் நிறைந்த, எழிலார்ந்த 'நயத்தகு நாக ரிக' வாழ்வையும் வரலாற்றையும், 'விடிவெள்ளி', 'செஞ் ஞாயிறு', 'மாலைமதியம்' என்னும் மூன்று பகுதிகளில் விரி வாகக் காண்போம்:

சான்றுகள் :

வரலாறு எழுதுவதற்கு உறுதுணையாக உள்ள வற்றை 'ஆதாரங்கள்' என்பர். அவை தொன்மை வாய்ந்த இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், அயல்நாட்டார் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள், பழம் பொருட் சின்னங்கள், நாணயங்கள் எனப் பல திறத்தன. இவை யாவும் ஒரு நாட்டின் வரலாற்றை வரைவதற்குத் தேவைப்படும் நல்லதோர் அடித்தளத்தை அமைத்துத் தருகின்றன. தமிழக வரலாற்றை முறையாக எழுது வதற்கு இவை யாவும் இன்றியமையாதவை.

தமிழகத்தின் வரலாறு இந்திய வரலாற்றில் புதிய தாக ஆராய்ந்து எழுத வேண்டிய ஒன்றாக இன்று வரை இருந்து வருகிறது. இத்துறையில் ஆர்வமுடன் ஆராய்ச்சி செய்கின்றவர்களும் மிகச் சிலராகவே உள்ளனர். தமிழக வரலாற்றிற்குப் பயன்படும் ஆதாரங்கள் பெரும்பாலும் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையாகவே உள் ளன. இக்காரணத்தால் நாம் பெரிதும் இலக்கியச் சான்று களையே நாடவேண்டி இருக்கிறது.

இலக்கியச் சான்றுகள் :

தமிழ் இலக்கியம் : இலக்கியச் சான்றுகள் இருவகைப் படும். அவற்றுள் முதன்மை வாய்ந்தது நமது தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் தந்துதவும் வரலாற்றுக் குறிப்புக்கள். இரண்டாவது வகையைச் சார்ந்தவை பிற மொழி இலக்கியங்கள் தமிழரைப் பற்றியும், தமிழ் நாட் டைப் பற்றியும் குறிப்பிடும் கருத்துக்கள். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தமிழகத்தின் பழங்கால வரலாற்றை வரைவதற்குப் பேருதவியாக உள்ளன. அவை இன்று நமக்குக் கிடைக்காமல் போய் இருக்குமானால், கிறித்து விற்கு முற்பட்ட காலத்திய தமிழர் வாழ்வையும் வரலாற் றையும் பற்றி நாம் ஒரு சிறிதும் அறிய முடியாத அவல

நிலையை அடைந்திருப்போம் மேலும் தமிழ்ப் பண்பாட்டின் சீரிய பண்புகளை உலகம் அறிவதற்கு வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்.

தமிழ் இலக்கியத்துள் தொன்மை வாய்ந்தது 'சங்க இலக்கியம்' எனச் சிறப்புடன் போற்றப்படுவதாகும். அவற்றுள் மிகப் பழமையுடையதாகக் கருதப்படுவது 'தொல்காப்பியம்' என்னும் பழம்பெரும் நூலாகும். இந்நூல் தொல்பழங்காலத் தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் செம்மையாக விளக்குகிறது; இந்நூலின் மூன்றும் பகுதியாகிய பொருளதிகாரம் பண்டைத் தமிழருடைய நாகரிக வாழ்வின் நலமனைத்தையும் நமக்கு எடுத்தியம்புகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழர் நாகரிகத்தின் 'பொழுது புலர் காலையை' ஆராய்ந்து அறியலாம்.

கடைச் சங்க நூல்கள் எனக் கருதப்படும் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும், திருக்குறளும் வற்றாத ஊற்றாக வரலாற்றுக் கருத்துக்களை வாரி வழங்குகின்றன. இக்காலம்தான் தமிழக வரலாற்றின் 'பொற்காலம்'' எனப்படுகிறது. இந்நூற்களில் காணப்படும் பாக்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை தமிழர் நாகரிகம் தழைத்து விளங்கியதைச் சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றன.

சங்கம் மருவிய நூல்கள் எனக் கருதப்படும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் நாகரிகத்தின் கொடுமுடியில் வீறுடன் வீற்றிருந்த தமிழகம் வீழ்ச்சியுறத் தொடங்கியதைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன.

இவை அல்லாமல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிலவும், இறையனார் அகப்பொருளும் பண்டைத் தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் வரைவதற்கு உதவியாக உள்ளன.

பிறமொழி இலக்கியங்கள் :

பிறமொழி இலக்கியங்களுள் நமக்குப் பேருதவியாக உள்ளவை சில. வடஇந்திய மொழிகளுள் பாலிமொழியில் உள்ள புத்த சாதகக் கதைகளும், வடமொழியில் உள்ள வேதங்களும், உபநிடதங்களும், காப்பியங்களும், தரும

சாத்திரங்களும், கௌடில்யரின் அருத்த சாத்திரமும் குறிப்பிடத் தக்கன. அவை தமிழ் இலக்கியத்தில் காண முடியாத பல சான்றுகளைத் தந்துதவுகின்றன.

சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள மகாவமிசம், இராசாவளி போன்ற நூல்களும் நமது நாட்டு வரலாற்றை வரைவதற்கு உறுதுணையாக உள்ளன.

சந்திரகுப்தன் அவையில் இருந்த மெகஸ்தனிசு என்ற கிரேக்கத் தூதன் எழுதிய "இந்திகா" என்ற நூலும், கிரேக்க, உரோம வரலாற்றாசிரியர்கள் தங்கள் நூல்களில் இடையிடையே குறித்துள்ள கருத்துக்களும் புறக்கணிக்க முடியாதவை.

யவன யாத்ரீகர்களான சிடிராபோ, பிளினி, பெரிபுளூசு போன்றவர்களின் யாத்திரைக் குறிப்புக்களும் தமிழகத்தின் அன்றைய நிலையை விளக்குவதில் நிகரற்று விளங்குகின்றன.

கல்வெட்டுக்கள் :

தமிழக வரலாற்றிற்கு நம்பிக்கைக்குரியதாய்ப் பெரிதும் விளக்கமுடன் உதவுவது கல்வெட்டுக்கள். தமிழகத்தில் காணப்படும் மிகப் பழைய கல்வெட்டுக்கள் வட்டெழுத்துக்களின் பழைய உருவத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. சிலர் அவற்றைப் பிராமி எழுத்துக்கள் என்றும் கூறுவர். அவ்வெழுத்துக்கள் அசோகர் சாசனங்களில் காணப்படும் பிராமி எழுத்துக்களைப் போன்றுள்ளன. மைசூர் மாநிலத்தில் சித்தபுரம், பிரமகிரி, ஐதராபாத் மாநிலத்தில் மாஸ்கி, ஆந்திராவில் எறகுடி முதலிய இடங்களில் கிடைத்துள்ள அசோகனின் கல்வெட்டுக்களில் உள்ள பிராமி எழுத்துக்களின் திரிபாகத்—தென்னாட்டு அமைப்பாக—உள்ள பல பிராமி கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன.

தமிழ் நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் இயற்கையாக அமைந்த குகைகள் பலவற்றுள் கற்படுக்கைகள் பல உள்ளன. அவ்விடங்களில் பல துறவிகள் வாழ்ந்து இருக்க வேண்டும் என்பது அப்படுக்கைகளில் பொறிக்கப்பட்டுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களால் தெரிகிறது. அங்குத் தங்கி இருந்த துறவிகளின் பெயர்களை அக்கல்வெட்டுக்கள் குறிப்பிடுவதாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவ்வெழுத்துக்கள் பிராமி எழுத்

துக்களைப் போன்று இருந்தாலும், அவ்வெழுத்துக்களில் கையாளப்பட்ட மொழி தமிழ் மொழியாகும். இக்காரணத்தால் அவ்வெழுத்துக்களைப் பிராமி எழுத்துக்கள் என்று கூறுவதற்கில்லை. தமிழ்மொழிக்கு என்றே அமைந்த மிகத் தொன்மையான தமிழ் எழுத்து வடிவமாக இருந்திருக்க வேண்டும். திருநாதர் குன்றில் கிடைத்துள்ள கல்வெட்டு, தமிழ் எழுத்தின் பண்டைய வடிவமான வட்டெழுத்து என்பதனைக் கண்டறிந்துள்ளனர். ஆகவே, அசோகன் காலத்திய தமிழகக் கல்வெட்டுக்கள் யாவும் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டன என்று கூறுவதைவிட, தமிழ்மொழிக்கு அமைந்த எழுத்துக்களில் ஒன்றாகிய வட்டெழுத்தின் பழைய வடிவமே அக்காலத்தில் இங்கு வழக்கிலிருந்ததாகக் கொள்ளுவது சிறப்புடைத்தாகும். இக்கல்வெட்டுக்கள் தமிழகத்தில் இருபது முதல் முப்பது வரையிலும் இலங்கையில் மிகப் பலவாகவும் காணப்படுகின்றன. கிறித்து பிறப்பதற்கு முன்பே தமிழகத்தில் சமண பௌத்தத் துறவிகள் பலர் குடியேறி இருந்தனர் என்பதனை இக்கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

அசோகன் ஆட்சி தெற்கே கலிங்கம் வரை பரவி இருந்தது. அதற்கும் தெற்கே உள்ள தமிழகத்தின் மூவேந்தர்களோடு அவன் நட்புறவு கொண்டிருந்தான் என்பதை அசோகனது இரண்டாம் கற்சாசனமும்(Rock Edict) பதின்மூன்றும் கற்சாசனமும் தெரிவிக்கின்றன.

சாதவாகனப் பேரரசு காலத்திய பிராகிருத மொழிக் கல்வெட்டுக்கள் சில தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்கு ஓரளவு உதவியாக உள்ளன. அவற்றுள் கலிங்க நாட்டு மன்னன் காரவேலனின் 'அத்திகும்பா' கல்வெட்டு தமிழகத்தின் அன்றைய அரசியல் நிலையை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இக்கல்வெட்டுக் கிடைக்காமல் இருந்திருந்தால், 'தமிழக வேந்தர்களின் கூட்டணியைப்' பற்றி அறிந்திருக்கமாட்டோம்.

இவற்றைத் தவிர மற்றக் கல்வெட்டுக்கள் எல்லாம் பல்லவர் காலத்தையும், பிற்காலச் சோழர், பாண்டியர் காலத்தையும் விளக்குவனவாகவே உள்ளன.

பழம் பொருட் சின்னங்கள் :

தொல்பொருள் ஆராய்ச்சியாளரின் அயராத உழைப்பி

ஞல் பண்டைத் தமிழகத்தின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நிலையை அறிவதற்குப் பயன்படும் பழம்பொருள் சின்னங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. பழங்கற்காலப் புதுக்கற்காலச் செம்புக் கற்கால, இரும்புக் காலப் பழம் பொருட் சின்னங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பல்லாவரம், வல்லம் முதலிய இடங்களில் பழங் கற்காலச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பழனிமலைப் பகுதிகளிலும், செங்கற்பட்டு, வடஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் எண்ணற்ற புதுக் கற்கால நாகரிகச் சின்னங்கள் கிடைத்துள்ளன. அவற்றின் உதவியால் தமிழகத்தின் தொல் பழங்கால வரலாற்றை நாம் ஒருவாறு அறிய முடிகிறது. அரிக்கமேடு ஆதிச்சநல்லூர் சின்னங்கள் குறிப்பிடத்தக்கன. அவற்றுல் இரும்புக் கால நாகரிகத்தை அறிகிறோம்.

புதுக்கோட்டைப் பகுதியில் கிடைத்துள்ள கல்லறைகள், தாழிகள் முதலியன அக்காலத்திய நாகரிகத்தை அறிய ஓரளவு உதவுகின்றன. இவ்வாறு பல பழம் பொருட் சின்னங்கள் தொல் பழங்காலத் தமிழக வரலாற்றினை அறிவதற்குப் புத்தொளி தந்துள்ளன.

காசுகள்

பண்டைத் (சங்க காலத்) தமிழ்வேந்தர்கள் வெளியிட்ட பழங் காசுகள் இன்று வரை கிடைக்கவில்லை. ஆயினும் அம்முடியுடை மூவேந்தர்கள் காலத்தில் தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்த அயல் நாட்டு மன்னர்களுடைய பொற்காசுகள் நம் நாட்டில் பல இடங்களில் கிடைத்துள்ளன. அயல் நாட்டார் தென்னிந்தியாவுடன் வாணிகத் தொடர்பு மிகப் பழங்காலத்தே கொண்டிருந்ததை வரலாறு மூலமாகவும், இலக்கியத்தின் வாயிலாகவும் அறிகிறோம். அதை மெய்ப்பிக்கும் சான்றுகத் தமிழகத்தில் ஐம்பது இடங்களில் அவர்களுடைய காசுகள் குவியல் குவியலாகக் கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. அவ்வப்போது கிடைக்கும் இக்காசுகளின் மூலம் அயல் நாட்டாரைப் பற்றிய சில முக்கியச் செய்திகள் அறியப்படுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரோமாபுரியைச் சார்ந்த உரோமானியர்கள் தமிழக வேந்தர்களுடன்

வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததாகத் தமிழ் இலக்கியம் கூறுகிறது. இங்கு உரோமானியருடைய பொன், வெள்ளி நாணயங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. உரோமானியப் பண்டங்களை ஒத்தனவும், தழுவியனவும் கிடைப்பதோடு, உரோமானியக் குயவர்கள் இட்ட முத்திரைகளுள்ள பாண்டங்களும் புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு என்னும் இடத்தை அகழ்ந்து எடுத்தபொழுது கிடைத்துள்ளன. பேரளவில் உரோமானியரின் காசுகள் தமிழகத்தில் காணப்படுவதால், அவர்கள், அகில், சந்தனம், யானைமருப்பு, முத்து, மிளகு, தோகை முதலிய தமிழகத்துப் பொருள்களுக்குத் தங்கள் நாட்டுப் பொற் காசுகளையும், வெள்ளிக் காசுகளையும் விலையாகக் கொடுத்து வாங்கினர் என்பது புலனுகின்றது. உரோமானியர்கள் 'நாணயச் சாலைகளை'த் தமிழகத்தில் நிறுவி இக் காசுகளை வெளியிட்டனரா? அல்லவா? என்பது இன்று வரை விளங்கவில்லை.

இக் காசுகளுள் பெரும்பான்மை உரோமாபுரியை ஆண்ட பேரரசர்களான அகஸ்டசு (கி. மு. 29-கி. பி. 14) டைபீரியசு (கி. பி. 14-37) காலத்தவையாகும். நீரோ மன்னனின் (கி. பி. 54-68) ஆட்சிக்குப் பிறகு உரோமானிய நாணயங்களின் நடமாட்டம் தமிழகத்தில் குறைந்து விட்டது. இவர்களுடைய பொற் காசுகள் 'ஆரியசு' (Aureus) என்றும், வெள்ளிக் காசுகள் 'டினேரியசு' (Denerius) என்றும் குறிப்பிடப்படுகின்றன. :'ஆரியசு' என்பதின் பொருள் 'பொன்' ஆகும். தமிழகத்தின் பழைய காசுகளைப் 'பொன்' என்றும், 'துளைப் பொன்' என்றும் பண்டைக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது.

பிற்காலத் தமிழக வேந்தர்களான பல்லவர், சோழர், பாண்டியர் முதலியோரின் காசுகள் பல கிடைத்துள்ளன. ஒவ்வொரு காசிலும் அரசர் குடிக்குரிய சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளமையால், அவற்றை எளிதில் இன்னுருடையது என்று அறிய முடிகிறது.

பண்டைத் தமிழரின் வாழ்வையும் வரலாற்றையும் அறிவதற்குத் தக்க சான்றுகளாகக் கிடைத்துள்ள பழம் பொருள்கள் சிலவேயாயினும், அவை யாவும் ஒப்பற்ற உறுதுணையாக விளங்குவனவாகும்.

2

தமிழகத்தின் தொன்மை

1. மண்ணியல் [1]அமைப்பு

" தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம் எங்கள் தாய் "

—பாரதியார்.

வரலாற்றைவிட மண்ணியல் ஒரு நாட்டின் பழமை நிலையை விளக்குவதில் முதன்மையானது. மண்ணியல் ஆராய்ச்சியின் மூலம்தான் மக்களின் வரலாற்றை அறிவதற்குரிய புத்தொளியைப் பெற முடியும் என்று மண்ணியல் அறிஞர் சாற்றுகின்றனர். ஆகவே, தமிழகத்தின் மண்ணியல் அமைப்பினை ஆராய்ந்து அறிதல் இன்றியமையாதது ஆகும். உலகப் படத்தில் இன்று காணப்படும் இந்தியாவின் இயற்கை அமைப்புத் திடீரென ஒரு நாள் தோன்றியதன்று.

இவ்வுலகம் தோன்றிய கதை சுவைமிக்கதாகும். பன்னூறுயிரம் ஆண்டுகட்கு முன், ஞாயிற்றினின்று சிதறி வீழ்ந்த ஒரு பெரிய அனற் பிழம்புத் திவலைதான் நாம் வாழும் உலகம். கதிரவனைப் போன்று அத்திவலை அப்பொழுது இயங்கிக் கொண்டிருந்தது. அக்கோளத்தில் எத்தகைய உயிரினங்களும் வாழத் தகுதியற்ற அனற் பிழம்பாக

1. Geology.

உலகம் விளங்கியது. காலம் செல்லச் செல்ல, உலகின் மேல்பகுதி சிறிது சிறிதாய்க் குளிர்ந்து இறுகியது. முதலில் குளிர்ச்சி அடையத் தொடங்கிய பகுதி, உயிரினம் தோன்றுவதற்குரிய தட்ப வெப்பத்தினை அடைந்த பிறகுதான் உலகம் செடி கொடிகள், விலங்குகள் வாழ்வதற்கு ஏற்றதாயிற்று.[1]

மண்ணியலார் உலகம் தோன்றி வளர்ந்த காலத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து, அதன்கண் உயிரினங்கள் தோன்றி வளர்ந்த கால அளவையும் குறிப்பிட்டுள்ளனர்.

1. ஆர்க்கியன் ஊழி

உலகம் 'கொல்லன் உலை' போன்று தீப்பிழம்பாக இருந்த காலத்தை ஆர்க்கியன் ஊழி என்பர்.[2] அக்காலத்தில் உயிர் இனங்கள் தோன்றுவதற்குரிய பதத்தினை நிலம் அடையவில்லை. அவ்வூழியில் அனற் பிழம்பாக இருந்த நிலம், வெப்பம் குறைந்து குளிரத் தொடங்கியபோது பாறைகள் பல அமைந்தன. அவற்றை "ஆர்க்கியன் பாறைகள்" என்று கூறுவர். இவை உலகிலேயே முதன் முதல் தோன்றிய பழமையான பாறைகளாகும். அவற்றுள் இன்று நாம் காண்பது பழைய உருமாறிப் பாறைகளின்[3] எஞ்சிய பகுதிகளே என்பர். அவற்றோடு பிற்காலத்திய இடைபுகு பாறைகள் (Charmokites) மிக நெருங்கிய தொடர்புடையன. இவ்விருவகைப் பாறைகளும் ஆர்க்காடு, சேலம், திருச்சி, மதுரை மாவட்டங்களில் காணப்படுகின்றன.

---

1. பழந்தமிழர் இலக்கியத்தில் உலகத் தோற்றத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதைக் காண்க.
   தொல் முறை இயற்கையின் மதியொ
   மரபிற்று ஆக
   பசும்பொன்னுலகமும் மண்ணும் பாழ்பட
   விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல,
   கருவளர் வானத்து இசையின் தோன்றி,
   உருஅறி வாரா ஒன்றன் ஊழியும்,
   உந்துவளி கிளர்ந்த ஊழ் ஊழ் ஊழியும்,
   செந்தீச் சுடரிய ஊழியும்: பனியொடு
   தண்பெயல் தலைஇய ஊழியும், அவையிற்று
   உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தரு,
   மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
   உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும்." —பரிபாடல்-2.

2. Archaeon Epoch.

3. Metarnorphic rocks

2. பழைய உயிரின ஊழி :[1]

ஆர்க்கியன் ஊழிக்காலத்தின் இறுதியில் நிலத்தின் மேல் நீர் தேங்கிக் கடல் உண்டாகும் அளவு குளிர்ந்தது. அந்நீரில் வண்டல் படியத் தொடங்கியது. அதில் பெரும் பாகம் மடிந்து பாளம்பிரிப் (Schistose) பாறைகளாகியிருக் கின்றன. உருமாறுதல் நடைபெறுத சில இடங்களில் அந்த வண்டல்களில் சிலவற்றை இப்பொழுதும் காண லாம். இந்தப் பாறைகளைத் தார்வார்ப் (Dharwar) பாறை கள் என்பர் மண்ணியலார்.

இவ்வூழிக் காலத்தில்தான், முதன் முதலாக உலகில் உயிரினங்கள் தோன்றின. அவை மிகவும் நுண்ணியதாக வும் உருவமற்றும் இருந்தமையால், விரைவில் அழிந்தும் மறைந்தும் போயின. ஆழமற்ற வெப்பமான கடல் நீரில் முதன் முதலாகக் கடல்பாசி, காளான், கடல் சிப்பி, நத்தை முதலியன தோன்றி இருக்க வேண்டும். சிறிது காலம் சென்ற பின், மிக மென்மையான செடிகொடிகள தோன் றின. நாளடைவில் மரங்களும் முதுகெலும்பு இல்லா உயிர்களில் எளியனவும் சிறியனவும் தோன்றியதாக மண் ணியலார் கருதுகின்றனர். அவ்வுயிரினங்களின் கல்மா றி கள் (Fossils) பல அக்காலத்தில் தோன்றிய பாறைகளில் புதைந்து கிடக்கின்றன.

இவ்வூழியைச் சார்ந்த தார்வார்ப் பாறைகளும், அவற் றோடு சேர்ந்த நைசுப் (gneists) பாறைகளும் உண்டான பின்னர்க் கீழக்கு மலைத் தொடர் உண்டாயிற்று என்பர். சென்னை, இலங்கை ஆகிய இடங்களில் பல குன்றுகளாக வும் மலைகளாகவும் அமைந்துள்ளவை இடைபுகு பாறைக ளாகக் காணப்படுகின்றன. சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரம், பரங்கிமலை, நீலகிரி, பழனிமலை, ஆனைமலை, சேர்வராயன் மலை ஆகிய இடங்களில் 'நீலக் கருங்கல்' என்னும்பெயருடைய இடைபுகுபாறைகளாக இருக்கின்றன. சேலத்திலும், மைசூரிலும், 'குரோமை' ட்டுடனும் 'மாக்ன சைட்' டுடனும் தொடர்பு உடையனவாக உள்ள சில பாறைகள், தார்வார்ப் பாறைகளுக்குப் பின்னர் அமைந் தனவாகும்.

---

1. Palaeozoic Epoch.

3. இடை உயிரின ஊழி [1]

திடீரென உண்டான நில நடுக்கத்தாலும் வேறு பல இடையூறுகளாலும், முன் ஊழியில் தோன்றிய உயிரினத் தொகுதி அழிந்தொழிந்தன. பெரும் பகுதி நீரும் சதுப்பு நிலமும் அடர்ந்த காடுகளும் கொண்ட உலகம், இவ்வூழியின் தொடக்கத்தில் உயிர் இனங்கள் வாழ முடியாத அளவிற்குக் குளிர்ச்சி அடைந்து விட்டது. இன்று கிடைக்கும் நிலக்கரிகள் யாவும் அக்காலத்தில் அழிந்தொழிந்த காடுகளில் இருந்த மரங்களேயாகும். நீர் வற்றி நிலப்பரப்புப் பெரியதான பொழுது, முதுகெலும்பிகளான (Vertebrates) முதலை, பாம்பு, கடல் ஆமை முதலியனவும், பாலூட்டிகளான (Mammals) உயிரினங்களும் தோன்றின.

இவ்வூழியில் தோன்றிய பாறையினைக் 'கோண்டுவானு அமைப்பு' என்று கூறுவர். கிழக்குக் கடற்கரையில் ஒரிசாவிலிருந்து இராமநாதபுரம் வரையிலும் கோண்டுவானு பாறை அமைப்புக்கள் காணப்படுகின்றன.

4. புது உயிரின ஊழி :[2]

நிலவுலகில், இவ்வூழியின் தொடக்கத்தில் பல மாறுதல்கள் உண்டாயின. ஊர்வனற்றுள் மிகப் பெரும் இனங்கள் யாவும் மறைந்தன. இக்காலத்தில் ஐரோப்பாவும், இங்கிலாந்தும் கடலடியில் இருந்ததாக மண்ணியலார் சான்றுகள் தந்து நிறுவியுள்ளனர். உலகில் முதன் முதல் பாலூட்டிகளான ஆடு, மாடு, நாய், பூனை, யானை, ஒட்டகம், கரடி, பன்றி முதலியன பல நூறாயிரக்கணக்கான ஆண்டுகளில் நிகழ்ந்த கூர்தலற (Evolution) வளர்ச்சியின் பயனாகத் தோன்றின. இவ்வூழியின் இறுதிக் காலத்தில், வால் இல்லாக் குரங்குகளும், 'லெமூர்' எனப்படும் குரங்குகளும் தோன்றின. இவை மரக்கிளைகளைப் பிடித்துத் தாவுவதற்கும், கற்களை எடுத்து எறிவதற்கும் தேவையான ஆற்றல் பெற்ற கைகளை உடையனவாக இருந்தன. இவை யாவும் படிப்படியாக வளர்ச்சியுற்றும் வந்தன.

கோண்டுவானு நிலப்பரப்பு இக்காலத்தில் சிதறி விட்டது. இவ்வூழியில் உண்டான பாறைகளின் அமைப்புக்

---

[1] Megozoic Epoch.
[2] Cainozoic Epoch.

கள் இந்தியாவின் வடக்கு எல்லை ஓரமாகவும், தென்னிந்தியாவின் கடற்கரை ஓரமாகவும் நன்கு உருவாகி உள்ளன. கூடலூர் மணற்கற்களும், தமிழகத்தில் காணப்படும் செம்பாறைகளும் இக்காலத்தைச் சார்ந்தனவாகும்.

5. மக்களின ஊழி :[1]

உலக உருண்டையின் வடக்குப் பகுதியில் ஒரு கல் பருமனுள்ள பனி மூடி இருந்ததாகத் தெரிகின்றது. இக்காரணத்தால், இதனைப் 'பனி ஊழி' என்று கூறுவதும் உண்டு. வெப்பம் பொருந்திய இடைவெளிகள் பல இப் பனிப் படலத்தில் தோன்றின. அவற்றுள் உயிர் இனங்கள் நன்கு வளர்ந்தன. இக்காலத்தில், கடந்த ஊழியில் சிறந்து விளங்கியது வாலில்லாக் குரங்கில் இருந்து பையப்பைய வளர்ச்சியுற்று, அறிவையும் ஆற்றலையும் திறனையும் தந்துதவக் கூடிய முதிர்ச்சியுற்ற மூளையுடன் ஆதிமனிதன் தோன்றினன். இவ்வாறு மனிதன் தோன்றிய காலத்தை மக்களின ஊழி[2] என்று மண்ணியலார் குறிப்பிடுவர். இக்காலத்தில் மக்கள் பலர் தமிழகத்தில் வாழ்ந்தனர் என்பதற்குத் தொல்பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன[3]. இவ்வாறே உலகில் பல நாடுகளின் இன்றைய அமைப்பு, சிறுகச் சிறுக உண்டாயிற்று.

தமிழகத்தின் தொன்மைபற்றி ஆராய்ந்த மண்ணியல் வல்லுநர்களும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், 'வட இந்தியாவில் காணப்படுவது போல் எரிகுழம்பு எழுந்து படிந்தமைக்கோ, நில நடுக்கங்கள் ஏற்பட்டமைக்கோ அறிகுறிகள் ஒன்றும் தென்னிந்தியாவில் காணப்படவில்லை. ஆதலின் உலகம் தோன்றிய காலத்தில் குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவாகும். இவ்விடத்தில் மனிதன்

---

1. The Glacial Epoch.

2. D. H. Davies. The Earrh and Man P. 120

3. Bruce Foote : Pre-Historic and Proto-Historic Relics of South India. P. 4.—

தோன்றி இருக்கலாம்''[1] என்று கருதுகின்றனர். 'நாம் வாழும் உலகு' என்னும் நூலின் ஆசிரியர், மனிதன் தோன்றியது எந்நாட்டில் என்பதனை ஆராய்ந்தது. "இந்திய நாடுதான் தொல்லுயிர்கள் வளர்ச்சியுற்று பெருகின வியத்தகு நிலமாகும். மனிதன் அங்குத்தான் குரங்கினின்று தோன்றித் தத்தளித்து மேல் நோக்கி வந்திருத்தல் கூடும்''[2] என்று தம் ஆராய்ச்சியின் முடிவினைத் தெளிவாக்கியுள்ளார்.

"தென்னிந்தியா, கங்கை ஆறுபாயும் நிலப்பரப்புக்கும் இமயமலைக்கும் மண்ணியல் அடிப்படையில் வேறுபட்டது. இப்போது இந்தியப் பெருங்கடல் இருக்கின்ற இடத்தில், ஆப்பிரிக்கா வரையிலும் தொடர்ச்சியாக நீண்டிருந்த பழைய கண்டத்தின் எஞ்சிய பகுதி இன்றைய தென்னிந்தியாவாகும். இதன் கண்ணுள்ள பாறைகளும் குன்றுகளும் உலகத்திலுள்ள மிகப் பழைய பாறை அமைப்பைச் சார்ந்தன. இக்குன்றுகளின் பல இடங்களில் கருங்கற்பாறை படிவுப் பாறையாகப் பரவி இருக்கின்றது. ஆகையால், அது உலகில் தொல் பழங் காலத்தில் உயிர்கள் தோன்று முன்னர் இருந்தபடியே தெற்கில் இருக்கின்றது. சிந்து கங்கைச் சமவெளி, சிந்து நதி முதல் கங்கைக் கழிமுகம் வரையில் ஆயிரத்து இரு நூறு கல் தொலைவு இடைவெளியின்றி நீண்டிருக்கின்றது. மண்ணுலகு பதப்பட்டுக் கொண்டு இருக்கும்போது— இமய மலை கிளம்பும் முன்னர்க்—கங்கை ஆற்று வெளி இருக்கும் இடம் கடலாயிருந்தது. இமயமலை கிளம்பிய

---

1. "Considering the fact that we have scarcely any tace of volcanic eruptions or earth-tremors, as they frequent occur in North India, it may be said that south India was the part of the world to settle first as a land mass. It is probable that the original man might have come into existence first in South India''-- V. R. R. Dikshitar
(Pre-Historic South India, P. 234.)

2. "India was an amazing ground for the evolution of life forms. Man himself may have struggled upwards out of the anthropoid within the limits of India''
Graeme Williams: (The world we Live in Vol. I. P. 104.)

போது கடல் மறைந்தது. இம்மலையிலிருந்து ஓடிவரும் ஆறுகள், வாரிக்கொண்டு வந்த வண்டல் மண்ணினால் இப் போதுள்ள சமவெளி உண்டாயிற்று''[1] என்பர் ஒல்டர்நசு.

மண்ணியல் ஆராய்ச்சியின் பயனாகத் தமிழகத்தின் வரலாறு, வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளி வீச முடியாதத் தொல்பழங்காலத்தில் தொடங்குவதை அறிகிறோம். 'கல்தோன்றி மண் தோன்றுக் காலத்தே முன் தோன்றிய' முதுபெரும் நாடு தமிழகம் என்னும் பண்டைத் தமிழ்ச்சான்றோர் கருத்து, 'வெறுங்கதை' என்று இன்றைய நடுநிலை பிறழாத ஆராய்ச்சியாளர் யாரும் புறக்கணிக்க முடியாது என்பதனை மண்ணியல் ஆராய்ச்சி வெளிப்படுத்தி இருக்கின்றது. தென்னாட்டில், மண்ணியல் ஆராய்ச்சியும், தொல் பொருள் ஆராய்ச்சியும் பேரளவில் தொடர்ந்து நடைபெறுமானால் இந்திய நாகரிகத்தின் அடிப்படையாக விளங்கும் தமிழ்ப் பண்பாட்டின் உண்மை இயல்பினை உலகம் நன்கு உணர்ந்து போற்ற முடியும்.

---

2. ''Peninsular India or the Deccan (literally the country of the south) is geologically distinct from the Indo-Gangetic plain and the Himalayas. It is the remains of a former continent which stretched continuously to Africa in the space, non occupied by the Indian Ocean. The rocks of which it is formed are among the oldest in the world and shows no traces of having ever been submerged. In many parts they are overlaid by a sheet of black 'trap' rock or basalt, which flowed over them as molten lava. In the Deccan we are therefore, in the first days of the world. we see land substantially as existed before the beginning of life. In the Indogangetic plain stretches without a break from the Indus on the West, to the Delta of the Ganges on the east; a distance of twelve hundred miles. When the world was still in the making and before the elevation of the Himalaya, the space non occupies by this plain was a sea, the southern shore of the sea was what is peninsular India with the rise of the Himalayas the sea disappeared and the rivers draining the Himalaya flowed into the depression bringing with the silt which is non the soil of the plain. —T. W. Holderness: ''Peoples and Problems of India''. —PP 23-4.

2. கடல்கோள்

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள."

(இளங்கோவடிகள்)

உலகம் தோன்றி வளர்ந்த காலத்தில், அதனுடைய பகுதிகள் பலமுற்றைக் கடல் கொண்டதாக மண்ணியலார் கருதுகின்றனர். இந்தக் கடல்கோள்களைப் பற்றிய கதைகள் ஒவ்வொரு நாட்டு மக்களின் இனமரபு வரலாற்றோடு தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளன. இக்கதைகள் யாவும் முற்றிலும் கற்பனை அல்ல என்பதனை மண்ணியல் ஆராய்ச்சியாளர் சான்றுகள் தந்து நிறுவியுள்ளனர். "மனித இனத்தின் நினைவுக்கு எட்டாத காலத்தில், உலகில் இருந்த பெரு நிலப்பரப்பைக் கடல் கொண்டதை அக்கால முதல் மக்களினம் நினைவு கூர்ந்து வருவதை" இக்கதைகள் தெரிவிப்பதாக ஃபிரேசர்[1] என்னும் அறிஞர் கருதுகிறார்.

இன்றைய தமிழகத்தின் தெற்கே இருந்த ஒரு பெரும் நாடு கடல் வாய்ப்பட்டது என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியத்தில் பல அகச் சான்றுகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றைக் கூறும் "இராசாவளி" என்னும் நூலில் மூன்று பெரும் கடல் கோள்களைப் பற்றிய மரபுவழிச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கடல் கொண்ட தென்னாட்டைக் 'குமரி நாடு' என்று குறிப்பிடும் மரபு பண்டைக் காலமுதல் இந்நாட்டில் இருந்து வருகின்றது. மூவேந்தர்களில், தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டு வந்த பாண்டியனது சிறப்பினைப் பாராட்டிய புலவர்கள் அனைவரும், அவனுடைய மூதாதையரின் அரிய செயல்களைக் குறிப்பிடுகின்றனர். கடல் கொள்ளப்பட்டதனால் இழக்கப்பட்ட பாண்டிய நாட்டின் பரப்பினை ஈடு செய்வதற்காகச் சேர சோழ நாடுகளின் பகுதிகளை வென்று பாண்டிய நாட்டினைப் பெரிதாக்கினர் என்பது அவர்களுடைய செயற்கருஞ் செயல்களுள் முதன்மையானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

---

1. J. G. Frazer : Man, God and Immortality PP.49-50.

"மலிதிரை யூர்ந்து மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினுன் வணக்கிய வாடாசீர்த் தென்னவன்"

—கலி–104

என்று தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாண்டியனின் அருஞ் செயல்களைக் குறிப்பிடுகின்றார். பாண்டியனுடையவீரத்தின் சிறப்பினைக் கூறும் புலவர், கடல் அலைகள் மிகப் பலவாகப் பொங்கி எழுந்து பாண்டிய நாட்டினை வௌவியதைக் குறிப்பிட்டுள்ளார்.

மூத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றியருளிய இளங்கோவடிகள்,

"வடிவேல் எறிந்த வான்பகை பொருஅது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"

—சிலம்பு. கா. 11 வரி 18-22.

என்று பாண்டியன் புகழைப் பாடி வாழ்த்தியுள்ளார். இதனுல் பாண்டிய நாட்டில் ஓடிய பஃறுளி ஆற்றோடு பல மலைப்பகுதிகளும், குமரிமலையும் கொடிய கடலால் கொள்ளப்பட்டு அழிந்தது தெளிவாக விளங்குகின்றது.

கடல் கொண்ட குமரி நாட்டில் ஓடிய பஃறுளி ஆற்றைப் புறநானூற்றுச் செய்யுள்,

"எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"—புறம்–9.

என்று குறிப்பிடுகின்றது. இப்பாட்டால், தொல் பழங் காலத்தில் பாண்டிய நாட்டில் ஓடியது பஃறுளி ஆறு என்பதும், அதனைத் தோற்றுவித்த நெடியோன் என்பான் பாண்டிய வேந்தருள் மிகத் தொன்மையானவன் என்பதும் தெளிவாகின்றது. இப்பாடலைப் பாடியவர் நெட்டிமையார் என்ற புலவராவார். அப்புலவர் பஃறுளியாற்றை எடுத்து ஓதி, அதன் மணலினும் பல்லாண்டு வாழ்க எனப்

பாண்டியன் முதுகுடுமியை வாழ்த்துதலால், அப்பாண்டியன் நெட்டிமையார் காலத்து இருந்ததெனத் தெரிகிறது. எனவே, இப்புலவரும் அவரால் பாடப்பட்ட பாண்டிய வேந்தனும் கடல்கோள் காலத்திற்கு முற்பட்டவர் என்பது புலப்படுகின்றது.

தமிழகத்தைக் கடல் கொண்ட மரபுவழிச் செய்தியோடு முச்சங்கங்களின் வரலாறும் இணைந்துள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

களவியல் உரைகாரர் தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய மரபுவழிச் செய்திகளை முதன் முதலாகத் தொகுத்து உரைத்துள்ளார்:

"தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவருக்கு நூல் அகத்தியம்.

"இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோனும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும்,

மாபுராணமும், இசை நுணுக்கமும் பூத புராணமுமென இவையென்ப. அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்க மிருந்தார். என்ப. அவரைச் சங்கம் இரீஇயினர், வெண் டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈருக ஐம்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினர், ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய னுட்டைக் கடல் கொண்டது.

"இனிக் கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியரும், சேந்தம்பூதனரும், அறிவுடையரனரும், பெருங்குன்றூர்க் கிழாரும் இளந்திருமாறனும், மதுரை யாசிரியர் நல்லந்துவனரும், மருதனிளநாகனரும், கணக் காயர் மகனர் நக்கீரனரும் என இத்தொடக்கத்தார் நாற் பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற் பத்தொன்பதின்மர் பாடினர் என்ப. அவர்களால் பாடப் பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூ றும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரி பாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல் காப்பியமுமென்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்ப. அவர் கூஉச் சங்க மிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந் திருந்த முடத்திருமாறன் முதலாகவுக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங் கேறினர் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப" என்பதனால் முச் சங்கங்களைப் பற்றிய வரலாற்றை அறிகிறோம்.

தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரை எழுதி, 'உரையாசிரியர்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற இளம் பூரணர், சிலப்பதிகாரத்திற்கு நல்லதொரு விளக்கவுரை எழுதிய அடியார்க்கு நல்லார் ஆகியோரும் முச்சங்க வரலாற்றோடு, தமிழகத்தின் தென்பகுதி கடல்வாய்ப் பட்ட தையும் குறிப்பிட்டுள்ளனர். இவ்வுரையாசிரியர்கள் கூறி யுள்ள தமிழ்ச் சங்க வரலாற்றால், இன்றைய தமிழகத்தின் தெற்கே எழுநூறு காவதம் நிலப்பரப்பு இருந்தது; அந் நிலபரப்பு நாற்பத்தொன்பது சிறு நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அந்நிலப்பரப்பின் வடக்கே குமரியாறும்,

தெற்கே பஃறுளியாறும் (பல்+துளி) ஆறும் ஓடிக்கொண்டு இருந்தனஎன்பது தெரிகிறது. இப்பெரு நிலப்பரப்பைக் 'குமரி நாடு' எனக் கூறுதல் மரபு.

முச்சங்க வரலாற்றில் கூறப்படுகின்ற நிலந்தரு திருவிற்பாண்டியன் (சயமா கீர்த்தியனுகிய) காலத்தில் பஃறுளியாறும் அதனைச் சார்ந்த நாடுகளும் மலைகளும் இருந்தன என்பதும், பிறகு அவை கடல் கோளால் அழிந்தன. என்பதும் பெறப்படுகின்றது. நெடியோன் என்று நெட்டிமையார் குறிப்பிட்ட பாண்டியனே 'நிலந் தருதிருவிற் பாண்டியன்' என்ற காரணப் பெயரால் அழைக்கப் பெற்றான். இதனை, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார்,

"உயர்ந்து ஓங்கிய விழுச்சிறப்பின்
நிலம் தந்த பேர் உதவி
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்!"

—மதுரைக் காஞ்சி—59-61

என்று பாராட்டுவதனால் அறிகிறோம்.

இடைச் சங்க காலத்தில் கவியரங்கேறிய இந்நிலந் தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்தில், தொல்காப் பியம் அரங்கேற்றம் செய்யப்பெற்றது; தொல்காப்பிய ருடன் கல்வி கற்றவரான பனம்பாரனார் என்ற புலவர், தொல்காப்பியத்திற்குத் தாம் இயற்றிய சிறப்புப் பாயிரத்தில்,

"நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
.....
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

என்று குறிப்பிட்டுள்ளார்: "இப்புலவர் பெருமான் பாடிய குறுந்தொகைப் பாட்டில்,

"ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
கூரசைந் தனையாய் நடுங்கல் கண்டே" — (52)

என வருவதன்கண், கடல் எழுந்து மிதித்தலால் நீரில் விளங்குகின்ற மலை அசைந்து நடுங்குதல் கண்டு எனக் கூறுவது, இவர் தாம் கண்கூடாகக் கண்ட பெருங் கடல்கோள் நிகழ்ச்சியை உவமைமுகத்தான் கூறினர்

என்று துணிவது இயைபுடையதே யாகும். கடல் அலை மிதித்துப் பெருமலைகளையும் நடுங்கச் செய்த செய்தி இவர்க்கு அடுத்து நிகழ்ந்து இவர் கண்கூடாகக் கண்டது ஒன்றுகலின் அதனையே எடுத்தாண்டனர் என நினைக்கத் தகும்.''[1]

இவை யாவும் தமிழகத்தின் தென் பகுதியில், கடைச் சங்க காலத்துக்கு முன்பு இரு கடல் கோள்கள் உண்டானதை நன்கு வலியுறுத்துகின்றன. ''இந்தியாவிலிருந்து இலங்கையானது கடலோரத்தில் உண்டாகிய தோர் கலக்கத்தால் கிறித்து பிறக்குமுன், 2387 ஆண்டில் பிரிவுற்றதாகப் பௌத்தர்களால் சொல்லப் படுகின்றது. மற்று மொருமுறை கி. மு. 504 ஆம் ஆண்டில் 'பாண்டுவாசா' (இலங்கை அரசில் ஒருவன்) காலத்தில் அவ்வாறே ஒரு கடல்கோள் உண்டாயிற்று என்றும், இதற்கு 200 ஆண்டுகளுக்குப் பின் கி மு. 306-இல் ஆட்சி புரிந்த தேவனும்பிரிய திஸ்ஸாவின் காலத்தில் கொழும்புப் பக்கத்தில் நிலமானது தன் மட்டத்தில் தாழ்ந்து அழிந்ததாகவும் கூறப்பட்டுள்ளன.'' எனிபா பேரா சிரியர் டென்னண்டு. இலங்கையின் வரலாற்றை எழுதப் புகுந்த இவ்வரலாற்றுசிரியர், இலங்கையின் சரித்தத்தைக் கூறும் இராசாவளி, மகா வம்சம், தீப வமிசம் முதலிய நூல்களை ஆராய்ந்துள்ளார். அவர் அந்நூல்களில் காணப் படும் கடல் கோள்களைப் பற்றிய குறிப்புக்கள் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பொருந்துவதும் ஏற்கத் தக்கதும் ஆகும் என்று கூறியுள்ளார். தாம் எழுதிய இலங்கையின் வரலாற்றிற்கு அவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளார்.[2] கி. மு. இரண்டாயிரத்துக்கு முன்பு ஒரு கடல் கோள், கி. மு. ஆரும் நூற்றாண்டில் ஒரு கடல் கோள், கி. மு. நான்காம் நூற்றாண்டில் ஒரு கடல் கோள் உண்டாகி இருக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து. அவ்வாராயின் இன்றைக்கு 4300 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த முதற் கடல் கோள், தமிழகத்தின் தெற்கே இருந்த 'குமரிக் கண்ட'த்தின் தென் பகுதியை விழுங்கி விட்டதென்பதும், கி. மு. ஆரும் நூற்றாண்டின் தொடக்கத்தே நிகழ்ந்த இரண்டாம் கடல் கோள் குமரிக்

1 இரா. இராகவையங்கார்: தமிழ் வரலாறு. பக். 43-44.

2 Quoted in The Tamils 1800 years Ago. P. 21.

கண்டத்தின் வட பகுதியை விழுங்கி விட்டதென்பதும் கருத்தில் கொள்ளத் தக்கது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் உண்டான கடல் கலக்கம் தமிழகத்தின் தென் பகுதியைக் கொண்டது என்றும் கொள்ளலாம்.

இவற்றுள் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் கடல் கோள் வெறுங் கற்பனை அன்று என்பது உறுதிப் படுகிறது. கடல் கோள்களைப் பற்றிய முச்சங்க வரலாறும், மண்ணியலார் 'லெமூரியா'வைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களும் தமிழகம் 'காலங் தொடந்த தொன்மை உடையது' என்பதனை வலியுறுத்துகின்றன.

3. வடமொழியாளர் கண்ட தமிழகம்

"பொன்னிறைந்ததாயும் அழகுடையதாயும் முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்ற தாயும் பாண்டியர்க்குரியது மாகிய கவாடத்தைப் பார்க்கக் கடவீர்."

—வான்மீகி

தமிழகத்திற்கும் வட இந்தியாவிற்கும் மிகப் பழங் காலத்தில் எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை என்று வின்சென் ஸ்மித் என்னும் இந்திய வரலாற்றுசிரியர் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.[1] விந்திய மலைத் தொடருக்கும் நருமதை ஆற்றுக்கும் தெற்கே உள்ள நாட்டினை இருக்கு வேதப் பாக்கள் ஓரிடத்திலும் குறிப்பிட வில்லை; எனவே வேத கால ஆரியருக்குத் தென்னாட்டைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பர் R. K. முக்கர்ஜி.[2] விந்தியத்திற்குத் தெற்கே உள்ள நிலப்பரப்பினை 'தக்கண பாதம்' அல்லது 'தக்கணம்' என்று வடமொழி

---

1 Dr. V. A. Smith. Oxford History of India. P.—iii

2 "The country beyond the Vindhya range and the Narmada river, which are not mentioned in the Rig-Veda, was not known to the Vedic Aryans."

—Dr. R. K. Mukerji.: Fundamental Unity of India P. 68.

யாளர்கள் குறிப்பிட்டுள்ளதாக டாக்டர் . G. பந்தர்கர் கருதுகின்றார்[1].''

கி. மு. ஏழாம் நூற்றாண்டு வரை வடமொழியாளர் தமிழகத்தைப் பற்றி அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. ''கி. மு. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாணினி வாழ்ந்திருக்க வேண்டும். அவருடைய நூலில் பல நாடுகளும் மலைகளும் ஆறுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. தென்னாட்டில் உள்ளதாக அவர் குறிப்பிடும் நாடுகள் அவந்தி, கோசலம், கலிங்கம் முதலியனவாகும். இவற்றிற்குத் தெற்கே உள்ள நாடுகளைப் பற்றி அவர் ஒன்றும் கூறுமை சிந்தித்தற்குரியதாகும். இதனால் இந்திய ஆரியர்கள் கிறித்து பிறப்பதற்கு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை தென்னாட்டைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.[2]

பாலிமொழியில் 'சுத்த நிப்படை' (Sutta Nipatai, 976) என்ற பழைய நூலில் 'தக்கணபாதம்' என்பதைத் தற்காலத்திய தக்கணத்தை முழுவதும் குறிப்பிடாமல், மேலைக் கோதாவரியில் உள்ள சில ஊர்களை மட்டுமே குறிப்பிடுகிறது.

மேற்கண்ட குறிப்புக்களினால் வேதகாலம் முதற்கொண்டு புத்தர் காலம்வரை வாழ்ந்த வட இந்தியர்களுக்குத் தென்னிந்தியாவைப் பற்றியும் இலங்கையைப் பற்றியும் எவ்வித நில இயல் அறிவும் இருந்ததில்லை என்பது விளங்குகின்றது; இந்நாடுகளைப் பற்றி அவர்கள் தெரிந்து கொண்டதும், தென்னாட்டில் அவர்கள் குடியேறத் தொடங்கியதும் கி. மு. ஏழாம் நூற்றாண்டிற்கு மிகப் பிற்பட்ட காலத்திலேதான் என்பதனை சமஸ்கிருதம், பாலிமொழி நூல்களினால் நன்கு அறியலாம்''[3]

தென்னிந்தியா முதன் முதலாக வான்மீகி இராமாயணத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. வான்மீகி இராமாயணத்தின் காலம் அறுதியிடப் பெறவில்லை; ஆயினும்,

---

[1] Dr. R. Y. Bhandarkar : History of the Deccan. P. 5.

[2] Ibid. P. 15

[3] Dr. R. K. Mukerji: Fundamental Unity of India P. 71.

அதில் கூறப்பட்டுள்ள கதை எழுதப்பட்ட காலம் புத்த சமண சமயங்கள் தோன்றுவதற்கு முற்பட்டதாகும் என்பது இந்நூலினை நோக்குவார்க்குப் புலனாகின்றது. இந்நூலில் உள்ள கதை, நூல் எழுதப்பட்ட காலத்தை விட மிகப் பழமையானது என்பது வெளிப்படை. வான்மீகி இராமாயணத்தின் பல பகுதிகள் இடைச்செருகல்கள் என்றும் கூறுவர். எது எவ்வாறுயினும், வான்மீகி இராமாயணம் கி. மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதன்று என்பது மாக்டொனல் முதலிய ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.[1] வான்மீகி இராமாயணம், "..... பின் பூந்தாதுக்கள் நிறைந்ததும், வியக்கத்தக்க சிகரங்களையுடையதும், பல வண்ண மலர்கள் நிறைந்த சோலைகளையுடையதும், சந்தனக்காடு செறிந்ததுமான பெரிய அயோமுக மலையைத் தேடுங்கள்; அதன்பின் தேவ அரம்பையர் வந்து நீராடுகின்ற பளிங்குபோன்ற தெளிந்த நீரையுடைய அழகிய காவிரி ஆற்றை அங்கே காண்பீர்கள்; அந்த மலயமலையின் சிகரத்தில் ஆதித்தனுக்கு ஒப்பான மிகுந்த ஒளியையுடைய முனிவர்களுள் சிறந்தவரான அகத்தியரைக் காண்பீர்கள். பின்பு அம்முனிவரிடம் ஆணை பெற்றுச் சென்று முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரவருணியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளால் மூடப்பெற்ற திட்டுக்களையுடையதாய், கணவனிடத்து அன்புள்ள மங்கையானவள் புக்ககம் புகுமாறு போலக் கடலுள் சென்று விழும். பின்பு பொன் நிறைந்ததாயும் அழகுடையதாயும் முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும் பாண்டியர்க்குரியதுமாகிய கவாடத்தைப் பார்க்கக் கடவீர்"[2] என்று தமிழகத்தைக் குறிப்பிடுகிறது. இதனுள் தமிழர் தலைநகரமாகக் குறிக்கப்படும் கபாடபுரமே இடைச்சங்கம் இருந்த நகரம் என்று தமிழ் இலக்கிய மரபு கூறுகிறது. வான்மீகி இயற்றிய இராமாயணம் வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது. அத்தகைய ஆதிகாவியத்தில் தமிழ்மொழி வளர்ந்த நகரத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுவதனால் தமிழகத்தின் தொன்மையை ஒருவாறு உய்த்துணரலாம்.

---

1. Macdonell: History of Sanskrit Literature P. 09.

2. மு. இரா. ஆராய்ச்சித் தொகுதி, பக். 8.

பாணினிக்கு இந்தியாவின் முழு நிலப்பரப்புத் தெரியாதிருக்க, அவருடைய நூலின் உரையாசிரியரான காத்தியாயனருக்கு இமயம் முதல் குமரிவரை உள்ள நாடுகள் அனைத்தும் தெரிந்து இருந்தமை வியப்பிற்குரியதாகும். இவர் சோழ பாண்டிய நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவரது காலம் மௌரியப் பேரரசுக்கு முற்பட்ட நவநந்தரின் ஆட்சிக்காலம் என்று வடமொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதனால் இவருடைய காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். இக்காலத்தில்தான் தமிழகத்திற்கும் வடநாட்டிற்கும் நேரடியான தொடர்பு உண்டாகியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

அலக்சாண்டர் காலத்தில் இந்தியாவின் நில இயலைப் பற்றிய நிறைந்த அறிவு இருந்ததாகத் தெரிகின்றது. சிடிராபோ (Strabo) என்ற கிரேக்க வரலாற்றுசிரியன், அலக்சாண்டர் படையெடுப்பின்பொழுது, 'இந்திய நாட்டினை முழுவதும் அறிந்தவர்களைக் கொண்டு இந்திய நாட்டின் முழுவருணனையை எழுதச் செய்தான்' என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மௌரியப் பேரரசர் காலத்தில் இந்திய நாட்டின் நில இயல் அறிவு ஆழ்ந்தும் பரந்தும் இருந்தது என்பதை நாம் இந்திய வரலாற்றின் மூலம் அறிகின்றோம். சந்திரகுப்த மௌரியன் அவைக்களத்து இருந்த கிரேக்கத் தூதரான மெகஸ்தனிஸ் தமது. 'இந்திகா' என்ற நூலில் பாண்டிய நாட்டின் செல்வத்தையும், பாண்டியனது படை ஆற்றலையும், அவனது அரச மாதேவியின் சிறப்பையும், அந்நாட்டிற்கே உரியதும் சிறப்புடன நிகழ்ந்ததுமான முத்துக் கொழிக்கும் தொழிலையும் பற்றி விளக்கம் தந்துள்ளார்.[1]

இக்காலத்தைச் சார்ந்த சாணக்கியரின் "அருத்த சாத்திரத்தில்" தென்னாட்டைப் பற்றி வடநாட்டு மக்கள் நன்கறிந்திருந்தனர் என்பதற்குரிய சான்றுகள் சில உள்ளன. சாணக்கியர் தாமிரவருணி ஆற்றின் கழிமுகத்தில் கிடைப்பனவும், பாண்டியர் தலைநகரமாகிய கவாடபுரத்தில் கிடைப்பனவும் ஆகிய இருவகையான முத்துக்

[1] K. A. N. Sastri. Foreign Notices of South India P.P. 41.

களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பருத்தி ஆடைகளில் சிறந்ததும் மெல்லியதும் மதுரைமா நகரில் நெய்யப்படு பவையே என்றும் பாராட்டியுள்ளார்; தமிழகத்தில் கிடைக் கும் பலநிற 'வைடூரியம்', சந்தனம் முதலியவற்றையும் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திய வாணிகப் பெருவழி யைப் பற்றியும், வாணிகத்தில் தென்னாட்டு வாணிகமே சிறந்தது என்றும், வடநாடு கம்பளி தோல் குதிரைகளில் வாணிகம் நடத்த, தென்னாடோ மிக உயர்ந்த பொருள்கள் ஆகிய வைரம், முத்து, சங்கு முதலியவற்றில் வாணிகம் நடத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளமை கருதக் தக்கது. [1]

இதனால் அக்காலத்தில் பேரளவில் தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் வாணிகம் நடந்து வந்ததற்கு அடிப் படைக்காரணம் நவநந்தரின் பேரரசும் அவருக்குப் பின் தோன்றிய மௌரியப் பேரரசுமாகும் என்பது புலனு கின்றது.

பதஞ்சலியின் காலத்தில் (கி. மு. 150) தென்னாட் டைப் பற்றிய அறிவு மிகவும் வளர்ச்சியுற்று இருந்ததாகத் தெரிகின்றது. தமது மாபாடியத்தில் மகிசுமதி, வைத ருப்பம், காஞ்சிபுரம், கேரளம் ஆகிய நாடுகளில் காணப் படும் மொழி இயல் வழக்கைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். தென்னாட்டில் சாரசி (Sarasi) என்ற பெரிய ஏரிகளைக் குறிப் பிடப் பயன்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனால் தென்னாட்டு மொழி வழக்காற்றினை அறித்திருந்தார் என்பது விளக்க முறுகிறது.

வராகமிகிரர், இந்தியத் துணைக் கண்டத்தை ஒன்பது நாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் பெறக்கூடிய பொருள்களைப் பற்றிய விளக்கம் தந்துள்ளார். அவற்றுள் காஞ்சி, சேர, சோழ, கொங்கண, பாண்டிய நாடுகள் சிறப் பிடம் பெற்றுள்ளன.

கல்காட்டும் தமிழகம்

வடநாட்டில் உள்ள கல்வெட்டுக்கள் சில தமிழகத் தின் தொன்மைக்கு மறைமுகமாகச் சான்று பகருகின்றன.

1. Arthasastra—P. 83-Edited by Shama Sastri.

அவற்றுள் பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் அசோகன் காலத்தியது என்றுலும், அவை தரும் குறிப்புக்கள் தமிழக வரலாற்றிற்குப் பெரிதும் பயன்படுவனவாகும். மௌரியப் பேரரசினை நிறுவிய சந்திரகுப்த மௌரியன் தனது வாழ்நாளின் இறுதிக் காலத்தில், ஆட்சியைத் துறந்து பன்னிரண்டு ஆண்டுகள் சமண முனிவரான பத்திரபாகுவுடன் மைசூரில் உள்ள வேள்குளம் (Sravana Belgola) என்ற இடத்தில் உண்ணு நோன்பு இருந்து உயிர் துறந்தார் என்பது சமண சமயத்தினரிடைத் தொன்று தொட்டு வழங்கிவரும் மரபுக் கதையாகும். இக்கதையினை வலியுறுத்துவது போன்று அவ்விடத்தில் கிடைத்துள்ள கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கல்வெட்டொன்று மேற்கண்ட கதையினைக் கூறுகின்றது. கி. பி. 900-த்தில் சீரங்கப்பட்டணத்திற்கு அருகில் பொறிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள், சிரவண பெல்கோலாவில் உள்ள சந்திரகிரி மலையின் தாழ்ந்த குன்று ஒன்றில் சந்திரகுப்த மௌரியன் பத்திரபாகு ஆகிய இருவருடைய அடிச்சுவடுகள் காணப்படுவதால், அம்மலைக்கு 'முனிபதி' என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர் என்று குறிப்பிடுகிறது. இவற்றோடு அரிசேனர் (கி. பி. 931) இயற்றிய 'பிரகத்கதா கோசம்' என்ற நூலில் சந்திரகுப்த மௌரியனின் பிற்கால வாழ்க்கையைப் (சிரவண பெல்கோலாவிற்கு வந்து வாழ்ந்தது) பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. சந்திரகுப்த மௌரியனது இறுதிக் காலத்தைப் பற்றி வரலாறு ஒன்றும் கூறுமல் அமைதியாக இருப்பதால் இக்கதை உண்மையாக இருக்கலாம் என்பது வரலாற்று வல்லுநர்களின் கருத்தாகும்.

அசோகன் தனது ஆட்சியைக், கலிங்கப் போருக்குப் பிறகு (கி. மு. 261) தென்னுட்டில் பரப்பவில்லை என்பதனை அறிகின்றோம். புத்தர் பெருமானின் அன்பு நெறியைப் பின்பற்றி அறவாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகினன் என்று சரித்திரம் பேசுகிறது. அசோகனது பதின்மூன்றும் கற்சாசனம் அவனுடைய அறவாழ்விற்குச் சான்றாக விளங்குகின்றது. அசோகனின் கற்றாண்கள் தமிழகத்தின் அரசியல் நிலையை முதன் முதல் விளக்குவனவாகும். சென்ற நூற்றாண்டில் மைசூரில் தோண்டி எடுக்கப்பட்ட அசோகனுடைய சிறிய கற்சாசனம்,

அவனது ஆட்சி தென்னாட்டில் மைசூர் வரையில் பரவி இருந்தது என்பதற்குத் தக்க சான்று என்பர் தொல் பொருள் ஆராய்ச்சியாளர். அசோகனுடைய கற்சாசனங் களில் இரண்டாவது, கற்சாசனமும், பதின்மூன்றுவது கற் சாசனமும் தென்னிந்தியாவோடு இலங்கையையும் சேர்த் துக் குறிப்பிடுகின்றன. இரண்டாவது கற்சாசனத்தில் தென்னாட்டு அரச குடிகளைப் பற்றிய விளக்கம் தரப்பட் டுள்ளது. சோழர், பாண்டியர், சத்திய புத்திரர், கேரள புத்திரர், தாம்பன்னி (தாமிரவருணி?) என்னும் பெயர்கள் இக்கற்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள், சோழ, பாண்டிய, சேர (கேரளபுத்திரர்) நாடுகள் தமிழகத் தின் மூப்பெரும் பேரரசுகளாகும். இவற்றுடன் குறிக்கப் கப்படும் 'சத்திய புத்திரர் என்பார் யார்?' என்பதைப் பற்றிப்பல்வேறுகருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தவ ரென்றும், சங்க இலக்கியத்தில் உண்மையே பேசும் கோசர் என்று சொல்லப்படும் "நாலூர்க் கோசர்" இனத் தைச் சேர்ந்தவரென்றும், பிற்காலத்தில் பல்லவர்கள் தலை நகராய காஞ்சியில் வாழ்ந்தவரென்றும், தகடூரைத் தலைநகராகக் கொண்டு கொங்குநாட்டை ஆண்ட அதிக மான் குடியினர் என்றும் பலவாறுக வரலாற்றுசிரியர்கள் கருதுகின்றனர். எனவே, இப்பெயர் குறிப்பிடும் 'சத்திய புத்திரர்' யார் என்பதனை அறுதியிட்டுக் கூற இயல வில்லை. ஆயினும், சங்க இலக்கியம் குறிப்பிடும் 'கோசர்' என்ற குடியினரையே 'சத்திய புத்திரர்' என்று அசோகன் சாசனம் குறிப்பிடுவதாகக் கொள்ளுவதில் தவறில்லை. கிரேக்க ஆசிரியர்கள் 'டாப்ரோபேன்' என்று இலங்கை யைக் குறிப்பிட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். அவ்வாறுயின், 'தாம்பன்னி' என்று அசோகன் சாசனம் கூறுவது இலங்கையாகவே இருக்கலாம். மேற் கண்ட நாடுகள் யாவும், அசோகன் ஆட்சிக்குட்படாது, அவனுடைய பேரரசுக்கு வெளியே இருந்தனவாகும் என் பதைத் தெளிவாக அக்கற் சாசனம் கூறுகிறது. எனினும், அம்மாபெரும் மன்னன் அந்நாடுகளோடு நட்புறவுகொண் டிருந்தான். அது மட்டுமல்லாமல், தென்னாட்டில் உள்ள மக்கள், விலங்குகள் நலத்தில் ஆர்வம் உடையவனாய், மருத்துவ வசதிக்கு ஏற்பாடுகள் செய்தான் என்று தெரி கிறது. இதற்காக இந்நாடுகளில் பச்சிலைமூலிகைகளையும்,

வேர்களையும் நட்டுப் பயிரிடுவதற்குத் தூதுக்குழுவினரை அனுப்பியும் தொண்டு செய்தான் என்று அறிகின்றோம். மேலும் புத்த தருமத்தைப் போதிப்பதற்கும் போதி மாதவர்களையும், சேர சோழ பாண்டிய நாடுகளுக்கும், இலங்கைக்கும் அனுப்பியதாகக் கற்சாசனம் கூறுகிறது.

அசோகன் காலத்தில் தமிழகம் உற்றிருந்த நாகரிகப் பண்பாட்டையும், அரசியல் சிறப்பையும் அறிய இச்சாசனங்கள் பயன்படுகின்றன. அசோகன் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் நிலையான அரசுகள் தோன்றி வளர்ந்துள்ளமையும், அமைதியும் காவலும் உடையதாய் நாடு நன்னிலையுற்றிருந்தமையும் அசோகன் உள்ளத்தைக் கவர்ந்தமையால்தான் இந்நாடுகளோடு நட்புறவு பூண்டான். தமிழகத்தைப்பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்களுள் மிகப் பழமையானது அசோகனின் கற்சாசனங்களே என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, சுங்கர்கள், ஆட்சியில் கலிங்கநாடு தன்னுரிமை பெற்றதோடு, சுங்கப் பேரரசர்களைப் பல முறை தோற்கடித்ததையும் கல்வெட்டுக்களின் மூலம் அறிகின்றோம். இவ்வாறு கலிங்கம் தன்னுரிமை பெற்ற ஆற்றல்மிக்க நாடாக விளங்கியதற்குக் காரணம், 'மன்னரில் மாண்புடையோன்' என்று போற்றப் பெற்ற காரவேலனின் செங்கோன்மையே ஆகும். இவ்வேந்தன், நாட்டிய கற்றூண் அத்திகும்பா எனப்படும் அத்தினாவம் (யானைமுகம்) என்னுமிடத்தில் பேராசிரியர் ஜெயசுவால்: என்பவரால் கண்டெடுக்கப்பட்டது அக்கல்வெட்டு அவனுடைய பதின்மூன்றும் ஆட்சி ஆண்டில். பொறிக்கப்பட்டதாகும். அவன் இளமையில் கற்ற கலைகளையும், அரசுகட்டில் ஏறியபின் ஆற்றிய அருஞ் செயல்களையும் அக்கல்வெட்டு காலவரன்முறைப்படுத்திக் கூறுகிறது. காரவேலன் தனது பதினேழாவது ஆட்சியாண்டில், நூற்றுப்பதின்மூன்று ஆண்டுகளாகத் தமிழக மன்னர்கள் ஒன்றுகூடி அயலார் படையெடுப்பை எதிர்ப்பதற்கு அமைத்துப் போற்றிய கூட்டணியை ('த்ரமிர தேச சங்காதம்') முதன் முதலில் (தான்) தகர்த்து எறிந்ததாகப் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளான்."[1]

---

1. K. P. Jayaswal–Imperial History of India, P. 16.

இதனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் (கி.மு. 169) கார்வேலன் தமிழ்ப்பெரு மன்னர் களின் கூட்டணியை முறியடித்து வெற்றிபெற்றான் என்பதுபுலனாகின்றது. அக்கல்வெட்டுக் கூறுவது உண்மை யானால், மௌரியரின் படையெடுப்பை எதிர்க்கவே பண்டைத் தமிழக வேந்தர்கள் கூட்டணி அமைத்துத் தமிழகத்தை அயலார் படையெடுப்பிலிருந்து ஒரு நூற்றாண்டிற்குமேல் காத்து வந்தனர் என்பது பெறப் படும். இவ்வாறு தமிழக மண்ணில் அயலார் கால் எடுத்து வைக்கா வண்ணம் காத்த தமிழக வேந்தர்கள் எத்துணைப் படைவலிமை உடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணர்தற்குரியது ஆகும். தமிழக வேந்தர்கள் ஒற்றுமையுடன் ஒரு முறையாகிலும் கூட் டணி அமைத்து அயலாரோடு போராடினர் என்ற அரிய செய்தி நமக்கு வியப்பும் விம்மிதமும் தருவதாகும்.

4. பண்டை உலகம் கண்ட தமிழகம்

" இந்தியாவின் ஒரு பகுதியினை ஆண்ட பாண்டி யன் என்னும் ஓர் அரசனிடமிருந்து, இந்திய அறிஞர் களைக் கொண்ட தூதுக்குழு ஒன்று பரிசுகள் பல வற்றைக் கொண்டுவந்து அகஸ்தசு சீசருக்குத்[1] தந்து நட்புறவு கொண்டது." [2]

—சிடிராபோ

இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதியாகத் தமிழகம் அமைந்துள்ளமையால் பண்டைக் காலத்து நீண்ட கடற்கரை உடையதாக இருந்தது. மூப்புறமும் கடலால் சூழப்பெற்று இருந்தமையின் இயற்கையிலேயே அலைகடலைக் கண்டு அஞ்சா நெஞ்சம் படைத்த கடல் மறவரைப் பெற்றதாக விளங்கி வருகின்றது. தொல்பழங் காலத்திலேயே பண்டைத் தமிழர்கள் திரை கடலில் வீசும் சூருவளியைக் கண்டும் கலங்காது கலத்தினைச் செலுத்தி மேலைநாடுகளோடும் கீழை நாடுகளோடும் வாணிகம் செய்துவந்தனர். நாகரிகங்களின் ஊற்றுக ளாகவிளங்கிய

1. அகஸ்தசு சீசர் (கி. மு. 63 முதல் கி.பி. 14 வரை) உரோமாபுரி யின் மாண்புமிக்க முதல் மாபெரும் மன்னன். இவனுடைய ஆட்சி உரோம் நாட்டின் 'பொற்காலம்' எனப் போற்றப்படுவதாகும்.

2. J. W. Mc-Crindle.—Ancient India as described in Classical Literature, P. 9.

பாபிலோனியா, எகிப்து, கிரீசு, உரோமாபுரி முதலிய நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டு இருந்தனர். அன்றைய கடலக வாணிகத்தில் முதன்மையாக விளங்கிய நாடுகளுள் தமிழகம் சிறப்புடன் விளங்கியதை அந்நாடுகளில் கிடைத்துள்ள சான்றுகளால் அறிகின்றோம். மேலும் கிரேக்க, உரோம் வரலாற்றுசிரியர்கள் தமிழகத்தைப் பற்றிக் கருதிய கருத்துக்கள் இதை நன்கு வலியுறுத்துகின்றன.

இன்றுவரை உலகில் 21 நாகரிகங்கள் மலர்ந்து மறைந்ததாகத் தாயின்பி என்னும் வரலாற்றுப் பேராசிரியர் கணக்கிட்டுள்ளார். அவற்றுள் பல்லாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட பழம் பெருமை வாய்ந்தவை எகிப்திய, பாபிலோனிய, சீன, சிந்துவெளி நாகரிகங்களாகும். இவையாவும் உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவை. கி.மு. மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பாபிலோனிய நாட்டை ஆண்ட ஊர் ஏயா அல்லது ஊர் பகாஷ் என்னும் வேந்தன் சால்டியாவின் தலைநகராக விளங்கும் ஊர் (Ur) எனப்படும் மாநகரில், முய்கேர் பகுதியில் அமைத்த திங்கள் கோட்டம் சேரநாட்டின் தேக்கு மரத்தினைக் கொண்டு கட்டப்பெற்றதாகத் தெரிகின்றது.[1] இதனால், தமிழ்நாட்டுக் கப்பல்கள் மூலம் மிகப் பழங்காலத்தில் சேர நாட்டின் தேக்குமரம் வெளி நாடுகளுக்குச் சென்றதென அறிகின்றோம். இந்தியாவில் இருந்து சென்ற 'சிந்து' என்னும் மென்மையான துகில், தமிழகத்தில் தயாரிக்கப்பட்டதே என்பர் பேராசிரியர் பி. தி. சீநிவாச ஐயங்கார். இத்துகில் அன்றைய பாபிலோனிய மக்கள் உடுத்த உடைகளைப்பற்றிய பட்டியல் ஒன்றில் சிறப்பிடம் பெற்றுள்ளதாம்.

யானைகள் இந்தியாவின் தனிப்பெருஞ் செல்வம் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு ஆரியர் யானையை அறிந்ததில்லை. மிகப் பழைய வேதமொழியில் யானையைக் குறிக்கும் சொல்லே இல்லை; பிற்காலத்தில் இந்திய மண்ணில் யானையைக் கண்டபொழுது, அதனை 'மிருகஸ்தின்' (கையுடைய மிருகம்) என்று வியப்புடன் அழைத்தனர். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து அசீரிய (Assyria) நாட்டை ஆண்ட மூன்றும் சால்மனேசருக்குக் கி. மு. 860-இல் யானைகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

1. P. T. S. Aiyangar—History of the Tamils P. 38.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட புத்த சாதகக் கதையான 'பேவேரு சாதகம்' தென்னாட்டில் இருந்து முதன் முதல் மயில் பாபிலோனுக்குச் சென்றது பற்றிச் சுவைமிக்க கதை ஒன்றைக் கூறுகிறது.[1] கி. மு. ஆயிரம் முதல் தொளாயிரம் வரை பாலஸ்தீனத்தின் அரசராயிருந்த டேவிட் சாலமனும், தயர் நகரின் பொனீசிய அரசனுன ஈரமும் தென்னாட்டு உவரிக்கு (Ophis)க் கலங்களை அனுப்பி, முத்து, பொன், வெள்ளி, தந்தம், குரங்குகள் ஆகியவற்றைத் தருவித்தனர். இவற்றோடு மயிலையும் சந்தனத்தையும் சாலமன் தருவித்தான்.

தமிழ்ச் சொற்களான அரிசி, சந்தனம் என்பன எபிரேய மொழியில் நிலையான இடம் பெற்றுள்ளன. அரைசா (Oryza) என்று அவர்கள் அரிசியைக் குறித்தனர். இச் சொல்தான் ஐரோப்பிய மொழியில் புகுந்து திரிந்து பல வடிவுகள் பெற்றதுவாம்; இன்று ஆங்கிலத்[2] தில் 'ரைஸ்' என்று வழங்கப்பெறும் சொல்லும் இதிலிருந்து பிறந்ததாகும். அரிசி என்னும் தமிழ்ச்சொல் ஆங்கிலச் சொல்லாகத் திரிந்த வரலாறு போற்றுதற்குரியது. தமிழகத்தின் சந்தனமும் பாபிலோனியாவின் மூலம் மேலை நாடுகளுக்கு அறிமுகமாகியதனால் 'சாண்டல்' என்று ஆங்கில அகராதியில் இடம் பெற்றதென்பர். கிறித்துவ மறைநூலில் மயில்கள் துக்கியம் (Tukkiyam) என்று குறிக்கப்பட்டுள்ளன. 'துகி' என்ற சொல் தமிழிலுள்ள தொகை என்ற சொல்லின் திரிபாகும். 'அம்' என்பது பன்மை விகுதி. இவ்விரண்டு பொருள்களுக்கும் தமிழப் பெயரின் மரபுகளே எபிரேய கிரேக்க இலத்தீன் முதலிய மொழிகளில் வழங்கப்பட்டன.[3] கி. மு. ஏழாம் நூற்றாண்டில் பாபிலோனியாவில் ஒரு தமிழ்க் குடித்தனம் இருந்தது என்பதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன.

தமிழகம் கி. மு. இரண்டாயிரத்து ஐந்நூறும் ஆண்டிற்கு முன்பே எகிப்துடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. ஆக்கூர் என்னுமிடத்தில் உள்ள கல்வெட்

---

1. D. H. Rawlinson: Inter course between India and the Western World P.P. 2-14.

2. Ibid. P. 14.

3. T. R Sesha Iyengar : Dravidian India, P 140.

டொன்று (கி. மு. 2600) தமிழகத்திலிருந்து தருவிக்கப் பெற்ற கருங்காலிமரம், நறுமணப் பொருள்கள், யானை மருப்பு, சிறுத்தை முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.[1] கி மு. 1462 அளவில் முடிவுற்ற அரச மரபைச் சார்ந்த எகிப்திய மன்னர்களின் கல்லறைகளில் தமிழ்நாட்டு நீலிச் சாயத்தில் தோய்த்த மெல்லிய துணிகள் உள்ளனவாம். பாண்டிய நாட்டிற்குச் சென்று வந்த அட்சிபஸ் அரசியின் (கி. மு. 1500) வாணிகக்குழு தமிழகத்திலிருந்து கருங்காலி, தேக்கு, இலவங்கம், நறுமணப் பொருள்கள் முதலியன கொண்டு சென்றார்கள்.[2]

'வரலாற்றின் தந்தை' எனப் பாராட்டப்பெறும் எரதோடசு, தென்னிந்திய மக்களாகிய திராவிடர்களை "இந்திய எத்தியோப்பியர்கள்" என்று குறிப்பிட்டுள்ளதாக இராலின்சன் என்னும் வரலாற்றுசிரியர் வரைந்துள்ளார். கிரேக்க நாட்டின் முதுபெரும் புலவனான ஓமரும் "இந்திய எத்தியோபியர்"களைக் குறிப்பிட்டுள்ளதோடு, அவர்கள் நாட்டுச் செல்வத்தையும் புகழ்ந்துள்ளதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்து கிரேக்கர் கடல் வாணிகத்தில் செல்வாக்கு பெற்றிருந்தனர். இதன் பயனாகத் தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் அரிசி, மிளகு, இலவங்கப்பட்டை, இஞ்சி, திப்பிலி, கோவை மாவட்டத்திலிருந்து கிடைத்த 'வைடூரியம்' முதலிய பொருள்கள் அந்நாட்டு நாடகப் பேராசிரியர்களான சோபோகிளிசு, அரிஸ்தோபினசு ஆகியோர் நூல்களில் சிறப்பான இடம் பெற்றுள்ளன.

யவனர்,[3] தமிழகத்திலிருந்து மிளகு, இஞ்சி, அரிசி, மென்தோகில், முத்து, கிளி, குரங்கு ஆகியவற்றைப் பெருவிருப்பத்தோடு தருவித்தனர். அந்நாட்டிலிருந்து

1, 2. P. T. S. Aiyangar: History of the Tamils—P. P.-39-41.

3. கிரேக்கர்களையும் உரோமர்களையும் 'யவனர்' என்று பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கிரேக்கர்களில், கடலக வாணிகத்தில் பெரிதும் ஈடுபட்ட அயோனியர்' (Ionians) என்ற மக்களின் பெயர் 'யவனர்' என்று திரிந்து தமிழிலும், மற்ற இந்திய மொழிகளிலும் வழங்கி வருகிறது.

திரைச்சீலை, பாலைவிளக்கு, கலைத்திறன் வாய்ந்த ஒப்பனைப் பொருள்கள் கோட்டைகளுக்கான பொறிகள், இனிய தேறல் முதலியவற்றைத் தமிழகத் துறைமுகங்களில் கொண்டுவந்து குவித்தனர். யவனப் பெண்கள் ஆடல் மகளிராகவும் ஆண்கள் தமிழக வேந்தர்களின் மெய்க்காப்பாளராகவும், கலை வல்லுநராகவும் தமிழகத்தில் வாழ்ந்தனர்.

உரோமாபுரியின் பொற்காலம் எனப் போற்றப்படும் மாபெரும் வேந்தனாகிய அகஸ்தசின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்கும் உரோமிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததெனத் தெரிகின்றது. பாண்டிய மன்னன் ஒருவன் அகஸ்தசுக்கு ஒரு தூதுக் குழுவின் மூலம் தமிழகத்தின் அரும் பொருள்களை அன்பளிப்பாக வழங்கி, உரோம நாட்டுடன் நட்புறவு கொண்டான் என அறிகின்றோம்.

உரோம நாட்டுப் பியூடிஞ்சன் பட்டயங்களினால், ஈராயிரம் உரோமர்கள் அடங்கிய படை ஒன்று முசிரி என்னும் சேரர் துறைமுகத்தில் இருந்ததாகத் தெரிகிறது; அகஸ்தசு பெயரால் ஒரு கோயிலும் கட்டப்பட்டிருந்ததாகச் சொல்லுகின்றனர். பிளினி என்ற உரோம வரலாற்றாசிரியர் "உரோம நாட்டுச் செல்வத்தின் 50 கோடி செஸ்டர்ஸ்கள் (உரோம ரூபாய் நாணயம்) ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆடம்பர வாழ்விற்குரிய பொருள்களில் செலவழிக்கப்படுகின்றதே" என்று மிக்க வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

கி. பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற "செங்கடற் பயணக் கையேடு" (Periplus of the Erythrean Sea) எனப்படும் நூலின் ஆசிரியன் இந்தியாவிற்குக் கடல்வழியாக வந்து தென்னாடு முழுவதும் சுற்றித் தான் நேரில் கண்ட காட்சிகளை எல்லாம் குறித்துச் சென்றனன். அவன் இயற்பெயர் அறியப்படாமையால் கையேடு' எனப்படும் பெரிபுளூசு (Periplus) என்ற கிரேக்கச் சொல்லால் அந்நூலைக் குறிப்பிடுவது மரபு. அந்நூலில் தமிழகத்தின் முக்கிய நகரங்களும் பட்டினங்களும், அரசர் குடிகளும், தொழில்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. "திண்டிஸ்" (தொண்டி) சேர (புத்திர) நாட்டு ஊர்; கடலிலிருந்து பார்க்கும் போது தெரியும் ஒரு சிறிய ஊர். அந்நாட்டிலுள்ள முசிரி என்ற அரேபியாவிலிருந்தும் கிரேக்க

நாட்டிலிருந்தும் வரும் மரக்கலங்கள் நிறைந்துள்ளன. அது ஆற்றோரத்தில் இருக்கின்றது. இவ்வூர் தொண்டி திண்டிஸ்)யிலிருந்து ஆறு வழியாகவும் கடல் வழியாகவும் ஐந்நூறு ஸ்டேடியா (Stadia) தொலைவு உள்நாட்டிலும், கடற் கரையிலிருந்து ஆற்றோரமாக இருபது ஸடெடியா தொலைவிலும் இருக்கிறது. முசிரியிலிருந்து நெல்கிந்தா ஆறு வழியாகவும் கடல் வழியாகவும் ஐந்நூறு ஸ்டேடியா தூரம் இருக்கிறது: அது பாண்டி நாட்டில் இருக்கிறது. இந்தப் பட்டினமும் கடற்கரையிலிருந்து நூற்றிருபது ஸ்டேடியா தூரத்தில் உள் நாட்டிலிருக்கிறது.

இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் பக்கரை (Bacare வைக்கரை என்னும் கோட்டயத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர்) என்ற ஊர் இருக்கிறது; இந்த இடத்திற்கு நெல் கிந்தாவிலிருந்து மரக்கலங்கள் ஊர் திரும்பும்போது வந்து தங்குகின்றன; பண்டங்களை ஏற்றிச் செல்லு கின்றன..... இவ்விடங்களில் மிளகும், தமாலபத்திரம், எனப்படும் பச்சிலையும் (Malabathrum) பெரும் அளவில் கிடைப்பதால் அவர்கள் இந்த அங்காடிப் பட்டினங்களுக் குப் பல பெரும் மரக்கலங்களை அனுப்புகின்றனர். முதலா வதாகப் பெருமளவில் நாணயங்கள் வந்து குவிகின்றன; சிறுநீலக்கல் (Topaz), மென்துகில், சித்திர ஆடை, கரு நிமிளை (Antimony), பவளம், பொலிவற்ற கண்ணாடி, செம்பு ஈயம், நாகம், சிறிதளவு சாராயம், மனோசிலை (Realgar), அரிதாரம் (Orpiment) என்பன்வும், அந்த நாட்டார் கோதுமை வாணிகம் செய்யாததால் மாலுமிகளுக்கு வேண்டிய அளவு கோதுமையும் இறக்குமதியாகின்றன. இங்கிருந்து குட்டநாட் (கொட்டநரா-Cottanara) டில் விளை யும் மிளகு மாத்திரம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனோடு, நல்ல நேர்த்தியான முத்து, தந்தம், பட்டாடை கங்கை நாட்டிலிருந்து வரும் சடாமாஞ்சி (Spikenard) உள்நாட்டிலிருந்து வரும் தமாலபத்திரம் (Malabathrum) சாவகத் தீவிலிருந்தும் (Chryse Island), தமிழகக் கடற் கரைகளிலும் கிடைக்கும் பளபளப்பான கற்கள், மாணிக்கம், நீலம், ஆமையோடு உள்ளிட்ட பலவகைப்பட்ட இரத் தினக் கற்கள் ஏற்றப்படுகின்றன. இவ்விடங்களுக்கு எகிப்திலிருந்து ஜூலை மாதத்தில் புறப்பட்டுப் பருவகாலத் தில் பயணஞ் செய்கிறார்கள்.

"வைக்கரைக்கு அப்பால் கருஞ்சிவப்பு மலை பரளி நாடும், கரையோரமாகத் தெற்கே செல்லுகின்றன. அந்நாட்டின் முதல் இடம் பலிதா (Balita) எனப் பெயர் பெறும்[1] "அவ்விடத்தில் நல்ல துறையும் கடற்கரையோரமாக ஊரும் இருக்கின்றன. இதற்கு அப்பால் குமரி என்றோர் இடமிருக்கிறது; இங்கே குமரி முனையும் துறைமுகமும் இருக்கின்றன. இங்கே தம் இறுதிக் காலத்தைக் கழிக்க விரும்புகின்றவர்களும், நீராட விரும்புகின்றவர்களும், பிரமசரிய நெறியில் ஒழுகுவாரும் வந்து கூடுகின்றனர்; பெண்களும் அவ்வாறே செய்கின்றனர். அதற்குக் காரணம் இங்கே ஒரு பெண் தெய்வம் வாழ்ந்து நீராடினதாகக் கூறப்படுகின்றது.

குமரியிலிருந்து தெற்கே முத்துக் கொழிக்கும் ஊரான கொற்கை (Cochi) வரையில் இந்நாடு பரவுகிறது (சிறையிடப்பட்ட குற்றவாளிகளே முத்துக் கொழிக்கும் வேலையைச் செய்கின்றனர்.) இந்நாடு பாண்டியருடையதாகும். கொற்கைக்கு மேல் வளைகுடாப்புறமாகக் கரை நாடொன்று போகிறது. இந்த நாட்டிற்கு உள் நாடு ஒன்று இருக்கிறது. அதனை அர்கரு (Argaru)[2] நாடு என்று கூறுவார்.

சேர நாட்டிலிருந்தும், வடக்கிலிருந்தும் இந்நாட்டுக்கு வரும் கப்பல்கள் தங்கும் பட்டினங்களும், பெரும் வாணிக நகரங்களும் பல இருக்கின்றன. அவை பின்வருமாறு வரிசையாக இருக்கின்றன. முதலில் காவிரிப்பூம் பட்டினம் (Cawara), பிறகு பொதுகை (Poduce)[3] அதன் பிறகு சோபட்டினம் (Sopatina) எனப்படும் எயிற் பட்டினமும் (இன்றைய மரக்காணம் உள்ளன". இவை செங்கடற் பயணக் கையேட்டில் காணப்படும் பண்டைத் தமிழகத்தைப்பற்றிய விளக்கமாகும்.[4]

---

1. அதனை 'விழிஞம்' என்பர் சிவராசபிள்ளை.

2. கிரேக்க மொழியில் 'அர்கரு' என்னும் சொல் தமிழ் மொழியின் உறையூரைக் குறிப்பதாகும் என்பது சாப் (Schoff) என்பாரின் கருத்து.

3. 'பொதுகைப் பட்டினம்' அரிக்க மேட்டில் காணப்படும் அழிவுச் சின்னமாகும்.

4. K. A. N. Sastri: Foreign Notices of South India PP 57-59.

மகாவமிசம் எனப்படும் இலங்கை வரலாற்று ஏடு, கி.மு. ஆரும்நூற்றாண்டில் இலங்கையின் முதல் அரசனுக விளங்கிய விசயனைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. அவ்வரசன் பாண்டியன் மகளை மணம்புரிந்து கொண்டான். பாண்டிய நாட்டு இளவரசி. கணவன் நாட்டிற்குச் சென்ற கப்பலில் யானைகள், தேர்கள், அரசியல் பணியாட்கள், தொழில் திறன் வாய்ந்த ஆயிரம் குடிகள், எழு நூறு பணிப்பெண்கள், எழு நூறு வேலையாட்கள் முதலிய சீர்வரிசையுடன் சென்றுள் என்று அந்நூல் கூறுகின்றது.

சோழ நாட்டுத் தமிழ்வீரன் 'ஏலாரா' என்பவன் கி.மு. 205 முதல் கி.மு. 161 வரை இலங்கையை ஆண்டு வந்தான் என்று அறிகின்றோம். அவ்வீரனைப் பண்டைத் தமிழ் மரபு 'ஏலேல சிங்கன்' என்றும், அவன் கடல் வாணிகத்தில் மிகச் சிறப்புற்றிருந்த பெருஞ் செல்வன் என்றும் போற்றுகிறது.

சீனாவிற்கும் தமிழகத்திற்கும் மிகப்பழங்காலத் திலேயே தொடர்பு இருந்திருக்கிறது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சீனாவிற்கும் நம் நாட்டிற்கும் வாணிகம் நிகழ்ந்ததற்குரிய சான்றுகள் பல கிடைத்துள்ளன. மேலும் கிழக்கிந்தியத் தீவுகளோடும், தென் கிழக்கு ஆசிய நாடுகளோடும் தமிழகம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததைத் தமிழ் நூல்களால் அறிகின்றோம்.

3

தமிழகத்தின் இயற்கை அமைப்பு

"நில இயலும் காலவரன் முறையும் வரலாற்றின் இரு கண்களாகும்"

—ரிச்சர்ட் ஆக்லியுட்

இயற்கை எல்லை:

பண்டைக்காலத்தில் வடவேங்கடம் முதல் தென் குமரி வரையிலுள்ள நிலப்பரப்பினைத் 'தமிழகம்' என்று அழைத்தனர் என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியத்துள் சான்றுகள் பல உள்ளன. அவற்றுள்

"வையகம் வரைப்பின் தமிழகம் கேட்ப—" புறம் 168
"இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய"
—சிலம்பு-காட்சி வரி 37

என்பன குறிப்பிடத்தக்கன. யவன நாட்டு வரலாற்றாசிரிய ரான தாலமி என்பான் தமிழகத்தை 'லிமிரிகெ' என்று குறிப்பிட்டுள்ளான். உரோமாபுரியில் தயாரிக்கப்பட்ட 'உலகப்படத்தில்', இந்தியாவின் தென்பகுதியான 'தமிரிசி'யில் 'மொதுரா என்ற ஒரு நகரம் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.[1] பழங்காலமுதல் நாம் இருக்கும் நாடு 'தமிழகம்' என்று வழங்கப்பட்டு வருவதனை

(1) Caldwells Comparative Grammar of Dravidian Languages P. 14

இவை வலியுறுத்துகின்றன. ''பண்டைத் தமிழகம் இன்று தமிழ் கூறும் நம் உலகினும் மிக அகன்றிருந்தது. துளு, மலையாளம், கன்னடம் வழங்கும் நாடுகள் இதனுள் அடங்கி இருந்தன. இலங்கைத் தீவும் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழும் பெரு நிலத்தோடு நெருங்கிய உறவுபூண் டிருந்தது'' என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

உலகில் உள்ள பல நாடுகள் மொழியின் அடிப் படையில் பெயர் பெற்றதாகத் தெரியவில்லை. இங்கிலாந்து பிரான்சு போன்ற நாடுகளில் பேசும் மொழிகள் இங்கிலீஷ் பிரெஞ்சு என்று அவை வழங்கும் நாடுகளைக் கொண்டே பெயர் பெற்றுள்ளன. ஆனால் தமிழகம் இதற்கு நேர்மா றானதாகக் காணப்படுகிறது. தமிழ் மொழி வழங்குகின்ற நாடு என்ற காரணத்தினாலேயே தமிழகம் என்ற பெயர் பெற்றுள்ளமை யாவரும் அறிந்த உண்மை. இதனைத் 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்ற பனம்பாரனாரின் கருத்து வலியுறுத்துகிறது. தமிழர் என்னும் இனத்தார் வாழுகின் றமையால் இந்நாட்டிற்குத் 'தமிழகம்' என்ற பெயருண் டாயிற்று என்பர் சிலர்.[1] தமிழ் மொழியைப் பேசும் மக்களைக் கொண்டது தமிழர் இனம் என்னும் பொரு ளுடைய இலக்கிய வழக்கினைக் காண்கிறோம். 'தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானத்து' என்ற விடத்தும், 'அருந் தமிழ் ஆற்றல் அறியா வடபுல மன்னர்' என்ற விடத்தும், தமிழ் என்ற மொழிப்பெயரே தமிழ் வீரரையும், தமிழக வேந்தர்களையும் குறிப்பிட்டுள்ளமை ஒப்பு நோக்குதற் குரியது.

இயற்கையின் ஆற்றல் :

ஒரு நாட்டின் வரலாற்றை ஆராய்வதற்கு முன் அந் நாட்டின் இயற்கை அமைப்பினை நன்கு அறியவேண்டும். ஏனெனில், ஒரு நாட்டின் நிலையான அடித்தளத்தை அமைப்பன அந்நாட்டின் நில அமைப்பு, இயற்கை வளம், பருவநிலை முதலியன வாகும். ஓரின மக்களின் படிப் படியான வளர்ச்சியை முடிவு செய்வது அவர்கள் வாழும்

1. Dr. S. K. Aiyangar's com. VOL. P. 346

நாட்டின் இயற்கைக் கூறுகளே என்று நிலவியல் வல்லுனர் கூறுவர்.[1]

மக்கள் சமுதாய அமைப்பின் வளர்ச்சி, இயற்கைச் சூழல். இனப் பண்பாடு. சமூக சமயச் சூழல் ஆகியவற்றுல் பெரிதும் இயக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் அநாகரிக நிலையிலிருந்த மனிதன், காட்டு மிராண்டியாக வாழத் தொடங்கி, நாடோடியாக இங்கு மங்கும் அலைந்து, அதன்பின் படிப்படியாக இயற்கையின் சக்திகளைத் தனது அடிமையாக்கி நாகரிக நிலையை அடைந்தான் என்பதைக் காணுகின்றோம். இன்று மக்கள் வாழ்வில், இயற்கைக்கு இருந்துவந்த செல்வாக்கினை அறிவியல் வளர்ச்சி ஓரளவு கட்டுப்படுத்திக் குறைத்து விட்டாலும், நிலவியல் இன்றும் பேராற்றல் உடைய தாகவே இருந்து வருகின்றது. அறிவியல் முன்னேற்றம் இயற்கையின் சிறப்புமிக்க பண்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுவதில் முனைந்திருக்கின்றதே ஒழிய, இயற்கையின் போக்கைத் திருத்துவதில் ஈடுபடவில்லை. எனவே, ஒரு நாட்டின் நாகரிகப் பண்பாட்டின் பெரும்பகுதி அந்நாட்டில் வீறுடன் விளங்கும் மலைகள், வற்ருது வளங் கொழிக்கும் ஆறுகள், செல்வத்தைக் கொண்டுவந்து குவிக்கும் அயல்நாட்டு வாணிகத்திற்கு மூலகாரணமாகக் கருதப்படும் கடல்கள், இயற்கை அன்னையின் மடியில் தவழும் கனிப் பொருள்கள் முதலிய இயற்கைக் கூறுகளைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு நாட்டின் அரசையும், ஆட்சிமுறையையும் தக்கவாறு அமைப்பதில் மற்ற இயற்கைச் சூழல்களைவிட, அந்நாட்டின் நில இயலும் இயற்கை அமைப்பும் கொள்ளும் பங்கு மிகப் பேரளவின தாகும்.

---

1. "Geography constitues the permanent basis of every nation's history. It is not too much to say that it is one of the major factors that determine the historical evolution of a people."

-K. M. Panikkar. Geographical Factors in Indian History, P. IX.

3. தமிழகத்தின் எல்லை:

"நீலத்திரைகடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம் செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு"

—பாரதியார்

தமிழகம் இயற்கை எல்லைகளையுடைய மாநிலமாகும். இந்நாட்டின் நில அமைப்பு உலகிற் பழமையுடையது.[1] அதுவே மனித இனத்தின் பிறப்பிடங்கள் சிலவற்றுள் ஒன்றுகலாம், என மண்ணியலார் சாற்றுகின்றனர்.[2] வரலாறு தரும் சான்றுகள் இந்நாட்டிற்குத் தனிப்பெருஞ் சிறப்புக்களை வழங்குகின்றன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்நாடே மனித நாகரிகத்தின் தொட்டிலாகவும் வளர்ப்புப் பண்ணையாகவும் இருந்திருக்கிறது. இந்நாட்டினைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் தமிழகம் என்றே தங்கள் பாக்களில் குறிப்பிட்டுள்ளனர். தொல் காப்பியர் காலத்திலேயே தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு வேங்கடமலை வட எல்லையாகவும் குமரியாறு தெற்கெல்லை யாகவும் கூறப்பட்டுள்ளன.

இந்நாட்டின் வட எல்லையாக வேங்கடமலை விளங்கிய தனால், அதனை 'வடவேங்கடம்' என்று குறிந்தனர். வேங் கடம் (திருப்பதி) இப்போது ஆந்திரநாட்டில், சித்தூர் மாவட்டத்துக்கு வட எல்லையாகவும் நெல்லூர் மாவட்டத் துக்கு மேல் எல்லையாகவும் காணப்படும் உயர்ந்த மலைத் தொடராகும், நெல்லூர் மாவட்டத்தின் தென் பகுதி முழுவதும் பண்டைக் காலத்தில் வட வேங்கடம் எனப்படும் தமிழகத்தின் வட எல்லைப் பகுதி யில் அடங்கி இருந்ததாகத் தெரிகிறது. இன்றைய தமி ழ்கத்தின் தென் பகுதி கடலை எல்லையாகக் கொண்டு

---

1. "Deccan itself is one of the most ancient geological foundations in the world and since the dawn of history, the home of the Dravidians, the oldest of the Dravidian races."

-S. H. Risely. The People of India, P. 2.

2. Mitra. J. C. —Pre-Historic India, L P. 85.

விளங்குகின்றது. 'தென்குமரி' எனப்படும் தெற்கு எல்லையைப்பற்றி ஆராய்ந்தவர்கள் இருவேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். கடலை எல்லையாகக் கொண்ட கிழக்கு மேற்கு திசைகளைப்போலத் தெற்கு திசையும் கடலை எல்லையாகக் கொண்டு இருக்குமாயின் பனம்பாரனர் தென்குமரி என்ற பெயரைக் குறிப்பிடாமல், 'வடவேங்கடம் தென்கடல் ஆயிடை என்றே குறித்திருப்பர். அவ்வாறு குறிப்பிடாமையால், அவர்காலத்தே இன்றைய குமரிக்குத் தெற்கே நிலப்பகுதி இருந்திருக்க வேண்டும். அந்நிலப்பரப்பின் இடையே இருந்த குமரி மலை அல்லது குமரியாறு ஆகியி இரண்டனுள் ஒன்றை அவர் குறிப்பிட்டிருக்கலாம் என்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இன்னொரு சாரார் இன்றைய குமரி முனையத்தான் பனம்பாரனர் குறிப்பிட்டுள்ளதாகக் கூறுவர். அவர்களுடைய கருத்து முச்சங்கங்களைப் பற்றிய தமிழ் இலக்கிய வழக்கிற்கு முரணாக உள்ளமையால், அதனை அறிஞருலகம் தவறென ஒதுக்கியமை இங்கு நினைவு கூர்த்தக்கது.

தமிழகத்தில் தனிப்பட்ட அரசியல் அமைப்பும் பண்பாடும் வளர்வதற்குக் காரணம் வடநாட்டிலிருந்து தென்னாடு விந்திய மலையால் பிரிக்கப்பட்டமையேயாகும். நாற்புறமும் இயற்கை அரண்களையுடையதாய், வலிமை பொருந்திய கோட்டையைப்போல விளங்குகின்றது. இக்காரணத்தினால்தான் காவிரி பாய்ந்தோடும் தமிழகப் பகுதி திராவிட நாகரிகத்தின் தொட்டிலாகத் திகழ்ந்ததோடு, வடவர் ஆட்சிக்குட்படாத நிலையிலேயே யிருந்து வந்திருக்கின்றது. மேலும் இந்நாடு வரலாற்றின் தொடக்க கால முதல் வடநாட்டுப்போக்கினைப் பின்பற்றாது தனித்து நின்று கடலக வாழ்வினைப் போற்றி வந்திருக்கிறது.[1]

———

1 K. M. Panikkar. Geographical Factors in Indian History P. 18.

4. தமிழகத்தின் மலைகள்

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்(கு) உறுப்பு."

-திருக்குறள்-737

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை உருவாக்குவதில் மலைகள் பெரிதும் ஈடுபட்டுள்ளன. மலைகளினுல் மழை பெய்கின்றது; நாட்டின் வளத்திற்குக் காரணமான ஆறுகள் தோன்றுகின்றன; கால் நடைகளுக்கு வேண்டிய பசுமை நிறைந்த மேய்ச்சல் நிலங்கள் மலையினை அடுத்துப் பெருமளவில் உண்டாகின்றன; மலைகளில் சில பகுதிகளில் கிடைத்தற்கரிய மலைபடு மணிகள் கிடைக்கின்றன. மேலும் மின்சார உற்பத்திக்குரிய நீர்ருவிகளைக் கொண்டதாகவும் உள்ளன. மலைகளினுல் இத்தகைய சிறப்புக்களை ஒரு நாடு பெறும் என்பதை நன்கறிந்த திருவள்ளுவர், வளம் பொருந்திய ஒரு நாட்டிற்குரிய உறுப்புக்களுள், பெறற்கரிய பொருள்களையும் நீர்ருவிகளையுமுடைய மலையினைச் சிறந்த உறுப்பாகக் கூறியுள்ளார். நாட்டிற்கு உறுப்பாக அமைந்த மலையே, பகைவரிடத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றும் வலிமை பொருந்திய இயற்கை அரணுகவும் விளங்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

தமிழகத்திலுள்ள மலைகளும் ஆறுகளும் மக்கள் வாழ்க்கையினை அமைப்பதிலும், நாட்டு வரலாற்றினை உருவாக்குவதிலும் குறிப்பிடத்தக்க பங்கு கொண்டுள்ளன. மலைகளுள் வட எல்லையாக நின்ற வேங்கடம் நீங்கலாக, மேலைக் கடற்கரைப் பகுதியில் ஒரு நீண்ட மலைத் தொடர் இருக்கின்றது. அத் தொடரில் இருபத்தைந்து கல் இடைவெளியுள்ள ஒரு பிளவு உண்டு. அதன் கிழக்கு வாயில் அருகில் பாலைக்காடு என்னும் ஊர் இருக்கிறது. அதனால் அப்பிளவு பாலைக்காட்டுக் கணவாய் என வழங்குகின்றது. பாலைக்காட்டிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் மலை 'வானமலை' எனவும், தெற்கு நோக்கிச் செல்லுவது 'தென்னம் பொருப்பு' எனவும் வழங்கின. இக்கணவாயின் தெற்குப் பக்கத்தில் 8,841 அடி உயரம் உயர்ந்துள்ள இம்

மலைத்தொடரில் ஆனைமுடியும் காணப்படுகின்றது. வான மலையின் வடபகுதியில் உள்ள ஒரு மலை 'குதிரைமலை' எனப்படும். கடற்கரை ஓரத்தில் நிற்கும் ஒரு குன்று 'எழில்மலை' என வழங்கியது. குதிரைமலை, 'குதிரை மூக்கு' எனவும், எழில்மலை 'எலிமலை' (Mount Eli) எனவும் இப்போது பெயர் திரிந்துள்ளன. இம்மேற்கு மலைத் தொடரும் கிழக்கு மலைத்தொடரும் 8760 அடி உயர முள்ள 'தோட பெட்டா' என்ற இடத்தில் கலக்கின்றன.

தென்னம் பொருப்பில், நேரிமலை, அயிரைமலை, பொதியில் மலை, நாஞ்சில் மலை முதலியன உள்ளன. நாஞ்சில் மலை இடைக்காலத்தில் 'நஞ்சுமலை'யாகி, இன்று 'மருத்துவ மலை' என்ற பெயருடன் திகழ்கிறது. பழந்தமிழ் நூல்கள் குறிக்கும் 'கவிரமலை' இப்பொழுது பொதியில் மலைப்பகுதியில் ஒன்றாக இருக்கிறது. ஏழாயிரம் அடிமுதல் எட்டாயிரம் அடிவரை உயர்ந்து செல்லும் மலைச்சரிவை யுடைய ஆனைமலை, கோவை மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் உள்ளதாகும். இம்மலைச் சரிவில் தேயிலையும் ரப்பரும் பயிரிடப்படுகின்றன. இங்குள்ள அடர்ந்த காடு களில் தேக்கும், பெருங்காட்டு மரங்களும் மிகுதியாக உள்ளன. இம்மலையில் காடர், முதுவர், புலையர் முதலிய பழங்குடி மக்கள் வாழ்கின்றனர்.

மேற்கு மலைத்தொடர், மேலைக் கடற்கரையின் தட்ப வெப்ப நிலையைப் பெரிதும் மாற்றி அமைக்கின்றது. கோடைக்காலத்தில் வீசும், ஈரம்பொருந்திய தென்மேற் குப் பருவக்காற்றினால் பெருமழை பெய்கிறது.

மேலை மலைத்தொடர் போன்று கிழக்கு மலைத்தொடர் பெயரளவில் 'மலைத்தொடரே' ஒழிய, உண்மையில் அது சிதறுண்டு கிடக்கும் தொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இவை மேலை மலைத்தொடரைக் காட்டிலும், காலத்தில் முற்பட்டதும் பழமையானதுமென மண்ணியலார் மொழிகின்றனர். சோழ மண்டலக் கடற்கரையினை அடுத்துப் பெரும்பாலும் இருபதுமுதல் ஐம்பது கல் இடை வெளிக்குப்பின் உள்ள சமவெளியில் இங்குமங்கும் சிதறுண்டு காணப்படுகின்றது. மேற்குப் பகுதியில் இல்லாத சமவெளி கடலுக்கும் கிழக்கு மலைத்தொடருக்கும் இடையே இருப்பது ஒரு சிறப்பியல்பாகும்.

மேற்கு மலைத் தொடரும் கிழக்கு மலைத் தொடரும் சந்திக்கும் • இடத்தில் உள்ள • நீலகிரி மேட்டுநிலம், குன்றுகள் பலவற்றை உடையதாகும். இம்மலையில் பெரும் பள்ளத்தாக்குகள் உள்ளன. இந்தியாவின் கோடைக்கால உறைவிடங்களில் சிறந்து விளங்கும் 'உதகை மண்டலம்' இயற்கை எழில்மிக்க நகரமாகும்.

இவை அல்லாமல், மதுரைக்கு மேற்கே உள்ள பழனி மலைத்தொடர் பத்துக் கற்கள் • நீளமும் இருபத்தைந்து கற்கள் அகலமும் உடையது. பழனி மலையில் சிறப்புடன் விளங்கும் 'கோடைக் கானல்' ஏழாயிரம் அடி உயர முடையது. இது பண்டைக் காலத்தில் 'கோடை மலை' எனப் பெயரும் புகழும் பெற்றிருந்தது. மதுரைக்கு வட மேற்கில், திண்டுக்கல்லுக்கு அருகில் 'சிறுமலை' இருக்கிறது; சிறப்பாக மலைப்பழத்திற்குப் பெயர் பெற்ற மலையாக இன்று விளங்குகிறது.

காவிரியின் வடகரையில் கொல்லிமலையும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விச்சிமலையும் உள்ளன. கொல்லிமலை சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தில் உள்ள குன்றுகளாகும். இக்குன்றுகள் ஒரு தொடரைப் போல் பதினேழு கற்கள் நீண்டுள்ளன. இக்குன்றுகளுக்கு இடைப்பட்ட பகுதியே சேலம் மாவட்டத்தில் இரும்புத் தாதுக்கள் படிந்துள்ள நிலப்பரப்பாகும். இக்குன்றுகளுக்கு இடையிடையே ஆழமான குறுகிய பள்ளத்தாக்குகள் பல இருக்கின்றன. கொல்லிமலை தேனுக்குச் சிறந்ததென்று சங்க இலக்கியம் கூறுகிறது. இன்றும் பெரும் அளவில் தேன்கிடைக்கும் மலைப்பகுதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மலையில் கண்டாரை வருத்தும் 'கொல்லிப்பாவை' ஒன்று இருந்ததாகவும் பழந்தமிழ் இலக்கியம் பாராட்டுகிறது. 'விச்சிமலை' என்பது என்பது இப்போது 'பச்சைமலை' எனப் பெயர் பெற்றுள்ளது. 'பவளமலை' என்பது வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு மேற்கு எல்லையாகச் 'சவ்வாதுமலை' என்ற பெயருடன் விளங்குகின்றது. 'மலைபடுகடாம்' என்ற சங்க இலக்கியப் பாடலால், இம்மலையின் பண்டைப்பெருமையை நன்குணரலாம்.

இவ்வாறு பெரியதும் சிறியதுமான மலைகளும் குன்று களும் தமிழகத்தின் பல பகுதிகளில் இடையிடையே அமைந்துள்ளமையால்தான், நிலவியல் அடிப்படையில் சிறுசிறு நாடுகளாகப் பிரிந்து தனித்து நின்றதோடு, தனக்கெனத் தனிப் பண்புகளைக் கொண்டதாகப் பிற பகுதிகளோடு தொடர்பற்றதாகப் பண்டைக் காலத்தில் இருந்து வந்தது. இந் நிலப்பாகுபாடு வரலாறுக்குப் முற் பட்ட காலத்தில் தமிழ்கூறும் நல்லுலகினை, நானிலமாகப் பிரித்து உணர்ந்ததற்கும், அந்நிலங்களுக்குரிய மக்கள் தனிப்பண்புடையவராய் வாழ்ந்ததற்கும் உரிய காரண மாகும்.

5. தமிழகத்தின் ஆறுகள்

"காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையைப் பொருனைநதி—என
மேவிய யாறு பலவோடத் திரு
மேனி செழித்த தமிழ்நாடு."

—பாரதியார்.

'நீரின்று அமையாது உலகு' என்றார் வள்ளுவர் பெருந்தகை. உயிரினங்கள் உலகில் நிலைபெற்று வாழ வும், எல்லா வகையான வளங்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ்வதற்கும் நீரே முதன்மையான காரணமாகும். ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர்வளமும், தக்கவாறு அமைந்த மலையும், அம்மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும், வலிய அரணும் ஒரு நாட்டிற்குரிய உறுப்புக்கள் என்பது பண்டைய அரசியல் அறிஞர்கள் அறிந்த உண்மை.

வளம்மிக்க ஒருநாடு எளிதில் பகைவரால் கைப்பற்ற முடியாத அருமை உடையதாக இருத்தல் வேண்டும். இந்த அருமைப் பாட்டிற்கு இன்றியமையாத தேவை 'அரண்' என்பர். இவ்வரண், இயற்கை அரண் செயற்கை அரண் என இரு வகைப்படும். இயற்கை அரண்களுள்

முதலாவதாகத் தெளிந்த நீரையுடைய ஆற்றை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய(து) அரண்."

—குறள்: 742

உலகின் பழம்பெரும் நாகரிகங்கள் அனைத்தும் ஆற்று வெளியில் தோன்றியனவாக அறிகிறோம். ஆறுகள்தாம் பண்பாட்டின் வளர்ப்பு ஊற்றுக்கள். ஊர்களும் நகரங்களும் ஆற்றங்கரையில்தான் முதன் முதலில் அமைந்தன. மக்கள் வாழ்க்கை மலர்ச்சியுற்ற இடம் நில வளத்திற்குக் காரணமான ஆற்றங்கரையேயாகும். உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழலும், வாழ்க்கையின் பலதுறைச் செயல்களுக்கு உகந்த நிலைக்களனும் உடையதாக விளங்குவது ஆற்று வெளியே எனலாம். மக்கள் வாழ்விற்கும், அரசுகளுக்கும் ஊட்டம் தரும் உயிர்க்குறுதியாக விளங்கியவை—விளங்குபவை—ஆறுகளே என்பது உலகறிந்த உண்மை. நீர்வளமும் அதனால் நிலவளமும் பொருந்திய நாட்டிலன்றோ செல்வச் சிறப்பும், பொருளாதார மேம்பாடும், உயர்ந்த—பண்பட்ட வாழ்க்கையும் அமைய முடியும்? இத்தகைய இன்பமான, இனிமையுடைய சிறந்த வாழ்வினைத் தரத்தக்க ஆற்றல் வாய்ந்தவை ஆறுகளே. நாடோடிகளாக அங்குமிங்கும் அலைந்து திரிந்த மக்கள் இனம் முதன் முதல் நிலையாக அமைதியான இன்பவாழ்வினைத் தொடங்கியது ஆற்றங்கரை ஓரத்தில்தான். இதனால் மனித இனத்தின் தொன்மை வாய்ந்த நாகரிகங்கள் வளர்ந்த வளர்ப்புப் பண்ணையாக ஆற்றுவெளிகள் விளங்குகின்றன.

ஆற்றுவெளிகள் உழவுக் கலையின் பிறப்பிடமாக அமைந்ததோடு அல்லாமல், பலவீகைக் கலைகளின் தாயகமாகத் திகழ்ந்தன, திகழுகின்றன. பண்டைத் தமிழர், நிலத்தினை ஐந்து வகையாகப் பிரித்த பாகுபாடும் ஆற்றின் போக்கையே ஒட்டி அமைந்தனவாகும். மலைகளில் ஆறுகள் தோன்றுகின்றன; மலைச்சாரல்களிலிருந்து அவை காட்டு நிலத்தில் பாய்கின்றன; அதனால் அந்நிலம் செழிப்படைகின்றது. பின்பு சமவெளிகளில் பாய்ந்தோடிக் கரும்பும் செந்நெலும் விளையும் வயல்களை வளமுடையவை

யாக்குகின்றன ; இறுதியில் கடலில் சென்று கலக்கின்றன. இவ்வாறு ஒருநாட்டின் நாகரித்தின் தோற்றம், வளர்ச்சி, மலர்ச்சி ஆகியவற்றை ஆற்றின் போக்கே நமக்கு முறையாக விளக்குகிறது.

இன்றும் ஒரு நாட்டின் செல்வச் செழிப்பிற்கும், மக்களின் நல்வாழ்விற்கும் செயல்திறனுக்கும் தலையாற்றாய் விளங்குவன ஆறுகள் என்பதில் ஐயமில்லை. ஆறுகள் பாசனத்திற்கும், மின்சார உற்பத்திக்கும் பெரிதும் பயன் படுகின்றன. உள்நாட்டு வாணிகப் போக்கை எளிமையுடையதாக்குகின்றன ; குடிநீருக்குப் பெரிதும் பயன்படுகின்றன. வெள்ளப் பெருக்கின்போது ஆறுகள் புதிய வண்டல் மண்ணைக் கொண்டு வந்து சேர்த்து, நிலத்தை வற்றுவளங் கொழிக்கும் பொன் விளையும் நன்னிலமாக்குகின்றன.

தமிழ்நாட்டை அன்று வளமுறச் செய்த ஆறுகள் பல, இன்று வளங் கொழிக்கும் ஆறுகள் சில. அவற்றுள், சிறந்தவற்றைப் பாரதியார் "காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ், கண்டதோர் வையை பொருநை நதி" எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறுகள் உள்ளமையால், தமிழகம் செழித்து விளங்குவதை "என மேவிய ஆறு பல வோடத் திரு, மேனி செழித்த தமிழ்நாடு" எனப் பாராட்டிப் பாடியுள்ளார்.

தமிழகத்தில் வற்றுத பேராறுகள் இல்லை. எனினும், இந்நாட்டின் நீர் வளத்திற்குக் காரணமான சில ஆறுகள் குறிப்பிடத்தக்கன. பண்டைக் காலத்தில் ஓடிய ஆறுகள் பல இன்று பெயர் தீரிந்து காணப்படுகின்றன.

1. காவிரி :

காவிரி, குடகு நாட்டில் வானமாமலை (பிரமகிரி)யில் தோன்றுகின்றது ; குதித்தும் தவழ்ந்தும் மைசூர் நாட்டிலும் கொங்கு நாட்டிலும் ஓடி விளையாடுகின்றது ; சோழ நாட்டில், தன் வளம் எல்லாம் வழங்கி மக்களை வாழ்வித்து அலைகடலை அடைகின்றது. ஏறக்குறைய 475 கற்கள் தொலைவு ஓடித், தரங்கம்பாடிக்கு அருகில் கடலில் கலக்கின்றது. மைசூர் நாட்டில் 'அமராவதி' என்னும் சிற்

ருறு காவிரியில் சேர்கின்றது ; பிறகு 'கிருஷ்ணராஜ சாகரமாய்' அந்நாட்டின் வளத்திற்குக் காரணமாய் விளங்குகின்றது. மைசூர் நாட்டில் மட்டும், மிகச் சிறந்தது என்று கருதப்படும் கண்ணம்பாடி அணைக்கட்டு உட்பட பன்னிரண்டு அணைக் கட்டுகள் காவிரியில் கட்டப் பட்டுள்ளன. தலைக்காட்டை (தழைக் காட்டை)த் தாண்டியவுடன் 'சுவர்ணவதி' என்றொரு சிற்றாறு காவிரியில் கலக்கின்றது. அதன் பிறகு மைசூர் நாட்டிலிருந்து கொங்கு நாட்டில் புகுந்து சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு எல்லையாக வளைந்து வளைந்து செல்லுகிறது ; இதனுடன் சின்னாறும், தேம்பூராறும் கலக்கின்றன. திருச்செங்கோடு, ஓமலூர் வட்டத்தில் காவிரி வடக்குத் தெற்காகவே ஓடுகிறது. இப்பகுதியில் காவிரியின் போக்கை ஒட்டிச் 'சீதமலை' என்னும் தொடரும், மேற்குப் பக்கத்தில் 'பாலமலை' என்னும் தொடரும் அமைந்துள்ளன. இம்மலைகளுக்கு இடையில் காவிரியாறு பாய்ந்து செல்கின்றது. இவ்விடத்தில்தான் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணைக்கு அப்பால் காவிரி மலைநாட்டிலிருந்து சமவெளியில் பாயத் தொடங்குகிறது. இதனோடு பவானி, நொய்யல், திருமணி முத்தாறு எனப் படும் ஆறுகள் வந்து கலக்கின்றன.

மேட்டூர் அணையால் தமிழகத்தின் பெரும் பகுதிக்கு வேண்டிய அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது ; தென்னாட்டில் உள்ள மின்சார உற்பத்தி நிலையங்களில் முதன்மையான மேட்டூர் மின்சார உற்பத்தி நிலையம், 40,000 கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்கிறது.

மேட்டூர் அணையில் 9,350 கோடி கன அடி தண்ணீர் தேக்கப்படுகிறது. அணைக் கட்டின் நீளம் 5300 அடிகள் என்பதனால், அது உண்மையிலேயே பெரிய தேர் அணைக் கட்டு என்பது புலனாகின்றது. சேலம்-கோவை மாவட்டங்களின் நீர்ப்பாசனத்துக்காக மேட்டூர் மேல் மட்டக் கால்வாய் ஒன்று புதிதாக வெட்டப்பட்டு இருக்கிறது. அதனால் 27,800 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் இருபோகம் பயிராகும் நிலங்களாகச் செழிப்புற்றிருக்கின்றன. கீழ்க் காவேரி பகுதியில் 3,01,000 ஏக்கர் நிலப்

பரப்பு மேட்டூர் அணையின் மூலம் நீர்வளத்தைப் பெற்றிருக்கின்றது.

திருச்சி மாவட்டத்தில் காவிரியாறு புகுந்தவுடன் கரூருக்கு அருகில் அமராவதி என்னும் சிற்றாறு கூடுகிறது. இவ்வாறு பல ஆறுகள் கலந்த பின்புதான் காவிரி மிகப் பெரிய ஆறாகத் தோன்றுகிறது. ஆயினும், இலமனூர் என்னும் இடத்தில் காவிரியில் இருந்து கொள்ளிடம் என்னும் கிளையாறு பிரிகிறது. இவ்விரண்டும் திருவரங்கத்தினை (ஸ்ரீரங்கத்)ச் சூழ்ந்து அதனை ஒரு தீவாக்கிச் செல்கின்றன. சோழநாட்டின் பழம் பெருந் தலைநகரான உறையூர், காவிரியின் தென்கரையில் அமைந்து இருக்கிறது. திருச்சிராப்பள்ளியைக் கடந்து காவிரி செல்லும் பொழுது உள்ளாறு என்னும் சிற்றாறு காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கின்றது. அவ்விடத்தில் காவிரிக்குக் குறுக்கே கல்லணை என்னும் பெரியதோர் அணை கட்டப்பட்டுள்ளது. கொள்ளிடம் பிறகு வடகிழக்குப் பக்கமாக ஓடித் தென்னார்க்காடு மாவட்டத்தைச் செழிப்பாக்கித் 'தேவி கோட்டை' என்னும் இடத்தில் கடலில் கலக்கிறது.

காவிரி, எண்ணற்ற கிளையாறுகளுடன் சோழ நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் பாய்ந்து சோழ நாட்டை நீர்வளமுடைய திருநாடாக்கியுள்ளது. இக் காரணத்தினால் தான், பல நாடுகளின் வழியே காவிரியாறு பாய்ந்து வந்தாலும், சோழ நாட்டிற்கே தனியுரிமை உடையதாய்ப் பண்டைத் தமிழ்ச் சான்றோரால் போற்றப் பட்டது. 'சோழர் தம் குலக்கொடி'[1] என்று பாராட்டப் பெற்றது. சோழனைக் 'காவிரி நாடன்' என்றும்[2] கூறும் மரபும் இருந்தமை ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. சோழன் கரிகாலன் காவிரிக்குக் கரையமைத்து நீரினைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்தினை வகுத்தான் என்பதை 'மகாவமிசம்' என்னும் ஈழத்தின் வரலாற்றேட்டினால் அறிகின்றோம். காவிரியையும் கொள்ளிடத்தையும், உள்ளாறு என்னும் சிற்றாறு இணைக்குமிடத்தில் கட்டப்பட்டுள்ள கல்லணை பழமை வாய்ந்தது; சோழன்

1 மணிமேகலை, பதிகம், வரி 24
2 சிலம்பு—கா. 1, வ. 8-10

கரிகாலன்தான் அவ்வணையைக் கட்டினான் என்று கூறுதல் மரபு. பண்டைக் காலத்தில், காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் உலகப் புகழ் வாய்ந்த காவிரிப்பூம் பட்டினம் இருந்தது இங்கு நினைவு கூரத்தக்கது.

காவிரியாறு தொன்று தொட்டு வற்றாது வளம் பெருக்கும் பேரியாறு என்பதனை,

> "வான் பொய்ப்பினும் தான் பொய்யா
> மலைத்தலைய கடற் காவிரி"
>
> —பட்டினப் பாலை ப. 5-6.

என்று தமிழ்ச் சான்றோர் பாராட்டியுள்ளமையால் அறியலாம்.

2. வையை :

பாண்டிய நாட்டில், இன்றைய மதுரை மாவட்டத்தில் ஓடும் முதன்மையான ஆறு. தமிழகத்தின் மற்ற ஆறுகளுக்கு எல்லாம் இல்லாத ஒரு தனிச் சிறப்பினையுடையது; முத்தமிழின் முழக்கத்தை நாள்தோறும் ஓயாது கேட்டின்புற்று மகிழ்ந்தது வையை! எனவேதான், பாரதியார் **'தமிழ் கண்டதோர் வையை'** என்று பிற ஆறுகளுக்கு இல்லாத தனிச் சிறப்பை வையை பெற்றுள்ளதைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

வையை 'தென்னம் பொருப்பில்' (வருஷ நாட்டுப் பள்ளத்தாக்கில்) தோன்றி, மதுரையின் வடகிழக்குப் பகுதியில் பாய்ந்து ஓடுகின்றது. இதனுடன் சுருளியாறு, தேனியாறு, வராக நதி, மஞ்சளாறு என்னும் சிற்றாறுகள் கலக்கின்றன. அதன் பின், வையை அகன்ற ஆழமிக்க ஆறாக ஓடுகின்றது. நிலக் கோட்டை வட்டத்தில் உள்ள அணையப்பட்டி என்னுமிடத்தில், இரண்டாகப் பிரிகின்றது. ஒன்று வையை என்னும் பெயரோடும், மற்றொன்று பெரியாற்றுக் கால்வாய் என்னும் பெயரோடும் ஓடுகின்றன. இவ்விடத்தில் பேரணை என்னும் ஓர் அணை உள்ளது. இதனால் வையை ஆற்று நீர் தேக்கப்பட்டுப் பெரியாற்றுக் கால்வாயில் விடப்படுகிறது. இக்கால்வாய் நீர், மேலூர் வட்டத்தினை நீர் வளமுடையதாக்குகின்றது.

வையை இராமநாதபுரம் மாவட்டத்தை அடைந்ததும், 'கூத்தன் கால்வாய்' என்னுமொரு கால்வாய் இதிலிருந்து பிரிக்கப்படுகின்றது. இக்கால்வாய் இராமநாதபுரத்தின் பல பகுதிகளில் உள்ள ஏரிகளை நிரப்புகிறது. இன்னும் சிறிது தொலைவு சென்றபின், பரமக்குடிக்கு அருகில் பல கால்வாய்களாகப் பிரிந்து, இறுதியில் இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள மிகப் பெரிய ஏரியில் சென்று கலக்கின்றது. இந்த ஏரியிலிருந்து வெட்டாறு என்ற சிற்றாறு புறப்பட்டு 'ஆற்றங்கரை' என்னும் இடத்தில் கடலில் கலக்கின்றது. இவ்வாறு நேரடியாகக் கடலில் கலக்காது ஏரியில் வீழ்ந்து, பிறகு ஒரு வாய்க்காலின் வழியாகக் கடலை அடைகின்றது. வையையாறு இன்று காணப்படுவதைப் போன்று, ஆண்டின் பெரும் பகுதி நீரற்ற மணல் வெளியாகப் பண்டைக் காலத்தில் இருந்ததில்லை என்பது,

> "உலகு புரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
> புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
> வையை என்னும் பொய்யாக் குலக்கொடி"
>
> —சிலம்பு: 113: 168–70.

என்று இளங்கோவடிகள் இயம்பியுள்ளமையால் அறியப்படுகிறது.

பரிபாடல் என்னும் பழந்தமிழ் நூலில், வையை பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. வையை ஆற்றில் புதுவெள்ளப் பெருக்கோடும் கண்கொள்ளாக் காட்சியை, "ஆடல் இயல்பை அறியாத அரிவை, தான் வேண்டிய இடங்களில் கால் பெயர்த்து நடனமாடுதல் போல, வெள்ளம் தான் விரும்பிய இடங்களில் பொருந்திப் பரந்தது: ஊடலின் இயற்கை அறியாத இளம்பெண் கணவனைக் கடந்து கடிந்து நீங்குவது போலத் தடுத்த அணைகளை உடைத்து, வெள்ளம் விரைந்து சென்றது' என்று சொல்லோவியமாக்கியுள்ளனர் பண்டைத் தமிழ்ச் சான்றோர்.[1]

---

1 ஆடல் அறியா அரிவை போலவும்
ஊடல் அறியா உவகையள் போலவும்
வேண்டுழி நடந்து, தூங்குநடை பொருது;
.....செம்பூம்புனல்!"

—பரிபாடல் 7-வ 18-22.

புதுவெள்ளம் புரண்டோடிய வையையாறு இன்று நீரற்று வறண்டுள்ள நிலைமையை மாற்ற, மேற்கு மலைத் தொடரில் தோன்றித் திருவாங்கூர் வழியாகச் சென்று மேலைக் கடலில் கலக்கும் 'பேரியாறு' என்ற பெரியாற்றின் குறுக்கே 124 அடி நீளமுள்ள பெரியதோர் அணை கட்டப்பட்டு நீர் தேக்கப்படுகிறது. அங்கிருந்து மலையில் குடையப்பட்ட சுரங்க வழியில் கால்வாயாக ஓடிப், பின்பு மலையிலிருந்து சமவெளியில் இறங்கி விரவனூற்றில் பாய்கிறது. விரவனூறு சுருளியாற்றில் கலக்கின்றது. இவ்விரண்டும் வையையாற்றில் கலக்கின்றன. இதனால் வையையாற்றில் ஓரளவிற்கு நீர்ப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும், அவ்வாறு இரண்டு ஆறுகளாகப் பிரிவதாலும், பிரியுமிடத்தில், அணையைக் கட்டி நீரைத் தேக்கிவிடுவதாலும், மீண்டும் வையை வறட்சியுடையதாக மாற நேரிடுகின்றது.

3. பேரியாறு :

பேரியாறு, திருவாங்கூர் மாநிலத்திற்கும் சென்னை மாநிலப்பகுதியிலுள்ள சங்கர நயினார் கோயில் தாலுகாவுக்கும் இடையேயுள்ள 'தென்னம் பொருப்பு' என்ற மலைத் தொடரின் ஒரு பகுதியான கள்ளிமலை என்ற குன்றிலிருந்து தோன்றுகின்றது. இவ்வாற்றின் மேற்குப் பகுதி வடக்கு நோக்கி ஏறக்குறையப் பதினைறு கற்கள் நெருக்கமான காடுகளுக்கிடையே பாய்கிறது. பிறகு மேற்கு நோக்கித் திரும்பி ஓடுகிறது. இத்திருப்பத்திலிருந்து எட்டுக் கற்கள் தொலைவில் சென்னை அரசின் நீர்ப் பாசனத் துறையினர் 1893 ஆம் ஆண்டில் ஓர் அணையைக் கட்டி உள்ளனர். இந்த அணையின் கீழ்ப்புறத்தில், இவ்யாறு வடமேற்குத் திசையில் பாய்ந்து 'கிரேங்கர்' என்னும் இடத்தில் அராபியக் கடலுடன் கலக்கிறது. இன்று 'பெரியாறு' என்று பெயர் திரிந்து வழங்குகின்றது.

பண்டைக் காலத்திய சேரநாட்டின் சிறப்புமிக்க ஆறுகப் பேரியாறு விளங்கியது. பேரியாற்று வளத்தை அடிப்படையாகக் கொண்டதே சேரநாட்டு மக்கள் வளம் என்பதைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் நன்கறிந்திருந்தனர். "வேனிற் காலம் நீட்டித்தலால் குன்றுகள் பொலி

விழந்து தோன்ற, அருவிகள் நீர் வற்றியுலர்ந்த பெரிய வறட்சிக் காலத்தும், கரையாவும் உயர்ந்து நீர் பெருகி வழிந்தோடும் அகன்ற இடத்தையுடைய பேரியாறு'' [1] என்று ஒரு புலவர் பாராட்டி யுள்ளார். சேரர் குடியிலே தோன்றிய இளங்கோவடிகள், ''கோங்கும் வேங்கையும் தெங்கும் பூங்கொத்துக்களையுடைய கொன்றையும், சுர புன்னையும், மஞ்சாடியும், சந்தன மரமும் என்று சொல்லப் பெற்ற மரங்கள், உதிர்ந்த பூக்களின் பரப்பினுல் நீர் சுரந்து ஒழுகும் மதுகரத்தோடும் ஞிமிறோடும் வண்டுக் கூட்டங்கள் இசைபாடி, திருமாலின் மார்பின்கண் மாலை போலப் பெரிய மலையினைக் குறுக்கிட்டுச் செல்லும் பேரியாறு'' என்று தம்முடைய நாட்டின் நீர்வளத்திற்கு இன்றியமையாது விளங்கும் அவ்வாற்றினை அழகுற வருணித்துள்ளார். [2]

1886 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் செய்து கொண்ட ஓர் உடன்பாட்டின் விளைவாகப் பெரியாறு ஏரி நீரை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள நிலங்களின் பாசன வசதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெரியாறு ஏரி சென்னை மாநிலத்தை ஒட்டியுள்ள கேரளப் பகுதியில் அமைந்திருக்கிறது. இதன் நீர்ப்பிடிப்பரப்பு 240 சதுர மைல்களாகும். இந்த ஏரியின் தண்ணீர் வையை வடி நிலத்தில் 96 சதுர அடி விட்டமுள்ளதும் 5887 கற்கள் நீளமுள்ளதுமான குகைப்பாதை மூலம் பாய்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

பெரியாற்றின் தண்ணீர் சமவெளியை அடையுமுன் ஆயிரம் அடி வீழ்ச்சிக்கு உள்ளாவதால் ஏற்படும் சக்தி இதுவரை வீணுகிக் கொண்டே வந்தது. இந்த நீர் வீழ்ச்சியின் சக்தியை மின் சக்திக்குப் பயன்படுத்த வேண்டும் என்று பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்கிய பொறியியல் வல்லுநர்கள் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர்

---

1 ''கோடை நீட, குன்றம் புல்லென,
அருவி அற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை இழிதரும் நனந்தலைப் பேரியாற்று.''
—பதிற்றுப் பத்து: 28 : 8-10.

2 சிலம்பு: கா. 25 : வரி : 17-21

நாடு அயலார் ஆட்சியினின்று விடுதலை பெற்றபின், இம் மின்சாரத் திட்டத்தைப் பற்றி அரசியலார் சிந்தித்து வந்தனர். 1954 ஆம் ஆண்டு, சென்னை அரசும், கேரள அரசும் பெரியாற்று நீரைக்கொண்டு மின்சக்தியை உண்டாக்குவது குறித்து ஒரு முடிவிற்கு வந்தன. அதன் பயனாகப் பெரியாறு மின்சக்தி நிலையத்தை அமைக்கத் தமிழ் நாட்டு அரசாங்கம் ரூ. 10.09 கோடி ரூபாய்ச் செலவில் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 12-10-58இல், 35,000 கி. வா. ஜெனரேட்டர் ஒன்றை மதிப்பிற்குரிய திரு. காமராசர் இயக்கி வைத்தார். "பெரியாறு நீர்-மின்சாரத் திட்டம், மக்களின் சமுதாய-பொருளாதார நிலையைப் பெரும் அளவிற்கு உயர்த்தும்" என்று குறிப்பிட்டுள்ளார். இத்திட்டம் முற்றிலும் நிறைவேறியவுடன், தமிழ்நாட்டில் மின்சக்தி பற்றாக்குறை இருக்காது என்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.

பேரியாறு இன்றைய தமிழகத்தில் ஓடவில்லை என்றாலும், அதன் நீரைப் பல வகையில் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பாகிலும் கிடைத்துள்ளமை குறித்து மகிழ்ச்சி அடையலாம்.

4. தென்பெண்ணை :

மைசூர் நாட்டின் சென்னராயன் பேட்டையில் தோன்றி, பங்களூர் மாவட்டத்திற்குக் கிழக்காக ஓடிச் சேலம், வடஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களிடையே சென்று கடலில் கலந்து விடுகிறது. திருக்கோயிலூருக்கு அருகில் ஓர் அணைக்கட்டு இருப்பதனால் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றது. மலையமான் திருமுடிக்காரி ஆண்ட மலைநாட்டினைத் 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்ந்து வாழும்' வளமிக்க நாடாக்கியது என்பதனை,

"பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே"

—புறம்–126.

என்று நப்பசலையார் என்னும் புலவர் பெருமாட்டியார் பாராட்டியுள்ளமையால் அறிகிறோம்.

5. பாலாறு :

கோலார் மாவட்டத்தில் (மைசூர் நாட்டில்) நந்தி துர்க்கத்தில் தோன்றிச் சேலம் மாவட்டத்தின் வடக்காகப் பாய்ந்து, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களின் வழியாக ஓடிச் சதுரங்கப் பட்டினத்திற்கு அருகில் கடலில் கலக்கிறது. சற்றேறக் குறைய 230 கற்கள் நீளமுடையது. இதனோடு சில சிற்ருறுகள் கலக்கின்றன. பாலாற்றின் கிளையாறுகளுள் சிறந்தது செய்யாறு. ஆண்டின் பெரும்பகுதி நீர் வறண்டிருந்தும், செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண்மைக்கு ஓர் அளவிற்குப் பயன்படுகிறது.

6. வானியாறு :

'வானமாமலையின்' வடபகுதியில் தோன்றித் தென் கன்னட மாவட்டத்துக்கு வடவெல்லையாய் மேற்கே ஓடி, மேலைக் கடலில் விழுகின்றது. இந்த வானியாற்றின் நீர் மிகத் தெளிவு உடையது, நீர் மிகப் பெருகி வரும் பொழுது நீராடும் மகளிர் காதணியாகிய பொற்குழை அதன்கண் வீழ்ந்தால் அது கிடக்கும் இடத்தை அந்த நீரின் தெளிவு காட்டிவிடும் என்று பெருங் குன்றூர் கிழார் எனும் தமிழ்ச் சான்ரோர் போற்றியுள்ளார்.

" கழைநிலை பெருஅக் குட்டத் தாயினும்
புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி

—பதிற்றுப்பத்து 96: 9-12.

இன்று அதனை 'ஷிராவதியாறு' என்ற பெயரால் கன்னட நாட்டு மக்கள் குறிப்பிடுகின்றனர்.

7. பூவானி :

மேற்குமலைத் தொடரும் கிழக்கு மலைத்தொடரும் சேரும் இடத்தில் உள்ள உதகமண்டலத்தில் தோன்றிக் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓடிக் காவிரியோடு கலக்கிறது. இக்காலத்தில் இவ்வாற்றினைப் 'பவானி' என்று திரித்து வழங்குகின்ரோம்.

கோவை மாவட்டத்தில் பவானி ஆறும், மோயாறும் கலக்கும்இடத்தில், பெரியதோர் அணைக்கட்டு 1956-57இல் கட்டப்பட்டுள்ளது. அதனைக் கீழ்ப்பவானி அணைக்கட்டு என்பர். அதிலிருந்து செல்லும் வாய்க்கால்களினால் கோபிசெட்டிப் பாளையம், பவானி, ஈரோடு, தாராபுரம் முதலிய கோவை மாவட்டப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூர் வட்டத்திலும் உள்ள 2,07,000 ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடி செய்வதற்கேற்ற நிலமாக்கப்பட்டிருக்கின்றன.

8. வெள்ளாறு :

தமிழகத்தில் இரண்டு வெள்ளாறுகள் ஓடுகின்றன. ஒன்று தென்னார்க்காடு மாவட்டத்தின் இடையே சென்று கடலில் கலக்கிறது; மற்றொன்று பண்டைய புதுக் கோட்டை அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் ஓடுவது. இவ்விரண்டும் கரட்டாறுகளாகும்.

புதுக் கோட்டையில் ஓடும் வெள்ளாறு மருங்காபுரிக்கு அருகில் உள்ள வேழமலையில் தோன்றிப், பாண்டிய நாட்டிற்கு வடவெல்லையாக ஓடித், தஞ்சை மாவட்டத்தில் மணல்மேல் குடி என்னும் இடத்தில் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றின் நீளம் மிகக் குறைந்தது; எண்பத்தைந்து கற்கள் தொலைவுதான் ஓடுகின்றது. ஆயினும், பல இடங்களில் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

பண்டைக் காலத்தில் தென் வெள்ளாறு சோழ நாட்டிற்குத் தென் எல்லையாகவும், பாண்டிய நாட்டிற்கு வட எல்லையாகவும் இருந்து வந்ததைப் பழம் பாடல்களால் அறிகிறோம். வடவெள்ளாறு சோழ நாட்டையும் தொண்டை நாட்டையும் பிரிக்கும் எல்லைக் கோடாக இருந்தது. அது பறங்கிப் பேட்டைக்கு அருகில் கடலில் கலக்கிறது ஆண்டு முழுவதும் நீர்வளம் உடையதாகும்.

9. தண்ணுன் பொருநை :

இதனைத் 'தாமிரவருணி' என்னும் பெயரால் வழங்குகின்றோம். மேற்குமலைத் தொடரில் தோன்றித் திருநெல்வேலி மாவட்டம் வழியாக ஓடி மண்ணார்குடாவில்

கலக்கின்றது. பருவ மழையினால் ஆண்டு முழுவதும் நீர் வற்றாது பெருக்கெடுத்து ஓடுகின்றது. இந்த ஆற்றின் இடையே பாசனத்தின் பொருட்டு ஏழெட்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. தண்ணீர் பொருநை கடலில் கலக்கும் இடத்தில்தான் பாண்டிய நாட்டின் முத்திற்குப் பெயர் பெற்ற 'கொற்கையம் பெருந்துறை' இருந்தது. இந்நகர் மறைந்த பிறகுதான், இதன் கழிமுகத்தில் உள்ள காயல் சிறந்த துறைமுகமாக விளங்கியது.

10. ஆன் பொருநை:

மேற்கு மலைத்தொடரின் தென்பகுதியில் தோன்றி மேலைக் கடலில் கலக்கிறது. ஆன் பொருநை, அமராவதி என மருவி வழங்குகிறது.

பண்டைத் தமிழகத்தில் இவையன்றி, வேறு சில சிற்றாறுகளும் காட்டாறுகளும் ஓடியதை இலக்கியங்களினால் அறிகின்றோம். பேரியாறு, வானியாறு, ஆன் பொருநை ஆகியவை மேற்குமலைத் தொடரில் தோன்றி மேலைக் கடலில் (அரபிக் கடலில்) கலந்து விடுகின்றன. இவை மூன்றும் இன்று கேரள நாட்டில் உள்ளன. இன்றைய தமிழகத்தின் நீர்வளமுடையதாக்கும் பேராறுகள் மூன்றே; அவை: காவிரி, வையை, தாமிரவருணி; அவற்றுள்ளும் வையை ஆண்டின் பெரும்பகுதி வறட்சி உடையதாக இருக்கிறது. இதனால், ஆறுகளின் போக்கும், அதனால் உண்டாகும் பயனும் மலைகளின் அமைப்பையும் மழையின் வளத்தையும் பொறுத்துள்ளன என்பது புலனாகின்றது. தென்மேற்குப் பருவக் காற்றால், தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கோடை காலத்தில் பெருமழை பெய்கிறது. இம்மழை வளத்தின் பயனாக மேற்குமலைத் தொடரில் தோன்றும் காவிரியும், தாமிரவருணியும், வற்றாது வளங்கொழிக்கும் நீர்ப்பெருக்குடைய ஆறுகளாக ஆண்டு முழுவதும் பயன்படுகின்றன. மற்ற ஆறுகள் கோடையில் பெரிதும் நீரற்றுக் காணப்படுகின்றன.

உழவுத் தொழில் நாகரிகத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். உழவுத் தொழில் இடையறாது நடப்பதற்கு, வற்றாத நீர்ப்பெருக்கத்தினை உடைய ஆறுகள் பேருதவி

புரிந்து வருகின்றன. பண்டைக் காலத்தில் மக்கள் ஆற்றங்கரைகளையே விரும்பி, அங்குச் சென்று வாழ்ந்தனர் என்பதை ஆற்றங்கரை ஓரங்களில் தோன்றிய பழம் பெரு நாகரிகங்களால் அறிகிறோம். தமிழகத்தின் புகழ் மிக்க தலைநகர்களும், பட்டினங்களும் ஆற்றை அடுத்தே அமைந்து இருந்தன. அன்றைய உலக வாணிகத்தில் தலைசிறந்து விளங்கிய புகார், சேரர் தலைநகராகிய வஞ்சி, சோழரின் பழம்பெருந் தலைநகரான உறையூர், தமிழை வளர்த்த மதுரை மாநகர் முதலிய மாபெரும் நகரங்கள் யாவும் ஆற்றங்கரைகளிலே தோன்றிச் சீரும் சிறப்பும் பெற்றன. காவிரி, வையை, பேரியாறு ஆகிய முப்பெரும் ஆற்றங்கரைகளிலே தோன்றிய அரசுகளே பிற்காலத்தில் மாபெரும் பேரரசுகளாகத் திகழ்ந்தன. அக்காலத்தில் நாடுகளையும், அவற்றின் உட்பகுதிகளான சிற்றரசுகளின் எல்லைகளையும் ஆறுகளின் போக்கை ஒட்டியே அமைத்துக் கொண்டனர்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாகத் தஞ்சைமாவட்டம் விளங்குவதற்கு உயிர் நாடியாகக் காவிரியாறு இருந்து வருகிறது. ஆறுகளின் அருகிலும், கழிமுகங்களிலும் நெற் பயிர் செழிப்பாக வளர்கிறது. ஆறுகளில் இருந்து பல சிறு கால்வாய்கள் வெட்டி அவற்றின் மூலம் நாட்டின் பல பகுதிகளுக்கு ஆற்று நீரை எடுத்துச் செல்லுகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் எண்ணற்ற வாய்க்கால்கள் மூலம் காவிரியின் நீர் நாட்டின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஆற்றுநீர் வசதியில்லாத செங்கற் பட்டு வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் பெரிய ஏரிகளில் நீரைத் தேக்கி அதன் மூலம் உழவுத் தொழில் செய்து வருகின்றனர். சேலம் மாவட்டத்தின் பெரும்பகுதி நீர் வறட்சியுடையதாய் இருப்பதால், அங்குள்ள மக்கள் பெருங்கிணறுகளைத் தோண்டி அதன் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

தமிழகத்தின் பெரும்பகுதியில் நெல்லே பயிரிடப்படுகின்றது சேலம், தென்ஆர்க்காடு மாவட்டங்களில் கடலைக்காய் பெரும் அளவில் பயிரிடப்படுகிறது. இவற்றோடு புஞ்சைப் பயிர்களான கேழ்வரகு, சோளம், பயிறு வகைகள், எள் முதலியன பயிரிடப்படுகின்றன. தமிழகத்தின் நீர்

வளமிக்க பகுதிகளில் கரும்பு பயிரிடப்படுகிறது. தமிழ் மக்கள் உணவிற்காக நெற்பயிரையே பெரிதும் நம்பி வாழ்கின்றனர். வறுமையில் வாடும் பாட்டாளி மக்கள் வரகு கம்பு, சோளம் முதலியவற்றை உணவுப் பொருள் களாகப் பயன்படுத்துகின்றனர்.

6. தமிழகத்தின் கடற்கரை

"கடலை அடுத்துள்ள ஒரு நாட்டு மக்களுடைய வாழ்க்கை, தொழில், வாணிகம் முதலியவை அக்கடலி னைப் பொறுத்தே அமைகிறது. கடல் அயலார் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காக்கும் நல்லரண் காத் திகழ்கிறது."

—பெர்சி பீல்டு.

ஒரு நாட்டினைச் சூழ்ந்துள்ள கடல், அந்நாட்டின் வாழ்க்கை முறை, தொழில், வாணிகம் முதலியவற்றை வளமுறச் செய்கின்றது. பண்டைக் காலத்தில் பகைவரு டைய படையெடுப்பினின்று ஒரு நாட்டை, இயற்கை அரணாகிய கடல் பெரிதும் காத்து வந்தது. சிறந்ததொரு கடற்படை உடைய வல்லரசுகளே பகைவர் நாட்டினைக் கடல் வழியாகச் சென்று தாக்க முடிந்தது; மற்றவை நிலப்படை ஒன்றையே நம்பி வாழ நேர்ந்தது. சங்க காலத்தில், தமிழகத்தின் மேற்குக் கடற்கரை எண்ணூறு கல் நீளமும், கிழக்குக் கடற்கரை ஆயிரத்து நூறு கல் நீளமும் உடையதாக இருந்தன. இம்மாபெரும் நீளமான கடற்கரை அயல்நாடுகளோடு வாணிகம் செய்ய வழி கோலியதெனலாம். ஆயினும், வளவுகளும் உடைப்புகளு மின்றிப் பெரும்பாலும் நேராகத் தமிழகத்தின் கடற்கரை அமைந்திருப்பதால், இயற்கைத் துறைமுகங்கள் அமை வதற்கு உரிய வசதிகள் மிகக் குறைவாகவே இருந்து வருகின்றன. பழங்காலத்தில், கடல்மல்லை, புகார், சோழன் தொண்டி, பெருந்துறை, காயல், கொற்கை, உவரி, விழிஞம், சேரன் தொண்டி, வஞ்சி, முசிறி முதலிய துறைமுகங்கள் சிறப்புடன் விளங்கின. "கிறிஸ்து பிறப்

பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்னிந்தியா, கீழை நாடுகளுக்குச் செல்லும் கடல் வழியில் பெரிதும் பயன்படுத்தப்பட்ட''தென சில்வென்லிவி எடுத்துக்காட்டியுள்ளார். வரலாற்றுக் காலத்திற்கு அருகில் சென்றால், இந்தியத் தீவக்குறையின் நாகரிகத்தில் உள்ள கடலக வாழ்வின் (Maritime) சிறந்த பண்புகள் தெளிவாகத் தோன்றுகின்றன. பழந்தமிழ் இலக்கியத்தில் கடல் வாணிகத்தைப் பற்றிய குறிப்புக்கள் செறிந்து கிடக்கின்றன.[1] இவ்வாறு கடல் வாணிகத்தில் பண்டைத் தமிழகம் சிறப்புற்றிருந்ததற்குக் காரணம் இயற்கையிலேயே அதற்கமைந்த நீண்ட கடற்கரையேயாகும். கடலே அடுத்து வாழ்ந்த மக்கள் இயல்பாகவே உள்ள உரமும், உடல் வலிமையும் உடையவராய், அலைகடலைக் கண்டு அஞ்சாது கலத்தைச் செலுத்தக்கூடிய கடல் மறவராய் இருந்தனர். இன்று கீழை நாடுகளிலும், மேலை நாடுகளின் சில பகுதிகளிலும் காணப்படும் தமிழ்ப் பண்பாட்டின்–நாகரிகத்தின் சின்னங்கள், கடலக வாழ்வின் மூலம் அந்நாடுகளோடு பண்டைத் தமிழர்கள் கொண்ட தொடர்பினால் உண்டானவையாகும். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடவேண்டும்' என்னும் மனப்பான்மை பண்டைத் தமிழரிடை நின்று நிலவியமைக்குக் காரணம் இவ்வியற்கை அமைப்பின் தூண்டுதலேயாகும்.

தூரகிழக்கு நாடுகளில் தென்னிந்தியர் குடியேற்றங்களே அமைக்கப் பெரிதும் கடலக வாணிகம் தூண்டிய தெனலாம். இக்குடியேற்றங்கள் அமைதியான முறையில் வாணிகத்தின் பொருட்டுச் சென்றவர்கள் அமைத்ததே ஒழிய, படை ஆற்றலினால் அந்நாடுகளைக் கைப்பற்றி உண்டாக்கியதன்று. எனினும், சேரமன்னர்கள் வாணிகத்தினைப் பேணி வளர்த்தற் பொருட்டு மேலைக்கடலில் செல்லும் வாணிகர்களுக்கு இடையூறாக இருந்த கடற் கொள்ளைக்காரர்களை வென்று, ஆப்பிரிக்கக் கடற்கரைவரை மாற்றரின் மரக்கலங்கள் செல்லா வண்ணம் காத்தனர். பிற்காலச் சோழப் பேரரசர்கள் கிழக்குக் கடற்கரை முழுவதையும் தங்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்ததுடன்

1 — K. M. Panikkar.
Geographical Factors in Indian History, P. 63.

ஆற்றல் மிக்க கடல்மறவரைக் கொண்டு வலிமை மிக்க மரக்கலங்களை ஆயிரக்கணக்காக அக்கடலில் செலுத்தி மலாயா, ஜாவா, சுமத்திரா, பர்மா முதலிய நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று வாகை சூடினர். இந்திய வரலாற்றில் வேறெந்த வேந்தர்களும் 'கனவில்'கூடக் கருதாத 'கடல் கடந்த பேரரசினை'ப் பிற்காலச் சோழர் குடியில் தோன்றிய மாபெரும் மன்னர்கள் அமைத்தனர். ஆயினும், பிற்காலத்தில் கடல் கடந்த பேரரசு பெருஞ் சுமையாகத் தோன்றியதனால், மன்னர் மன்னன் இராசேந்திரனுக்குப் பிறகு வந்தோர் அக்கடல் கடந்த நாடுகளைத் தங்கள் பேரரசோடு சேர்த்துக் கட்டிக் காக்காது கைவிட்டனர். தமிழகத்தைச் சூழ்ந்துள்ள கடல், கிரீஸ், உரோம் நாடுகளை அடுத்துள்ள கடலைப் போன்று குறுகியதாகவும், எளிதாகச் சென்றடையக் கூடிய வழியில் தீவுகளும் நாடுகளும் உடையதாக இருந்திருக்குமானால், தமிழக வேந்தர்கள் நிலையான கடற்பேரரசினைக் கட்டிக்காத்துச் செங்கோலோச்சி இருப்பர் என்பது திண்ணம்.

பழந்தமிழ் இலக்கியத்தில் மரக்கலத்தைக் குறிக்கும் சொற்கள் மிகப்பலவாக உள்ளன. அவை, பண்டைக் காலத்திய தமிழ் மக்களின் கப்பல்கட்டும் திறனையும், கடல் கடந்த நாடுகளோடு வாணிகம் செய்வதில் அவர்கள் கொண்டிருந்த பேரார்வத்தையும் சுட்டிக் காட்டுகின்றன. பண்டைத் தமிழரிடையே இயல்பாகக் குடிகொண்டிருந்த இத்தகைய ஆர்வமும் ஊக்கமும்தான், இருபதாம் நூற்றாண்டில் 'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனாரைத் தமிழகத்திற்கென உரிமையுடைய கப்பல் கம்பெனி ஒன்றைத் தொடங்கி அயல்நாடுகளுக்குக் கப்பலை ஓட்டுமாறு தூண்டியது. அப்பெரியாரின் முயற்சி, அரசியல் நெருக்கடியாலும், பொருளாதாரக் குறைபாட்டினாலும் முழு வெற்றி அளிக்காமல் போயிற்று. தூத்துக்குடித் துறைமுகம் நன்கு சீர்திருத்தப் பெறின், அது சென்னைக்கு அடுத்துச் சிறப்புடன் விளங்க முடியும். சென்னைத் துறைமுகம்தான் இன்றைய தமிழகத்தின் தலைசிறந்த துறைமுகமாகும். இத்துறைமுகம் பெரிதும் சீர்திருத்தம் பெற்று வருகிறது. இத்துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்குரிய திட்டங்கள் சில வகுக்கப்பெற்றுமுள்ளன. நாகப்பட்டினம், புதுச்சேரி ஆகிய பட்டினங்கள் வருங்காலத்தில் தமிழகத்

தின் புகழ் மிக்க துறைமுகங்களாக விளங்குவதற்குரிய வாய்ப்புக்கள் பல உள்ளன. பண்டைத் தமிழகம் கடலக வாழ்வில் பெற்றிருந்த புகழையும் சிறப்பையும் வடஇந்தியாவில் எந்நாடும் எந்நகரமும் பெற்றில.

கடற்கரை கடலக வாணிகத்திற்குப் பயன்படுவதோடு உப்பு, மீன், பவளம், முத்து, சங்கு, சிப்பிகள் முதலிய கடல்படு பொருள்களையும் தந்துதவுகின்றன. தமிழகத்தில் முத்துக் குளித்தல் தொன்று தொட்டுச் சிறப்பாகச் செய்யப்படும் தொழிலாகும். கொற்கையம் பெருந்துறைமுகத்திற்கு, அன்றையே உலகில் இருந்த மதிப்பினை உரோம நாட்டு வரலாற்றாசிரியர்கள் பலவாறுகப் பாராட்டியுள்ளமையால் அறிகிறோம்.

7. வானிலையும் மக்கள் வாழ்க்கையும்

"இயற்கை அன்னை இங்கே வெறுக்கத் தக்கவளாகவும் இல்லை; சலிப்புறத் தக்கவளாகவும் இல்லை; மாதந்தோறும் மாறிவரும் சிறுவர்களின் பலவகை விளையாட்டுக்கள் போல், இடந்தோறும், பருவந்தோறும் மாறிமாறிப் பலவகையாய் நின்று மக்களை மகிழ்விக்கின்றாள்.....இயற்கை இங்குத்தான் தாயாக இருக்கின்றாள்; மக்கள் இங்குத்தான் இயற்கையின் குழந்தைகளாக இருக்கின்றனர்."

—டாக்டர், மு. வ.

மனிதனுக்கு இன்றியமையாத தேவை உணவும் உறையுளுமாகும். இவற்றை அவனுடைய வசதிக்கேற்பப் பெறுவது வானிலையைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு நாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்களுடைய வாழ்க்கையில் காணப்படும் வேறுபாட்டிற்கு வானிலையே காரணம் என்பர். மக்களின் மனநிலை, விடா முயற்சி, உடலமைப்பு ஓயாது உழைக்கும் பண்பு அல்லது இடையீட்டிற்கிடையே செயலாற்றும் தன்மை ஆகியவை யாவும் வானிலையைப் பொறுத்தே சிறப்புறுகின்றன. மேலும் மனிதனுடைய உணவு, வாழ்க்கை முறை, நாகரிகப்

பண்பாடு முதலியவற்றை முறைப்படுத்துவதும் வானிலையேயாகும்.

தமிழகம் முழுவதும் வெப்ப மண்டலத்திற்குள் இருந்தாலும், வானிலை மிதமாயும் ஒரே சீராகவும் இருக்கிறது. கோடையில் வெப்பம் அதிகமாக இருக்கின்றது; இதனால் மக்களின் உழைக்கும் ஆற்றல் ஓரளவிற்குக் குன்றிவிடுகிறது. ஆயினும், மேலைக் கடற்கரையில் தென்மேற்குப் பருவக் காற்றினால் சித்திரை, வைகாசியில் பெருமழை பெய்கின்றது. மேற்குத் திசையில் தொடங்கியுள்ள மழையின் ஆற்றலைத் தமிழகத்தின் சில பகுதிகளிலும் காணலாம். சோழ மண்டலக் கடற்கரையில் தென்மேற்குப் பருவக்காற்றினால் மழை பெய்வதில்லை. எனினும், சில சமயங்களில் தென்மேற்குப் பருவக்காற்றில் உள்ள ஈரப்பசையினால் தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதிகளிலும் மழை பெய்வதுண்டு. எதிர்திரும்பும் (வடகிழக்குப்) பருவக்காற்றினால் ஐப்பசி, கார்த்திகை, மார்கழித் திங்கள்களில் தமிழகத்தின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்கின்றது. கூவிரியில் எப்பொழுதும் நீர்ப்பெருக்கு உள்ளமையாலும், பருவமழையினால் நாட்டின் பல பகுதிகளில் உள்ள பெரிய நீர்நிலைகள் நிறைக்கப்படுவதனாலும் உழவுத் தொழிலே இந்நாட்டின் முதன்மையான தொழிலாக இருக்கின்றது. இதனால் தமிழக மக்களில் பெரும்பான்மையோர் உழவுத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். குறைந்த அளவு 40 அங்குல மழை பெய்கிறது. சேலம் மாவட்டம் வறட்சி உடையதாயினும், அங்கு வாழும் மக்கள் தங்கள் ஓயாத உழைப்பினால், காடுமேடுகளைக் கழனியாக்கிப் பொன்கொழிக்கும் வளமிக்க நிலமாக்கி வருகின்றனர். புதிதாக அமைக்கப்பட்ட பவானி நீர்த்தேக்கம், பெரியாறு நீர்மின்சாரத்திட்டம் முதலியன தமிழகத்தின் பாசன வசதிக்குப் பேருதவியாக உள்ளன. தற்சமயம் தமிழகம் உணவுப் பொருள் உற்பத்தி செய்வதில் 'தன்னிறைவு' பெறக் கூடிய நிலையினை அடைந்து வருகின்றது.

"மக்களின் அறிவையும் மனப்பண்பாட்டையும் ஒரு நாட்டின் வானிலை வளர்க்கின்றது. உடல் உரம் இழக்கச் செய்யும் தென்னிந்திய வானிலை, எளிதில் உணவு, உடையை மக்கள் அடைவதற்குரிய வசதிகளோடு காணப்படுகின்றது. இதனால்தான், தமிழர் அறிவாராய்ச்சியிலும்,

மெய்யறிவுத் துறையிலும் ஈடுபட்டுச் சிறப்புடன் விளங்க முடிகின்றது. இத்தகைய சிறப்பினை நாம் அடைவதற்குப் பெரிதும் தூண்டுதலாக இருப்பது வானிலை" எனில் மிகையாகாது.[1]

"தென்னிந்தியா, மெய்யறிவிற்கும் பண்பாட்டிற்கும் நிலையான தாயகமாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் இயற்கை — வானிலை — அந்நாட்டில் அன்பு காட்டி வருவது முதன்மையான காரணமாகும். மனிதன் வாழ்வதற்கேற்ற வானிலையுடையதாய் இருப்பதே தென்னிந்தியாவில் — தமிழகத்தில் அறிவு தழைத்தோங்குவதற்குரிய காரணமாகும்" என்று தென்னிந்தியாவின் குடிமகனாக இன்று வாழும், மேனாட்டு அறிஞரான ஜான் ஸ்பையர்ஸ் கூறுகிறார்.[2]

தமிழர் பழமைப் பற்றுள்ளராகவும், முடியாட்சியை அன்றி வேறு எவ்வாட்சி முறையைப் பற்றியும் கவலையுறாது வாழ்ந்தமை இயற்கை அமைப்பின் ஆற்றலாகவே இருந்திருக்க வேண்டும். தமிழகத்தின் முப்பெரும் ஆறுகளை நிலைக்களமாகக் கொண்டு தோன்றிய முப்பேரரசுகளுக்கும் இடையே குறுநில மன்னர் பலர் ஆண்டு வந்தனர். இச் சிற்றரசர்களை எல்லாம் தங்களுக்குப் பணிந்து தம்முடைய தலைமையை ஏற்று ஆளுமாறு பேரரசர்கள் வற்புறுத்தினரே ஒழிய, அவர்களுடைய நாடுகளை எல்லாம் நேரடியாகத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்று பழங்காலத்தில் நினைத்ததாகத் தெரியவில்லை. மலையும், ஆறும், காடும் இடையிடையே கொண்ட பெரு நிலப்பரப்பினை ஆளுவது அக்காலத்தில் அருமையான செயலாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இவ்வாறு இயற்கை அமைப்பும் வானிலையும் பருவ வேறுபாடுகளும், தமிழகத்தினை ஒரு குடைக் கீழ் ஆட்சி செலுத்த ஆற்றல் மிக்க வேந்தர்கள் முயன்ற போதெல்லாம் இடையூறாக இருந்தமை கருதத் தக்கது.

---

1 V.R.R Dikshitar, Pre-Historic South India. P. 37.

2 Editor: John Spiers. Values. Vol. II. P. 257.

தமிழகம் தொன்று தொட்டு முடியாட்சி நாடாகவே இருந்து வந்தது. இந்நாட்டில் செல்வாட்சி, மேன் மக்கள் ஆட்சி, குடியாட்சி முதலிய எத்தகைய ஆட்சி முறையும் தோன்றவில்லை. அதுமட்டுமல்ல; மக்களாட்சி அரசியல் அமைப்புக்கள் கூடத் தோன்றவில்லை. பண்டை நாள் முதல் தமிழகம் உழவினை நம்பி வாழும் நாடு; பெரும்பான்மையான மக்கள் சிற்றூர்களில் வாழ்கின்றவர் களாவர். உழவுத் தொழிலை மேற்கொண்ட மக்கள் பழமைப் பற்றுளராக இருப்பது இயல்பே யாகும். அதனால்தான், அரசியலிலும் ஆட்சி அமைப்பிலும் உண்டா கும் மாறுதல்களைப் பற்றிய ஆர்வம் குன்றியவர்களாக இருந்தனர். அவர்களுடைய ஆர்வமும் அக்கறையும், ஊக்கமும் அவர்கள் வட்டாரத்தைச் சார்ந்தே இருந்தமை யால், நாட்டு ஆட்சியின் தலைமை இடத்தைப் பற்றிய கருத்தின்றி வாழ்ந்தனர். அரசியல் அமைப்புக்களின் பண்புகளையும் நிலைகளையும் பற்றிச் சிந்திப்பதற்கு அவர் களுக்கு வாய்ப்பில்லை. இந்நிலையில் அவர்களிடை ஆழ்ந்த அரசியல் உணர்வோ, முனைப்பான அரசியல் வாழ் வைப் பற்றிய கவலையோ இருந்ததாகத் தெரியவில்லை.

பல சிற்றூர்களில் சிதறுண்டு வாழ்ந்த மக்களுக்குத் தங்களையும், தங்கள் உடைமைகளையும் பகைவரிடமிருந் தும், கொள்ளைக் கூட்டத்தினரிட மிருந்தும் காப்பாற்றி, அச்சமற்ற அமைதியான வாழ்க்கையை நடத்துவதற்கு உதவக் கூடிய வலிமை மிக்க அரசு ஒன்றுதான், இன்றி யமையாத அரசியல் தேவையாக இருந்தது. எனவே, மக்கள் எல்லாரும் ஆற்றல் மிக்க தலைவன் ஒருவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், கவலையற்ற அமைதியான வாழ்க் கையைப் பெற முடியும் என்பதை உணர்ந்தனர். இவ்வாறு, மக்கள் சமுதாயம் நினைவுக்கு எட்டாத பழங் காலத்தில் பெரு விருப்புடன் ஏற்றுக்கொண்ட ஒரு தலைவன் ஆட்சியே, நாளடைவில் அவன் கால்வழியினரின் குடும்ப உரிமையான அரசமரமாக மாறியது. இத்தகைய கோனாட்சி, தமிழ்மக்கள் முல்லை நிலத்தில் வாழ்ந்த பொழுது—ஓரினமாகக் கூடிச் சமுதாயமாக அமைந்த பொழுது உண்டாகிய தேவையில் அரும்பி மலர்ச்சியுற்ற தாகும். தமிழகத்தின் வரலாற்றில், என்றும் மறையாத இத்தகைய சுவடுகளை நில இயல்பும் வானிலையும் பொறித் திருப்பதைக் காணலாம்.

4.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத் தமிழகம்

"இந்நில உலகில் முதன் முதல் மனிதன் தோன்றிய அன்றே இந்திய வரலாறு தொடங்கியது எனில் மிகையாகாது."[1]

—பி. தி. சீநிவாச அய்யங்கார்.

மக்கள் இன வரலாற்றின் தொடக்கம் இயற்கையின் வரலாற்றுடன் பின்னிக் கிடக்கின்றது. மக்களின் மரபு நூல் மனித உடல் கூர்தலற வளர்ச்சியினுல் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு உண்டான மாறுதல்களை ஆராய்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சி மனிதன் உழைப்பின் மூலம் மனிதத் தன்மை உடையவனுக விளங்கியதையும், கைகால் முதலிய உடலுறுப்புக்களோடு தனக்குப் பயன்படும் முறையில் பலபுதிய கருவிகளைச் செய்து முன்னேற்றம் அடைந்ததையும் ஆராய்கின்றது மக்களின மரபு நூலும், தொல்பொருள் ஆராய்ச்சியும் மக்கள் இனத்தின் தொல்பழங்கால வரலாற்றினை எடுத்துரைக்கின்றன. தொல்பழங்கால வரலாறு, எழுத்துச் சான்றுகளினுல் அறியப்படும் மக்களின வரலாற்றிற்குக் காலத்தால் பன்னீரு யிரம், ஆண்டுகள் மூற்பட்டது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மனிதன் உலகில் தோன்

---

1 P. T. S. The Stone Age in India—Rutio.

றிப் புத்தம் புதுக்கருவிகளைத் தனக்குத் துணையாகச் செய்து கொள்ளுவதற்கு முன்வந்த காலம் ஐம்பது நூறு யிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்பது மக்களின மரபு நூலாரின் நம்பிக்கையாகும். அக்காலத்தில் தான் நிலத்தின் வெம்மை தணிந்து—மழை பெறந்து—உயிரினங்கள் வளர்ச்சியுற்றன; அவற்றிலிருந்து மனிதன் தோன்றினான்.

மனிதன் முதலில் தோன்றிய இடங்களில் தென் இந்தியா ஒன்று எனச் சில நில நூலாரும், பல மக்களின் மரபு நூல் வல்லாரும் கருதுகின்றனர். மனித இனம் முதன் முதல் தோன்றிய இடம் பண்டைத் தமிழகத்தின் தென் பகுதியே என்று சில வரலாற்றுப் பேரறிஞர்களும், தொல் பழங்கால வரலாற்று ஆராய்ச்சியாளரும் கூறி வருகின்றனர். அவ்வாறு அவர்கள் கருதுவதற்குரிய காரணங்கள் மிகப்பல. ஆர்க்கியன் ஊழியைச் சார்ந்த தொன்மை வாய்ந்த பழங்காலத்திய பாறைகள் தமிழகம், ஆந்திரா, மைசூர், ஒரிசா ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன. ஆதி மனிதன் தோன்றியதே தென் இந்தியாவில்தான் என்பதை உறுதியாக நிலைநாட்டுவதற்கு இயலா விட்டாலும், இந்தியாவில் முதன்முதல் மக்கள் குடியிருக்கத் தொடங்கிய இடம் தென்னாடுதான்—தக்கண மேட்டுநிலம் தான் என்பதை யாவரும் மறுக்க இயலாது என்பது பேராசிரியர் பி. தி. சீநிவாச ஐயங்காரின் கருத்தாகும். அவருடைய கருத்திற்கு அரண் செய்வது போன்று, தொல் பழங்காலப் பழம்பொருள் சின்னங்கள் தக்கணத்திலும், மைசூரிலும், தமிழகத்திலும் மிகப்பலவாகக் கிடைத்துள்ளன. ஆறுகளும் அடர்ந்த காடுகளும் குன்றுகளும் நிறைந்த தென்னாட்டு இயற்கை அமைப்பு, பருவநிலை ஆதி மக்கள் இனம் வாழ்வதற்கு ஏற்ற வசதியுடையதாக இருந்திருக்க வேண்டும். எனவே, இந்திய மண்ணில் ஐந்து நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழத் தொடங்கினர் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கணக்கிட்டுள்ளனர்.

1. பழங் கற்காலம் : (Paleolithic Period)

உலகில் தோன்றிய மக்களினம் தங்கள் தொடக்க நிலைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கல், செம்பு

இரும்பு முதலியவற்றுல் செய்யப் பெற்ற பொருள்களையும் கருவிகளையும் பயன்படுத்தியதே என்பதைத் தொல் பொருள் ஆராய்ச்சியால் அறிகின்றேம். ஆதிகாலத்தில் மனிதன் கல்லினுல் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சாமான்களையும் கருவிகளையும், பாண்டங்களையும் செய்வ தில் தேர்ச்சி பெறலானுன். தனக்கு வேண்டிய வகையில் மனிதன் கற்களை வெட்டியும் தேய்த்தும், கூர்மைப் படுத்தி யும் கற்களைக் கருவிகளாகப் பயன்படுத்தினுன். இவ்வாறு மனிதன் முதன் முதல் கற்களினுல் செய்த கருவிகள் யாவும் இன்று கல்மாறி (Fossils) களோடு காணப்படுகின்றன. மனித நாகரிகத்தின் முதற்படியினைப் "பழங் கற்காலம்" என்று கூறுவது மரபு.

காலப்போக்கில் அவர்கள் வழவழப்பும் கவர்ச்சியும் செம்மையு முடையதாகக் கற்கருவிகளைச் செய்யக் கற்றனர். மேலும், கையால் செய்து வந்த மண்பாண்டங் களைச் சிறிது காலத்திற்குள் சக்கரத்தின் உதவியால் செய் வது எளிய செயல் என்று அறிந்தனர். இறந்தோரைப் பெருங்கற் குவியல்களால் அமைக்கப்பட்ட 'புதைகுழி' களில் இட்டு அடக்கம் செய்தனர். இவை புதுக் கற்கால நாகரிகத்தின் சின்னங்கள் என்று தொல்பொருள் ஆராய்ச் சியாளர் கூறுவர். இவ்வாறு, இவ்விரு கற்காலத்திற்கும் இடையே நெடுங்காலம் கழிந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இவற்றைத் தொடர்ந்து நாகரிகம் படிப்படியாக வளர்ச்சியடைந்து மலர்ச்சியுற்றது. இவ் வாறு நாகரிகம் உற்ற வளர்ச்சியில் சில குறிப்பிடத் தக்க நாகரிக நிலைகள் காணப்படுகின்றன. அவற்றைச் செம் புக்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் என்று கூறுவது மரபு. மக்கள் முதன் முதலாகப் பயன்படுத்தக் கற்ற உலோகங்களைக் கொண்டே நாகரிக வளர்ச்சியினைப் பாகுபடுத்தி யுள்ளனர்.

பிற நாடுகளைப் போலவே தமிழகத்திலும் இத்தகைய நாகரிக வளர்ச்சியினைக் காணுகிறேம். இந்தியாவில், தென்னாட்டில்தான் கற்காலச் சின்னங்கள் பேரளவில் காணப்படுகின்றன. கர்நூல் மாவட்டத்தில் 'பள்ளி சங்கம்' மலையில் காணப்படும் குகைகள் இக்காலத்தைச் சார்ந்தன. கோதாவரி ஆற்று வெளியிலும் அண்மைக்

காலத்தில் பல சின்னங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தில இயல் வல்லுநர் புரூஸ்புட் என்ற அறிஞர் சென்னைக்கு அடுத்துள்ள பல்லாவரத்திற்கு அண்மையில், பழங் கற்காலத்தைச் சார்ந்த சில கருவிகளைக் கண்டெடுத்தார். மதுரை மாவட்டத்தில் சில இடங்களிலும், தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லம் என்ற இடத்திலும், மைசூர் நாட்டில் பல இடங்களிலும் பழங் கற்கால மனிதனின் நினைவுச் சின்னங்கள் பல கிடைத்துள்ளன. தமிழகத்தின் மலைகளிலும் குகைகளிலும் கடற்கரையை அடுத்துள்ள சம வெளிகளில் பளிங்குப் பாறைகளையுடைய குன்றுகளிலும் காணப்படும் சின்னங்கள் அனைத்தும் இக்காலத்தைச் சேர்ந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பழங்கற்கால நாகரிகத்தின் முதன்மையான பண்பாகக் காணப்படுவது பளிங்குக் கற்கள் (Microliths) பெரும் அளவில் பயன்படுத்தப் பெற்றமையாகும். அக்கல்லினால் கற்கோடரிகள், குந்தங்கள், ஈட்டிகள், சக்கரங்கள், சுத்திகள், சம்மட்டிகள், அரிவாள்கள், கத்திகள் முதலிய பல வகையான கற்கருவிகள் செய்யப்பட்டன. இக்கருவிகளைக் கூர்ந்து நோக்குவோமாயின் அவை மெருகிடப்படாத 'துறுகல்லாகவே' காணப்படுகின்றன. இயற்கையில் கிடைத்த கற்களை அப்படியே சிறிது உடைத்தும் செதுக்கியும் தேய்த்தும் கருவிகளாகப் பயன்படுத்தினர் என்பது புலனாகின்றது. இதனால் பழங் கற்கால மக்கள், கற்களைப் பொடியாக்கவோ, மாற்றவோ மெருகிடவோ அறிந்திருக்கவில்லை என்பது தெரிகிறது. இக்கால மக்கள் பயன்படுத்திய கைக்கோடரி, கூர்மையும் செம்மையும் உடையதாய் அழகுடன் காணப்படுகின்றது. இக்கற்களைத் தேடிப் பழங்கற்கால மக்கள் இங்குமங்கும் அலைந்து திரிந்திருக்க வேண்டும். இக்கற்கள் வட இந்தியாவில் காணப்படவில்லை; தென்னிந்தியாவிலும் கிழக்குப் பகுதியில்தான் பெருமளவில் உள்ளன. கல்லால் செய்யப் பெற்ற கருவிகளைத் தவிர, மரத்தினால் செய்யப்பட்ட ஈட்டிகளையும், தடிகளையும் பயன்படுத்தி வந்தனர். தமிழகத்தில் கிடைத்துள்ள பழங்கற்காலச் சின்னங்களுள் 'சத்தியவேடு' மலைக்கருகில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் மிகப் பழமை வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

பழங்கற்கால மக்கள் எதைப்பற்றியும் கவலையுறாது நிலையாக ஓரிடத்தில் இருந்து வாழாமல் இடம் பெயர்ந்து கொண்டே இருந்தனர். தமக்கெனத் தங்குவதற்குப் பாதுகாப்பான இடத்தைப் பற்றியோ, உண்பதற்கு வேண்டிய உணவைப் பற்றியோ கவலையுற்றதாகத் தெரியவில்லை. கதிரவனின் வெப்பமும், மழையும் தம்மைத் தாக்காவண்ணம் மலைச்சாரலையும், மலைக்குகைகளையும் நாடி வாழ்ந்தனர் போலும். அவர்களுடைய தேவைகள் மிகச் சிலவாகவும் எளிதில் பெறக்கூடியதாகவும் இருந்திருக்க வேண்டும். அவர்கள் நிலத்தை உழுது, உணவுப் பொருள்களைப் பயிரிடும் உழவுத் தொழிலை அறிந்திருக்கவில்லை என்பது அவர்கள் நாடோடிகளாகத் திரிந்தமையால் தெளிவாகின்றது. பழங்கற்கால மக்களுக்குப் பெரும் பகைவர்களாக இருந்தவை அடர்ந்த காடுகளில் இருந்த கொடிய விலங்குகளே யாகும். இவ்விலங்குகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவே—இயற்கையின் நெருக்கடி காரணமாகவே—மக்கள் முதன்முதல் கூடி வாழத் தொடங்கினர். காய்கனிகளையும், பருப்புக்களையும் உண்டு வாழ்ந்தனர். இந்நாகரிகத்தின் இறுதிக் காலத்தில் வேட்டையாடக் கற்றனர். விலங்குகளை வேட்டையாடிக் கொன்று, அவற்றின் இறைச்சியைப் பதப்படுத்த அறியாது பச்சையாகவே உண்டனர். பழங்கற்கால மனிதன் விலங்குகளை வேட்டையாடுவதற்கு வில்லையும் அம்பையும் பயன்படுத்தினான் என்பது பழங்கற்காலச் சின்னங்களால் அறியப்படுகின்றது. இவ்வாறு முதன்முதல் உணவின் பொருட்டு விலங்குகளை வேட்டையாடத் தொடங்கிய பழங்கற்கால மனிதர்கள் நாளடைவில் திறமை வாய்ந்த வேடர்களாக விளங்கினர்.

தமிழ் நாட்டின் மலைப்பகுதியான குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்களான வேட்டுவர்கள் விற்பயிற்சியில் வல்லவர்களாக, வேட்டையாடுவதில் திறமையுடையவர்களாக விளங்கினர் என்பதனைப் பழந்தமிழ் இலக்கியத்தால் அறிகின்றோம். இக்காலத்திய மனிதன் மண்பாண்டம் செய்யத் தெரியாதவனாக இருந்தான். விலங்குகளின் தோல்களையும், மரப்பட்டைகளையும், பசுந்தழைகளையும் தங்கள் உடலை மறைக்கும் ஆடைகளாக இடுப்பளவு கட்டி வாழ்ந்தனர். தமிழகத்தின் தட்ப வெப்பநிலை அவர்களுக்கு இவ்வுடையே

போதியது என்ற எண்ணத்தை எழச்செய்து இருக்க வேண்டும்.

பழங்கற்கால மக்களுக்குச் சிறிதளவு ஓவியம் வரையும் முறை தெரிந்திருந்ததாகச் சில தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர். தமிழகத்தில் கிடைத்துள்ள பழங்கற்காலச் சின்னங்களில் பல நிறமுள்ள களிமண் கிடைத்துள்ளமையால், அக்கால மக்கள் சிறிதளவு கலை யுணர்வுடன் வாழ்ந்ததோடு, தங்கள் உள்ளத்து உணர் வினை வெளிப்படுத்தும் பொருள்களைப் படைக்கும் கலைஞர் களாகவும் இருந்தனர் என்பர் பேராசிரியர் இராமச்சந்திர தீட்சதர்.[1] மேலும் அவர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி இன்பக்களியாட்டங்களில் ஈடுபட்டனர். இறந்து போன மக்களின் உடல்களை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இரையாக, வெட்டவெளியில் போட்டு விட்டனர்; பிணங் களை அடக்கம் செய்யும் வழக்கம் இல்லை.

இயற்கையின் தோற்றங்களைக் கண்டு அச்சமும் வியப்பும் கொண்டே அப்பழங்கற்கால மக்கள் இயற்கையை வழிபட்டிருக்க வேண்டும். நிலத்தெய்வ வழிபாட்டை— அன்னை வழிபாட்டை—அவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனால் சத்தி வழிபாட்டுநெறி மிகப் பழங்காலத்திலேயே வேரூன்றத் தொடங்கியது எனத் தெரிகின்றது.

பழங்கற்கால மனிதன் குட்டையாகக் கரிய நிறத் துடன் பரட்டைத் தலையோடு சுட்டை மூக்கு உடையவனாய் இருந்தான்; அவன் இன்று அந்தமான் தீவில் வாழும் பழங்குடி மக்களைப் போன்று நீக்கிரோக்கள் இனத்தைச் சேர்ந்தவனாக இருந்திருக்க வேண்டும் என்பர். இவர்கள் திராவிடருக்கு முற்பட்டவர் என்றும், ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களை ஒத்தவர் என்றும் வேறொரு சாரார் கூறுகின்றனர்.[2]

இத்தகைய வாழ்வையும் வரலாற்றையும் உடைய ஆதி மக்கள் வாழ்ந்து நாகரிகமடைந்த காலப்பகுதியாகிய

---

1 Pre-Historic South India P-57.

2 E. J. Rapson: Cambridge History of India—Part I. P. 19.

பழங்கற்காலத்தை ஒருவாறு கி.மு. 30,000 முதல் 10,000 வரை நிலைத்திருந்ததாகத் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர் திட்டப்படுத்தியுள்ளனர்.

2. புதுக் கற்காலம் : (Neolithic Period)

பழங் காலத்தினின்று வளர்ச்சியுற்றதே புதுக் கற் காலம் எனக் கருதுகின்றனர். ஆயினும், சில ஆராய்ச்சி யாளர்கள் இந்தியாவில் பழங் கற்காலத்திற்கும் புதுக் கற்காலத்திற்கும் இடையே பெரும் இடையீடு இருந் திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரம் (Sawayerpuram) என்னும் இடத்தில் கிடைத்துள்ள கற்குச்சுகளும், கல் துண்டுகளும் பளிங்குக் கற்களால் செய்யப்படவில்லை. அதற்குப் பதி லாகச் சக்கிமுக்கிக் கற்களும் இரவைக் கற்களும் பயன் படுத்தப்பட்டன. மைசூரிலுள்ள பிரமகிரியிலும் இத்தகைய கற்கள் கிடைத்துள்ளன. எனவே, இவை மெசொலிதிக் (Mesolithic) காலத்தைச் சார்ந்தன என்று புரூஸ்புட் என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வேறுபடுத்திக் காட்டியுள்ளார். இதனால் பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையே 'மெசொலிதிக்' எனப் படும் ஒரு காலம் இருந்ததெனத் தக்க ஆதாரங்களுடன் வரையறுத்துள்ளார். இக்காலத்திய மக்களுக்கும் உழவுத் தொழில் தெரியாது; வேட்டையாடுவதன் மூலமே தங்க ளுக்கு வேண்டிய உணவினைப் பெற்றனர். வேட்டையில் கொல்லப்படும் ஆடு, மாடு, எலி முதலிய விலங்குகளையே உணவாகக் கொண்டனர். இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கும் வழக்கத்தை இக்காலத்திய மக்கள்தாம் முதன் முதலில் மேற்கொண்டனர்.

மெசொலிதிக் நாகரிகத்தினால் பழங் கற்காலத்திற்கும் புதுக் கற்காலத்திற்கும் தொடர்பு அற்றுவிடவில்லை. இரண்டையும் இணைக்கும் பணியை மெசொலிதிக் நாகரிகம் செய்துள்ளதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். பழங்கற்கால நாகரிகத்தின் இறுதிக்காலத்தில் எத்தகைய பேரழிவும் குழப்பமும் நிகழ்ந்ததற்குரிய சான்றுகள் கிடைக் காமையால், பழங்கற்காலத்தில் இருந்தே புதுக்கற்காலம் தோன்றியதாகக் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

பழங்கற்காலப் பழம்பொருள் சின்னங்களைவிடப் புதுக்கற்கால அழிவுச் சின்னங்கள் பெரும் அளவில் கிடைத்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்திலும், அதனைச் சார்ந்துள்ள சில இடங்களிலும் புதுக் கற்கால மனிதன் வாழ்ந்ததற்குரிய பழம்பொருள் சின்னங்கள் கிடைத்துள்ளன. புதுக் கற்காலத்திய மக்கள் தங்கள் கருவிகளையும், கூர்மையான படைக் கலங்களையும் 'டிரூப்' என்னும் ஒரு வகைக் கற்களிலிருந்து செய்து கொண்டனர். திருநெல்வேலிப் பகுதியில் கிடைத்த வாய்ச்சி, கவண் கற்கள், அம்புத் தலைகள் 'டிரூப்' எனப்படும் கற்களினுல் செய்யப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில், பழனி மலைப்பகுதியில் காணப்படும் குரக்குப் படை வீடுகளும் மாடக் கற்களும் (Cists and Dolmens) கோடைக்கானலுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட கற்குவியல் முகடுகள் (Cairus), மாணமதுரைக்கு அருகில் கிடைத்த தாழிகளும், நடுகற்களும் (Urns and Menhirs), சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைப்பகுதியில் காணப்படும் கல்லறைகளும் (Ceets) புதுக் கற்காலத்தைச் சேர்ந்தனவாகும். இவற்றோடு, மிகப் பேரளவில் புதுக் கற்காலத்திற் குரியதாகச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சி முதலிய மாவட்டங்களிலும், ஆந்திர நாட்டில் வாரங்கல், அனந்தப்பூர் முதலிய இடங்களிலும், மைசூர் நாட்டில் பெல்லாரி, ராய்ச்சூர், பங்களூர், சிதலதுர்க்கம் முதலிய இடங்களிலும் பல சிதைவுச் சின்னங்கள் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

புதுக் கற்கால மக்கள் கற்களால் கருவிகள் செய்தனர். ஆயினும் அவை மிகவும் மழமழப்பாக இருந்தன. புதுக் கற்கால மக்கள் நாகரிக வாழ்க்கையை ஒருவாறு அறிந்தவராய் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. பழைய கற்காலத்தவர் நாடோடிகள்; புதிய கற்காலத்தவர் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்தனர். இயற்கையின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்குரிய அறிவும் திறனும் பெற்றனர். இவர்களுக்குப் பொன்னைத் தவிர வேறு கனிப் பொருள்கள் தெரியாததால் கற்களையே நம்பி வாழ்ந்தனர். இவர்கள் செய்த கருவிகள் துண்டு துண்டுகளாக இருப்பதோடு, பளபளப்பும் மழமழப்பும் உடையதாகத் தேய்க்கப் பெற்று

மெருகிடப்பட்டுள்ளன. பலவகையான உருவங்களில் பல வகைத் தொழில்களுக்கும் பயன்படும் கருவிகளைச் செம்மையாகச் செய்தனர். இவற்றைச் சொரசொரப்பாகவும், கரடுமுரடாகவும் உள்ள பழங் கற்காலக் கருவிகளிலிருந்து எளிதில் பிரித்து விடலாம்.

புதுக் கற்காலத்தில், மக்களின நாகரிகம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியுற்று முன்னேற்ற மடைந்திருப்பதைக் காணுகின்றோம். நிலத்தினை உழுது நெல், வரகு முதலிய கூலங் (தானியங்)களையும். பழ வகைகளையும் பயிரிட்டனர். மூங்கிலைக் கொண்டு உரோய்ந்து அல்லது தீக்கடைக் கோல் கொண்டு தீ உண்டாக்கக் கற்றிருந்தனர். மண்பாண்டங்களை முதலில் கையினாலும், பிறகு குயவன் சக்கரத்தைக் கொண்டும் செய்தனர். எருது, ஆடு போன்ற விலங்குகளைப் பழக்கி வந்தனர். அவர்கள் குகைகளில் தங்கி வாழ்ந்து வந்தனர். அச்சுவர்களில் வேட்டையாடுவதையும், நடனமாடுவதையும் ஓவியமாகத் தீட்டியுள்ளனர். தென்னாட்டில், சிறப்பாக வேணாட்டில் 'எடக்கல்' என்னும் இடத்தில் உள்ள குகைச் சுவர்களில் இத்தகைய ஓவியங்களைக் காணலாம். புதுக் கற்காலத்திய மக்கள், மண்பாண்டங்களுக்கு நிறம் பூசியும் பூவேலைப்பாடு செய்தும் அலங்கரித்தனர். படகுகளைக் கட்டிக் கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். பருத்தியிலிருந்து நூல் நூற்று ஆடைகள் நெய்யவும் கற்றிருந்தனர்; இறந்தோரைப் புதைத்து வைத்தனர். சில சமயங்களில் இறந்தோர் உடலைப் பெரிய தாழிகளில் வைத்துப் புதைத்தனர். இத்தகைய தாழிகளும், அவை புதைக்கப் பெற்ற கல்லறைகளும் தமிழகத்தின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. புதுக் கற்கால மக்கள் தனிப்பட்ட கடவுள் நெறியினை விரிவாக அமைத்துக் கொள்ளவில்லை. ஆயினும், எல்லாவற்றிற்கும் மூல காரணமாக விளங்கும் 'செம்பொருள்' ஒன்று உண்டு என்னும் கொள்கை அக்காலத்திலேயே அரும்பியதை அறிகிறோம்.

இக்காலத்திய மக்கள் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர் என்பதற்குச் சில சான்றுகள் கிடைத்துள்ளன. பெல்லாரி மாவட்டத்திலுள்ள கற்பகல்லுக்குன்றில் சிவலிங்கத்தையும் காளையையும் காண்பிக்கின்ற சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இச்சிவலிங்கமும் காள

யும் புதிய கற்காலத்தைச் சார்ந்தனவாகலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்தில், களிமண்ணும் மணலும் கலந்து செய்யப் (Terra Cotta) பெற்ற மனித உருவம் ஒன்று கண்டு எடுக்கப்பட்டது. அதன் கால்கள் குட்டையாக இருக்கின்றன. அவ்விடத்தில் பிணம் புதைக்கும் தாழிகள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. செந்நிற மண்ணாலான பெண் உருவங்களும் சில கிடைத்துள்ளன. இப்பெண் உருவங்களின் கூந்தல் அழகுற அலங்கரிக்கப்பட்டுள்ளன. பல சுருள்களாகத் தலை முழுதும் சுருட்டப்பட்டு, அச்சுருள்கள் மீது நீண்ட சீப்புகள் செருகப்பட்டதுபோல் காணப்படுகின்றது. இப் பெண்களின் கழுத்தில் அட்டிகை அணியப் பெற்றுள்ளன. சேலம் மாவட்டத்தில் குடிசைகளைப் போன்ற பிணப் பெட்டிகள் பல கண்டெடுக்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டத்தில் உள்ள செட்டிப்பாளையம் என்னும் ஊருக்கு அண்மையில், வயல் வெளியில் ஒரு மண்மேடு அகழ்ந்து எடுக்கப் பெற்றது. அம் மண்மேட்டின் நடுவில் பெருங் கற்படை சமாதி (Megalithic Monument) ஒன்று காணப்பட்டது. அதனுள் பலவகைப் பண்டைப் பொருள்கள் இருந்தன. மழமழப்பான கருப்பு நிற மண்பாண்டங்கள் நல்ல நிலையில் கண்டெடுக்கப்பட்டன. நீர் அருந்தும் செம்புக் குவளை ஒன்று கிடைத்திருக்கிறது. வேறொரு குவளையின் மூடி மீது மான் போன்ற வடிவம் நிற்கும் நிலையில் செதுக்கப்பட்டிருக்கிறது. சீப்பு, யானை மருப்பு, சிப்பி, மணி, தலையணை முதலிய பொருள்களும் கிடைத்துள்ளன. இவற்றுல் புதுக் கற்கால மக்கள் அடைந்திருந்த பண்பாட்டையும், அவர்கள் பெற்றிருந்த கலை உள்ளத்தையும் அழகு உணர்ச்சியையும் உய்த்துணரலாம்.[1]

புதுக்கோட்டை இராச்சியத்தில், கற்கால மக்கள் பல வகையாகப் பிணங்களைப் புதைத்த சின்னங்கள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பலவகை அமைப்புக்களில் சிறியதும் பெரியதுமாகச் செய்யப்பட்ட தாழிகள் பல

---

1. P.T.S Aiyangar; Stone Age in India. PP 19-40.

கிடைத்துள்ளன. மண் தாழியில், இறந்தோரின் உடலை உட்கார வைத்து, அதன்மேல் பாதி அளவு மணல் பரப்பப் பட்டும், அவ்வளவுக்கு மேல் அரிசியும் பிற கூலப் பொருள் களும் கொண்ட தட்டொன்று வைக்கப்பட்டும், தாழி புதைக்கப்பட்டுள்ளது. அத்தாழியின் பக்கத்தில் இறந்த வன் பயன்படுத்திய கற்கருவிகளும் பிறவும் வைக்கப்பட் டுள்ளன. தாழியின் மேல் மூடியிடப்பட் டிருக்கிறது. தாழியைப் புதைத்த குழி மணல் போடப்பட்டுப் பாறை யால் மூடப்பட்டுள்ளது. இதைப் போன்ற எண்ணற்ற தாழிகள் புதுக் கற்காலத்தைச் சார்ந்தனவாகக் காணப் படுகின்றன. புதுக் கற்கால நாகரிகத்திற்கு உரிய மக்கள் திராவிடர்களே ஆவர் என்பது தொல் பொருள் ஆராய்ச்சி யாளர் துணிவாகும்.

3. இரும்புக் காலம் :

தென் இந்தியாவில், கற்காலத்திற்குப் பிறகு அயல் நாடுகள் சிலவற்றுள் காணப்படுவது போன்று செம்பு, வெண்கலக்கால நாகரிகங்கள் தோன்றாது, நேரடியாக இரும்புக் கால நாகரிகம் தோன்றியது. புதுக் கற்காலப் பழம்பொருள் சின்னங்களை ஆராய்ந்ததன் பயனாகக், கற் கால நாகரிகத்திற்கு எத்தகைய பேரழிவும் உண்டாக வில்லை என்பது புலனாகின்றது. இவ்விரு நாகரிகங்களும் ஒன்றன் மீது மற்றொன்று படிந்தும் காணப்படுகின்றன. இரும்பினால் செய்யப் பெற்ற காலத்திலும், கற் கருவிகள் புழக்கத்தில் இருந்ததை இரும்புக் காலத்தைச் சார்ந்த கல்லறைகளில் காணுகின்றோம்.[1]

அண்மைக் காலத்தில், ஆந்திர நாட்டில் இராய்ச்சூர் மாவட்டத்திலும், மைசூரைச் சார்ந்த பிரமகிரியிலும் கிடைத்துள்ள செம்பு, வெண்கலக் கருவிகளினால், தென் இந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இரும் பினை மக்கள் அறியாதிருந்த பொழுது வெண்கலமும் செம் பும் பயன்படுத்தப் பெற்ற நாகரிகநிலை ஒன்று இருந்ததை அறிகிறோம்.

இரும்பினைப் புதிய கற்கால மக்கள் கண்டெடுத்தனர் என்பதைவிட, வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்குப்

1. P.T.S. Aiyangar : Pre-Aryan Tamil Culture, P. 5.

புதியதாகக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் மொழிந்துள்ளார்.[1] இவ்வாறு கருதுவதற்குரிய காரணம் பிரமகிரியில் கிடைத்துள்ள கருவிகளை ஆராய்ந்த பியூரர் எய்மென்டார்ப் என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர், திராவிடர்கள் கி. மு. ஏழாம் நூற்றாண்டளவில் இரும்பினைத் தென்னாட்டிற்கு, நடுநிலக் கடற் பகுதியிலிருந்து தாங்கள் வந்த பொழுது கொண்டு வந்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளமையாகும். பழம் பொருள் சின்னங்களின் எந்தத் தளத்தில் புதிய கற்காலத்திற்குப் பிறகு செம்பும் வெண்கலமும் பயன்படுத்தப் பெற்றது என்பதை அக்கரையுடன் கூர்ந்து ஆராய்வோமானால், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகள் புறக்கணிக்கக் கூடிய நிலையில்—மிகச் சிலவாகவே கிடைத்துள்ளதை உணரலாம். ஆனால், தென் இந்தியாவின் புதிய கற்கால நாகரிகத்தைத் தொடர்ந்து விளங்கியதே இரும்புக்கால நாகரிகம் என்னும் கருத்திற்குப் பேரளவில் சான்றுகள் கிடைத்துள்ளமை நினைவுகூரத் தக்கது. தென் இந்தியாவின் இரும்புக் கால நாகரிகத்தைப் போன்று வட இந்தியாவில் பரந்தும் சிறந்தும் விளங்கவில்லை என்று கூறலாம். வடநாட்டு மக்களோடு கொண்ட தொடர்பினாலேயே தென்னாட்டு மக்கள் வெண்கலத்தையும், செம்பையும் பயன்படுத்தக் கற்றிருக்க வேண்டும்; அவ்வாறே இரும்பின் பயனைப் பற்றி வடஇந்திய மக்கள் தென்னாட்டு மக்களிடமிருந்து அறிந்திருக்க வேண்டும்"[2] என்று பேராசிரியர் இராமச்சந்திர தீட்சதர் தெளிவாக விளக்கியுள்ளார். தென்னாட்டில்தான் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நிலையில் இரும்பு பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகப் புரூஸ்புட் மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.[3] இக்காரணங்களால், தென்இந்தியாவில் இரும்புக் காலத்தின் இறுதியில்தான் வெண்கலம், செம்பு ஆகிய உலோகங்கள் பயன்படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

---

1. Prof. K. A. N. Sastri: A History of South India, P. 52.
2. Prof. V. R. R. Dikshitar: Pre-Historic South India, P. 117.
3. Bruce Foote: Pre-Historic Antiquities—P. 25.

இரும்புக் காலத்தின் சின்னங்கள் புதிய கற்காலக் கருவிகளுடன் கலந்து தெற்கே திருநெல்வேலி மாவட்ட முதல் வடக்கே கர்நூல் மாவட்டம் வரையில் உள்ள பல இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைப்பகுதியில் இரும்புக்கால நாகரிகத்திற்குரிய கருவிகள் பல கிடைத்துள்ளன. இக்காலத்தில் பாறைகளில் குடையப்பட்ட குகைகள் சென்னைக்கு அருகில் பிரம்பூரிலும், கோவை மாவட்டத்தில் கானியம் பூண்டி, சிறுமுகை என்ற சிற்றூர்களிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதித்த நல்லூரிலும், கேரளத்தில் தலைச்சேரியின் அண்மையிலும் காணப்படுகின்றன. பல வகையான உருவ அமைப்புக்களில் செய்யப்பட்ட கருவிகள் பல இக்காலப் புதை குழிகளில் கிடைத்துள்ளன. நீண்ட கோடரிகள், அழகிய அரிவாள்கள், கூர்மையான வாள்கள் சுரைகளோடு கூடிய ஈட்டியின் முனைகள் முதலியன சேர்வராயன் மலைப்பகுதியில் கிடைத்துள்ளன; அதனை அடுத்துள்ள இன்னோர் இடத்தில் ஈட்டியின் அலகுகள், கோடரித் தலைகள், நீண்ட கத்திகளின் உடைந்த துண்டுகள் கிடைத்துள்ளன.[1]

இரும்புக் காலத்திய மண்பாண்டங்கள் மிகச் சிறந்த முறையில் பொலிவுடன் விளங்குமாறு செய்யப்பட்டுள்ளன. அவை பலவகை அமைப்புக்களில் காணப்படுகின்றன. குவளைகள், மூக்குகளையுடைய தூக்குகள், மூன்று நான்கு கால்களையுடைய பெரும் மண்பாண்டங்கள், முட்டை வடிவுடைய கிண்ணங்கள், அகன்ற வாயினையுடைய பெரும் பானைகள், சட்டிகள், மலர்க் குவளைகள், கலவடைகள், புரிமனைகள், மூடிகள், அடைப்பான்கள், விளையாட்டிற்குரிய மண் சக்கரங்கள் முதலியன கிடைத்துள்ளன. அவற்றோடு உடைந்த சங்கு வளையல்களின் துண்டுகளும், மண் பாண்டங்களின் ஓடுகளும் சிதறிக் கிடக்கின்றன. இம்மண் பாண்டங்கள் மிகவும் நேர்த்தி வாய்ந்தனவாக உள்ளன. இத்தகைய மண்பாண்டங்களைச் செய்யக் கற்றிருந்த மக்கள் உண்மையிலேயே சிறந்த நாகரிக நிலையை அடைந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[2]

---

1. Ibid: P. 62.
2. Ibid: P. 25.

1. ஆதித்த நல்லூர் :

திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் என்ற ஊருக்கு இரண்டு கற்கள் தொலைவில் பிணக்குழிகள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவ்விடத்திற்கு ஆதித்த நல்லூர் என்பது பெயர். தென் இந்தியாவில் கிடைத்துள்ள பழம்பொருள் சின்னங்களுள் ஆதித்த நல்லூர் மிகச் சிறப்புடையது. தாமிரவருணி ஆற்றின் தென்கரையில் நூறு ஏக்கர் பரப்புள்ள மேடுகள் நிறைந்த களர் நிலத்தில் பிணக்குழிகள் நிறைந்து உள்ள இடமாகும். இந்நிலப் பரப்பில் மண்ணும் சரளைக் கற்களும் கொண்ட பளிங்குப் பாறைகள் உள்ளன. இப்பாறைகளின் நடுவே குடையப்பட்டுக் கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தாழிகளைப் புதைப்பதற்காகச் சிறு சிறு அறைகள் குடையப்பட்டுள்ளன. அவற்றின் உள்ளும் புறமும் பல பொருள்கள் காணப்படுகின்றன. மூன்றடி முதல் பன்னிரண்டு அடி ஆழத்தில் ஆறு அடியாகிலும் இடைவெளி இருக்குமாறு தாழிகள் புதைக்கப் பெற்றுள்ளன. சில தாழிகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன. ஓர் ஏக்கர் நிலத்தில் ஆயிரம் தாழிகளுக்கு மேல் புதைக்கப்பட்டுள்ளன. இன்றுவரை தமிழகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பிணக்குழிகளில் அகன்றதும், பெரியதும், முதன்மையானதும் சிறப்புடையதுமாக ஆதித்த நல்லூர்ச் சின்னங்கள் காணப்படுகின்றன.

அக்குழிகளில் பொன் அணி கலன்களும், தலைக்கட்டுக்களும், வாய் மூடிகளும், வெண்கலச் சாமான்களும், இரும்புக் கருவிகளும், வழவழப்பான அழகிய மண்பாண்டங்களும் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. இரும்பினால் செய்யப் பெற்ற கருவிகள் 3490க்குக் குறையாமல் அக்குழிகளில் கிடைத்துள்ளதாக அலக்சாண்டர் ரீ என்னும் தொல் பொருள் ஆராய்ச்சியாளர் ஒரு பட்டியல் தந்துள்ளார். அவற்றுள் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுவன மண் வெட்டிகள், சூலங்கள், குந்தங்கள் முதலியனவாகும். இரும்புக் கருவிகளின் நுனிகள் யாவும் நிலத்திலே புதையுமாறு செருகப்பட்டுள்ளன. பிண அடக்கத்திற்காக வந்த இழவுத் துன்பமுடைய மக்கள், பிணத்தை அடக்கம் செய்த வுடன் அதைச் சுற்றி இரும்புக் கருவிகளை வேலியாக நடும்

வழக்கம் ஒரு கால் அம்மக்களிடை இருந்திருக்கலாம் என்பது இதனால் புலனுகின்றது.

வெண்கலத்தால் செய்யப் பெற்ற போர்க் கருவிகள் ஒன்றுகூட இல்லை. பலவகைச் சாமான்களும், மோதிரங்கள், வளையல்கள், காப்புகள், விலங்குகள் பொறிக்கப்பட்ட சாமான்களின் மூடிகள், பிடிகள் முதலியன வெண்கலத்தால் செய்யப்பட்டு இருந்தன. வெண்கலத்தினுல் செய்யப்பட்ட எருது, ஆடு, கோழி முதலியவற்றின் வார்ப்பு உருவங்கள் சில அக்குழிகளில் கிடைத்துள்ளன. அவையாவும் வீட்டு விலங்குகளாகும். அவை அல்லாமல் புலி, மான், யானை முதலிய காட்டு விலங்குகளின் வார்ப்பு உருவங்களும் கிடைத்துள்ளன. மேலும் மெல்லிய வெண்கலத் தகடுகளால் செய்யப் பெற்ற குவளை உருவிலமைந்த சல்லடைகள் துளையிடப்பட்ட 'போகணிகளில்' பொருத்தப்பட்டுள்ளன. சல்லடைகள் வட்ட வடிவில் செய்யப்பட்டுள்ளன; அவற்றுள் தாமரை இதழ் போன்ற அமைப்பில் துளைகள் இடப்பட்டுள்ளன. ஆதித்த நல்லூர்ச் சின்னங்களில் இறந்தவர்களுடைய சின்னங்கள் எரிக்கப்பட்டமைக்கு உரிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனுல், மக்கள் உடம்பின் முழு எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. இதனுல், புதைக்கும் வழக்கமே இருந்ததென்பது புலனுகின்றது.[1] இவ்வாறு தாழிகளில் புதைக்கும் பழக்கம் பிற்காலத் தமிழகத்திலும் இருந்ததைச் சங்க இலக்கியங்களால் அறிகின்ருேம்.

இங்குக் காணப்படும் முதுமக்கள் தாழிகள் யாருடையதாக இருக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் அது தமிழருடையதே (திராவிடருடையதே) என்ற முடிவிற்கு வந்துள்ளனர். இத்தகைய பழம்பொருள் சின்னம் இந்தியாவில் வேறெங்கும் கிடைக்கவில்லை. இங்குக் கிடைத்துள்ள தாழிகளில் வேல்கள், வெண்கலத்தில் வார்ப்பு உருவங்களாகச் செய்துள்ள கோழி உருவங்களும், இரும்புக் கொடிப் பட்டங்களும் (தலைக்கட்டுகள்) கிடைத்துள்ளன. பண்டைத் தமிழர் தொன்று தொட்டு வேலினைத் தம் படைக்கலமாகக் கொண்ட முருகனை வழிபட்டு வந்த

1. Alexander Rea: Catalogue of the Pre-Historic Antiquities of Adichchanallur. P. 43.

தும், அம்முருகப் பெருமான் சேவற்கொடியை உடையவன் என்பதும் யாவரும் அறிந்த உண்மை. ஆகையால், ஆதித்த நல்லூரில் வாழ்ந்த மக்கள் பண்டைத் தமிழர் களாகத்தாம் இருக்க வேண்டும் என்பது திண்ணம்.

அண்ணல் வாயில் : (அன்ன வாகல்)

பல கற்கள் பரப்புடைய இரும்புக் காலப் பிணக்குழி கள் புதுக்கோட்டை வட்டாரத்தில் பல இடங்களில் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அண்ணல் வாயில் என்னும் ஊருக்கு (புதுக்கோட்டை நகரில் இருந்து பத்துக் கற்கள் தொலைவில் உள்ளது) அருகில் அகழ்ந்தெடுக்கப் பட்ட இரும்புக்கால நாகரிகத்தைச் சார்ந்த பிணக்குழிகள் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

அங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள கல்லறைகள் நீண்ட சதுர வடிவில் இரண்டு சிறு சதுரங்களைக் கொண்டதாக உள்ளன. சதுரத்தின் ஒவ்வொரு பக்கமும் குறைந்தது இரண்டு முழம் நீளமுடையதாக உள்ளன. சதுரத்தைச் சுற்றியும் நன்கு தேய்த்து வழவழப்பாக்கப்பட்ட கற் பலகை பொருத்தப் பெற்றுள்ளன. உள்ளிருக்கும் இரண்டு சதுரங்களைத் தனித்தனியே பிரிப்பதற்கு ஒரு கற்பலகை இடைச்சுவர் போன்று பொருத்தப்பட்டிருக்கிறது. அவற் றுள் ஒன்றில் இறந்துபோன மனிதனும், அடுத்துள்ள ஒன்றில் அவனுடைய மனைவியும் தாழிகளில் இடப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஒருகால் குறுநிலத் தலைவனும் அவனுடைய மனைவியாகவும் இருந்திருக்கலாம் என்பர். ஒவ்வொரு பிண அறையிலும் கற்பலகைகள் இடையில் உள்ள மாடத்தில் ஒரு கல்லினால் செய்யப்பட்ட அகல் விளக்கு வைக்கப்பட்டுள்ளது. பிண அடக்கம் செய்யப்பட்ட பொழுது அவை ஏற்றி வைக்கப்பட்டிருக்க லாம். கற்காலத்தில் காணப்பட்டது போல் தாழிகளுள் இறந்து போனவர்களுடைய அணிகலன்களும், கருவி களும் ஒரு தாம்பாளம் நிறைய உணவுப் பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. அப்பிணக் குழிகளில் கற்களாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட கருவிகள் காணப்படுகின்றன. அவை, சமயச் சடங்குகள் செய்யப்படும் பொழுது இரும்புக் கருவிகளோடு பண்டைக் காலமுதல் புழக்கத்தில் இருந்து

வரும் கற்கருவிகளும் பயன்படுத்தப்பட்டதைச் சுட்டிக் காட்டுகின்றன.

அப்பிணக் குழிகள் அனைத்தும் புதிய முறையில் கட்டப்பட்ட கல்லறைகளாகும். பெருங்கற்களையும், கற்பலகைகளையும் கொண்டு கட்டப்பட்டுள்ளமையால் அவற்றைப் 'பெருங்கற்படைசமாதிகள்' (Megalithic Monuments) என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். இம் (கட்டிட) முறை புதுக் கற்காலத்தின் இறுதியிலேனும், அல்லது இரும்புக் காலத் தொடக்கத்திலேனும் தமிழகத்தில் தோன்றியதாகலாம். இதைப் போன்ற பெருங்கற்படை சமாதி கட்டும் வழக்கத்தை எகிப்து, பாலஸ்தீனம், கிரீசு போன்ற நாடுகளில் காணுகின்றோம். நடுநிலக் கடல் பகுதியைச் சார்ந்த பெருங்கற்படை சமாதிகளோடு அமைப்பில் ஒப்புமை உடையனவாக நம் நாட்டில் பல உள்ளதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். தமிழகத்தின் பிணக்குழிகளில் இரும்புப் பொருள்கள் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இவ்வழக்கம் சற்றேறக் குறைய கி. மு. 2000 முதல் கி. பி. 1200 வரை மேற்கண்ட நாடுகளிலும் இந்தியாவிலும் பெரு வழக்காக இருந்ததாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இறந்தோரைத் தாழிகளில் இட்டுப் புதைக்கும் வழக்கமும், அத்தாழிகளைப் புதைத்த இடங்களில் பெருங்கற்களை நட்டு வழிபாடு செய்யும் வழக்கமும் பண்டைத் தமிழர்களிடை இருந்ததற்குரிய சான்றுகள் பல பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன.

தாழிகளில் பிணங்களை இட்டுப் புதைப்பதை,

"மாலைவிரி நிலவில் பெயர்ப்பு புறங்கண்டாற்கு
மாஇருந் தாழி கவிப்ப,
தாஇன்று கழிக, எற்கொள்ளாக் கூற்றே!"

—நற்றிணை 271 : 10–12.

"துளங்குநீர் வியலகம் ஆண்டு, இனிது கழிந்த
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே"

—பதிற்றுப்பத்து 44 : 22–23.

" கவி செந்தாழிக் குவிபுறத்து இருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவ,
வாய்வள் காக்கையும் கூகையும் கூடி
பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடு முன்னினே"

—புறம் 238 : 1-5.

" சுடுவோர், இடுவோர், தொடுகுழிப் புதைப்போர்,
தாழ்வயின் அடைப்போர், தாழியில் கவிப்போர்"

—மணிமேகலை 6 : 66-67.

என்பனவற்றுல் அறியலாம்.[1]

தாழிகளைப் புதைத்த இடத்தில் நடப்பட்ட நடுகல் லினை வழிபாடு செய்யும் பழக்கமும் பெருவழக்காகத் தமிழ கத்தில் இருந்ததை,

" மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பு ஆகிய வெள்வேல் நெடுந்தகை
நடுகல் பிறங்கிய உவல்இடு பறந்தலை"

—புறம் 314 : 1-3.

என்று நடுகல் நடப்படும் இடத்தைப் பழந்தமிழ் இலக்கி யம் குறிப்பிடுகிறது. மேலும் நடுகல் நாட்டப்படுவதை யும், அதில் பொறிக்கப்படும் செய்திகளையும், வழிபாட்டு முறையையும் காணலாம்:

" நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"

—அகம் 67 : 7-10.

" விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைத்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன....."

—ஐங்குறு 352 : 2.

" இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
படைநடு கல்லின் நாட்பலி ஊட்டி
நல்நீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய,
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை இருக்கைத்து"

—புறம் 329 : 1-5.

1. மேலும், புறம் 228, 364 முதலியவற்றைக் காண்க.

"..... அம்குடிச் சீறூர்
நடுகல் கைதொழுது பரவும்"

—புறம் 305 : 3-4.

என்பனவற்றுல் பண்டைத் தமிழகத்தில் வீர வழிபாடாக விளங்கிய நடுக்ல் வழிபாட்டின் சிறப்பினை நன்கு அறியலாம்.[1]

மேலும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படும் கம்பர் இயற்றிய இராமாயணத்திலும் முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்ட பெருங்கல் சமாதிகளைப் பற்றிய குறிப்பு உள்ளமை இங்குக் கருதத் தக்கது.

அரிக்கமேடு :

புதுச்சேரிக்குத் தெற்கில் இரண்டு கல் தொலைவில் உள்ள மேடு ஒன்று பத்தாண்டுகளுக்கு முன்பு அகழ்ந்து எடுக்கப்பட்டது. வராக நதி என்னும் செஞ்சியாற்றின் பழங்கிளையான அரியாங்குப் பத்தாறு என்னும் காயல் ஆற்றின் பெருக்கத்தால் அறுக்கப்பட்டும் மண்கொண்டு வந்து அணைக்கப்பட்டும் அமைந்த மேடு அது. ஆற்றை யடுத்திருக்கின்ற காரணத்தால் 'அருகு மேடு' என்ப் பெயர் வந்திருக்கலாம். நாளடைவில் அப்பெயர் திரிந்து 'அரிக்க மேடு' என்று ஆகியிருக்கலாம்.

இதனை அடுத்துப் பரதவர் குப்பங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று வீராம் பட்டினம் என்பது. அது பண்டை வணிகர்களின் நியமங்களான வீரபட்டினங்களில் ஒன்ருக இருக்கலாம். வாணிகத்தால் சிறப்பெய்தியிருந்த அத்துறைமுகப் பட்டினம் புறநானூற்றிலுள்ள 320 ஆம் பாட்டை இயற்றிய வீரை வெளியனரும், அகநானூற்றிலுள்ள 188 ஆம் பாட்டைப் பாடிய வீரை வெளியன் தித்தனரும் வாழ்ந்த நகரம் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. காவிரிப்பூம் பட்டினத்துள் அடங்கிய மருவூர்ப் பாக்கம் போன்று, இங்கும் ஆற்றின் அக்கரை 'முருங்கைப் பாக்கம்' என வழங்குகிறது. அது மருங்கைப் பாக்கம் என்ற பழம் பெயரின் திரிபாகும். அரியாங்குப்பம் எனப்

1. மேலும், புறம் 221, 232. 264 ஆகியவற்றைக் காண்க.

படும் பரதவர் குடியிருப்புக் குறிப்பிடத் தக்கது. அங்கு இன்றும் ஒரு புத்தர் சிலையைக் காணலாம். அங்குள்ள மேடு ஒன்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருத்தை ஈர்த்தது. அவர்களுடைய அரிய முயற்சி கிறித்துவ நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய 'சோழ மண்டலத் துறைமுகப் பட்டினம் ஒன்றின் சிதைவைத் திறந்து காட்டியது.'

சங்க காலத்தில், தமிழகம் உரோமப் பேரரசுடன் நிகழ்த்திய கடல் வாணிகத்தால் செழித்த பட்டினங்களில் ஒன்றாக இதனைச் சங்க நூல்கள் குறிப்பிடாமல் இருப்பது வியப்பிற்குரியது ஆகும். ஆயினும், முதல் நூற்றாண்டைச் சார்ந்த யவன நூலான பெரிப்ளூசு இதைப் பொதுகை (Poduke) எனக் குறிப்பிடுகின்றது.

1945-46 ஆண்டுகளில் இவ்விடம் அகழ்ந்தெடுக்கப் பட்டது. யவனர்கள் வாழ்ந்த 'யவனச் சேரி' ஒன்று தோண்டி எடுக்கப்பட்டது. அது கி. பி. 50 முதல் கி. பி. 200 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தன வாக ஆராய்ச்சியாளர் கணக்கிட்டுள்ளனர். செங்கற் களால் கட்டப்பட்ட பண்டகசாலைகள், சாயச் சாலைகள் ஆகியவற்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. கண்ணாடி, பளிங்கு, சூது பவழம் (Carnelian) முதலியவைகளில் கடைந்த மணிகள், உருவப் படங்கள் செதுக்கிய பதக்கங் களும், பொன்னாலான மணிகள் முதலியன கிடைத்துள் ளன. அவையாவும் மூற்றுப் பெற்றதும் பெருததுமாகக் காணப்படுகின்றமையால், யவனத்து மணிவினைஞர்களும், பொற் கொல்லர்களும் இங்குத் தொழில் நடத்தி இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

சாயக் கிடங்குகள் இங்குக் காணப்படுகின்றமையால், இந்தியாவிலிருந்து உரோமானியர் பெரிதும் விரும்பி வாங்கிய மெல்லிய 'மசுலின்' இங்கேயே சாயம் ஏற்றப்பட் டனவோ என்று ஆராய்ச்சியாளர் ஐயுறுகின்றனர். மற்றும் கண்ட பல தடையங்களினால் மேனாட்டு மண் பாண்டங்கள் பல இங்குக் கொண்டுவரப்பட்டுப் பயன்படுத் தப்பட்டமையும், அவை போன்று இங்கு வனையப்பட்டமை யும் புலனாகின்றன. இங்குக் கிடைத்துள்ள மண்பாண் டங்களுள், இத்தாலி நாட்டின் புகழ்மிக்க அரிச்சோ

(Arezzo) நகரத்துக் குயவர்கள், தாங்கள் செய்த மண் பாண்டங்களுள், தங்கள் முத்திரைகளைப் பொறித்து விற்ற உயர்ந்த வகை அரிட்டைன் (Arretine) மண்பாண்டங்களின் சிதைவுகள் மிகச் சிறப்பு வாய்ந்தன. இப்பழம் பொருள் சின்னத்தின் காலத்தை ஆராய்ந்து அறிய அவை பேருதவியாக இருந்தன.

யவனர்கள் தமிழரிடம் கொண்ட பொருள்களுக்கு விலையாகப் பொன்னையும், உயர்ந்த மது வகைகளையும் கொண்டு வந்து கொடுத்தனர் என்று சங்க நூல்கள்[1] கூறுகின்றன. அதனை இங்குக் கிடைத்துள்ள இரட்டைப் பிடி மதுச்சாடிகளின் (Amphorac) சின்னங்களும், கண்ணுடிக் கோப்பைகளும் உண்மையெனச் சாற்றுகின்றன.

இங்குக் கிடைத்த அயல் நாட்டுப் பொருள்களோடு நம் நாட்டு கல் வகைகள், சங்கறுத்த வளைகள், அணிகள் முதலிய பல பொருள்கள் கிடைத்துள்ளன. மண் பாண்டங்களின் ஓடுகள் சிலவற்றின்மேல் சொற்கள் சில கீறி எழுதப்பட்டுள்ளன அவை தமிழ்ச் சொற்களாகவும், பிராகிருத மொழிச் சொற்களாகவும் இருக்கின்றன. ஆனால், அவை எழுதப்பட்ட எழுத்து பழந் திராவிட மொழிக்குரிய வட்டெழுத்தின் திரிபாகிய பிராமி எழுத்தைப் போன்று உள்ளமை குறிப்பிடத் தக்கது. இதைப் போன்ற எழுத்துக்கள் தமிழகத்தின் மலைகளிலும், குகைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால், கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகள் முதற்கொண்டு தமிழ் மொழிக்கு என அமைந்த ஓர் எழுத்து வடிவத்தைக் காண முடிகிறது.

அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள தொல் பொருள் சின்னங்கள் தென்னாட்டு மக்கள் நடுநிலக் கடலின் மக்களோடு நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாக உள்ளன; உரோமானியர்களுக்கு முன்பாகவே அவர்களுடைய கப்பல்கள் செங்கடல்வரையும், பாரசீகவளைகுடா வரையும் மிதந்திருக்கின்றன. மேற்காசியா, எகிப்து முதலிய நாட்டுமக்களோடும் அவர்கள் நெருங்கிய வாணிக, நாகரிகப் பண்பாட்டு உறவும் கொண்டிருந்தனர்.

---

1. புறம் 56.

அரிக்கமேட்டில் கிடைத்த அயல்நாட்டுப் பொருள்களைக்கொண்டு, இந்தியநாட்டுத் தொல்பொருள்களுக்குக் கால வரையறை செய்ய முடிகிறது. இதை அளவு கோலாகக் கொண்டு பிற்காலத்தில் செய்யப்படும் தொல்பொருள் ஆராய்ச்சியில் கிடைக்கக்கூடிய பழம்பொருள் சின்னங்களின் காலத்தை அறுதியிட இயலும். இதுவே அரிக்கமேட்டில் நிகழ்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியின் நிகரற்ற சிறப்பியல்பாகும். 'மற்றும் சங்க நூல்களின் வாயிலாகத் துறைமுகங்களையும், அங்கு நடந்த அயல்நாட்டுக் கடல் வாணிகச்சிறப்புக்களையும் பற்றிப் படித்து அறிந்தோமே அன்றி, அவற்றின் சான்றுகளையும் தடையங்களையும், ஐயமறக் கண்டதில்லை. தமிழர் வேண்டிநின்ற இச்சான்றுகளையும், கையாளப்பட்ட பொருள்களையும் ஓரளவு பொதுகைப் பட்டினமே தமிழர்க்கு முதன்முதலாகக் காட்டியுள்ளமை''[1] அரிக்கமேட்டு ஆராய்ச்சியின் அரிய பயனாகும்.

நமது நாடு விடுதலைபெற்றபின்பு, தென் இந்தியத் தொல்பொருள் சின்னங்களை ஆராய்வதில், இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் மிக்க ஆர்வம் கொண்டுள்ளனர் என்று கூறலாம். தமிழகத்தில் பல புதிய சின்னங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூர், அமிர்த மங்கலம், குன்றத்தூர் ஆகிய ஊர்களிலும், தென் ஆர்க்காட்டில் செங்கமேட்டிலும் பெருங்கற்படை பல பழம் பொருள் சின்னங்கள் அகழ்ந்து ஆராயப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் கி. மு. 1000 முதல் கி. மு. 200 வரையுள்ள காலத்தைச் சார்ந்தனவாகும். ஒரோவொன்று கி. பி. இரண்டாம் நூற்றாண்டு அளவினதாக ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகின்றது.

பிரமகிரி :

மைசூர் மாநிலத்தில், 1947 ஆம் ஆண்டு பிரமகிரியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருள்களால் தென்னிந்தியாவின் வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட நாகரிகத்தைப் பற்றி ஓரளவு நன்கு அறிய முடிகிறது. அப்பழம்பொருள்

1. Sir Mortimer wheeler : Rome Beyond her Imperial Frontiers PP 124-5.

சின்னங்களைக் கொண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் படிப்படியாக வளர்ச்சியுற்ற மூவகை நாகரிக நிலையைத் திட்டப்படுத்தி உள்ளனர். முதல் தடையத்தில் கற் கோடரி, செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்ட பொருள்களைக்கொண்டுள்ள நாகரிக நிலையைக் காண் கிறோம். இதற்கடுத்த தடையத்தில் தென் இந்தியாவின் பல பகுதிகளில் காணப்படும் புதுக்கற்காலச் சின்னங் களைப்போன்ற பொருள்களையும், மேல் தடையத்தில் கி. பி. மூன்றாம் நூற்றாண்டைச்சார்ந்த சிவப்பு மண் பாண்டங்களையும் கண்டெடுத்துள்ளனர். மண்பாண் டங்கள் ஆந்திரமக்களின் நாகரிகச் சிறப்பினைப் புலப் படுத்துவதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இத் தொல்பொருள் சின்னத்தைக் கி. மு. ஏழாம் நூற்றாண் டிற்குப் பிற்பட்டதாக எய்மெண்டார்ப் மதிப்பிட் டுள்ளார்.

நடுநிலக்கடல் பகுதியில் கிடைத்துள்ள 'பெருங் கற்படை சமாதிகளின் காலம் கி. மு. 2500 முதல் கி. மு. 1500 வரை என வரையரை செய்துள்ளனர். தமிழகத்தின் பெருங்கற்படை சமாதிகளில் இரும்பு காணப்படுவதைத் தவிர மற்றெல்லா வகையிலும் அவற்றை ஒத்துள்ளனவாம். ஆகவே, தமிழகத்தின் பெருங்கற் சமாதிகள் காலத்தால் சிலநூற்றாண்டுகள் பிற்பட்டதாகலாம் என்பர் சிலர். தமிழகத்தில் இரும்பு மூவாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே பயன் படுத்தப்பட்டிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சான்றுதந்து நிறுவியுள்ளனர். இதனை அளவுகோலாகக் கொள்ளுவோமானால், தமிழகத்தின் பெருங்கல் சமாதிகள் கி. மு. ஆயிரம் அளவினதாக இருந்திருக்கலாம் என்று கூறுவது மிகையாகாது.

———

5

தமிழரின் தாயகம்

" எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே. "

—பாரதியார்.

பழங்குடி மக்கள் :

தமிழகத்தில் கற்காலம் முதற்கொண்டு இன்றுவரை வாழ்ந்துவரும் மக்கள் இனத்தை வரையறை செய்து கூறுவது எளிய செயலன்று. இத்தகைய சிக்கல் எல்லா நாடுகளிலும் உள்ளன என்றாலும், இந்திய நாட்டில் அது பெரும் சிக்கலாக இருந்து வருகிறது. எத்துணைக் கருத்துடன் ஆராய்ந்தாலும் நாம் செய்யக் கூடிய முடிவு நிலையானது என்று அறுதியிட்டுக் கூற இயலாது. ஆகவே, அவற்றைத் தற்காலிகமாகக் கொள்ளுதலே சிறப்புடைத்து. தமிழகத்தில் வாழும் மக்கள் தொகையில் பல இன மக்களின் கலப்பு காணப்படுவதாக இந்திய இன மரபு நூல் (Ethnology) வல்லுநரான டாக்டர் B. S. குகா

கருதுகின்றார்.[1] அவற்றுள் குறிப்பிடத் தக்கன மூன்று பழங்குடி மரபுகளாகும்.

1. நீக்ரோ இனம்: (Negritoes)

குட்டையான உருவமும் அடர்த்தியான தலைமயிரும் கரிய நிறமும், தட்டை மூக்கும் உடைய மக்கள் பலர் பழங் கற்காலத் தமிழகத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற னர். அவர்கள் நீக்கிரோ இனத்தின் கால்வழியினர் என்பது மக்களின் மாபு நூலாரின் முடிபாகும். அவர்களு டைய இனத்தைச் சார்ந்தவர்கள் வேணாட்டில் வாழும் இருளர், குறும்பர், அந்தமானின் பழங்குடி மக்கள் முதலி யோராவர். அவர்கள் இன்றுவரை சிறிதளவும் நாகரிகம் அடைந்தவர்களாகத் தெரியவில்லை.

தென் இந்தியாவிற்கு நீக்கிரோக்கள் எவ்வாறு, எப் பொழுது வந்தனர் என்பது பெரும் புதிராக இருக்கிறது. தொல் பழங் காலத்தில் தென் இந்தியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மலேயா ஆகிய நாடுகளை இணைத்திருந்த 'லெமூரியா' என்ற பெருநிலப்பரப்புக் கடல் கொள்ளப்பட்ட பொழுது, இம்மக்களினம் சிதறுண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. பழங் கற்காலத்தில் இந்தியாவி லிருந்தே நீக்கிரோக்களும், நீக்கிரிட்டோக்களும் வெளி நாடுகளுக்குச் சென்று குடியேறினர் என்று சில ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர்.[2] தென் இந்தியாவைப் பொறுத்த வரையில் நீக்கிரோ இன மக்களின் நாகரிகப் பண்பாட்டின் கூறுகளைக் காண முடியவில்லை.

2. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள்: (Proto-Austroloids)

இன்றைய இந்தியாவில் காணப்படும் பழங்குடி மக்க ளில் பெரும்பாலோர் இவ்வினத்தைச் சேர்ந்தவர்களாவர். எனினும், அவர்கள் திராவிடர்களோடும் ஆரியர்களோடும் கலப்புற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர். ஒரள விற்கு மங்கோலியக் கலப்பு உடையவர்கள் என்பர். இவர்

1. Dr. B. S. Guha: Racial Elements in the Population —P. 26.
2. William Howells: Mankind So Far, PP, 43-48.

கள் புதுக் கற்காலத்தில் இந்தியாவினுள் நுழைந்ததாக ஒரு சாரார் கூறுகின்றனர். வேறு சில அறிஞர்கள் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் புதுக் கற்காலத்தில் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குச் சென்று குடியேறினர் என்று கருதுகின்றனர்.

மலையாள நாட்டில் வாழும் பணியர்கள், ஆனைமலையில் வாழும் பழங்குடி மக்கள், சந்தலர் முதலியோர் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்தவராவர். இவர்கள் கோலாரிய இனத்தின் நாகரிகமற்ற ஒரு கூட்டத்தாரின் வழி வந்தோர் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். தக்கணத்தின் வடகிழக்குப் பகுதிகளில் முண்டா மொழி பேசும் பழங்குடி மக்கள் பலர் வாழ்கின்றனர். அசாமிலுள்ள காசிகளின் பண்பாட்டில் சில, மலையாளத்தில் உள்ள கோலாரியர்களின் பண்பாட்டை ஒரு வகையில் ஒத்திருக்கின்றன. மலையாளத்தில் உள்ள பிணக்குழிகளின் கட்டமைப்பு அசாமிலுள்ளவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இந்த ஒற்றுமை எவ்வாறு ஏற்பட்டிருக்கலாம் என்பது குறித்து முடிவாக ஒன்றும் கூறுவதற்கில்லை.

தென் இந்தியாவில் வாழும் பழங்குடி மக்களின் சில பழக்க வழக்கங்களிலிருந்தும், ஆஸ்திரேலியப் பழங்குடி மொழிகள் தென் இந்தியாவில் வழங்கி வருவதில் இருந்தும், பசிபிக் பெருங்கடலில் அருகில் இருந்து பொலினீசியர் என்ற கூட்டத்தார் பண்டைக் காலத்தில் தென் இந்தியாவில் வந்து குடியேறி இருக்கலாம் என்று ஐராவதி கார்வே அம்மையார் கருதுகின்றார். வருங்காலத்தில் தொடர்ந்து செய்யப்படும் ஆராய்ச்சியால்தான் இதன் உண்மை நன்கு தெளிவுற வேண்டும்.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் உழவுத் தொழிலை நன்கு அறிந்திருந்தனர். தென்னை, வாழை, வெற்றிலை, இஞ்சி, கத்தரி, பூசணி போன்ற மரங்களையும், செடிகளையும், கொடிகளையும் பயிரிட்டனர். தன்னுரிமை உடையோராய்ச் சிற்றூர்களில் வாழ்ந்து வந்தனர். சிற்றூர்க் குடிகள் அனைவரும் ஒக்க அமர்ந்து உண்பதும், ஒருங்கே வேட்டையாடுவதும் வழக்கமாயிருந்தது. முதன்

முதலில் யானைகளைப் பிடித்து அவற்றைப் பழக்கித் தங்களுக்குப் பல்லாற்றானும் உதவி புரிவும் விலங்காக்கிக் கொண்டனர். கோழியை வளர்த்து வந்தனர். இருபது இருபதாக எண்ணும் முறையைக் கற்றிருந்தனர். இன்றைய இந்து வானநூல் சந்திரனை அடிப்படையாக வைத்துக் காலத்தைக் கணக்கிடும் வழக்கம் இப்பழங்குடி மக்களிடம் இருந்து வந்ததேயாகும்.

இறந்து போன முன்னோர்களை வழிபடுவதே அவர்கள் கடவுள் நெறியாக இருந்தது. பேய், பிசாசுகள் விலங்குகள் ஆகியவற்றிற்குப் பலியும் இட்டனர். அவர்களுடைய பழக்க வழக்கங்களைத் திராவிடர்களும் மேற்கொண்டதோடு, பிற்காலத்தில் அவற்றை ஆரியர்களிடம் பரப்பினர். யானை முகத்தை உடைய பிள்ளையாரும், வானரத் தெய்வமாகிய அனுமானும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் இனச் சின்னங்களில் இருந்து தோன்றியிருக்கலாம்.

3. திராவிடர் :

தமிழகத்தின் பெருங்குடிமக்கள் திராவிடர்கள். இந்தியாவின் பழங் குடிகள் திராவிடர்கள். அவர்கள் புதுக் கற்காலந் தொட்டு இங்கு வாழ்ந்து வருவதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆயினும், திராவிடர்கள் இந்நாட்டின் பழம்பெருங் குடிமக்கள் என்பதைத் தொல் பொருள் ஆராய்ச்சியாளரும் மக்களின மரபு நூலாரும் சான்றுகள் பல தந்து நிறுவியுள்ளனர்.

தமிழர் யார் ?

" தமிழர் ஒரு தனி இனத்தவர், பிற இனத்தவருள் ஓர் உட்பிரிவினர் அல்லர் என்பது பல்லாண்டுகளாகத் தொடர்ந்து செய்த ஆராய்ச்சியின் முடிபாகும். 'தஸ்யுக்கள்' என்ற கீழ்மக்கள் என்றும், சுமேரியர் இனத்தைச் சார்ந்தவர் என்றும், பிராகுவி மொழி பேசும் இனத்தைச் சேர்ந்தவர் என்றும் தமிழர் வழங்கப் பெற்ற காலம் மலையேறிவிட்டது. டாக்டர் ஜி.யு. போப், டாக்டர் கால்டுவெல், ரேகோசின், சர் ஜான் மார்ஷல், டாக்டர் எச். ஆர். ஹால் போன்ற வெள்ளையர்கள் காட்டிய வழி பற்றிச் சென்று ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடிவே தமிழர் ஒரு தனி இனத்

தவர் என்றும், தனிப்பட்ட பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் உடையவர் என்றும் துணிந்து கூறுவ தற்கு இடமளித்தது'' என்பர் டாக்டர் மோ. அ. துரை அரங்கனர்.[1]

ஒரு மொழியைப் பேசுகின்ற காரணத்தால், அம் மொழியைப் பேசுகின்ற மக்கள் எல்லாரையும் ஒரு தனி இனமாகக் கருத இயலாது. டாக்டர் போப், டாக்டர் கால்டுவெல், டாக்டர் கமல் சொல்பில் முதலிய மேல் நாட் டார் தமிழைக் கற்று, தமிழிற்குப் பெருந்தொண்டு ஆற்றி னர்; இன்றும் தொண்டு ஆற்றி வருகின்றனர். இவர்கள் தமிழ்த்தொண்டு புரிந்ததனாலேயே. அவர்களைத் தமிழர் என்றோ யாரும் கூறுவதில்லை. எனவே, ஓரின மக்களை வரையறுப்பதற்கு மொழி முதன்மையான காரணமாகக் கருதப்படவில்லை; அதை ஒரு துணைக் காரணம் என்றே கூறலாம். மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் மக்கள் கூட் டத்தினைச் சில இனத்தினராய்ப் பிரித்ததற்குச் சில அடை யாளங்களைக் கொண்ட திட்டம் ஒன்றை அளவு கோலாகக் கொண்டுள்ளனர். உடலின் நிறம், கண்களின் அமைப்பும் அதன் நிறமும், தலையின் அமைப்பு, மூக்கின் அமைப்பு முதலியனவற்றை அடையாளங்களாகக் கொண்டுள்ளனர். இவ்வடையாளங்களில் பெரும்பாலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டே இனப்பாகுபாடு செய்துள்ளனர். இவ்வாறு இனப்பாகுபாடுகளை ஆராயும் நூலிற்கு 'மக்கள் இனமரபு நூல்' (Ethnology) என்னும் பெயரிட்டுள்ளனர்.

மேற்கண்ட இனமரபு அடிப்படையில் வெவ்வேறு குழுவினராக முடிவு செய்யப்பட்ட மக்கள் பிரிவினர், தொன்று தொட்டுத் தமக்குள்ளே வழங்கி வந்த மொழி களின் அமைப்பைக் கொண்டு, அம்மொழிகளையும் பல இனமொழிகளாக வகுத்துக் கூறுவர். இவ்வடிப்படையில் தென்னாட்டில் தொல்பழங்கால முதல் வழங்கி வரும் மொழிகளுக்குள்ள தொடர்பினையும் அமைப்பினையும் கொண்டு ஆராய்ந்த அறிஞர்கள், தமிழர்களும் அவர்

1. Journal Oriental Research. Year 1952 pp. 10–25.

களோடு இனமான திராவிட மக்களும், "பெரும்பாலும் குள்ளமானி வடிவினர் என்றும், கரிய நிறத்தினர் என்றும், தழைத்த கூந்தலும் அதில் ஒரோவொருகால் சுருண்ட மயிர் வாய்ந்தவர் என்றும், கரிய விழியினரென்றும், நீண்ட மண்டை ஓட்டை உடையவர் என்றும், ஒரோவொருகால் அடியிற் குழிந்த அகன்ற மூக்கினர் என்றும் வரையறுத்துக் கூறலாயினர்." இத்தகைய உறுப்பு அடையாளங்களை உடைய தமிழரும் அவர் இனத்தவருமே இப்போது இலங்கை முதல் இமயம் வரையில் பரவியிருக்கும் மக்கள் கூட்டத்தில் பெரும்பகுதியாகக் காணப்படுவதாக இந்திய மக்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட ரைசிலி (Risley) என்னும் அறிஞர் கூறியுள்ளார்.[1] அவரைப் பின்பற்றி ராப்சன் (Rapson) என்னும் வரலாற்றுப் பேராசிரியர், "இந்திய மக்களின் பண்டைத் தொகுதியில் முதன்மையாய் இருந்தவர்கள் திராவிட இனத்தவரே யாவர்; அவர்கள் பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர், சித்தியர், மங்கோலியர் முதலான பிற இனத்தவருடன் கலப்புற்று மிகவும் வேறுபாடுற்றனர்.

இன்னும், ஆரியர்கள் வடமேற்கே இருந்து வந்து குடியேறிய பொழுது தம்முடன் கொணர்ந்த ஐரோப்பிய ஆரிய மொழிகளை இந்நாட்டில் நுழைத்த பொழுது, வட இந்தியாவின் மேற்கே உள்ள நாடுகளில் உண்மையாகவே வழங்கி வந்தவை திராவிட மொழிகள் என்பதில் ஐயமில்லை. வேத மொழியிலும், அதற்குப் பிற்பட்ட சமஸ்கிருத மொழியிலும், பிராகிருத மொழிகளிலும், இன்னும் முற்பட்ட குடிமக்கள் பேசும் மொழிகளிலும் எல்லாம் தமிழ் மொழிக்கேயுரிய குறியீடுகள் புகுந்திருத்தல் ஆராய்ந்து கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றது.

ஆகவே, இந்திய ஆரியர்கள் வருவதற்கு முன்பே, திராவிட மொழிகளைப் பேசுவோரே தென்னிந்திய வட இந்திய நாடுகளில் முதன்மையாக நிறைந்திருந்தனர் என்று கருதுவதற்குரிய சிறந்த சான்றுகள் இருக்கின்றன"

---

1 Risley: People of India, P. 48.

என்று தெளிவாக்கியுள்ளார்.[1] இதனால் ஆரியர் இவ்விந்திய நாட்டின் வடமேற்கே புகுந்து குடியேறுவதற்கு முன்பே, இவ்விந்திய நாடு முழுவதும் பரவியிருந்தவர்கள் தமிழ்மக்களும், அவர்க்கு இனமான திராவிட மக்களுமே ஆவர் என்பது புலனாகின்றது.

மங்கோலியரா?

திராவிடர்களின் தோற்றத்தைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள், முதன் முதல் தமிழ்மொழி பேசும் மக்கள் எந்நாட்டில் தோன்றினர் என்பது குறித்துப் பல திறப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். தமிழர் வரலாற்றை முதன்முதல் முறையாக ஆங்கிலத்தில் எழுதிய திரு. வ. கனகசபைபிள்ளை, தமிழர் (திராவிடர்) திபெத்திலிருந்து தென்னிந்தியாவில் குடியேறிய மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் சேர சோழ பாண்டியரின் தோற்றத்தைப்பற்றிய கதைகளை அறவே மறுத்துள்ளார். தென்னாட்டின் பழங்குடி மக்களான வில்லவர், மீனவர் முதலியவர்களை நடு

---

1. "This was assumed by Risley to be 'the original type of the population of India, now modified to a varying extent by the admixture of Aryan, Scythian and Mongolian elements.'

At the same time there can be little doubt that Dravidian languages were actually flourishing in the Western regions of Northern India at the period when languages of the Indo-European type were introduced by the Aryan invasions from the north-west. Dravidian characteristics have been traced alike in Vedic and Classical Sanskrit, in the Prakrit or early popular dialects, and in the modern Vernaculars derived from them.

There is good ground, then, for supposing that before the coming of the Indo-Aryans, speakers of the Dravidian languages predominated both in Northern and in Southern India."

Prof. E. J. Rapson: Cambridge History of India, Vol. I Ancient India—pp. 41-44.

ஆசியாவிலிருந்து வந்த நாகர்கள் என்னும் கூட்டத்தார் வென்று அவர்களைக் காடுகளுக்கும் மலைகளுக்கும் துரத்தினர் என்றும் அதன்பிறகு திபெத்திலிருந்து வந்த மங்கோலிய இனத்தைச் சேர்ந்த தமிழர் நாகர்களை வென்று அடக்கினர் என்றும் அறிவித்துள்ளார். தமிழர் நான்கு பிரிவாகத் தென்னாட்டில் நுழைந்தனராம். மாறர் என்ற கூட்டத்தினர் முதன் முதல் தமிழகத்திற்கு வந்து பாண்டிய நாட்டில் தங்கினர் என்றும், அதன்பிறகு வந்த திரையர் என்பார் சோழ நாட்டில் வாழ வசதி செய்து கொண்டனர் என்றும், மூன்றுவதாக வந்த வானவர் என்ற குழுவினர் சேரநாட்டைத் தமதாக்கிக் கொண்டனர் என்றும், இம்மூவருக்கும் பின்வந்த கோசர் என்னும் கூட்டத்தார் கொங்கு நாட்டைத் தங்களாட்சிக்குட் படுத்திக் கொண்டனர் என்றும், இந்நால்வகைப் பிரிவினரும் ஒரேகாலத்தில் வந்தவரல்லர் என்றும், இவர்கள் வருகைக்கிடையே நீண்டகால இடையீடு இருந்திருக்கவேண்டும் என்றும் விளக்கியுள்ளார். இவ்வாறு தென்னாட்டில் நுழைந்த மங்கோலிய இனத்தார் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தமையால், தங்களால் வெல்லப்பட்ட பழங்குடி மக்கள் பேசிய மொழியை ஏற்றுக்கொண்டு, தங்களுக்கு ஏற்ற முறையில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்துகொண்டனராம். சங்க இலக்கியத்தில் காணப்படும் முரட்டுத்தனமான மறவர் எயினர் முதலிய பழங்குடி மக்கள், தமிழர்களால் (மங்கோலிய இனத்தவரால்) வென்றடக்கப்பெற்ற நாகர் இனத்தைச் சார்ந்தவர்களாவார்கள் என்பது திரு. வ. கனகசபைபிள்ளை அவர்களின் கருத்தாகும்.[1]

தமிழர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்து மக்களின மரபு நூலிற்கு முரணுகும். திராவிடருடைய உடற்கூறு மங்கோலியருடைய உடற் கூற்றோடு முற்றிலும் மாறுபட்டுள்ளமை இங்குச் சிந்தித்தற்குரியது. இவை யல்லாமல் சமூகப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு நெறிகள் யாவும் இவ்விரு மக்களுக்கிடையே தொடர்பற்ற நிலையில் உள்ளதைக் கூர்ந்து நோக்குவார்

1. V. Kanakasabhai: The Tamils 1800 years Ago. PP. 74-75.

கண்டறியலாம். இக்காரணங்களால், திராவிடர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவரல்லர் என்று அறிஞர் கால்டுவெல் மறுத்துள்ளார். மேலும், ''உடலமைப்பும், சமூகப் பழக்க வழக்கங்களும், அஸ்ஸாமிலுள்ள காசிகளுக்கும் கேரளத்தில் உள்ள ஒரு சார் மக்களுக்கும் ஒத்திருத்தலையே, அன்னுர் வற்புறுத்துவர். ஆனால் இந்த ஒற்றுமைகள் எல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்றுமின்றித் தற்செயலாய் ஏற்பட்டவை என்றுரைப்பாரும் உளர். கட்டிடக் கலையில் தென்னிந்தியப் பண்பாடும், காசிகளுடைய பண்பாடும் பல திறத்தில் வேற்றுமையுடையன. வட கிழக்கு இந்தியாவில் இப்பண்பாடுகள் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. தென் இந்தியாவிலோ இவை பொதுவாக இரும்புக் காலத்தைச் சார்ந்தவை. அன்றியும் இவ்விரு நாடுகளில் காணப்படும் பிரேதக் குழி கற்கட்டுகளின் அமைப்பிலும் சிற்ப முறையிலும் வேற்றுமையுள்ளன. ஆனால், மத்திய தரை நாட்டிலுள்ள பிரேதக் குழிக் கற்கட்டுகளின் அமைப்பு, தென் இந்தியாவிலுள்ள அமைப்புப் போலவே காணப்படுகின்றது. இவ்விரு நாட்டுக் கட்டுகளிலும், கட்டிடவிளிம்பிலுள்ள தொளைகள் காரணம் யாதுமின்றி ஒற்றுமை உடையனவாய் இரா. ஆகவே, மங்கோலியாவிலிருந்து திராவிடர் வந்தனரென்ற கொள்கை ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று[1]'' என்று பேராசிரியர் டாக்டர் கே. கனகசபாபதிபிள்ளை அவர்கள், திராவிடருக்கும் மங்கோலியருக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

தமிழகத்தின் தொல்குடி மக்களா?

வரலாற்றுசிரியர்கள் சிலர் திராவிடர் அயல் நாட்டிலிருந்து வந்தவர் அல்லர், இந்நாட்டு மண்ணில் தோன்றிய முதல் பழங்குடி மக்களின் வழித்தோன்றல் களே என்பதனைச் சான்றுகள் பல தந்து நிறுவியுள்ளனர். பேராசிரியர் பி. தி. சீனிவாச ஐயங்கார். மனிதன் தென்னிந்தியாவின் நடுப்பகுதியில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். புதுக் கற்கால மக்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த

1. தென்னிந்திய வரலாறு. பக். 24-25.

மொழி ஒன்றை (பெரும்பாலும் தமிழை) யே பேசியிருக்க வேண்டும் என்று மொழிந்துள்ளார்.[1]

திரு. சு. வே. வெங்கிடேஸ்வரன் என்ற அறிஞர் திராவிடர் இந்தியாவிற்குள் வெளி நாட்டிலிருந்து வந்து நுழைந்தவர்கள் என்பது உண்மை அறியா மாந்தரின் புனைந்துரையே என்பர். திராவிட நாகரிகப் பண்பாடு இந்நாட்டு மண்ணிலேயே முளைத்து எழுந்து, தழைத்து வளர்ந்து பல விழுதுகள் விட்டு முதிர்ந்த பேராலமர மென்பதைக் 'கடந்த ஊழிகளில் இந்தியப் பண்பாடு' (Indian Culture Through the Ages) என்னும் நூலில் விளக்கியுள்ளார்.[2]

இவ்விருவர் கருத்தையும் பேராசிரியர், இராமச்சந்திர தீட்சதர் தழுவியதோடு, "நடுநிலக் கடலைச் சூழ்ந்து வாழ்ந்த மக்கள் இனம், இந்திய 'தீவக் குறைவில்' தோன்றியது என்றே தீர்மானிக்கலாம்; இத்தீவக்குறை, தென் இந்தியாவை ஆப்பிரிக்காவோடு இணைத்திருந்ததும் சிந்து-கங்கை ஆறுகளின் பள்ளத்தாக்கு அமையாத காலத்தில், கடலினுள் மூழ்கியதுமான குமரிக் கண்டத்தில் இருந்ததாகும். இம்மா நிலமே திராவிடரின் மூலத் தாயகமாகும். எனவே, திராவிடப் பண்புகள் இந்திய நாகரிகத்தில் மட்டும் காணப்படுவது அல்ல; சிறந்த நாகரிகம் உற்றிருந்த கிரீத், சுமேரியா, பாபிலோனியா, பொலினீசியா ஆகிய நாடுகளிலும், மற்றும் பண்டை உலகின் நாகரிகங்கள் பலவற்றிலும் பெரும்பாலும் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் காணலாம்[3] என்று இயம்பியுள்ளார். பழந்

---

1. P.T.S. Aiyangar: Stone Age in India, Ch. 2.

2. S. V. Venkateswara: Indian Culture Through the Ages, Vol. I. P. 8.

3. "We therefore, conclude that the so called Mediterranean race had its origin in Peninsular India, which was a part of the original Dravidian home, which was in the submerged Continent that connected South India with Africa, when the Indo-Gangetic basin had not probably been formed. So the Dravidian element is not to be found in Indian culture alone, but is largely traceable in Cretan, Aegean,

தமிழ் இலக்கியத்தில் காணப்படும் 'கடல்கோள்' குறிப்புக்கள் யாவும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. முதல், இடைச் சங்கங்கள் இன்றைய தமிழகத்திற்குத் தெற்கே இருந்த ஒரு பெருநிலப்பரப்பில் நிறுவப் பெற்றிருந்தன. பின்பு இடையீடு பெற்ற நெடுங்காலத்திற்கு இடையே கடலின் கொந்தளிப்பால் இப்பெரும் நிலப்பரப்புக் கடலுள் மூழ்கியது என்றும் 'தமிழ்ச் சங்க' மரபு பற்றிய வரலாறு கூறுகின்றது. இக்காலத்திய மண்ணியல் ஆராய்ச்சியாளர், இப்பெரு நிலப்பரப்பினை 'லெமூரியாக்' கண்டம் எனக் குறிப்பிட்டுள்ளனர். பெரும்பாலான மேனாட்டாசிரியர்கள் 'லெமூரியாக்' கண்டத்தைப் பற்றிய கோட்பாடு அறிவியல் அடிப்படையில் அமைந்ததன்று என்று புறக்கணித்து வருவது வருத்தத்திற்குரியதும், உண்மைக்கு முரணானதுமாகும்.

எகிப்திலிருந்து வந்தவர் :

தமிழர்கள் இந்நாட்டின் பழங்குடி மக்கள் என்னும் கொள்கைக்கு நேர்மாறாக, திராவிடர்கள் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர் என்னும் கொள்கை நிலவி வருகின்றது. ஈலியட் ஸ்மித் என்பார் திராவிடரை எகிப்திலிருந்து இந்தியாவிற்கு வந்தவர்கள் என்று கூறிச் சென்றார்; இன்று இக்கருத்தினை நிலைநாட்ட கார்னிலியசு அரும்பாடுபடுகின்றார். திராவிடர்கள் நடு ஆசியாவிலிருந்து வந்த 'சித்தியர்கள்' என்று கால்டுவெல் கருதினர். மற்றும் பல வரலாற்றாசிரியர்கள், திராவிடர்கள் மேற்காசியப் பகுதியில் தோன்றியவர் என்னும் கருத்தினை வலியுறுத்துகின்றனர்; திராவிடர்கள் பலூசிஸ்தானம் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தனர் எனவும் நம்புகின்றனர். இதற்குச் சான்றாகப் பலூசிஸ்தானத்தில் வழங்கும் 'பிராகுவி' மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமையைக் காரணங் காட்டுகின்றனர். கால்டுவெல் இம்மொழிகளுக்கிடையே உள்ள ஒற்று

Semerian, Babylonian, Egyptian, Polynesian and other cultures of the ancient world."

—Prof. V. R. Ramachandra Dikshitar: Origin and Spread of the Tamils, P. 29.

மையைக் கண்டு, பிராகுவி மொழி பேசும் மக்களும் திராவிடர்களே என்று துணிந்தார்; திராவிடர்கள், வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் புகுவதற்கு முன்பு, அவர்கள் பலூசிஸ்தானத்தில் தங்கி யிருந்தமைக்குரிய அறிகுறியே பிராகுவி மொழி பேசும் மக்கள் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

டாக்டர் ஆல் என்ற அறிஞர் சுமேரியருக்கும் திராவிடருக்கும் உள்ள உடற்கூறு ஒற்றுமையைக் கொண்டு, சுமேரியர் என்பார் திராவிட இனத்தைச் சார்ந்தவர் என்றும், அவர்கள் இந்தியாவிலிருந்து பாரசீகத்தின் வழியாக டைக்கிரிஸ், யூப்பிரடிஸ் ஆறுகள் பாயும் சமவெளிக்குச் சென்று குடியேறினர்[1] என்றும் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுக் காலத்தின் நெடுக நாம் இந்தியாவிற்கு வெளியே இருந்து அயலார் படையெடுத்து வந்ததைக் காணுகின்றோமே ஒழிய, இந்தியாவில் உள்ள மக்கள் வடமேற்குக் கணவாய் வழியாக மேலை நாடுகளுக்குச் சென்று குடியேறினர் என்பதற்குச் சிறிதும் ஆதாரமில்லை. எனவே, சுமேரியர் இந்தியாவிலிருந்து மேற்கு நாடுகளில் சென்று குடியேறினர் என்பது பொருத்த மற்றதும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முற்றிலும் மாறுனதுமாகும் என்று சிலர் இக்கருத்தினை மறுப்பர். ஆயினும், இக்கொள்கை திராவிடர்கள் இந்திய நாட்டின் ஆதி மக்கள் என்னும் கருத்தினை அரண் செய்வதாக உள்ளமையால், வருங்கால ஆராய்ச்சியாளருக்கு ஊக்கமும் ஆர்வமும் ஊட்டுவதாகும்.

நடுநிலக் கடல் இனத்தினர்:

இந்தியாவிற்கும் பாபிலோனியாவிற்கும் இடையே பண்டைக் காலத்தில் நிகழ்ந்த வாணிகத்தைப் பற்றி எழுதிய கென்னடி (Kennedy) என்பார் திராவிடருக்கும் நடுநிலக் கடல் மக்கள் இனத்தார்க்கும் இடையே உள்ள ஒற்றுமையினையும் தொடர்பினையும் எடுத்துக் காட்டியுள்ளார். டாக்டர் சிலேட்டர், 'இந்திய நாகரிகத்தில்

1. Dr. Hall: Ancient History of the Near East, pp. 172-74.

திராவிடப் பண்பு' என்னும் நூலில், 'திராவிட மக்களிடையே உள்ள தலைமை இனக்கூறு, நடுநிலக் கடல் இனத்தின் ஒரு கிளையேயாகும்' என்பதனைப் பல வகையாக விளக்கியுள்ளார்.[1]

எய்மெண்டார்ப் கருத்து :

வியன்னுவில் 1952 ஆம் ஆண்டு உலக நாடுகளின் மக்களின வரலாற்று நூல் (Anthropology), இனமரபு நூல் (Ethnology), ஆராய்ச்சிக் கழகத்தின் நான்காம் மாநாட்டில் திராவிடர் தோற்றம் பற்றி ஆராயப்பட்டது. லண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் பியூரர் எய்மெண்டார்ப் (Furer Haimendorf) "திராவிடரின் தோற்றம் பற்றிய புதுக் கருத்து"ப் (New Aspects of Dravidian Problem) என்னும் பொருள் குறித்து தம் ஆராய்ச்சியின் முடிவினை எடுத்தியம்பியுள்ளார்.

"அண்மைக் காலத்தில் மைசூர் மாநிலத்திலுள்ள பிரமகிரி என்னும் இடத்தில் செய்யப் பெற்ற தொல் பொருள் ஆராய்ச்சியின் விளைவாகத் தென் இந்தியாவில் புதுக்கற்காலத்தில் இருந்து இயல்பாகவே இரும்புக்கால நாகரிகம் தோன்றவில்லை; அத்தகைய இரும்புக் கால நாகரிகத்தைத் தமிழகத்தில் வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்து புகுத்தியவர்கள் திராவிடர்களே யாவர். பிரமகிரியில் காணப்படும் இரும்புக்கால நாகரிகம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் கொள்ள இயலாத காரணத்தினால், சற்றேறக் குறைய கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு அளவில், நடு ஈரானிலிருந்து திராவிடர்கள் தென்னிந்தியாவிற்கு இரும்புக்கால நாகரிகத்தைக் கொண்டு வந்து புகுத்தியிருக்க வேண்டும். அவர்கள் ஈரானிலிருந்து பலூசிஸ்தானத்தின் மூலம் நிலவழியாகவே இந்தியாவிற்குள் நுழைந்து இருக்க வேண்டும். மைசூர் மேட்டு நிலத்தை அடையும் வரை அவர்கள் மேலைக் கடற்கரையோரமாகவே தென்னாட்டிற்குள் சென்றிருக்க வேண்டும்" என்பது பியூரர் எய்மண்டார்ப் தந்துள்ள விளக்கமாகும். இக்கொள்கை திராவிடர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு அளவில் தென்னிந்தியாவில்

1. Dr. G. Slater: Dravidian Elements in Indian Culture, P. 8.

குடியேறியவர் என்னும் கருத்தை வலியுறுத்துவது ஆகும்.[1]

பிரமகிரியில் கிடைத்துள்ள பழம்பொருட் சின்னங்களைச், சர் மார்ட்டிமர் வீலர் என்னும் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டர் ஜெனரல் நேரில் ஆராய்ந்து பார்த்து, அப்பழம்பொருட் சின்னங்கள் யாவும் கி. மு. 200 அளவில் தென்இந்திய மக்கள் பயன் படுத்தியவை என்று மொழிந்துள்ளார். எனவே, பிரமகிரி பழம்பொருட் சின்னங்களைப்பற்றி இவ்விரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் மாறு பட்டனவாக உள்ளன. எனினும், நாம் பிரமகிரி சின்னத் தின் காலத்தை கி. மு. 500க்கும், கி. மு. இருநூற்றுக்கும் இடைப்பட்டதாகக் கொள்ளலாம். இக்காலத்தில்தான், தென்னிந்தியாவிற்குள் திராவிடர்கள் நுழைந்தனர் என் னும் கருத்து, கிடைத்துள்ள வேறு பல சான்றுகளுக்கு முரணுகத் தோன்றுகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியில் கிடைத்துள்ள ஒரு சில பொருள்களை மட்டும் சான்றுகக் கொண்டு விரைந்து ஒரு முடிவிற்கு வருவது பெரிதும் ஏற்கத் தக்கதன்று. "தோள் கண்டார் தோளே கண் டார்" என்பது போன்று ஓரிரு சான்றுகளைக் கொண்டு முடிவு செய்வதும் சிறப்புடையது அன்று. திராவிடர் தோற்றம் பற்றிய ஆராய்ச்சிக்குத் தொடர்பான பிற கருத் துக்களையும் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடி விற்கு வருதலே சிறந்தது. கி. மு. 500 அளவில் திராவி டர் இந்தியாவிற்கு வந்தனர் என்றால், இன்று வரை இருந்து வரும் வரலாற்று முறையை முதலில் மாற்ற வேண்டும். ஆரியர் இந்தியாவிற்கு வந்தது கி. மு. 1500 அளவில் என்பதைப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் ஒரு முகமாக ஏற்றுக் கொண்டு உள்ளனர். ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பொழுது, இந்நாட்டில் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள், ஆத்திரேலிய பழங்குடி மக்கள், மூண்டர்கள் முதலியோராவர். கி மு. 500 அளவில் திரா விடர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்றால், ஆரியருக்குப்

1. 'New Aspects of the Dravidian Problem' by Furer Haimendorf. Article republished in Tamil Culture, Vol. II, No. 2, pp. 127-135.

பின்பு நெடுங்காலம் கழித்துத் திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்ததாகப் பொருள்படுகிறது. ஆரியருக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகம் என்பது யாவரும் அறிந்த உண்மை. அந்நாகரிகத்தின் மலர்ச்சிக்குக் காரணமாக இருந்த மக்கள் திராவிடர்களே என்பது சர்ஜான் மார்ஷல் முதலானோர் முடிவாகும். ஆகவே, திராவிடர்கள் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு அளவில் தென் இந்தியாவிற்குள் நுழைந்தனர் என்னும் கருத்து வரலாற்று வழு (Anachronism) உடையதாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களுள் தொன்மையானது தொல்காப்பியம் என்னும் ஒப்பற்ற பெருநூலாகும். அவ்விலக்கண நூல் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே தமிழில் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து இருக்க வேண்டும். ஏனெனில், இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் இயம்ப வேண்டும் என்பது பண்டை உலகின் அறிஞர்கள் கண்ட முடிவு. தொல் காப்பியம் கூறும் இலக்கணம் குழவிப் பருவ நிலையில் உள்ள குழந்தை மொழிக்கு அன்று; முதிர்ந்த நிலையில் இலக்கியம் வளம்பெற்ற தமிழ்மொழிக்கே என்பதைத் தொல்காப்பியத்தை மேற்போக்காகப் படிக்கின்றவர்கூட எளிதில் அறியலாம். ஆகையினால், ஒரு மொழி தோன்றி வளர்ந்து, விரிந்து சிறந்து விளங்க எத்துணைக் காலம் ஆகியிருக்க வேண்டும் என்பதை இங்கு நினைவிலிருத்தல் வேண்டும். குறைந்தது ஓயிரம் ஆண்டுகளாகிலும் தொல் காப்பியத்திற்கு முன்பு தமிழ்இலக்கியம் வளர்ச்சியுற் றிருக்க வேண்டும் என்பதை இந்தி மலையாளம் ஆகிய மொழிகளின் வரலாற்றை நோக்குவார்க்குப் புலனாகும். தொல்காப்பியரின் காலம்,பாணினிக்கு முற்பட்டது என்பது யாவருக்கும் உடன்பாடு. பாணினியின் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பது வட மொழி ஆராய்ச்சியாளர்கள் கருத்து. ஆகவே, தொல் காப்பியரின் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பது திண்ணம். திராவிடர் கி. மு. ஐந் தாம் நூற்றாண்டு அளவில் தென் இந்தியாவிற்கு வந்து இருந்தால், 'தமிழ் இலக்கியம் எக்காலத்தில், எந்நாட்டில் தோன்றிற்று?' என்னும் ஐயம் எழுகிறது. இதனால் கருத்

துக் குழப்பம் உண்டாவதோடு, வரலாற்று வரன் முறையினை மாற்ற வேண்டிய நெருக்கீடியும் உண்டாகிறது.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் திராவிடர்கள் தென்னிந்தியாவினுள் இரும்புக்கால நாகரிகத்தைக் கொண்டுவந்து புகுத்தினர் என்பதை ஏற்றுக் கொண்டால், கி. மு மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகன் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் சேர (கேரள) சோழ பாண்டியராகிய மூவேந்தர் ஆட்சி தமிழகத்தில் அல்வாவு விரைவில் தலைதூக்கியிருக்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு என்ன விடை கூறுவது? 'அசோகன் காலத்தில் மூவேந்தர் ஆட்சி இருந்திருக்காது. அசோகன் கல்வெட்டுக்கள் இல்லாத ஒன்றைக் கற்பித்துக் கூறுகின்றன. எனவே, அசோகன் பொய்யை மெய்யென்று தன் கல்வெட்டுக்களில் பொறித்துள்ளான் என்று கூறுவதா?' இதைப்போன்ற பல சிக்கல்கள் உண்டாவது இயல்பு. இச் சிக்கல்களைப் போக்க ஒரே ஒரு வழியைத் தவிர வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை ஆகவே, திராவிடர்கள் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் இந்தியாவிற்குள் நுழைந்தமை உண்மை யன்று என்ற முடிவிற்கு வருவதே மிகவும் பொருத்தமுடையதாகும்.

சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறைத் தலைவராள பேராசிரியர் டாக்டர் டி. வி. மகாலிங்கம் அவர்கள் எய்மண்டார்ப் வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கருத்தினைப்பற்றி 'தென்னிந்தியாவில் தொல்பொருள் ஆராய்ச்சி' என்னும் கட்டுரையில் பின்வருமாறு வரைந்துள்ளார். ''பிரமகிரியில் கண்டெடுக்கப்பெற்ற படிவுப் பொருள்களைக் (Strali fied finds) கொண்டு கிறித்தோபர் ஆயிர் எய்மண்டார்ப் இந்நாகரிகத்தினைப் படைத்த மக்கள் திராவிடர்களாக இருக்கலாம் என்றும், அசோகன் காலத்திற்கு முன்பு கி. மு. 700 முதல் 400 வரை தக்கணத் தினிள்ளும் தென்னிந்தியாவினுள்ளும் அவர்கள் வந்து நுழைந்து குடியேறியவர்களாவர் என்றும் கருதுகின்றார். கிறித்துவ ஊழியின் முதலிரு நூற்றாண்டுகளில் சீரும் சிறப்பும் பெற்று இலக்கியவளத்துடன் திகழ்ந்த தமிழ் மொழி பெருங்கற்படை சமாதி நாகரிக காலத்திய மக்கள் இடையே திருத்தம்பெறுத நாட்டுப்புற (patois) மொழி

யாக வழங்கி இருக்கவேண்டும் என்பது இங்கு நினைவு கூரத்தக்க சிறந்த கருத்தாகும். எனவே, தொல்பழங் காலத் தமிழ்மொழி, 'செந்தமிழ்' மொழியாக வளர்ச்சி யடையச்சில நூற்றாண்டுகளாகிலும் கழிந்திருக்கவேண்டும். இக்காரணத்தில் பெருங்கற்படை சமாதிகளுடைய நாக ரிகத்தின் தொடக்க காலத்தை இன்னும் சிறிது முற்பட்ட காலமாக அதாவது ஏறக்குறைய கி. மு. 1000 என்ற அளவிற்குத் தள்ளமுடியாதா என்பதை முக்கியமாக ஆராயவேண்டியது தகுதியுடையது தாகும்.[1] திராவிடர் இந்தியாவிற்குள் வந்து குடியேறியவர் என்ற கருத்தினைப் போற்றுகின்றவர்கள்கூட அவர்கள் கி. மு. ஆயிரத்திற்கு முன்பே குடிபுகுந்திருக்கவேண்டும் என்று நம்புகின்றனர். ஆகவே புயூரர் எய்மண்டார்ப் கருத்தினை முடிந்த முடிவாகக் கருதாது வருங்காலத்தில் தொல் பொருள் ஆராய்ச்சி தரும் ஒளியைக் கொண்டுதான் இருள் சூழ்ந்த தமிழரின் தாயகத்தைக் கண்டு அறிய வேண்டும். அது வரையில் தமிழரின் தாயகம் பண்டைக்காலத்திய தமிழகமே என்று கொள்ளுவது பொருத்தமுடையதாம்.

இவ்வாறு கருதுவதற்குரிய காரணங்கள்:—

(1) பழந்தமிழ் இலக்கியங்கள் என்று போற்றப்படும் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்கள் ஆகிய முப்பது நூல்களுள், தமிழர் அயல்நாட்டில் இருந்து கடல் வழி

1. "On the evidence of the stratified finds at Brahmagiri, Christop Furer Haimendorf thinks that the authors of this culture were the Dravidians who intruded into the Deccan and South India prior to the days of Asoka, say between 700 and 400 B. C. A significant point to be remembered in this connection is that the Tamil language which developed into literary form in the early centuries of the christian era flourished as patois among the people of the Megolithic culture. Sincc some centuries must have elapsed for proto-Tamil to develope into good Tamil it deserved to be seriously examined if the beginning of the Megalithic culture could not be pushed a little earliar, say to C 1000 B-C.

—J.M.U. Sect, A. Humanities (centuary No. P. 148.

யாகவோ, நிலவழியாகவோ, தமிழகத்தில் வந்து குடியேறியவர் என்பதற்குரிய சான்றுகள் இல்லை. அதற்கு மாறுகத் தமிழகத்திற்குத் தெற்கே பரந்துஇருந்த நிலப் பரப்பினைக் கடல் கொண்டது என்றும், அவ்வாறு கடல் கொண்டபொழுதெல்லாம் அங்குக் குடியிருந்த பண்டைத் தமிழர் வடக்கு நோக்கிக் குடியேறியவண்ணம் வாழ்ந்தனர் என்றும் சங்ககால இலக்கியங்கள் யாவும் குறிப்பிடுகின்றன.

(2) பழந்தமிழ் இலக்கியங்களுள் குளிர்நாட்டுக்குரிய செடி கொடிகள், மரங்கள், விலங்குகள், வேறுபலீ உயிரினங்கள் ஆடை, அணிகள், உணவுப் பொருள்கள்பற்றிய குறிப்புக்களைக் காண முடிய வில்லை. தமிழகத்தில் குடியேறுவதற்குமுன்பு, கோதுமை, பார்லி தமிழரின் உணவுப் பொருள்களாக இருந்திருந்தால் குடிபுகுந்த நாட்டிலும் அவற்றை ஓரளவிற்குப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அவற்றைப்பற்றிய குறிப்பு மேற்கண்ட நூல்களுள் யாண்டும் காணேம். தமிழருடைய உணவுப் பொருளாகப் பண்டைக்காலத்து, செந்நெல், வரகு, கேழ்வரகு, சாமை முதலியன இருந்தன என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம்.

(3) ஒரு மொழியில் உள்ள சொற்களில் மிகப் பழமையானவை—எளிதில்மாறுதவை—வினைச் சொற்கள், திசைப் பெயர்கள் முதலியன. அவற்றுள் திசைபற்றிய பெயர் மிகவும் பழமை வாய்ந்தனவாக இருக்கவேண்டும். ஞாயிறு தோன்றும் திசையை முதலாகக்கொண்டு பல திசைக்கும் அடையாளங் குறித்துப் பெயர்களை வழங்கினர். இவ்வாறு திசைகளுக்குப் பெயரிடுதல் நாகரிகத்தின் அடையாளம் என்பர். தமிழ்மொழியில் திசைக்குரிய பெயராகக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு வழங்குவதோடு, அவ்வத் திசைகளில் இருந்து வீசும் காற்று ஒவ்வொன்றிற்கும் திசையின் அடிப்படையில் பெயரிட்டு வழங்கினர் பண்டைத் தமிழர். கீழ்க்காற்றைக் 'கொண்டல்' என்றும், மேல் காற்றைக் 'கோடை' என்றும், வடக்கிலிருந்து வரும் காற்றை 'வாடை' என்றும், தெற்கில் இருந்து வீசும் காற்றைத் 'தென்றல்' என்றும் காரணப் பெயரால் குறிப்பிட்டனர். இவ்வழக்கினை,

(1) "கொண்டலோடு புகுந்து"—சிலம்பு. 14. கா. 110வரி.

(2) "கோடையொடு புகுந்து கூடல் ஆண்ட • வேனில் வேந்தன்"—சிலம்பு. 14. கா. 123-124 வரி.

(3) "கார் அரசாளன் வாடையொடு வரூஉம்" —சிலம்பு. 14. கா. 93 வரி.

(4) "தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து" சிலம்பு 14. கா. 115வரி.

என்று இளங்கோவடிகள் கூறியுள்ளமையால் அறியலாம்.

கிழக்கு என்பது கதிரவன் தோன்றும் திசைக்கு இடப்பட்ட பெயராகும். கிழக்கு என்னும் சொல் கீழ்+அக்கு என்னும் இரு சொற்களால் ஆகியது. கீழ் என்பதைப் பகுதி என்றும், அக்கு என்பதை விகுதி என்றும் கூறுவர். கீழ் என்னும் சொல்லிற்குப் பள்ளம் என்பது பொருள். பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் வாழ்ந்த நாட்டில் ஞாயிறு தோன்றும் திசை பள்ளமாக இருந்தமையால் அதனைக் கிழக்கு என்று பெயரிட்டு வழங்கினர். மேல் என்னும் அடிச்சொல்—பகுதியடியாகப் பிறந்த மேற்கு என்னும் திசைப்பெயர் (மேல்—மேக்கு—மேற்கு) தமிழர் வாழ்ந்த நிலப்பரப்பில் ஞாயிறு மறையும் திசை கூடாத இருந்தமையால் அதனை 'மேற்கு' என்று காரணப் பெயரிட்டு வழங்கினர். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது, நடுநிலக் கடற் பகுதியில் தமிழர் தோன்றி யிருக்க இயலாது என்பது புலனுகின்றது. எனவே, தமிழர் இட்ட திசைப் பெயர்க்குப் பொருத்தமாக உள்ள நாடு 'வடவேங்கடம், தென் குமரி ஆயிடையுள்ள தமிழ்' நாடே அன்றி வேறு நாடாகாது என்பது நிலவியல் அறிவுடையாரும் நன்கு அறிவர். இதனை வெறுங் கற்பனை யென்று எவரும் எளிதில் ஒதுக்கிவிட இயலாது. டாக்டர் மக்ளீன போன்ற அறிஞர்கள் இக்கருத்தினை ஐம்பதாண்டுகளுக்கு முன்பே குறிப்பாகத் தெரிவித்துள்ளனர்.

இனி, தெற்கு என்னும் திசைப் பெயருக்கு வழங்கப் படும் சிறப்புப் பொருளினைக் காண்பது மேற்கண்ட கருத்தினை அரண் செய்வதாகும். தெற்கு என்னும் சொல் 'தென்' என்னும் பகுதியடியாகப் பிறந்ததாகும். தென் என்னும் சொல்லிற்குத் தமிழ்மொழியில் அழகு, இனிமை,

இசை, கற்பு என்ற பலவகைப்பட்ட பொருள்கள் உள்ளன. நான்கு திசைகளுள் பண்டைத் தமிழர் தென் திசையை அழகிய திசையாக - இனிமை வாய்ந்த திசையாகக் கருதினர். தென் திசையிலிருந்து வீசும் காற்றுதான் தமிழனுடைய உள்ளத்திற்கு இன்பத்தையும், இனிமையையும், புத்துணர்ச்சியையும் ஊட்டும் காற்றாக இருந்து வருவதை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. பிற திசைகளில் இல்லாத ஈடுபாடும், பற்றும், மதிப்பும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நமது முன்னோர் தென் திசையிடத்து மட்டும் கொண்டிருந்ததற்குரிய காரணம் என்ன என்பதை ஆராயின், உண்மை புலனாகும். வடமொழியாளர் தென் திசையை 'அவாக்' என்றும், 'யமதிக்' என்றும் இழித்து உரைத்தனர். 'அவாக்' என்ற சொல்லிற்குத் 'தங்கள் வாக்கு (மொழி) அல்லாத வாக்கு' என்பது பொருள்; வடமொழியாளர் இழித்துரைக்கும் 'யமதிக்' என்பதற்கு 'கூற்றுவன் வாழும் தென் திசை' என்பது பொருள். வடமொழியாளர் இழித்துரைக்கும் திசையைத் தமிழர் சிறந்த திசையாகக் கருதுவதற்கு உரிய காரணந்தான் என்ன? தங்கள் நினைவுக்கு எட்டாத ஒரு காலத்தில் வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளிவீச முடியாத-அறிவியல் ஆராய்ச்சி அறுதியிட்டுக் கூற இயலாத அளவிற்குப் பழமை வாய்ந்த தொல் பழங் காலத்தில் தங்கள் மூதாதையர் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த மாநிலத்தைக் கடல் கொண்டதை நினைவு கூர்ந்து அத்திசையைத் தென்திசை எனச் சிறப்புடையாகக் கருதிப் பெயரிட்டனர் என்று கூறுவது மிகையாகாது.

மேலைநாட்டு அறிஞர்களில் பலர் மக்கள் இனம் தோன்றிய பகுதிகளுள் தென்கிழக்கு ஆசியப் பகுதி ஒன்று என்று கூறியுள்ளனர். அம்மக்கள் தோன்றிய நாடு கடல் கொள்ளப்பட்ட 'குமரிக் கண்டம்' அல்லது 'லெமூரியா' என்பதாகும். இங்குத் தோன்றிய மக்கள், இந்நாடு கடல்வாய்ப்பட்ட பொழுது சிதறுண்டு வேறு பல திசைகளில் சென்று அங்கங்கே தங்கி வாழ்ந்தனர் என்றும், ஆப்பிரிக்காவில் சிதறுண்டு தங்கியவர் ஆப்பிரிக்கர் என்றும், இந்தியாவைச் சேர்ந்தவர் இந்தியர் என்றும், ஜாவா, சுமத்திரா வழியாகச் சீனா முதலிய பகுதிகளுக்குச் சென்றவர் மங்கோலியர் என்றும் இவ்வாறு பலவகை மக்க

ளாக வாழ நேரிட்டது என்பர் திருத்தந்தை ஈராசுப் பாதிரியார்.[1] அந்தந்த நாட்டுத் தட்பவெப்ப நிலையாலும் உணவு வகையாலும் நிறமும் உடலமைப்பும் வேறுபட்டன.

லெமூரியா என்று கூறப்படும் அந்நிலப்பரப்பே குமரிக் கண்டம் என்று தமிழ் இலக்கியத்தால் அறியப்படும் பகுதியாகும். அங்கே குமரிமலை என்ற பெருமலை இருந்தது என்றும், பஃறுளியாறு என்னும் ஆறு ஓடியது என்றும் பழந்தமிழ்ப் பாட்டுக்கள் அறிவிக்கின்றன. அந்த மலையும் ஆறும் இருந்த பழங்காலம், இமயமலையும் கங்கையாறும் தோன்றுமல் இந்தியாவின் வடகோடி கடற்பகுதியாக இருந்த காலமாகும். அத்தகைய குமரிக் கண்டத்தில் முதல் முதலில் தமிழ்மக்கள் தோன்றினர் என்றும், அவர்கள் பேசிய மொழியே மூலத் திராவிட மொழி யென்றும் ஆராய்ச்சியாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். குமரிக் கண்டத்தினில் அரும்பிய நாகரிகமே வடமேற்கு இந்தியப் பகுதியில் சிந்துவெளி நாகரிகமாக மலர்ந்தது என்றும், மொகஞ்சதரோவில் வளர்ந்த பழந் தமிழர் நாகரிகமே நடுநிலக் கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், கிரேக்க நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், போனிசிய நாகரிகம் முதலியன வளரக் காரணமாக

---

1. We are therefore forced to acknowledge that the Dravidians of India, after a long period of development in this country, travelled westwards, of settling successfully in the various lands, they found their way from Mesapatomia up to the British Isles, spread their race—afterwards named Mediterranean owing to the place where they were known anthropologically—through the west and made their civilization flourish in two continents, being thus originations of the modern world civilization."

Rev. St. Heras, Studies in Proto-Indo Mediterranean culture, P. 21.

இருந்தது என்றும் கருத இடமுள்ளமை[1] ஆராய்ச்சியாளர்கள் நினைவு கூரத் தக்கனவாகும்.

---

1. The better suggestion would be that the Dravidians who were also experts in the art of Navigation could have influenced the Cretan and Aegean culture not only by their customs & manners but also by their various symbols. This must have been possible as the Dravidian culture flowed through Mesapotomia, Lycia and other countries. There it would be possible to suppose that the South Indian ideals which made a mark in Mesapatiomia Mohenjodaro and Harappa flowed both by land and sea to the countries of the Mediterranean region whose finds resemble remarkably those founds in Southern India.

V. R. R. Dikshitar —Pre. Historic South India P. 170

6

தமிழகத்தின் நாட்டுப் பிரிவு

'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'
—தொல்காப்பியர்

தமிழகம் தொன்று தொட்டே சேரநாடு, சோழநாடு பாண்டியநாடு என்னும் மும்பெரும் பிரிவுகளாக இருந்து வந்திருக்கின்றது. இம்மூன்று நாடுகளையும் சேரர், சோழர் பாண்டியர் என்னும் குடியினைச்[1] சேர்ந்தோர் நெடுங்கால மாக ஆண்டுவந்தமையால் 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு'[2] எனத் தொல்காப்பியரால் பாராட்டப்பெற்றன.

---

1. குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே''
—பன்னிரு படலம்.

2. 'வண்புகழ் மூவர்' என்பது வளனுடைமையாற் புகழ் பெற்றார் என்றவாறு. அஃதாவது கொடுத்தலாற் பெற்ற பெரும் புகழ் எனக் கொள்க. மூவர் எனப்படுவார் தமிழ்நாட்டு மூவேந்தருமாயினர். 'தண்பொழில் வரைப்பு' என்பது நிலத்துக்கு நிழல் செய்யும் நாவலம் பொழிலுள் வீரைந்து கொள்ளப்படும் வரைப்பினையுடைய என்றவாறு.....வடவேங்கடம் தென் குமரி யாயிடை என்புழி நான்கெல்லையுங் கூறினன் என்பது.
—தொல். செ. 78 பேராசிரியர்.

அல்லது :

வளவிய புகழையுடைய சேரன பாண்டியன் சோழன் என்னும் மூவரது தமிழ் நாட்டகத்தவர் வழங்கும்.
—இளம் பூரணர் உரை.

தமிழகத்தின் இயற்கைப் பகுதிகளாக விளங்கும் மலைகளும் ஆறுகளும் 'வடவேங்கடம் தென்குமரிக்கு' உட்பட்ட தமிழ்நாட்டில் மூன்று பேரரசுகள் தோன்றக் காரணமாய் அமைந்தன.

1. சேரநாடு

முடியுடை மூவேந்தருள் சேரர் முதலாக வைத்து எண்ணப்படுபவராவர். பண்டைத் தமிழ்ச் சான்றோர் 'சேரர் சோழர் பாண்டியர்' என்ற முறையிலேயே நிறுத்திக் கூறியுள்ளனர்.

> "போந்தை வேம்பே ஆர் என வரூஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும்" 1

என்னும் தொல்காப்பிய நூற்பா சேரர்க்குப் பனந்தோடும், பாண்டியர்க்கு வேம்பும், சோழருக்கு ஆத்தியும் அடையாள மாலைகளாகும் என்ற கருத்தினை முறைப்படுத்திக் கூறுகின்றது.

சேரநாடு இன்றைய கேரளத்தில் உள்ள கொச்சி, திருவிதாங்கூர் நாடுகளும், மேலைக் கடற்கரை வெளியும் மற்றும் உள்ள மாவட்டங்களும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இதன் தலைநகரம் வஞ்சிமா நகரம் என்பது. முசிரி தொண்டி என்பன சிறந்த துறைமுகப் பட்டினங்கள். இடைக்காலத்தில் வஞ்சிமாநகர் அஞ்சைக்களமாகி இப்பொழுது கொடுங்கோளூர் என்ற பெயருடன் விளங்குகின்றது. சேரர்க்குரிய குடநாட்டுக்கு மாந்தை உள் நாட்டுத் தலைநகராகவும், தொண்டி துறைமுகமாகவும் இருந்தன. இந்நாட்டில் இருந்து மிளகு, யானை மருப்பு, தேக்கு, அகில், சந்தனம் முதலிய பொருள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 'வேழ முடைத்து மலைநாடு' என்னும் புகழ்மொழிக்குரிய நாடாக இன்றும் சிறப்புடன் திகழ்கின்றது.

'வானவர்' என்று பொதுவாகச் சேரரைக் குறிப்பது பண்டை இலக்கிய மரபு. சேரர் பெருங்குடியினர், அதியர், உதியர் என இருவகையினராவார். அதியர் சேர நாட்டின் வடபகுதியில் உள்ள குதிரைமலை நாட்டிலும், உதியர்

1. தொல். புறத். 5

குட்டநாட்டிலும் ஆண்டனர். அதியர் கிழக்கே தகடூர் வரை சென்று நிலைத்து வாழ்ந்தனர். உதியர், குட்ட நாட்டில் சிறப்புமிக்க பெருவேந்தராய் விளங்கினர். சேர மன்னர்களில் ஒரு சாரார் குட்டுவர் என்றும், பிறிதொரு சாரார் குடக்கோ, குடவர்கோ என்றும் குறிக்கப்படுவர். குட்ட நாட்டில், தோன்றிச் சேரநாடு முழுவதும் ஆண்டவன் குட்டுவன் எனவும், குடநாட்டில் தோன்றிச் சேரவரசினை உரிமையாகப் பெற்றோர் குடக்கோ, குடவர்கோ எனவும் வழங்கப்பட்டனர். இதற்கு எடுத்துக்காட்டாகக் கடல் பிறக் கோட்டிய வெல்கெழு குட்டுவன், குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்னும் பெயர்களைப் பதிற்றுப் பத்தில் காணலாம்.

தகடூர் நாட்டை 'அதியர்' எனப்பட்ட அதியமான்கள் பண்டைக்காலமுதல் நெடுங்காலம் ஆட்சி செய்தனர். கொங்குநாடு மூவேந்தரில் வலிமையுடையோர் ஆட்சிக் குட்பட்டு மாறி மாறி ஒவ்வொருவரிடம் இருந்து வந்தது. பெரும்பாலும் சேரர் ஆட்சிக்குட்பட்டிருந்ததாகத் தெரி கின்றது. பிற்காலத்தில் சேரர் என்னும் வழக்குச் 'சேரலர் கள்ளியம் போர்யாற்று' என்னும் அகப்பாட்டால் (149) அறியலாம். "சேரர், அளம் என்பது சேரர் நிலம் என்ற பொருளுடையதாம்; வடமொழியில் அது கேரளம் என்றாகி யிருக்கலாம்" என்பர் டாக்டர் எஸ். கே. நாயர்.[1] இவ் வாறு சேரலர் நாடு 'கேரள நாடாக' மாறித் தமிழகத் தோடு தொடர்பற்று ஒழிந்து இன்றைய கேரளமாகக் காட்சி அளிக்கிறது.

சேரநாட்டின் எல்லையை,

> "வடக்குத்திசை பழனி வான்கீழ் தென்காசி
> குடக்குத்திசை கோழிக் கோடாம்—கடற்கரையின்
> ஓரமோ தெற்காகு முள்ளெண் பதின்காதஞ்
> சேரநாட் டெல்லையெனச் செப்பு"[2]

என்னும் பழம் பாட்டால் அறியலாம்.

2. பாண்டிய நாடு

பாண்டிய நாடு என்பது வடக்கே வெள்ளாறும், அதையடுத்துள்ள மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி

1. கலைக் களஞ்சியம்: தொகுதி-4. பக்கம்-201
2. பெருந்தொகை: 2091

மாவட்டங்களும், கீழ்க் கோடிக்கரையும், குமரி முனையும் சேர்ந்த நிலப்பரப்பாகும். இந்நாடு பெரும்பாலும் மலைப் பகுதியும் வன்னிலமும் நிறைந்த இடமாகும். வையையும், தண் ஆன் பொருநையும் (தாமிரவருணி) பாய்கின்ற இடங்களே மருதவளம்பெற்றவை. இந்நாட்டின் தலை நகரம் மதுரை; கொற்கை இதன் துறைமுகம். இந்நகரங் களைத் தாலமி, பெரிபுளூசு முதலிய யவனுசிரியர்கள் குறித்துள்ளனர். பொதியமலைச் சந்தனமும், கொற்கைத் துறை முத்துக்களும் பண்டைக்காலத்தில் மேலைநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டிய நாடு மலைவளத்தில் சிறந்தது. அங்கு விளையும் பலவகை வாழையும், ஏலக்காய் முதலிய மணப் பொருள்களும் மலைபடு பொருள்களாகும்.

மதுரை மாநகர் "தமிழ் கெழு கூடல்" என்று ஆன் ரோரால் பாராட்டப் பெற்றது. தமிழ்ச்சான்றோர் கூடித் தமிழ் ஆராயும் நகராக இருந்தமையால், மதுரை 'கூடல்' என்னும் பெயர் பெற்றது. சங்கமெனும் 'தொட்டிலில்' முத்தமிழை வளர்த்து வான்புகழ் கொண்ட பாண்டியர் குடியினர் நினைவுக்கு எட்டாத கால முதல் இந்நாட்டை ஆண்டு வந்தனர்.

பாண்டியர் குடியில் தோன்றியவரை மாறன், வழுதி, செழியன், தென்னவன் என்று சிறப்புப் பெயரால் பொது வாகக் குறிப்பிடுவது இலக்கிய மரபு. இவர்கள் மீன் கொடியினை உடையவராக இருந்தமையால் 'மீனவர்' என வும் பெயர் பெற்றனர். உலகின் முதன் முதல் மொழி வளர்ச்சிக்கு என்று கழகம் அமைத்துப் போற்றியவர்கள் பாண்டியர்கள் என்று கூறின் மிகையாகாது. பாண்டியர் குடிதான் தமிழக வேந்தர்களின் பழம் பெருங்குடி—சேர, சோழர் குடிக்கும் காலத்தால் மிக முற்பட்டது என்பதனைப் பண்டையர், பாண்டியர் என்ற குடிப் பெயரால் புலனு கிறது.

பாண்டிய நாட்டின் வட எல்லையாகத் தென் வெள் ளாறும், தெற்கு எல்லையாகக் குமரியம் பெருந்துறையும், கீழ் எல்லையாக ஆழ்கடலும், மேல் எல்லையாகப் பெரு

வழியும் (Highway) இருந்தமையைப் பழம்பாடல் ஒன்று அறிவிக்கிறது.[1]

3. சோழ நாடு :

சோழநாடு தஞ்சை, திருச்சிராப்பள்ளி தென்னார்க் காடு மாவட்டங்களும் கீழ்க் கடற்கரை வெளியும் சேர்ந்த பகுதியாகும். புதுக்கோட்டைக்கு அருகில் ஓடும் வெள் ளாற்றினைத் தெற்கு எல்லையாகவும், வடவெல்லையாகத் தென்பெண்ணை ஆற்றையும் விச்சிமலை, கொல்லிமலை ஆன்பொருநை ஆறு ஆகியவற்றை மேற்கு எல்லையாக வும் கொண்ட நிலப்பரப்பாகும்.[2] இந்நாட்டைச் சோழர் என்பவர் தொன்று தொட்டு ஆண்டு வந்தனர். உறையூர் தலைநகராகவும், பூம்புகார் கடற்கரைப் பட்டினமாகவும் தலைநகராகவும் சோழர் ஆட்சியில் சிறப்புற்று விளங்கின. உறையூர், இப்பொழுது திருச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதியாகக் காவிரியின் தென் பகுதியில் இருப்பதாகும். பூம்புகார் எனப் புகழ் வாய்ந்த காவிரிப்பூம் பட்டினம் காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தே இருந்தமையால் கடல் கொந்தளிப்பால் அழிந்து போயிற்று. இத்துறை முகப்பட்டினம் கி. பி. முதலிரு நூற்றாண்டுகளில் உலகி லேயே பெருஞ் சிறப்புடைய வாணிகத் துறையாக விளங் கியது. இன்று காவிரிப்பூம்பட்டினம் இருந்த இடத்தில் பழைய பெயருடைய சிற்றூர் ஒன்றுதான் இருக்கிறது.

சோழநாடு சமவெளியில் அமைந்திருக்கிறது. காவிரி யும் அதன் கிளை ஆறுகளும் பாய்வதால் மருதவளம் மிக் குடையதாய்த் திகழ்கின்றது. நீர்வளத்தோடு நல்ல நில வளமும் உடைய சோழ நாட்டைச் ''சோழநாடு சோறுடைத்து' என்று சான்றோர் பாராட்டியுள்ளனர். இவ்வளமிக்க நாட்டைத் தொன்று தொட்டே வளவர்,

---

1. ''வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார்
ஆண்டகடல் கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டி நாட் டெல்லை பகர்'' —பெருந்தொகை: 2098.

2. ''கடல் கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லோணூட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணூட்டுக் கெல்லையெனச் செப்பு''
—சோழமண்டல சதகம்: 8.

சோழர், செம்பியன், சென்னி, என்று பல பெயரால் பாராட்டப் பெற்ற சோழர் குடியினர் ஆண்டு வந்தனர். அவரது ஆட்சி வடவேங்கடம் வரையில் பரவிய பெருமை யுடையது.

4. தொண்டை நாடு :

தொண்டைநாடு என்பது வடவேங்கடம் முதல் தென் பெண்ணை வரையிலும் பரந்து கிழக்கே கடலும் மேற்கே பவள மலையும் எல்லையாகப் பெற்று விளங்கிய பெருநிலப் பரப்பு.[1] இதன்கண் நெல்லூர் மாவட்டத்தின் தென் பகுதி, சித்தூர், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென் னார்க்காடு மாவட்டத்தின் வடபகுதி என்பன அடங்கும். மிகப் பழங் காலத்தில் தொண்டை நாடு 'குறும்பர் நிலம்' என்று பெயர் பெற்றிருந்தது. குறும்பர் தம் ஆடு மாடு களை மேய்த்துக் கொண்டு அங்கு வாழ்ந்தனர். அவர் களை தங்கள் நாட்டை இருபத்து நான்கு கோட்டங்க ளாக வகுத்தனர் என்பர் வரலாற்றாசிரியர்கள். இந்நாடு சங்க காலத்தில் 'அருவா நாடு' எனப்பட்டது. இதன் வட பகுதி 'அருவா வடதலை நாடு'' என்னும் பெயருடன் பழந் தமிழ் இலக்கியங்களிலே குறிப்பிடப்படுகின்றது. இது மலைவளமும் நாட்டுவளமும் மிக்குடையது. கரிகாற் சோழன் இந்நாட்டைக் கைப்பற்றிக் காடு கெடுத்து நாடாக்கி வளம்பெருக்கினன். பின்னர்த் தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டுக் கடல் வழி வந்த நாகக் கன்னிகை பீலிவளையின் மகனை இளந்திரையன் ஆண்டதால் தொண்டை மண்டலம் எனப் பெயர் பெற்றதாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

தொண்டை மண்டலத்தின் வடபகுதியான அருவா வடதலை நாட்டைத் திரையன் என்பவன் ஆண்டு வந் தான். அவனுடைய தலைநகர் 'பவத்திரி' என்பதாகும். தென்பகுதியை இளந்திரையன் என்பவன் ஆண்டு வந் தான். காஞ்சிமா நகர் அவனுடைய தலைநகராக விளங் கிற்று. ''கல்வி கரையிலா காஞ்சி'' மாநகர் என்று திரு நாவுக்கரசரால் பாராட்டப் பெற்ற புகழுடையது. இந்

1. 'மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்கு பிணாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு'' —பெருந்தொகை: 2102

நாட்டு அரசர்களுக்குத் தொண்டையர், திரையர் என்னும் பெயர்கள் வழங்கின. திரையனைத் தவிரத் தொண்டை நாட்டில் வேங்கட மலைப் பகுதியினைப் 'புல்லி' என்ற கள்வர் கோமான் ஆண்டு வந்தான். அவன் சிறந்த வள்ளல் எனப் புலவர்களால் பாராட்டப் பெற்றவன்.

தொண்டை நாட்டின் சிறந்த துறைமுகமாக விளங்கியது 'கடன்மல்லை' (மாமல்லபுரம்) என்பதாகும். கலங்கரை விளக்கத்தினைப் பெற்ற வாணிகப் பெருநகராக விளங்கியதைப் பெரும்பாணாற்றுப் படையினால் அறிகின்றோம்.

5. கொங்கு நாடு :

சேலம், கோவை, நீலகிரி மாவட்டங்களைக்கொண்ட பகுதியினைப் பண்டைக் காலத்தில் 'கொங்கு நாடு' என்று வழங்கினர். இந்நாட்டினைக் கொல்லி மலைத் தொடர், சவ்வாது மலைத்தொடர், நீலகிரி முதலியன மலைவளங் கொழிக்கும் நாடாக்குகின்றன.[1] கொங்குநாடு என்னும் பெயரினை ஆராய்ந்த அறிஞர்களில் ஒரு சாரார் அங்குத் தேன் மிகுதியாகக் கிடைத்தலின் அந்நாடு கொங்கு (தேன்) நாடு எனப் பெயர் பெற்றது என்றும், பிறிதொரு சாரார் அங்குப் பொன் கிடைத்துவந்த காரணத்தால் கொங்கு (பொன்) நாடு எனப் பெயர் பெற்றது என்றும் கூறுகின்றனர்.

கொங்கு நாட்டைப் பேரரசர்களே ஆளாது, குறுநில மன்னர்களே ஆண்டு வந்தனர். கொங்கு நாட்டில் உள்ள கொல்லிமலைப் பகுதியை மழவர் ஆண்டனர். தகடூர்ப் பகுதியை அதியர் ஆண்டனர். முதிர மலைப் பகுதியைக் குமணனும் அவன் மூதாதையரும் ஆண்டனர்.

சிறு நாடுகள் :

தமிழகம் முப்பெரும் பேரரசுகளாகவும், பல சிற்றரசுகளாகவும் பிரிந்து இருந்தமைக்கு அதன் நில இயல்பே

---

1. ''வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்பு வெள்ளிக்குன்று - கிடக்கும்
களித்தண்டலை மேவுங் காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவுங் கொங்கு''

—கொங்கு மண்டல சதகம்: 2

காரணமாகும். இந்நாட்டின் இடையே மலைகளும், ஆறுகளும் அமைந்துள்ளமையால் பற்பல மாநிலங்களாகப் பிரிவதற்கு வாய்ப்பு உண்டாகியதே யொழிய வேங்கடம் முதல் குமரிவரை ஒரு பெரும் பேரரசு தோன்றுவதற்குரிய சூழ்நிலை உருவாகவில்லை. அதனால் சேர, சோழ பாண்டியர் நாடு எனத் தனித்தும் பிரிந்தும் விளங்கியதோடு, ஒற்றுமை யுணர்வின்றி அந்நாட்டரசர்கள் தங்களுக்குள்ளேயே பெரிதும் போரிட்டு வந்தனர். எனவேதான் ஒன்றுபட்ட தமிழகத்தை நாம் சங்ககாலமுதல் பிற்காலச் சோழப் பேரரசர் காலம்வரை காணமுடியவில்லை. சிற்சில சமயங்களில் ஆற்றல்மிக்க மாவீரர்கள் தங்கள் ஆட்சியின் கீழ்த் தமிழகம் முழுவதையும் கொண்டுவந்து ஒரு குடைக் கீழ் ஆள முயன்றனர். எனினும் அவர்களுக்குப்பின் தமிழகம் ஒருமைப்பாட்டுடன் திகழவில்லை. இராசராசன் காலத்தில் ஒரு நாடாகப் பெரும் பேரரசாக விளங்கிய தமிழகத்தில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் பாண்டியநாடு பிரிந்து தனித்து இயங்கத் தொடங்கியதைக் காண்கிறோம்.

இவ்வாறு மூப்பெரும் நாடுகளும் ஒருங்கு சேர்ந்து ஒரு நாடாக விளங்குவதற்கு இடையூறாக இம்மூன்று நாடுகளுக்கு அகத்தும் புறத்தும் பல சிறு நாடுகள் அமைந்து இருந்தமையே காரணமாகும். சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையே இருந்த 'நடுநாடு' என்பதை மலையமான்கள் ஆண்டு வந்தனர். சங்ககாலம் முதல் பல நூற்றாண்டுகள்வரை அவர்கள் தொடர்ந்து ஆண்டுவந்ததாகத் தெரிகிறது. அந்நாட்டரசர்களில் சிறந்தவர் மலையமான் திருமுடிக்காரியின் புகழினைச் சங்க நூல்கள் எடுத்து இயம்புகின்றன. இந்நாட்டின் தலைநகரம் திருக்கோவலூராகும்.

சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் 'பறம்பு மலை' இருந்தது. இன்று அதனைப் 'பிரான்மலை' என வழங்குகின்றனர். இம்மலையின் வளத்தைக் கபிலர் பெருமானின் கவின்மிகு சங்கப் பாடல்களால் அறிகிறோம். இம்மலையினைச் சுற்றியிருந்த முந்நூறு ஊர்களைக் கொண்ட பறம்பு நாட்டிற்குத் தலைவனாய்ப் பொன்போற்புகழுடன் விளங்கியவன் வேள் - பாரி. பாண்டியநாட்டில், 'பொதினி'

என வழங்கிய பழனி மலைப் பகுதியை ஆவியர் குடியில் தோன்றிய வேள் - பேகன் என்பான் ஆண்டுவந்தான். 'பொதியமலைப்' பகுதியை வேள் - ஆய் என்பான் தன் னுரிமைநாடாகக் கொண்டிருந்தான். அவ்வாறே பாண்டிய நாட்டிற்கும் சேர நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியாகிய நாஞ்சில்' நாட்டை நாஞ்சில் வள்ளுவனும், தொண்டை நாட்டின் தென்பகுதியான 'வேணாட்டினை' ஓவியர்குடித் தோன்றலான ஓய்மா நல்லியக்கோடனும், 'கோடை மலை'யினைப் பொருநனும், திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள 'செங்கமா' (செங்கம்)வில் வேள் - நன்னனும் ஆண்டுவந்தனர். இவ்வாறு முப்பேரரசுகளோடு, பலசிறு நாடுகளாகப் பிரிந்து தனக்கெனத் தனித்தனித் தலைவர் களை உடையதாய்ப் பண்டைத்தமிழகம் விளங்கியது. இச்சிறு நாடுகளை ஆண்ட மன்னர்களைக் குறுநில மன்னர் என்றும், வேளிர் என்றும் கூறுவது மரபு. இவ்வேளிர்கள் மூவேந்தருள் ஆற்றல்மிக்கவன் தலைமையை ஏற்று ஆட்சி செய்தனர். மூவேந்தர்களும் இவ்வேளிர் குடியில் பெண் கொள்ளுவது வழக்கமாக இருந்தது.

தமிழகத்தினைச் ''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமா''கப் பிரித்துக் கூறுகின்ற மரபு தொல்காப்பியர் காலமுதல் இருந்து வந்தமை இவ்விடத்தில் குறிப்பிடத் தக்க சிறப்புடையதாகும்.

''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி'' 1

என்பர் தொல்காப்பியனார். செந்தமிழ் மொழி வழங்கும் தமிழ்நாட்டின் பகுதியாக உள்ள பன்னிரு நாடுகளினு (நிலத்தினு)ள்ளும் ஒருபகுதியில் உள்ளவர் குறித்த சிறப்புப் பொருளில் வழங்கும் சொற்கள் அவர் குறித்த அப்பொருளிலேயே தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் வந்து வழங்குமானால், அவை திசைச் சொற்கள் எனப் படும் என்பது இந்நூற்பாவின் பொருள். இந்நூற் பாவிற்கு உரைகண்ட நுண்மாண் நுழைபுலம் மிக்க உரையாசிரியர்களுள் பலர்,

---

1. தொல். எச்ச. 4.

"தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன்வடக்கு—நன்றுய
சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட் டென்" 1

என்னும் பழம்பாடலைத் தக்க சான்றுகாக் கொண்டு பன்னிரண்டு நாடுகளை முறையாகக் கூறியுள்ளனர். அவை:— 1. தென்பாண்டி நாடு. 2 குடநாடு. 3 குட்டநாடு. 4. கற்காநாடு. 5. வேணாடு. 6. பூழிநாடு 7. பன்றி நாடு. 8. அருவாநாடு. 9. அருவா வடதலைநாடு. 10. சீதநாடு. 11. மலைநாடு 12 புனல்நாடு என்பன வாகும். இவற்றுள் வேணாட்டையும் புனல் நாட்டையும் நீக்கிப் பொங்கர்நாடு, ஒளிநாடு இரண்டையும் சேர்த்துக் கூறுவர் சேனாவரையர்.

இவற்றுள் தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள பாண்டிய நாடும் சேரநாட்டின் இருபெரும் பிரிவுகளான குட்டநாடு, குடநாடும் தெளிவாக நமக்கு விளங்குவன. தொண்டை மண்டலத்தின் கடலையடுத்த தென்பகுதியை அருவா நாடெனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே அருவா வடதலை நாடும் தொண்டை நாட்டின் வடபகுதியைச் சேர்ந்தது எனத் தெரிகின்றது. கற்காநாடு என்பது கன்னட நாட்டைக் குறிப்பிடுவது. பழங்கன்னட நூல் வழக்கால் அறியப்படுவதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். திண்டுக்கல்லுக்கு மேற்கில் உள்ள குன்றுகளுக்குப் பன்றிமலை என்று பெயர் வழங்குவதால் அப்பகுதியைப் பன்றி நாடெனக் கொள்ளலாம்.

இப்போது தேனி, சின்னமனூர், கம்பம், கூடலூர் என்னும் ஊர்கள் இருக்கும் நாட்டிற்கு அப்பகுதியில் ஆள்வோர் பூழிநாடு எனப் பெயர் கூறுகின்றனர். மலாடு என்பது திருக்கோவலூர் வட்டத்தின் மலைப் பகுதியெனக் கல்வெட்டுக்களால் தெரிகிறது. சீதநாடு என்பது தற்காலக் கோயம்புத்தூர் மாவட்டத்தின் வடபகுதியும் நீலகிரி மாவட்டத்தின் தென்பகுதியும் உள்ளடங்கியதாக இருக்கலாம். புனல் நாடு என்பதை நீர்வளமிக்க காவிரி பாயும் சோழ நாடு என்று கொள்ளலாம். கேரளத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுமாகப் பிரிந்துள்ள நாஞ்சில்

1. நன்னூல் சங்கர. உரை மேற்கோள் சூ 273

நாடே வேணாடு என்பர். இனி, சேனாவரையர் கூறும் பொங்கர் நாடு என்பது ஒருகால் சோழகள் நிறைந்து விளங்கிய சோழ நாடாகலாம். ஒளிநாடு என்பது புகழ் மிக்க பாண்டிய நாடாகும்.

இவை யாவும் உரையாசிரியர்கள் கூறும் பன்னிரு நாடுகளே யொழிய, தொல்காப்பியர் காலத்தில் இருந்த பன்னிரண்டு நாடுகள் இவை என்று திண்ணமாகக் கூற இயலாது. எனினும் ஆசிரியர்க்குப் பின் பல நூற்றாண்டு கள் கழித்து வாழ்ந்த உரையாசிரியர்கள், தொன்று தொட்டு முறைவழியாக வந்த பல செய்திகளைக் கூறி உள்ளனர். அவற்றுள் ஈதொன்றாகும்.

பண்டைக் காலத்தில் தமிழகம் மூப்பெரும் பேரரசு களாக விளங்கியதோடு, பல சிறு நாடுகளாக அமைந்து ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஆளுந் தலைவன் ஒருவ னைப் பெற்றிருந்தமை இவற்றால் தெளிவாகின்றது.

7

வி டி வெ ள் ளி

தமிழ் மொழி :

உலகப் பழம்பெரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதனைத் தொல்பொருள் ஆராய்ச்சியும் மண்ணியல் ஆராய்ச்சியும் வலியுறுத்துகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடியில் உள்ள தீவக்குறை (Peninsula)வைத் தொன்று தொட்டுத் 'தமிழ் கூறும் நல் லுலகம்' என்று போற்றியுள்ளனர். இங்குத் தமிழ்மொழி வழங்கி வரும் காரணத்தால், இதனைத் 'தமிழகம்' என்று பெயரிட்டு அழைத்து வருகின்றனர். தமிழ்மொழியைப் பேசும் இந்நாட்டு மக்கள் 'தமிழர்' எனப் பெயர் பெற்றனர்.

பண்டைக் காலத்தில் தமிழரை, அயல் நாட்டார்— சிறப்பாக வடநாட்டார் 'திராவிடர்' என்ற பெயரிட்டு அழைத்தனர். 'தமிழ்' என்னும் சொல்லின் பிராகிருத மொழித் திரிபே 'திராவிடம்' என்பது மொழி நூல் வல்லார் கருத்து. அவர்கள், 'தமிழ்' என்னும் சொல் தமிழம், தமிளம், த்ரமிளம், த்ரவிளம், த்ரவிடம், த்ராவிடம், திரா விடம் எனப் பலவாறு பிராகிருத மொழிச் சொற்களாகத் திரிந்த பிறகே வடமொழி வாணருக்கு அறிமுகமாகி இருக்க வேண்டும் என்று விளக்கம் தந்துள்ளனர். திரா

விடம் எனப்பட்ட மொழியைப் பேசிய மக்களைத் 'திராவிடர்' என்று கூறுவது இயல்பு. பிற்காலத்தில், 'திராவிடர்' என்னும் பெயர் தமிழின் 'சேய்மொழி' பேசும் மக்களைக் குறிப்பிடவும் வழங்கப்பட்டது.

இன்றைய இந்திய நாட்டு மொழிகளுள் தொன்மையும், முதன்மையும் உடையதாய் நின்று நிலவி வருவது நம் தமிழ்மொழியாகும். தமிழ் என்னும் சொல்லிற்குப் பலவகையான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கன சில. வடநாட்டார் பேசிய மொழி 'வடமொழி' எனப்பட்டமை போல, தென்னாட்டவர் பேசிய மொழி, 'தென் மொழி' என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்பால் 'தென்மொழி என்பது, 'தெம்மொழி' எனவும், 'தெமிழி' எனவும், இறுதியாகத் 'தமிழ்' எனவும் திரிந்து வந்ததாகலாம் என்பர் டாக்டர் ஜி. யு. போப்.

அறிஞர் சிலர் 'தமிழ்' என்னும் சொல்லைத் 'தமம்—ழ்' என்று பிரித்துத், 'தமம்' என்பதற்கு 'இருள்' என்றும், 'ழ்' என்பதற்கு 'நீக்குவது' என்றும் பொருள் கூறுவர். அவர்கள் கருத்துப்படி தமிழ் என்னும் சொல், அகத்தே உள்ள (அக) இருளைப் போக்குவது என்று பொருள்படும். அவர்கள் கதிரவனுக்குத் 'தாமம்' என்னும் பெயருள்ளதைச் சுட்டிக் காட்டுவர்.

பிறிதொரு சாரார், தனக்கு இணையில்லாததாய்ச், சீரிளமைத்திறம் குன்றாது, ஏட்டிலே தவழ்ந்தும், வழக்கிலே வளர்ந்தும், நாவிலே நடந்தும், கருத்திலே கனிந்தும், ழகரத்தைச் சிறப்பு எழுத்தாகக் கொண்டுள்ள மொழியைத் 'தமிழ்' என்னும் சொல் குறிப்பதாகக் கூறுவர். தமி என்பதற்குத் தனித்தது, தனக்கு இணையில்லாதது என்று பொருள் கூறுவர்.

தமிழ் என்பது இனிமை எனப் பொருள்படுவதாகும். அதனை,

"தமிழ் தழீஇய சாயலவர்"—சிந்தாமணி—2026
"தமிழ்ப்பாட் டிசைக்கும் தாமரையே"—கம்ப. பம்பை. 26

என்பதனால் அறிகிறோம். தமிழ் எனும் சொல் இனிமை மட்டுமின்றித் தண்மையும் உடையது என்பதை,

"இனிமையும் நீர்மையும் தமிழ்என லாகும்"—

என்று பிங்கல நிகண்டு (3610) கூறுகின்றமையால் தெளிவாகிறது. ஆகவே இனிமையுடைய மொழி, தண்மையுள்ள மொழி என்பதற்கு ஆகுபெயராகத் தென்னாட்டவர் பேசும் மொழியைத் 'தமிழ்' என்னும் சொல் குறித்ததாகலாம் என்பது தமிழ்ச் சான்றோர் பலருடைய கருத்தாகும். இத்தகைய இனிய பண்புகளை உடைய மொழியினைச் செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், பசுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில் தமிழ், ஒண்டமிழ் என்று அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

தமிழ்ச் சங்கம் :

குழந்தை பிறந்து மொழி பயிலுங்கால், அதன் தாயால் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் பாராட்டிப் பயிற்றப்படும் 'பால்வாய்ப் பசுந்தமிழைப்' பாண்டிய மன்னர்கள் ஒல்லும் வகையெல்லாம் அன்பும் ஆர்வமும் கொண்டு பேணி வளர்த்தனர்.

பழங்காலத்தில் மொழியினை வளர்ப்பதற்கு வேறு எந்த நாட்டிலும் சங்கங்கள் நிறுவப்பட்டிருந்தாகத் தெரியவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்கு ஒரு சங்கம் இருந்தது. தமிழை வளர்க்கவும் தமிழ்ப் பண்பாடு செழிக்கவும், தமிழினம் சிறக்கவும் பாண்டிய மன்னர் அத்தமிழ்ச் சங்கத்தை அமைத்து முறை பிறழாது கோலோச்சினர். அம்மன்றத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்த நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த புலவர்கள் ஒன்று கூடி மொழிஆராய்ச்சியிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும் கருத்தைச் செலுத்தி நாள்தோறும் புத்தம் புதிய நூல்களை ஆக்கித் தந்தனர். இதனால், மதுரைமாநகரில் எத்திசையும் புகழ் மணக்கத் தமிழ்ணங்கு வீற்றிருந்தாள். அதனை,

> "தொல்லாணை நல்லாசிரியர்
> புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
> நிலந்தரு திருவின் நெடியோன்"

என்று மதுரைக் காஞ்சி (வ. 761-763) யும்,

> "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
> மகிழ்நனை மறுகின் மதுரை"

என்று சிறுபாணாற்றுப்படை (வ. 66-67)யும்,

''தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே!''

என்று புறநானூறும் (58) குறிப்பிடுவதனால் அறிகிறோம்.

இம்மொழி ஆராய்ச்சிக் கழகம் நம்து நினைவுக்கு எட்டாத—வரலாற்றுசிரியர்களின் ஆராய்ச்சிக்கும் புலப்படாத—நெடுங்காலத்திற்கு முன்பே நிறுவப்பட்டதாகத் தெரிகிறது. இக் கழகத்தினைப் பற்றிய வரலாறு தமிழரிடைப் பண்டைக் கால முதல் இன்றுவரை வழங்கி வருவதே சங்கம் இருந்தது என்பதற்குரிய தலையாய சான்றாகும். பாண்டிய மன்னர் தங்கள் நாட்டின் தென் பகுதியைக் கடல் கொண்ட போதெல்லாம் தெற்கிலிருந்த தங்கள் தலைநகரை, வடக்கில் புதியதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்திற்கு மாற்றினர். இவ்வாறு தங்கள் தலைநகரை இருமுறை வடக்கே மாற்றியதோடமையாமல், தமிழ்ச் சங்கத்தினையும் தங்கள் கோநகரிலேயே நிறுவினர். முதன் முதலில் பாண்டியர் தலைநகர் தென்மதுரையாக இருந்ததென்றும், பிறகு கபாடபுரத்திற்கு மாற்றப்பட்டது என்றும், அதன் பிறகு இன்றைய மதுரை தலைநகராக்கப் பெற்றதென்றும் உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

அம் முப்பெரும் நகரங்களிலும் திகழ்ந்த தமிழ்ச் சங்கங்களை முறையே தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என்று அழைப்பது தமிழ் இலக்கிய மரபாகும். அவற்றினுள் முதுபெரும் புலவர்கள் பலர் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்தனர். சில பாண்டிய மன்னர்கள் காவலர்களாக இருந்ததோடு அல்லாமல், பாவலர்களாகவும் விளங்கினர். எண்ணிறந்த இயல், இசை, நாடக நூல்கள் முதல், இடை, கடைச் சங்கங்களில இயற்றப்பட்டன என்பர். ஆயினும், இன்று நமக்குக் கிடைத்திருப்பவை இடைச்சங்க காலத்து இயற்றப்பட்ட தொல்காப்பியமும், கடைச்சங்ககாலத்தைச் சேர்ந்த பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் திருக்குறளும், அக்காலத்தைச் சிறிது அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும், இறையனார் அகப்பொருளும், கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுமேயாகும். தொல்காப்பியத்திற்கு முன்பும் பின்பும் இயற்றப்பட்ட பல நூல்கள் எதிர்பாராத நிலையில்

உண்டான கடல்கோல்களால் அழிந்து இருக்கவேண்டும். தொல்காப்பியம் இயற்றப்படுவதற்கு முன்பு, தமிழ் இலக்கிய மரபு நன்கு வளர்ச்சி அடைந்திருந்தது என்பதனை,

> ''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்
> கலியே பரிபாட்(டு) ஆயிரு பாங்கினும்
> உரிய தாகும் என்மனார் புலவர்''
>
> —தொல். அகத். 53

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். மேலும் இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் ஆதலின், தொல்காப்பியர் தமக்கு முன்பு இருந்த ஆசிரியர்கள் இயற்றிய பல இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றுத் தெளிந்தே இந்நூலினை இயற்றினர் என்பது புலப்படுகின்றது. தமக்கு முன்பு நூல் இயற்றிய புலவர் பெருமக்களை,

> 'யாப்பின் வழியது என்மனார் புலவர்'[1]
> 'தோலென மொழிப தொன்னெறிப் புலவர்'[2]
> 'புலனென மொழிப புலனுணர்ந் தோரே'[3]
> 'நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்'[4]
> 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'[5]

என்று நூற்றைம்பது இடங்களுக்குமேல் தமது நூலில் குறிப்பிட்டுள்ளமையால், தொல்காப்பியர் காலத்தில் பல நூல்கள் வழக்கில் இருந்தமை தெரியவருகிறது. எனவே, தொல்காப்பியம் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் முற்பட்டதேயன்றி, அதுதான் தமிழ்மொழியில் இயற்றப்பட்ட முதல்நூல் அன்று என்பது ஒருதலை.

தொல்காப்பியம் :

ஒருமொழி இலக்கிய வளமுடைய செம்மொழியாக வளர்ச்சி அடைவதற்கு எத்துணை நூற்றாண்டுகள் கழிந்

---

1. தொல். செய்யுளியல் 78
2. ,, ,, 236
3. ,, ,, 239
4. ,, மரபியல் 99
5. ,, ,, 27

திருக்க வேண்டும் என்பதனைச் சிந்திக்கின்றபொழுது தமிழ்மொழியின் தொன்மையும், அம்மொழி பேசும் மக்களின் பழம்பெருமை வாய்ந்த நாகரிகப்பண்பாடும் வியப்பூட்டுகின்றன. தொல்காப்பியத்தின் முதலிரு பகுதிகளாகிய எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் மொழியின் அமைப்பை நன்கு விளக்குகின்றன. மிகப் பழங்காலத்திலேயே மொழிக்கு உறுப்பாகும் ஒலியின் பிறப்பையும் இயல்பையும் திரிபுகளையும் (Phonetics and phonemics) தமிழறிஞர் நன்கு அறிந்து பாகுபாடு செய்து இருந்தனர் என்பதை எழுத்ததிகாரம் எடுத்தியம்புகிறது. சொற்களின் தன்மையினையும், சொற்றொடர் அமையும் போக்கினையும், அவற்றின் பொருளில் நிகழும் திரிபுகளையும் (Semantics, Morphology & Syntax) சொல்லதிகாரம் எடுத்துரைக்கின்றது.

மூன்றும் பகுதியாகிய பொருளதிகாரம், வேறு மொழிகளில் இல்லாத தனிச்சிறப்புடைய இலக்கணப்பகுதியாகும். மற்ற மொழிகளில் எல்லாம் எழுத்தையும் சொல்லையும் ஆராயும் வகையிலே இலக்கணம் எழுதப் பெற்றுள்ளன. தமிழில் இலக்கியத்தில் அமையும் பொருளுக்கு —மக்கள் வாழ்க்கைக்கு— இலக்கணம் கூறப் பட்டுள்ளது. மக்கள் இனத்தை இயக்குவிக்கும் இருபெரும் இயற்கை உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு 'அகம்', 'புறம்' என வாழ்க்கையைப் பகுத்து, வாழ்க்கையின் பல நிலைகளைத் தெள்ளத் தெளிய விளக்குகிறது. அந்தக் காலத்திய மக்களிடம் இருந்த பழக்கவழக்கங்களையும், பலவகையான அணிகளுக்கு எல்லாம் முதன்மையாகத் திகழும் உவமையையும், இலக்கியம் அமையும் செய்யுள் வடிவைப் (Prosody and poetics) பற்றியும் ஆராய்கின்றது.

இவ்வாறு தொலகாப்பியம் தமிழ்மொழியின் அமைப்பினையும் சிறப்பினையும் விளக்குவதோடு, அக்காலத்திய தமிழ்மக்களின் வாழ்க்கையினையும் படம்பிடித்துக் காட்டுகின்றது. இதனால், தமிழரின் அன்றைய சமுதாய நிலையையும் கலைத்துறையில் அவர்கள் அடைந்த முன்னேற்றத்தையும், மொழித்துறையில் அவர்கள் பெற்ற நுண்ணிய அறிவையும், மெய்யறிவுத்துறையில் அவர்களுக்குண்டான

தெளிவையும் ஒருவாறு நாம் அறிய முடிகின்றது. அசோகன் காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தின் வரலாற்றினை — நாகரிகப் பண்பாட்டினை — அறிவதற்குப் பெரிதும் பயன் உடையதாய்ப் பண்டைத் தமிழரின் வாழ்வும் வரலாறுமாகத் திகழ்வது தொல்காப்பியம். அது இருள் சூழ்ந்த தமிழக வரலாற்று வானில் மின்னொளி வீசித் தண்கதிர் பரப்பிப் பண்டைத் **தமிழர் நாகரிகத்தின் விடிவெள்ளியாய்** வீறுடன் விளங்குகின்றது.

நூலாசிரியர் :

தமிழகத்தின் விடிவெள்ளியாக விளங்கும் இப்பழம் பெருநூலை இயற்றியருளிய சான்றோர் ஒல்காப்பெரும் புகழ்வாய்ந்த தொல்காப்பியனார் என்று போற்றப்படுபவராவர். தொல்காப்பியத்தின் சிறப்புப்பாயிரம் "தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி" என்று கூறுவதனால், தொல்காப்பியன் என்பது ஆசிரியருடைய இயற்பெயராகவே இருத்தல் வேண்டும். தொல்காப்பியன் என வழங்கும் தமது பெயரையே தம்மால் இயற்றப்பட்ட நூலுக்குரிய பெயராக்கினர் என்பது மேற்கண்ட தொடரின் பொருளாகும். மேலும், பண்டைநாளிற் காப்பியன் என்னும் இயற்பெயர் தமிழ்மக்களிடையே பெருக வழங்கிய தென்பது வெள்ளூர்க் காப்பியன், பல்காப்பியன், காப்பியாற்றுக் காப்பியன் என வரும் பெயர்களால் இனிது புலனும். ஓர் இயற்பெயருடையார் பலராயின் அவர் தம்முள் வேற்றுமையறிய ஊரும் பண்பும் முதலிய ஏற்புடை அடைமொழிகளை இயைத்து ஒரு பெயராய் வழங்குதல் பண்டையோர் மரபாகும். தொல்காப்பியன் என்னும் பெயரும் இம்முறையால் இடப்பெற்று வழங்கியதாகும்" [1] என்று பேராசிரியர் வெள்ளைவாரணனார் தந்துள்ள விளக்கம் தொல்காப்பியர் என்பது ஆசிரியருடைய இயற்பெயரே என்ற கருத்தினைச் சான்றுடன் நிறுவுகிறது.

தொல்காப்பியம் என்னும் இவ்விழுமிய நூல், தமிழ் மொழியின் வளத்தினையும், பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் சிறந்த இயல்புகளையும் நாகரிகத்தினையும் என்றும்

1. க. வெள்ளைவாரணன் : தொல்காப்பியம் — (தமிழ் இலக்கிய வரலாறு) பக்—17.

அழிந்து ஒழியாது கன்னித் தமிழ்மொழி உள்ளளவும் நிலைபெற்று, விளங்குமாறு காத்து வருவதனால் தொல் காப்பியம் என்று பண்டைத்தமிழ்ச் சான்றோர்களால் பாராட்டப்பெற்றதெனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

தொல்காப்பியரின் காலம் :

தமிழிற்கும் தமிழர்க்கும் ஈடில்லாப் பெருந்தொண்டு ஆற்றிய தொல்காப்பியனார் இடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர் என அறியப்படுவதால் அவருடைய காலம் மிகத் தொன்மையானதாகும் என்பதில் ஐயமில்லை. தொல்காப்பியரின் காலத்தைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலர் கண்டமுடிவு அவர் வடமொழில் இலக்கண நூல் எழுதிய பாணினிக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பதாகும். பாணினி முனிவர் குறிப்பிடுகின்ற அறுபத்து நான்கு ஆசிரியர்களுள் இந்திரன் என்பவர் ஒருவர். பாணினிக்குப் பின்பு பாணினியுமே எவராலும் போற்றப் பட்டதும் அன்றிக் கையாளப்பட்டும் வருகிறது. தொல் காப்பியர் பாணினிக்குப் பின் வாழ்ந்தவராயின், அவர் பாணினீயத்தில் வல்லுநராக இருந்திருக்க வேண்டும். இதற்கு மாறாக அவர் ஐந்திரத்தில் வல்லுநராக இருந்தார் என்பதை அவருடன் கல்வி கற்றவரான பனம்பாரனார் **'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'** என்று பாராட்டி யுள்ளமையால் அறிகிறோம். ஐந்திரம் என்பது இந்திரன் இயற்றிய இலக்கண நூல் என்பர். ஆகவே, தொல்காப்பி யர் பாணினியின் இலக்கணம் இயற்றப்படுவதற்கு முன்பு வடமொழியில் சிறப்புடன் விளங்கிய 'ஐந்திர வியாகர ணத்தை' ஐயந்திரிபறக் கற்றார் என்பது புலனாகின்றது. இதனால் தொல்காப்பியர் பாணினிக்குக் காலத்தால் முற் பட்டவர் என்பது தெளிவாகின்றது.

தொல்காப்பியர் சொற்களின் இலக்கணத்தை வரை யறுத்துக் கூறுகின்ற பொழுது, ஒவ்வொரு சொல்லையும் பகுதி விகுதியாகப் பிரிக்க முடியும் என்பதைப் பற்றி ஒன் றும் கூறவில்லை. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர்தான் தமிழ்ச் சொற்களைப் பகுதி விகுதியாகப் பிரித்து அதற்குரிய இலக் கணத்தை வரையறுத்துக் கூறியுள்ளார். சொற்கள் பிறந்த வரலாற்றைத் தொல்காப்பியர் கூறாமல், 'மொழிப்

பொருட் காரணம் விழிப்பத் தோன்றும்' என்று கூறியுள்ளார். ஆனால் பவணந்தியார் ஒவ்வொரு சொல்லின் பகுதி விகுதிகளை ஆராய்ந்து, இச்சொல் எந்த வேர்ச்சொல் அடியாகப் பிறந்தது என்பதைச் சுட்டிக் காட்ட முயன்றுள்ளார். அவருக்குச் சொற்கள் பிறந்த வரலாற்றை ஆராய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதற்கு உறுதுணையாக இருந்தது வடமொழியில் பாணினி இயற்றிய இலக்கண நூலாகும். பாணினி முனிவர் பல்லாயிரக் கணக்கான வடமொழிச் சொற்களை எல்லாம் பகுதி விகுதியாகப் பகுத்து ஆராய்ந்து அவற்றை எல்லாம் சில ஆயிரக்கணக்கான வேர்ச் சொற்களிலேயே அடக்கியுள்ளார்.

இத்தகைய சொல்லாராய்ச்சியினைத் தொல்காப்பியர் குறிப்பிடாமையால், அவர் பாணினிக்குக் காலத்தால் முற்பட்டவராக இருந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுகிறது. பாணினி முனிவர் கி. மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று சில வடமொழிவாணர்கள் குறிப்பிடுகின்றனர். பல வடமொழி ஆராய்ச்சியாளர்கள் பாணினி கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். இவ்விரு சாராரும் பாணினி கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குக் காலத்தால் பிற்பட்டவரல்லர் என்பதில் கருத்து ஒற்றுமை உடையவர்களாக உள்ளனர். ஆகவே, பாணினிக்குக் காலத்தால் முற்பட்டவர் என்று கருதப்படும் தொல்காப்பியர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அக்காலத்தில்தான் வடமொழியாளர் தமிழகத்தில் குடியேறத் தொடங்கினர்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழர் வாழ்க்கை நன்கு வளர்ச்சியடைந்து நாகரிகச் சிறப்புடையதாக விளங்கியதைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம். அவருடைய நூலினுள் பழங் கற்காலம், புதுக் கற்காலம், இரும்புக் காலம் ஆகிய முப்பெரும் நாகரிக காலங்களில் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். தமிழர் நாகரிகம் கற்காலம் முதற்கொண்டு இரும்புக் காலம் வரை வளர்ச்சியுற்றதைப் படக்காட்சி போலத் தொல்காப்பியம் எடுத்துக் காட்டுகிறது. தொல்காப்பியர் காலத்தில் இரும்புக் கால

நாகரிகம் வளர்ச்சியுற்று முதிர்ச்சி அடைந்த நிலையில் இருப்பதைக் காண்கிறோம். இவற்றால், தமிழர் நாகரிகம் தொல்காப்பியர் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே தோன்றி வளர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. தமிழக வரலாற்றில் தொல்காப்பியர் காலம் என்று இங்குக் குறிப்பிட்டது தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தை மட்டும் குறிப்பதன்று. அவர் தம்முடைய நூலில் விரிவாக விளக்கியுள்ள நாகரிகத்தின் காலத்தையும் குறிப்பதாகும் என்பது கூறுதல் தக்கது. எனவே, தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ள நாகரிகத்தின் காலத்தைச் சற்றேறக் குறைய கி. மு. 2000 முதல் கி. மு. 400 வரை என்று வரலாற்றை ஒட்டி வரையறைப்படுத்திக் கூறலாம்.

8

வாழ்வியல்

"வாழ்வியல் ஒரு நாட்டு நாகரிகத்தின் உயிர் நிலையாகக் கருதத்தக்கது."

—வில்டூராண்ட்டு

நானிலம் :

தொல்காப்பியர் காலத்தில் தமிழர் வாழ்ந்த நிலப் பகுதி வடவேங்கடம் முதல் தெற்கே குமரியாறு வரை பரவி இருந்தது. கிழக்கும் மேற்கும் கடல்கள் எல்லையாக இருந்தன. இவற்றிற்கு இடைப்பட்ட தமிழகம் இயற்கையின் அமைப்பை ஒட்டித் தொல்பழங்காலத்தில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. மலையும் மலையைச் சார்ந்த நிலப்பகுதியையும் குறிஞ்சி என்று அழைத்தனர். காடும் காட்டைச் சார்ந்த நிலப்பகுதியையும் முல்லை என்று கூறினர்; ஆறும் ஆற்றுவெளியைச் சார்ந்த வயல்வெளியையும் மருதம் என்று மொழிந்தனர்; கடலும் கடலைச்சார்ந்த மணல் வெளியையும் நெய்தல் என நவின்றனர்; காடும் மலையும் ஒன்றுகக் கலக்கும் இடம் கதிரவன் வெப்பத்தால் நீர் வளமற்ற நிலத்தினைப் பாலை என்று பாகுபாடு செய்து இருந்தனர். பாலை என்பது குறிஞ்சியும் முல்லையும் சேர்ந்த நிலப்பரப்பானமையால், அதனைத் தனி நிலமாகப் பண்டைத்தமிழர் கருதவில்லை.

அதனை முல்லையோடும், குறிஞ்சியோடும் இணைத்தே— ஒன்றுபடுத்தியே நிலத்தைப் பாகுபாடு செய்துள்ளனர். நானிலம் என்றே கருதினர்.[1] இந்நால்வகைப் பாகு பாட்டினால் உலகம் நானிலம் என்னும் காரணப் பெயரைப் பெற்றது.

இந்நால்வகை நிலமும், அவ்வந் நிலப்பகுதிகளில் பேரளவில் பூத்துக் குலுங்கிய பூக்களைக் கொண்டே பெயரிடப் பெற்றுள்ளன. மலைச் சாரங்களில் பூத்துக் குலுங்குவது குறிஞ்சிப் பூவாகும்; இதனை வேறு நிலங் களில் காண்பது அரிது. எனவே, மலை நிலத்திற்கே சிறப் பாக உரிய பூவினைக்கொண்டு அந்நிலத்திற்குக் குறிஞ்சி என்று பெயரிட்டுள்ளனர். காட்டிலும் மேட்டிலும் முல்லைக் கொடிதானே தழைத்து வளர்ந்து இயற்கை. முல்லை மலர்கள் மிகச்சிறப்பாகக் காட்டிலும் காட்டினைச் சார்ந்த நிலப்பகுதியிலும் பூத்துப் புதுமணம் பரப்பினமையால், அப்பகுதியினை முல்லை நிலமென அழைத்தனர். வற்றாது வளம்சேர்க்கும் ஆற்றங்கரை ஓரங்களில் மருத மரங்கள் மிகச் செழிப்புடன் வளர்ந்து வந்தன. அம்மரங்களில் கொத்துக் கொத்தாகப் பூத்துக் காணப்பட்ட மருத மலர்கள், அந்நிலத்து வாழ்ந்த மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. அதனால், அந்நிலத்திற்கு மருதம் என்று பெயரிட்டனர். கடற்கரை ஓரங்களில் உள்ள கழிகளில் காண்பார் உள்ளத்தைக் கவரும் வண்ணம் நெய்தல் பூக்கள் மலர்ந்து மணம் பரப்பின. அந்நிலத்து வாழ்ந்த மகளிர் அப்பூவினை மிக விருப்பத்தோடு தங்கள் குழலில் சூடிப்போற்றினர். கடற்கரையில்மட்டும் காணப்படும் இப்பூவினைக்கொண்டே, கடலும் கடலைச் சார்ந்த நிலப்பகுதியையும் நெய்தல் நிலம் என்று அழைத்தனர். நீரற்ற வரண்ட நிலப்பகுதியில் பாலை மரங்கள் செழித்து வளரும் தன்மையுடையன. இப்பாலை மரங்கள் மிகுதியாக வளர்ந்த நிலப்பகுதியைப் பாலைநிலம் என்று வழங்கினர்.

நாகரிகத்தின் கதை :

நானிலத்திலும் தனிப்பட்ட நாகரிகப்பண்பாடு தோன்றி வளர்ந்தது. குறிஞ்சியில் மக்கள் வேட்டைகளாக

---

1. தொல். அகத். 5.

வாழ்ந்து நாகரிக வளர்ச்சியுற்றனர். முல்லையில் மக்கள் ஆடு மாடு மேய்த்து வாழும் ஆயர்களாக வாழ்ந்து நாகரிக வளர்ச்சி பெற்றனர். மருத நிலத்தில் மக்கள் உலகுக்கு உணவளிக்கும் உழவுத் தொழிலில் ஈடுபட்டு நாடு நகரங்களை அமைத்து நாகரிகத்தின் மலர்ச்சியைக் கண்டனர். நெய்தல் நிலத்தில் மக்கள் மீன் பிடிப்பவராக வாழத் தொடங்கி அலைகடலில் அஞ்சாது மரக் கலன்களைச் செலுத்தி அயல் நாடுகளோடு பெரும் கடல் வாணிகம் நடத்தி வாழ்வும் வளனும் பெற்றுச் சிறப்புற் றனர். இவ்வாறு நானிலத்திலும் தனிப்பண்பும் தனிச் சிறப்பும் வாய்ந்த நாகரிகம் தோன்றி வளர்ந்ததைக் காணுகிறோம். ஆயினும், ஒரு நிலத்து நாகரிகம் இன்னொரு நிலத்தின் நாகரிகத்திற்கு அடிப்படையாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. குறிஞ்சி நிலத்திலே நாகரிகம் அரும்பியதையும், முல்லை நிலத்தில் போதாகிய தையும், மருத நிலத்தில் மலர்ந்து மணம் பரப்பியதையும், நெய்தல் நிலத்தில் நாகரிகத்தின் நறுமணம் கடல் வாணிகம் என்னும் தென்றலில் தவழ்ந்து அயல்நாடு களில் சென்று வீசியதையும் சரித்திரம் பேசுகிறது. பாலையில் மக்கள் நாடோடிகளாக வாழ்ந்தனர் என்று கூறுவர். பாலையின் வெம்மை தாங்காது நாகரிக நறுமலர் அங்கு வாடி வதங்கி உலர்ந்து உதிர்ந்தது போலும்.

நாட்டுப்பிரிவு :

இந்நானிலத்தும் வாழ்ந்த மக்கள் எண்ணத்தெளிந்து, அறிவைப் பெருக்கிக், கலைகளை வளர்த்து நாடு நகரங்களை அமைத்து நல்லதொரு அரசினை அமைத்துக் கொண்ட காலத்தில் தமிழகம் பல சிறுநாடுகளாகப் பிரிக்கப்பட்டுத் தனிப்பட்ட அரசுகளாகத் திகழ்ந்தன.

'வளமிக்க தமிழ் கூறும் இந்நானிலத்தை முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் ஆண்டு வந்தனர்.[1] தொல்காப்பியர் காலத்தில் தமிழகம் பன்னிரு

1. "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்"
—தொல். செய்யுள்-78.

நாடுகளாகப் பகுக்கப்பட்டு இருந்தன.[1] அவை பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு என்பனவாகும்.[2]

மக்கள் :

நானிலத்தில் வாழ்ந்த மக்கள், தாங்கள் வாழ்ந்த நிலத்தாலும், செய்த தொழிலாலும் பெயர் பெற்றனர்.[3] ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய நிலத்தலைவர்கள் சிறப்புப் பெயர் பெற்றனர். குறிஞ்சிநில மக்கள் கானவர், வேட்டுவர், குறவர், குறத்தியர், எனவும்; கல்லைநிலமக்கள் இடையர், பொதுவர், ஆயர், ஆய்ச்சியர் எனவும், மருத நிலமக்கள் காராளர், உழவர், உழத்தியர், எனவும், நெய்தல் நிலமக்கள் திமிலர், பரதவர், நுளையர், நுளைச்சியர் எனவும்; பாலையில் வாழ்ந்தோர் எயினர், எயிற்றியர் எனவும் பெயர் பெற்றிருந்தனர். ஆயர் என்பது முல்லை நிலத்தில் வாழ்வாளரைக் குறித்து வழங்கிய நிலப் பெயராகும். உழவர், வேட்டுவர் என்பவை முறையே நிலத்தை உழுவதையும், வேட்டை ஆடுதலையும் தொழிலாகக்கொண்டு வாழ்ந்த மக்களுக்கு வழங்கிய தொழிற் பெயராகும்.

குறிஞ்சி நிலத்தலைவனை வெற்பன், சிலம்பன், பொருப்பன் எனவும்; முல்லை நிலத் தலைவனை அண்ணல், தோன்றல், குறும்பொறைநாடன் எனவும்; மருத நிலத் தலைவனை ஊரன், மகிழ்நன் எனவும்; நெய்தல் நிலத் தலைவனைச் சேர்ப்பன், திரையன், துறையன், கொண்கன் எனவும்; பாலை நிலத் தலைவனை மீளி, விடலை எனவும் வழங்கி வந்தமையால் நிலத் தலைவர்களுக்கு எனத் தனிச் சிறப்பு வாய்ந்த பெயர்கள் இருந்தமை தெரியவருகிறது. அவ்வாறே நிலத் தலைவர்களின் மனைவியர் முறையே கொடிச்சி, மனைவி, மனையாள், என்றும் சிறப்பாகக் கூறுவது மரபு.[4]

---

1. "செந்தமிழ் சேர் பன்னிரு நிலத்தும்" —தொல். எச்ச. 4
2. தொல். எச்ச. சூ: 4. சேனாவரையர் உரை.
3. "பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே" —தொல். அகத். 20
4. தொல். அகத். 22

ஐந்திணைக்கும் சிறப்பாக உரிய பழங்குடி மக்களன்றி, நானிலத்திற்கும் பொதுவானவர்களாக அறிவிலும், ஆற்றலிலும், நாகரிகப் பண்பாட்டிலும் சிறப்புடையவர்களாக விளங்கிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைக் குடியைச் சார்ந்த மக்களும் இருந்தனர்.[1] தாமே பொருளைத் தேடி வாழ்க்கை நடத்துவதற்குரிய செயல் திறனில்லாது, பிறரிடம் தாழ்ந்து, பணிந்து தொண்டு செய்து வாழும் மக்கள் கூட்டம் ஒன்று இருந்தது. அவர்கள் நானிலத்துப் பெருமக்களுக்கு ஏவல் புரியும் வேலையாட்களாகவும், பணியாற்றும் அடிமைகளாகவும் வாழ்ந்து வந்தனர்.[2]

பண்டைத்தமிழ்மக்களிடம் காணப்படும் இப்பாகுபாடு 'தொழில் வகையால் தோன்றியவையே தவிர, பிறப்புப் பற்றி வேற்றுமை வளர்க்கும் சாதிப் பாகுபாடு அன்று; உண்ணல், உறவு கொள்ளல் முதலியவற்றில் வேறுபாடு காணும் சாதி முறை மிகப் பழங்காலத்தில் தமிழகத்தில் இருந்ததில்லை.'

பண்டைக் காலத்திய மக்கள், தாங்கள் செய்துவந்த தொழில்களிலேயே தங்கள் வழித்தோன்றல்களையும் ஈடுபடுத்தினர். இவ்வாறு பல குடும்பங்கள் தங்கள் மூதாதையர் செய்துவந்த தொழில்களையே பன்னெடுங்காலம் தொடர்ந்து செய்து வந்தன. இவ்வாறு குறிப்பிட்ட குடும்பங்கள் குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டமையால் நாளடைவில் அக்குடும்பங்கள் அவ்வத் தொழில்களில் தொழில் திறனும், நுண்ணிய அறிவும் பெற்ற தொழிற் கூடங்களாக விளங்கின. இவ்வாறு ஆதிகாலத்தில் தொழில் முறைப் பாகுபாடு (Division of Labour) நெறி பற்றித் தொழில் துறையில் ஈடுபட்ட குடும்பங்களே பிற்காலத்தில் அத்தொழிலில் அடைந்த முன்னேற்றத்தாலும் சிறப்பாலும், தொழிற் பெயரையே குடிப்பெயராகப் பெற்றுச் சிறப்புற்றன. முதன் முதல் நிலத்தினை உழுது பயிரிடத் தொடங்கிய குடியைச் சார்ந்த மக்கள் பிற்காலத்தில் உழவர்கள் என்ற தொழிற் பெயராலும், வேளாளர் என்ற காரணச் சிறப்புப் பெயராலும் குறிப்பிடப் பெற்றமை இங்கு நினைவு கூரத் தக்கது. இவ்வாறு தொழில்

1. தொல். மரபு. 71, 72, 79, 82.
2. தொல் அகத். 23

முறைப் பாகுபாட்டால் பெயர்பெற்ற மக்களினம் பண்டை உலகின் பல நாடுகளில் இருந்ததெனவும், இப்பாகுபாடு பிற்காலத்திய சாதிப் பாகுபாட்டைப் போன்றது அன்று என்றும் ஜே. ஜி. பிரேசர் என்னும் அறிஞர் தெளிவாக விளக்கியுள்ளார்.

மக்கள் வாழ்க்கை · (1) குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கை

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த கானவர், குறவர், குறத்தியர் என்பார் ஆதிகாலத்தில் அங்குமிங்கும் அலைந்து திரியும் நாடோடிகளாக வாழ்ந்தனர்; வில்லும் அம்பும் கொண்டு விலங்குகளை வேட்டையாடியும், கொடிய விலங்குகளை வேல் கொண்டு கொன்றும் வாழ்ந்தனர். வேட்டையில் கொன்ற விலங்குகளின் தோலை உறித்துப் பதப்படுத்தாது ஆடையாக உடுத்தினர். அவர்கள் உடல் வலிமையுடைய வீரர்களாக விளங்கினர். அவர்களுடைய மகளிர் தோலினையும், தழையினையும், மரப்பட்டைகளையும் தங்கள் உடலை மறைக்கும் ஆடையாக உடுத்தினர்.

குறத்தியர் மலையில் வளர்ந்துள்ள மூங்கிலைக் கொண்டு கூடை முடைந்தனர். மலையில் விளையும் மூங்கிலரிசி, தினை, ஐவன நெல் முதலியவற்றை உணவாகச் சமைத்து உண்டனர். தேன் கூட்டை அழித்துத் தேனடையைப் பிழிந்து எடுத்த தேனை, தினை முதலியவற்றிற்குத் துணைப் பொருளாகக் கொண்டனர். அவ்வாறே மலையில் விளையும் கிழங்குகளையும் அகழ்ந்தெடுத்து உணவுப் பொருளாகப் பயன்படுத்தினர். தினை விளையும் புனத்தினைக் குறிஞ்சி நில மக்களின் இளமங்கையர் கிளி முதலிய பறவைகளை ஓட்டுவதற்காகப் பரண்களில் அமர்ந்து காவல் புரிந்தனர்; அப்பொழுது அவர்கள் பாடும் இனிய பாட்டைக் கேட்டுக் கிளிகளும், யானைகளும் மயங்கி நின்றன. மலையில் விளையும் நெல்லிற்கு ஐவனம் என்று பெயர். அதனை மலைச்சாரல்களில் மலைவாழ்நர் பயிரிட்டனர்.

மழை பெய்வதனால் மலைகளினின்று வீழும் அருவிகளும், பாறைகளின் இடையே உள்ள பெரும்பிளவுகளில் நீர் தேங்கியுள்ள சுனைகளும், சிற்சில இடங்களில் பாறைகளுக்கு இடையே நீர் கசியும் சுனைகளும் குறிஞ்சி

நிலத்தின் நீர் நிலைகளாகும. மலையிலுள்ள குகைகளிலும், அடர்ந்த காடுகளிலும் மறைந்துவாழ்ந்த புலியும் யானையும் கரடியும் பன்றியும் மலைவாழ்மக்களுக்குப் பெரிதும் இடையூருக இருந்தன. இக்கொடிய விலங்குகளிடம் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளக்கூடிய உள்ள உரத்துடன் தற்காப்பிற்குத் தேவைப்படும் போர்க் கருவிகளைச் செய்யக் கற்றிருந்தனர். மலைச்சாரலில் தேக்கு, வேங்கை, கோங்கு, சந்தனம், அகில் முதலிய மரங்கள் அடர்ந்து வளர்ந்தன. மயிலும் கிளியும் குறமகளிரின் உற்ற தோழியராகவும், விளையாட்டுப் பொருள்களாகவும் விளங்கின. சுனைகளில் நீராடியபின்பு அவர்கள் குறிஞ்சிப் பூவினையும், வேங்கை, குவளை மலர்களையும் கொய்து கூந்தலில் பெய்து தங்களை ஒப்பனை செய்துகொண்டனர். இக்குறவர்கள் கூடிவாழ்ந்த இடங்கள் யாவும் சிற்றூர்களேயாகும். இவற்றைக் குறிஞ்சி என்று கூறுவது வழக்கம். குறிஞ்சி நில மக்கள் தினைப்புனத்தை விலங்குகளிடம் இருந்து காக்கவும், பலவிடங்களில் வாழும் குறிஞ்சி நில மக்களை ஒன்றுகக் கூட்டவும் பறை அறைவார்கள். அதற்குத் தொண்டகப்பறை என்று பெயர். அவர்கள் இசையில் வல்லவர்; யாழெடுத்து இசை மீட்டினால் யானை, கரடி முதலிய விலங்குகளும் அவ்விசை இன்பத்தில் திளைத்து விடுமாம். அந்த யாழினைக் 'குறிஞ்சியாழ்' என்பர். அவர்கள் பாடும் பாட்டு குறிஞ்சிப் பண்ணில் அமைந்ததாகும்.

குறிஞ்சிநில மக்கள் இயற்கையின் எழில்மிக்க அழகொளியைச் 'சேயோன்' எனப் போற்றி வழிபட்டனர். செம்மையான நிறம் உடையவன் என்றும், குழந்தை போன்றவன் என்றும். உள்ளம், உரை, செயல், உலகம் இவற்றிற்கெல்லாம் சேய்மைப்பட்டவனாகியும் நிற்பவன் என்றும் கருதப்படும் 'சேயோன்' ஆகிய முருகனை அன்று முதல் இன்றுவரை மலையுறை தெய்வமாகத் தமிழ்மக்கள் கருதுவதும் போற்றுவதும் முருகன் தமிழர்தம் பழம்பெரும் தெய்வம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. பண்டைக் காலத்துத் தெய்வ வழிபாடு ஆடலும் பாடலும் இணைந்து நடந்ததை எல்லா நாடுகளிலும் காணுகின்றோம். அதைப் போன்று குறவர்களும் குறமகளிரும் முருகனை ஆடியும் பாடியும் பரவி அகமகிழ்ந்தனர்.

முல்லைநில மக்கள் வாழ்க்கை :

முல்லைநில மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். குடும்பம் குடும்பமாக வாழக் கற்றிருந்தனர். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து சிறுசிறு கூட்டங்களாய் அமைந்தன. காட்டு நிலமாகிய முல்லை நிலத்தில் புன்செய்ப் பயிர்களே பெரிதும் பயிரிடப்பட்டன. இயற்கையினை நம்பி மழையினை எதிர்பார்த்து வாழ்ந்தனர். இங்கு வாழ்ந்த மக்கள் வரகு, சாமை, கொள்ளு, கடலை, அவரை, துவரை முதலியவற்றைப் பயிரிட்டனர். இவற்றோடு ஆடு மாடுகளை மேய்த்து, அவற்றின் பாலைக் கொண்டு தயிர், மோர், நெய் முதலியவற்றை உணவுப் பொருள்களோடு சேர்த்து உண்டனர். சில சமயங்களில் அருகிலுள்ள மருதநில ஊர்களுக்குச் சென்று பாலையும், தயிரையும், நெய்யையும் கொடுத்து மாற்றாக நெல்லையும் தங்களுக்குத் தேவையான வேறுபல பொருள்களையும் பெற்றனர். காலையில் ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு காட்டிற்குச் சென்ற ஆயர்கள் மாலையில் கதிரவன் மறையும் அந்தி நேரத்தில் ஊர் திரும்புவர். ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு அதன்பின் இனிய குழலிசை பாடி வருவர். இந்நிலத்தில் மானும், முயலும், பசுவும் வளமும் செழுமையும் உடையதாய் வளர்ந்தன. காட்டுக் கோழியும், புறாக்களும் முல்லை நிலத்துச் சிறப்புமிக்க பறவைகளாகும்.

கொன்றையும் குருந்த மரமும் அந்நிலத்தினை அணி செய்தன. முல்லையும் பிடவும் கார்காலத்தின் மாலைக்காலத்தே பூத்துக் குலுங்கின. அதனை ஆய்ச்சியர் பறித்துத் தங்கள் குழலில் அழகுறச் சூடினர். காட்டாறும் குளங்களும் முல்லை நிலமக்களின் வாழ்க்கைக்கு உதவிய நீர்நிலைகளாகும். ஆடுமாடுகளை ஒன்று சேர்க்கும் பொருட்டுப் பறை அறைவது வழக்கம். அதனை ஏறுகோட்பறை என்பர். ஆயர் முல்லையாழில் சாதாரிப்பண்ணினை இசையெழுப்பி இன்பம் நுகர்வர். இவ்வாயர் கூடிவாழும் ஊர்களைப் பாடி, சேரி, பள்ளி என்று வழங்குவர்.

"மனிதன் நாகரிகம்பெற்று வளரத் தொடங்கியது முல்லை நிலத்திலேயே ஆகும். மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்தது முதல்முதலில் முல்லை

நிலத்திலேயே. அதனால்தான், முல்லை நிலத்தில் பசுக்களை மேய்ப்பதற்கு உதவும் கருவியாகிய கோல், மக்களினத்தின் தலைவனுடைய ஆட்சிக்கு அறிகுறியாக அமைந்தது. அவன் ஏந்திய கோல் அவனுடைய குடி மக்கள் வணங்கும் கோலாக நின்றது. அவன் நல்ல முறையில் நேர்மையாக ஆளும் காலத்தில் அந்தக் கோல் செங்கோல் எனப் புகழப்பட்டது. அவன் நெறிமுறை தவறி ஆளும் காலத்தில் அதுவே கொடுங்கோல் எனப் பழிக்கப்பட்டது. நாகரிகத்தின் தொடக்கமாகிய அக்காலத்தில் அந்தத் தலைவனுக்குச் செல்வமாக விளங்கியவை மாடுகளே. அதுபற்றியே மாடு என்னும் செல்வம் என்னும் பொருளும் அமைந்தது. இவற்றால், இனமாய்க் கூடி ஆட்சிமுறை அமைத்துச் செல்வம் சேர்த்த நாகரிகம் முல்லை நிலத்தில் தோன்றியதை உணரலாம்''[1]

முல்லை நில மக்கள் மாயோனுகிய திருமாலை வழிபட்டனர். மா என்பது கருப்பு. மாயோன் என்பதற்குக் கரியவன் என்பது பொருள். பசிய கடலினையும் நீலவானத்தினையும் கரிய காயாம்பூ மலராகிய பூவைப்பூக்களின் தொகுதிகளையும், ஆங்கெல்லாம் பரந்து நிற்கும் வண்ணத்தையும் வனப்பையும் கண்டு அவற்றிற்கு உள்ளுறு பொருளாய் ஊடுருவி நின்றிலங்கும் செம்பொருளை மாயோன் எனப் போற்றினர். தங்கள் ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்குத் தேவையான புல் செழித்து வளர இன்றியமையாத மழையினை வேண்டி ஆயரும் ஆய்ச்சியரும் ஒன்றுகூடி மாயோனுக்கு விழா எடுப்பர். வயதுமுதிர்ந்த மகளிர் அந்தி நேரத்தில் நாழியில் உள்ள நெல்லையும் மலரையும் எடுத்துத் தூவி, மணிவிளக்கேற்றித் திருமாலை வழிபடுவர். மாயோன் வழிபாட்டினை ஆடலும் பாடலும் அழகுபடுத்தின.

மருதநில மக்கள் வாழ்க்கை

மலைகளிலும், காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்த மக்கள் ஆற்றங்கரையை அடுத்து நிலையாக வாழத் தொடங்கினர். ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்தமையால் உழவுத் தொழிலைச் செம்மையாகச் செய்து உணவுப் பொருள்களை எளிதில் பெற்றனர். மருதநில மக்கள்

1. மு. வ. முல்லைத்திணை—பக். 5-6.

வயிற்றுக் கவலையற்றவர்களாய், இயற்கையின் உதவியைப் பற்றிப் பெரிதும் கவலையுறுது அமைதியான இன்பவாழ்வு வாழ்ந்தனர். இவ்வாறு நிலையாக ஓரிடத்தில் வயிற்றுக் கவலை அற்றவர்களாய் வாழ்ந்தமையால், அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்து கூருத்துவகையால் முன்னேற்றம் அடைந்தனர். மருதநிலம் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாகவும் அந்நில மக்களாகிய உழவர்கள் நாகரிகத்தின் தூதுவர்களாகவும் விளங்கினர்.

ஆற்றங்கரைகளிலே வாழ்ந்த இம்மக்கள், ஆற்று நீரினைத் தேக்கி, வயல்களுக்குப் பாய்ச்சிச் செந்நெல்லும் வெண்ணெல்லும் விளைவித்தனர். அவர்கள் காடுகெடுத்து நாடாக்கிக் குளம்தொட்டு வளம் பெருக்கி உழவு செய்யும் வகையினை முதல் முதல் கண்டறிந்த நாகரிக உயர்குடி மக்கள். இவ்வளமிக்க நிலப்பகுதியில் வற்றுத ஆறுகளும், பொய்கைகளும் தாளாண்மை மிக்க வேளாண் மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. எருமையும் நீர்நாயும் அந்நிலத்தின் விலங்குகளாகும்; அன்னமும், அன்றிலும், நீர்க்கோழியும் வளமுடன் வாழ்ந்தன. மருத மரமும், வஞ்சியும், காஞ்சியும் மருதநிலத்தில் செழித்துவளர்ந்தன. நீர்நிலைகளில் தாமரையும் செங்கழுநீர் மலர்களும் மலர்ந்து மணம் பரப்பின. தாமரைமலரினை உழத்தியர் ஆர்வமுடன் பறித்துத் தங்கள் கூந்தலில் அணிந்தனர்.

மருதநில மக்கள் மரத்தினால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர். நெற்களஞ்சியங்களை மரத்தினால் அமைத்தனர். வண்டிகளை மரத்தினால் செய்தனர். நெல்லரிப் பறையும் மருதயாழும் உழவரின் இசைக்கருவிகளாக இருந்தன. உழவர்கள் ஒன்றுகூடி வாழ்ந்த இடங்கள் ஊர், பேரூர் என்று வழங்கப்பெற்றன. மக்கள் கூட்டம் கூட்டமாக ஊர்ந்து சென்று ஒன்றுகூடி ஒரு சமுதாயமாக நிலைத்து வாழத்தொடங்கிய இடமே ஊரெனப் பட்டது. நாளடைவில் மக்கள் தொகை பெருகிய காலத்து உழவிலும் தொழிலிலும் வளர்ச்சி அடைந்து, அறிவிலும் பண்பிலும் சிறந்து, கலையினைப் போற்றி வாழ்ந்தபொழுது சிற்றூர்கள் பல சேர்ந்து பேரூர்களாகச் சிறப்புற்றன. இப்பேரூர்களே நகரங்கள் எனப்பட்டன. இந்நகரங்களில்

சிறப்புடன் வளர்ந்த வாழ்க்கை முறையே 'நாகரிகம்' என்பதாகும். இந்நாகரிகத்தின் உயிர்நாடியாக உழவுத் தொழில் விளங்கியது. 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்ற வள்ளுவர் வாய்மொழியின்படி பண்டைக்கால நாகரிக நாடுகள் அனைத்தும் வேளாண்மையிலே சிறந்து விளங்கியனவாகும். இவ்வாறு நாகரிகத்தின் தொட்டிலாகத் தொல் பழங்காலத்தில் தமிழகத்தின் மருதநிலம் மாபுண்டு விளங்கியது.

மருதநில மக்கள் வேந்தனைக் கடவுளாக வழிபட்டனர். அக்கால மக்கள் நல்ல அரசனின் ஆளுகையில் எல்லா நன்மைகளுய் உண்டாகின்றன என்று நம்பினர்கள். ஆகவே, அவர்கள் எல்லா நல்ல பண்புகளும் அமைந்த அரசனைத் தெய்வமாக வணங்கினர்கள். பிற்காலத்தில் வேந்தன் இந்திரன் எனப்பட்டான். "இந்திரனை வேந்தன் என்பதற்குக் காரணம் அவன் மழைத்தெய்வமாதல் பற்றியும், வயலுக்குநீர் இன்றியமையாமை பற்றியுமாகும். 'இன்திறன்' என்ற சொற்றொடரே இந்திரனென மருவிற்று"[1] என்பர் பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள். தொல்காப்பியர் கூறும் வேந்தன் வேறு; பிற்காலத்திய புராணங்கள் கூறும் இந்திரன் வேறு. "ஆரியர் வணங்கிய இந்திரனும் தமிழர் வணங்கிய இந்திரனும் ஒருவர் அல்லர். ஆரியர்க்குரிய இந்திரன் இடி மழை மின்னல் முதலிய வற்றிற்குரிய தெய்வமாதலோடு அவர்தம் பகைவரோடு போராடுங்கால் அவர்க்கு உதவியுந் துணையுமாய் நின்று அவர்க்கு வெற்றியைத் தருபவனுகவும் அவர்தருஞ் சோமச் சுற்றையும் விலங்கின் இறைச்சியையும் நிறைய உட்கொண்டு அவர் வேண்டிய நலங்களை எல்லாம் அவர்க்கு விளைப்பவனுகவும் சொல்லப்படுகிறுன். தமிழர் வணங்கிய வேந்தனே வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தில் உள்ள உழவர்களால் மழையின் பொருட்டு மட்டும் வேண்டி வணங்கப்பட்ட மழைக்கடவுள் ஆவன்; மழையின் பொருட்டாகவன்றி வேறெந்த நன்மைப் பேற்றின் பொருட்டாகவேனும் தமிழர்களால் அவன் வணங்கப்பட்டவன் அல்லன்.....தமிழர் மழையை வேண்டி வணங்கிய 'வேந்தனும்' ஆரியர் மழையின் பொருட்டாகவும் வணங்கிய இந்திரனும்' மழைக்கடவு

1. கா. சு. பிள்ளை : பழந்தமிழர் நாகரிகம், பக். 21—22.

ாதல் பற்றிப் பிற்காலத்தவரால் அவ்விருவரும் ஒருவ ராகக் கொள்ளப்படுவாராயினர்; அவ்வாறு கொள்ளப் படினும் தமிழர்க்குரிய வேந்தனுக்கும், இருக்குவேத ஆரியர்க்குரிய இந்திரனுக்கும் ஏதோர் இயைபும் இல்லை என்பது அவ்விருவர் தம் பழையநூல்களையும்நன்காராய்ந்து பார்க்கும் நடுநிலையாளர்க்கும் நன்கு விளங்கும்.....''

''உற்று ஆராயுங்கால் தமிழர்க்குரிய 'வேந்தன்' என்பான் தமிழர்க்குள் முதன்முதல் தலைவனாய்த் தோன்றி, மழை பெய்யுங்காலமும், அம்மழையின் உதவியால் பயிர்செய்வதற்கேற்ற வளவிய நிலமும், அந்நிலத்தைச் திருத்திச் செவ்வனே பயிர் விளைக்கும் வகைகளும் நன்குணர்ந்து உழவுத் தொழிலைக் கற்பித்துத் தமிழ்மக்களை மேல்நிலைக்குக் கொணர்ந்தவன் ஆதல் வேண்டும் என்பது புலப்படும். நன்றி செய்த முன்னோரை நினைந்து அவர்களைப் பரவுதல் தமிழர்க்கு இயற்கை யாதலால், அவர் காலவழியில் வந்த மருத நிலத்து உழவர் முதல் வேந்தனான அவனது ஆவியை வேண்டி வணங்கு வாராயினர் என்க'' [1] என்பது தமிழ்க்கடலாகிய மறைமலை அடிகள் தந்துள்ள விளக்கமாகும்.

மருதநிலத் தெய்வமாகிய 'வேந்தன்' தமிழர்தம் தெய்வமே என்பதனைப் பேராசிரியர் பி. தி. சீநிவாச ஐயங்கார் பல காரணங்கள் தந்து விளக்கியுள்ளார். ''தென் இந்தியமக்கள், பழங்கற்காலத்தின் இறுதி நாட்களிலேயே நிலத்தினை உழுது பயிரிடக் கற்றனர் என அறிகின்றோம்; உழவுத் தொழிலினை மேற்கொண்ட மக்கள் தமிழகத்தில் மருத நிலத்திலேயே வாழ்ந்து வந்தனர். அவர்கள் வளமண்டலத் தெய்வம் ஒன்றினைத் தொன்று தொட்டு வழிபட்டு வந்திருக்கவேண்டும். உணவுப் பொருள் களைப் பயிரிடுவதில் ஈடுபட்ட வேளாண் மக்கள், உழவுத் தொழிலுக்குப் பெரிதும் இன்றியமையாத மழையினைத் தரும் தெய்வம் ஒன்று உண்டெனக் கருதியது இயற்கையே யாகும். 'வேந்தன்' ஆரியர்களிடம் இருந்து கடன் வாங்கப்பட்ட இந்திரனாக இருந்தால், தமிழகத்தில் மருத நிலத்தில் வாழும் மக்கள் மட்டும் வழிபடும் தெய்வமாக அவன் விளங்குவதும், விந்தியத்திற்கு வடக்கே எல்லா

1. மறைமலை அடிகள் : வேளாளர் நாகரிகம், பக். 58-59

மக்களும் வணங்கும் தெய்வமாகக் காணப்படுவதற்குரிய காரணம் யாது?

ஆரியர்கள் தென்னிந்தியாவில் குடியேறியபோது அவர்களுடைய சமயக் கருத்துக்கள் தென்னாட்டில் பரவின. அந்நிலையில் ஆரியரின் இந்திரனுக்குரிய பண்புகளை ஒட்டி மருதநிலத் தெய்வமான வேந்தன் தேவர்களுக்கு எல்லாம் அரசனான இந்திரனாகக் கருதப்பட்டான். இக்கருத்து, பண்டைத்தமிழர்க்கும் ஆரியருக்கும் இடையே உண்டான கலப்பு முழுநிறைவடைந்த காலத்தில் தோன்றியது ஆகும். மேலும் இந்திர வழிபாட்டினை ஆரியர்கள் செய்த முறைக்கும் மருதநிலத்தமிழர்கள் செய்த முறைக்கும் மிக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, வட நாட்டு இந்திரனைத்தான் தமிழகத்தில் வாழ்ந்த மருதநில மக்கள் வழிபட்டனர் என்று கூறுவது பொருத்தமற்றதாகும்.' [1]

மேற்கண்ட இருபெரும் பேராசிரியர்கள் தந்துள்ள விளக்கங்களினால், வேந்தன் என்பான் தமிழர்க்கே உரிய மருதநிலக்கடவுள் என்பது தெளிவாகிறது. பிற்காலத்தில் இந்திரனுடைய பண்புகளை வேந்தனுக்குரியதாகச் சேர்த்துக் கூறியதனால், 'வேந்தன்' என்ற தனித் தமிழ்ப்பெயர் மறைந்து 'இந்திரன்' என்ற வடமொழிப் பெயர் தமிழகத்தில் செல்வாக்குற்றது. இக்குழப்பத்திற்குப் பிறகுதான் மருதநிலக் கடவுள் இந்திரன் என்று வழங்கப்பட்டான். இதனின்று இவ் 'இந்திரன்' தமிழரின் கடவுளன்று; ஆரியர் தெய்வக் குடும்பத்திலிருந்து 'இறக்குமதி' செய்யப்பட்டவனே என்ற தவருன கருத்து முற்றிலும் பொய்யானது என்பது இனிது விளங்குகின்றது.

நெய்தல்நில மக்கள் வாழ்க்கை :

சுடற்கரையில் வாழ்ந்த மக்கள் மீன்பிடித்தும் உப்பு விளைவித்தும் வாழ்ந்தனர். அவர்கள் உப்பொடு உலர்த்திய கடல்தரும் செல்வத்தையும் உப்பையும் உள்நாட்டில் உள்ள ஊர்களுக்கு எடுத்துச்சென்று பண்டமாற்றுகக் கொடுத்துத் தமக்கு வேண்டிய நெல்லையும் பிற பொருள்களையும் பெற்று

1 P. T. S. Aiyangar, Pre-Aryan Tamil Culture, PP. 27-28.

வருவர். நெய்தல் நில மக்கள் மரத்தைக் குடைந்து குடைவு தோணிகளைச் செய்தனர். அவற்றோடு பெரும் நாவாய்களையும் செய்தனர். முதன் முதலில் அவர்கள் கருங்கடலில் கரைக்கு மிக அருகில் உள்ள பகுதி வரைத் தோணிகளில் சென்று மீன்பிடித்து வந்தனர்; பிற்காலத்தில் அலைகடலில் நாவாய்க்ளோட்டி அயல்நாடு களுக்குச் சென்று தமிழகத்தின் ஆடைகளையும், மணிகளை யும் மரங்களையும் பிறநாட்டுப் பொருள்களுக்கு மாற்றுகக் கொடுத்து வாணிகம் செய்துவந்தனர்.

இவ்வலைஞரின் மகளிர் தழையுடை உடுத்தினர். தந்தை அல்லது கணவன் கடலிலிருந்து கொண்டுவந்த மீன், இறுல் முதலியவைகளைக் காயவிட்டுப் புன்னைமர நிழலிலிருந்து கடல் காக்கை முதலிய பறவைகளை ஓட்டிக் காவல் புரிந்தனர். நெய்தல் நிலமக்கள் பனைமரங்கள் செறிந்த கடற்கரை வெளியில் சிறுகுடில்கள் அமைத்து வாழ்ந்தனர். அக்குடில்கள் வழல் என்னும் புல்லாலும், பனையலைகளாலும் வேயப்பட்டன. உப்பு வண்டிகளை இழுததுச் செல்ல எருதுகளைப் பயன்படுத்தினர். சுறுமீனும் முதலையும் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பெரும் அச்சத்தை விளைத்தன. அங்குப் புன்னை, தாழை முதலிய மரங்கள் அடர்ந்து வளர்ந்தன. தாழம்பூவையும் நெய்தல் மலரையும் நுளைச்சியர் அழகுற அணிந்தனர். கடல்நீரும் கேணிநீரும் நெய்தல் நிலமக்களால் பயன் படுத்தப்பட்டன. அவர்கள் நாவாய்ப்பறை அறைந்து, நெய்தல் யாழிலே செவ்வழிப்பண்ணினை இசைத்து இன் புறுவர்; நெய்தல் நிலமக்கள் வாழ்ந்த ஊர்களைப் பட்டினம், பாக்கம் என்று வழங்குவர். இம்மக்கள் முழுமதி நாளன்று கடற்கரையில் சுறுக்கொம்பினை நட்டுப் பூமாலை சூட்டுவர். தாங்களும் மலர்களையும் தழைகளையும் தலையில் அணிந்து ஆடல்பாடலுடன் தங்கள் நிலத் தெய்வமாகிய வண்ணனை வழிபட்டனர். "நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வண்ணன் என்பது. வண்ணன் என்ற சொல்லே வருணனுபிற்று. வண்ணன் என்பது கடல்நிற வண்ணனுகிய திருமாலினைக் குறிக்கும் என்ப. நீர்த்தெய்வம் அவனுதல் காண்க". [1] பிற்காலத்தில் வண்ணன் வருணனுக மருவியபொழுதும்,

1. கா. சு. பிள்ளை : தமிழர் சமயம் : பக். 123.

நெய்தல் நில மக்களால் வழிபடும் தலிழருடைய தெய்வ மாகவே கருதப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாலைநில மக்கள் வாழ்க்கை :

முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தத்தம் இயற்கைப் பண்பில் வேறுபட்டு ஒன்றுக் கலந்து வறண்ட வெப்பமிக் குடையதாய் நல்லியல்பு இழந்து விளங்கும் நிலப்பகுதியே பாலை எனப்பட்டது. இங்கு வாழ்ந்த மக்கள் எயினர், வேடர், புளிஞர், மறவர் என்றி பலவகையாகக் கூறப்படு வர். அவர்கள் செம்மையுறீத் அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கை உடையவராய் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த நிலம் வளமற்றும், பயிர்த் தொழிலுக்குத் தகுதி யற்றும் இருந்தமையால், அவர்கள் வன்முறை வாழ்க்கை வாழவேண்டிய நெருக்கடிக்கு ஆளானர்கள். அதனல் கொடிய பண்பினை இயல்பாகவே பெற்றனர்.

மணல் வெளிகளின் இடையிடையே கிடக்கும் பற்றை களில் தங்கி வேட்டையாடியும் வழிச் செல்வோரை வழிப் பறித்தும், முல்லை நிலத்திற்குச் சென்று பசுக்களைக் கொள்ளை அடித்தும் வாழ்ந்தனர். இந்நிலத்தில் பருந்து, புரு, கழுகு முதலிய பறவைகளும், வலியற்ற யானை, புலி, செந்நாரை முதலிய விலங்குகளும் கதிரவனின் வெப்பம் பொறுக்காது வாடிய உடலுடன் உண்பதற்கு யாதொரு பொருளும் கிடைக்காமையால் அதனை நினைந்து ஏங்கிய வண்ணம் அந்நிலத்து அலைந்து திரிந்தன. இலுப்பை, பாலை, ஓமை, உழிஞை, எருமை முதலிய மரங்கள் உலர்ந் தும் கரிந்தும் காணப்பட்டன. வறண்ட சுனைகளும் கிணறுகளும் பாலைநிலத்து நீர் ஊற்றுக்களாகும். இவ் வன்கண் மறவர் பயன்படுத்திய பறையினை நிரைகோள் பறை என்றும், சூரைகோள் பறை என்றும் கூறுவர். அவர்கள் பாலையாழில் இன்னிசை எழுப்பி இன்புறு இயல் புடையோராய் வாழ்ந்தனர்.

மறவரின் குடிசைகள் ஈச்சமரத்தின் ஓலைகளால் வேயப்பட்டிருந்தன. மறக்குல மங்கையர் எறும்புப் புற் றுக்களைக் கிண்டிப் பெற்ற புல் அரிசியை முற்றத்தில் உள்ள நிலவரலில் இட்டு இடித்து அரிசியாக்கிச் சோறு சமைப்பர். மறவர் கூட்டமாகக் கூடிவாழும் இடம் பறந் தலை, கொல் குறும்பு எனப் பெயர் பெறும். இந்நில மக்

கள் கொற்றவையையும் கதிரவனையும் வழிபட்டனர். கொற்றவைக்கு விலங்குகளைப் பயிரிட்டனர். சில சமயங்களில் மனிதர்களையும் பலியிட்டதாகத் தெரிகின்றது. அவர்கள் இறந்த வீரர்களின் நினைவுக்கு அறிகுறியாக, அவர்களைப் புதைத்த இடங்களில் கற்களை நட்டு, அவற்றை வீர வழிபாட்டுக் குரியதாகப் போற்றினர்.

சமுதாயத் தலைவர்கள் :

ஐவகை நிலங்களில் வாழ்ந்த பழங்குடி மக்கள் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் மூதுகெலும்பாக விளங்கினர். அவர்களுள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய மக்கள் சமுதாயத்தின் சிறந்த உறுப்புக்களாகக் கருதப்பட்டனர். நாளடைவில் அவர்களுள் கல்வி கேள்விகளில் ஒரு சாரார் சிறந்து விளங்கினர். இன்னொரு சாரார் வீறுபடைத்த வீரம் பொருந்தியவர்களாக எச்செயலிலும் தலைமையேற்றுத் தாங்களே முனைந்து நின்று தொண்டாற்றுவதில் இணையற்று விளங்கினர். மற்றொரு சாரார் வாணிகத்தில் நாட்டம் உடையவராய், தத்தம் ஊர்களிலும் நாடுகளிலும் கிடைத்த பொருள்களை அயல் ஊர்களுக்கும் அயல் நாடுகளுக்கும் எடுத்துச் சென்று பண்ட மாற்றுக் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று வீடு திரும்பினர். மக்கள் உயிர் வாழ இன்றியமையாத உணவுப் பொருள்களைப் பன்னெடுங் காலமாகப் பயிரிடுவதில் ஒரு கூட்டத்தார் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தனர். இவ்வாறு நான்கு துறைகளில் ஒப்பாரும் மிக்காருமின்றி மாண்புற்று விளங்கிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் குடியைச் சார்ந்த மக்கள் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் தலைவர்களாகக் கருதப்பட்டனர்.

அரசர் :

பண்டைத் தமிழரிடையே அரசியல் அமைப்புத் தொல் பழங்காலம் முதல் இருந்து வருகிறது. இதற்குச் சான்றாகக் கோன், ஏந்தல், வேந்தன், மன்னன், குரிசில், இறைவன், வள்ளல், அண்ணல், குறுநில மன்னர் முதலிய பழந்தமிழ்ச் சொற்களைக் கூறலாம். அரசன் குடிகளை ஆள்வது ஆட்சி எனப்பட்டது. ஆள் என்பது குடிமகனுகிய ஒரு மனிதனைக் குறிக்கும். ஆட்சி என்பது குடி

மக்களை, இடையன் மந்தைகளைக் காப்பது போல் பகைவரி னின்றும் காப்பது எனப் பொருள்படும். அரசனுக்குப் பழைய பெயர் கோ அல்லது கோன் என்பதாகும். இதற் குப் பசுக்களை மேய்ப்பவன் என்பது பொருள். இதனால் ஆட்சி முதன்முதல் முல்லை நிலத்தில் தோன்றி வளர்ச்சி அடைந்தது என்பதை அறிகின்றோம்.

தொல்காப்பியர் காலத்தில் முடியுடை மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்டு வந்தனர்.[1] அம்முப்பெரும் வேந்தர் களாகிய சேர, பாண்டிய, சோழ மரபினர் முறையே பனம் பூமாலை, வேப்பமாலை, ஆத்திமாலை ஆகியவற்றைத் தங்கள் குடிக்குரிய அடையாள மாலையாகச் சூடினர்.[2] தமிழ்மன்னர்கள் நன்கு பயிற்சி பெற்ற நால்வகைப் படையினைப் பெற்றிருந்தனர். வெண்கொற்றக் குடை யும், வில், கயல், புலி பொறித்த கொடிகளையும் கொண்டு இருந்தனர். வேந்தனுக்கு இன்றியமையாத முடியும், குடிமரபை உணர்த்தும் மாலையையும் அணிந்து அரசு கட்டிலில் அமர்ந்து செங்கோல் ஒச்சினர். அவர்கள் கையில் ஏந்திய செங்கோல் அறநெறியினை அறிந்து நடு நிலைமை தவறாது நேர்மை மிக்க ஆட்சி நடத்துவதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்கியது. அரசர் படைக்கலப் பயிற்சி பெறல், இறைகோடல், அறம்பிற ழாது ஆட்சி செலுத்தல், அழிகுடி ஓம்புதல், தக்கார்ப் போற்றல் என்னும் ஐவகைக் கடமைகளைச் செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர்.

மருதநிலத்தில் உள்ள ஊர் மன்னனுடைய தலைநக ராக விளங்கியது. அவன் நிலத் தலைவனுகக் (Feudal Lord) கருதப்பட்டான். மருதநிலத் தலைவனுகிய வேந் தனே அந்நிலத் தெய்வமாகப் போற்றப்பட்ட ஒரு காலம் இருந்ததெனத் தெரிகிறது.

அரசர்கள் ஆடன் மாந்தரையும், பாடல் பாணரையும், கருவிப் பொருநரையும், அவர்களின் மகளிராகிய விறலியை யும், பாடினியையும், சொல்லேர் உழவராகிய புலவர் பெரு மக்களையும் போற்றி ஆதரித்தனர். அவர்களுடைய கலைத்திறனைப் பாராட்டிப் பல பரிசுகள் வழங்கினர்.

1. தொல். செய்யுள், 78
2. தொல். மரபியல், 72.

மன்னர்கள் அவைக்களத்தில் கொலுவீற்றிருக்கும்பொழுது அறிவுசான்ற அறிஞர்களோடு நூல்களைக் கேட்டு, அவற்றின் விழுமிய கருத்துக்களைத் தங்கள் உள்ளத்தில் தேக்கிப் பேருவகையோடு பாநலம் வாய்ந்த தமிழ்ச் சான்றோர்களுக்குத் தக்க பரிசுகள் தந்து போற்றினர்.[1] இவ்வாறே இசைத்தமிழ் வல்ல இசைவாணர்களையும், நாடகத் தமிழில் சிறந்த நடிப்புப் புலவர்களையும் பாராட்டும் பண்புடையவராய்ப் பண்டைத் தமிழ் அரசர்கள் பேரும் புகழும் பெற்று விளங்கினர்.

அந்தணர் :

உலகில் உள்ள உயிர்களிடத்து அருள் நோக்குடையராய், அன்பும் பண்பும் நிறைந்து அனைத்துயிரும் தம் முயிர்போல் நினைந்து ஒழுக வல்ல சான்றோர்கள் பலர் அன்றைய தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். அப்பெருமக்களை 'அந்தணர்' என்ற அழகிய சொல்லால் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அழகிய குளிர்ச்சி பொருந்திய அருள் அறு ஒழுக்கத்தை உடையோர் என்பது இச்சொல்லின் பொருள். அரச வாழ்க்கையில் பேரின்பத்தினை நுகர்ந்து, இன்பக் கடலில் திளைத்த மன்னர்கள், அவ்வாழ்விலே வெறுப்படைந்தவர்களாய் உறுதிப் பொருளை அறிய வேண்டும் என்னும் பேராவல் கொண்டு, மெய்யுணர்வு பெற்று அரச வாழ்வைத் துறந்து அறவோராக விளங்குதல் உண்டு.[2]

வேளாளர், வணிகர் குடிமக்களும் மெய்யுணர்வு பெற விரும்பி, அறவாழ்வினை மேற்கொண்டு அந்தணர்களாகத் திகழும் பேறு பெற்றிருந்தனர். இம்முப்பெருங்குடியில் தோன்றிய மூதறிஞர்களைக் கொண்டதே அந்தணர் எனப்படும் அறவோர் மரபாகும். அவர்கள் 'யான்' என்ற அகப்பற்றையும், 'எனது' என்ற புறப்பற்றையும் உள்ளத்தால் துறந்து, உயிர்க்கு உறுகண் செய்யாது, வாழ்வின் விடை காண முடியாத வினாக்களுக்கு விடை காணும் 'பேரா இயற்கைப்' பெரு நெறியில் ஈடுபட்டு வாழ்ந்தனர். அந்தணர் நிலையாக ஓரிடத்தில் தங்காது நாடு

---

1. தொல். சிறப்புப்பாயிரம்: 8-15.
2. "அந்தணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வருஉம் பொருளுமார் உளவே" —தொல்.மரபு. 73.

முழுவதும் சுற்றித் திரியும் இயல்பினர். அவர்களுக்கு 'யாதும் ஊர்' 'யாவரும் கேளிர்'. தங்களுக்குத் தேவையான அற்நூல்களையும், நீர்க் குண்டிகைகளையும், முக்கோலையும், மணையையும் கையில் ஏந்தியவராய்க், கல்வியில் சிறந்த சான்ரோராய்ப் பிற மக்களுக்கு எல்லாம் அறிவுரை கூறும் அறிஞராய், அறவுரை வழங்கும் அறவோராய்த் திகழ்ந்தனர்.[1] அரசர்களுக்கு அறிவுரை வழங்கும் மூதறிஞராய் விளங்கியதோடு, ஒரோ வழி நாடாளும் தகுதியையும் அந்தணர் பெற்றிருந்தனர்.[2] அவர், வெகுளி, மயக்கம் என்னும் குற்றமற்ற தவத்தை முக்காலத்திலும் முறை தவருதியற்றும் மெய்யுணர்வுடையராய் இருந்தமையால் 'அறிவர்' என்று போற்றப்பட்டனர்.[3]

வாணிகர் :

பொருள்களின் விலை சொல்லி விற்றமையால் வாணிகர் எனப் பெயர் பெற்றனர். அவர்கள் எண் வகையான கூலங்களை விற்று வாழ்க்கை நடத்தினர். நெல்லு, புல்லு, ஏரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி ஆகிய எண் வகைக் கூலங்களைப் பயிரிட்டு உழவுத் தொழிலையும் வாணிகர் செய்தனர். தனி வழிகளில் பொருள்களை எடுத்துச் சென்று வாணிகம் செய்தமையால், தற்காப்பிற்காகப் படைக் கலங்களை ஏந்திச் செல்லும் உரிமை பெற்றிருந்தனர். வாணிகர் தலையில் பூவினைச் சூடியும், தம் குடிப் பிறப்பிற்குரிய மாலையை அணிந்தும் செல்லுவது வழக்கம்.[4] 'முந்நீர் ஏழகம் மகடு வோடில்லை'[5] என்பதனால், பண்டைத் தமிழர்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்பே கடலக வாணிகத்தில் சிறப்புற்றிருந்ததை அறிகிறோம்.

வேளாளர் :

உழவுத் தொழிலைச் செய்து வாழ்ந்தோர் 'வேளாளர்' எனப்பட்டனர். 'வேளாளர்' என்னும் சொல் 'ஈகையுடையார்' என்னும் பொருளில் அவர்க்கே வழங்கலா

---

1. தொல்.மரபு: 71
2. தொல். மரபு: 75.
3. தொல். புறத்திணை: 20.
4. பொ. சூ. 432-ன் பேராசிரியர் உரையைக் காண்க.
   -- தொல்.மரபு. சூ. 78, 79, 80 81.
5. தொல். அகத். 37.

யிற்று. 'வேளாண்மை' என்னும் சொல் இவ்வாறு பண்டு தொட்டு ஈகைப் பொருளில் வழங்குதல், "வேளாண்மை யுபகாரம் ஈகையும் விளம்பும்" என்னும் பழைய திவாகரச் சூத்திரத்தால் அறியப்படுகிறது.

வேளாளர் காடு கெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கி உழவு செய்யும் வகையினை முதன் முதல் கண்டறிந்த நாகரிக உயர்குடி மக்களானமையால், அவர்க்கு உழவுத் தொழிலே சிறப்புடையதாகக் கருதப் பட்டது. வேளாளரில் இரு வகையினர் இருந்தனர். ஒரு சாரார் தாங்களே நிலத்தை உழுது பயிரிட்டு வாழ்ந்தனர். இன்னொரு சாரார் தங்கள் நிலங்களைப் பிறர் பாடுபட்டு உழுது பயிரிடுமாறு செய்து வாழ்ந்தனர். அவர்களை முறையே உழுதுண்போர், உழுவித்துண்போர் என்று கூறுவது மரபு. உழுதுண்போர் 'வீழ்ங்குடி' உழவர் எனப்பட்டனர்.

வேளாளர் அரசர்க்கு உதவியாளராய்ப் படைத் தலைவ ரும் அமைச்சருமாக விளங்கினர். மேலும், அரசர் தரும் வரிசைகளைப் பெற்றுக் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்த னர். அவர்கள் அரசரைச் சார்ந்து வாழ்ந்தமையால் வில்லும் வேலும் ஏந்தியவராய்க், காலில் வீரக் கழலும், தலையில் கண்ணியும், தங்கள் குடியின் அடையாள மாலை யோடு, தாரும் அணிந்திருந்தனர். தேரும் குதிரையும் ஊர்திகளாகக் கொண்டு வாழ்ந்தனர். வேளாளர் முடி யுடை வேந்தர்க்கு மகட்கொடை வழங்கும் சீர்சால் விழு மிய நிலை உடையவராய்த் திகழ்ந்தனர்.

"மன்னர் பின்னோர்" என்றமையான் முடியுடை யோரும் முடியில்லாதோரும், உழுவித்துண்போரும், உழு துண்போரும் என மன்னரும் வேளாளரும் பலர் என்றார். வேளாண் மாந்தர்க்கு 'வேந்துவிடு தொழில்' என்னும் மரபியல் சூத்திரங்களான் வேளாளர் இருவகை என்ப. அரசரேவுந் திறமாவன மேலும், நாடுகாத்தன் மேலும் சந்து செய்வித்தன் மேலும் பொருள் வருவாய் மேலுமாம்.

"அவருள் உழுவித்துண்போர் மண்டிலமாக்களும் தண்டத் தலைவருமாய்ச் சோழ நாட்டுப் பிடவூரும், அழுந் தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெஞ்சிக் கலும், வல்லமும் கிழாரும் முதலிய பகுதியில் தோன்றிய

வேளெனவும், அரசெனவும் உரிமை எய்தினோரும், பாண்டிய நாட்டுக் காவிதிப்பட்டம் எய்தினோரும் குறுங்குடிப் பிறந்தோர் 'முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளர் ஆகும்''[1] என்று நச்சினார்க்கினியர் தமிழக வேளாளரைப் பற்றித் தந்துள்ள விளக்கம் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

வேளாளர் இல்லறத்தில் இனிது இருந்து விருந்தோம்பும் நல்லறத்தில் நாட்டம் உடையவராய், பகடு காத்து, கல்வி கற்றும் வாழ்ந்தனர். உழவு, வாணிகம் ஆகிய தொழில்கள் செய்தல், பசுவினை ஓம்பிக்காத்தல், அரசருக்குத் துணையாய் இருந்து நீதி வழங்கல், அமைச்சராயிருந்து நாட்டின் ஆட்சி நலமுறை உதவுதல் முதலியன வேளாளரின் சிறந்த கடமைகளாகக் கருதப்பட்டன.

பார்ப்பார் :

'பார்ப்பான் என்பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான்'[2] என்று பேராசிரியர் மொழிந்துள்ளார். ''தொல்காப்பியத்தில், பார்ப்பார் அந்தணரின்றும் வேறுகவே கூறப்படுகின்றனர். அவர்க்கு அந்தணர் என்னும் பெயர் எங்கும் கூறப்படவில்லை.''[3]

''எல்லாத் தேசங்களிலும் ஆலயங்களில் கடவுளுக்குப் பலி செலுத்தும் குருமார் இருந்தனர். அவ்வகையினர் தமிழ்நாட்டிலும் இருந்தார்கள். இவர்கள் பார்ப்பார் எனப் பட்டனர். கோயில் தொடர்பான காரியங்களைப் பார்த்தலின் இப்பெயர் அவர்களுக்கு இடப்பட்டிருக்கலாம். கடவுள் வழிபாட்டினும் பிறவகையினும் இவர்கள் பொது மக்களுக்கு அறிவு கொளுத்தினர்.''[4]

மாண்புடைய மானம் வாய்ந்த மைந்தருக்கு, அவர்கள் காதலியிடத்துத் தூது செல்லுதல் முதலிய செயலில் பார்ப்பனர் பாங்கராக இருந்து பேருதவி புரிந்தனர். இல்லற வாழ்க்கையில் தலைவன் தலைவியரிடையே உண்டாகும் ஊடலைத் தீர்த்துவைக்கும் வாயிலாகவும்

---

1. தொல். பொருள். அகத். சூ. 30. நச்சி. உரை.
2. தொல். பொருள். 501 பேராசிரியர் உரை.
3. தேவநேயப் பாவாணர்: ஒப்பியன் மொழி நூல்-பக். 42.
4. நா. சி. கந்தையா: தமிழ் இந்தியா-பக். 57.

விளங்கினர்.[1] பார்ப்பார் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறு வகையான தொழில்களைச் செய்து வந்தனர்.[2]

சிந்தனைச் சிற்பிகளாய் எண்ணத்தெரிந்து அறிவைப் பெருக்கிக் கருத்துவகையில் உயர்ந்து, அருளற வாழ்க்கையை மேற்கொண்டு தன்னலங்கருதாத தியாகிகளாகத் திகழ்ந்தவர்களே அந்தணர் எனப்பட்டனர். ஐவகை நில்ங்களில் குறுநிலத் தலைவர்களாக இருந்தவர்களுள் வாள்வலியும் தோள் வலியும் மிகுடையோன் அக்குறு நில மன்னர்களை அடக்கியாளும் ஆற்றல் மிக்க அரசனாக விளங்கினன். இவ்வாறு நிலத்தலைவர்களுக்குள் ஆற்றல் மிக்க தலைவனாகச் சீரும் சிறப்பும் பெற்று மன்னர்களுக்கு எல்லாம் மன்னனாக—வேந்தனாக வீறுடன் விளங்கினன். அவன் வழி வந்தோர் தந்தையின் பணியை மேற்கொண்டு செம்மையாகச் செயலாற்றத் தொடங்கினர். பன்னெடுங்காலம் இத்தகைய முறையில் நாடாளும் சிறப்பு ஒரு குடியைச் சார்ந்தவர்களே பெற்றமையால், அக்குடியை 'அரசர் குடி என்று மக்கள் போற்றினர். அக்குடியில் தோன்று வோருக்கு நாடாளும் உரிமை, நாளடைவில் பிறப்புரிமை ஆக்கப்பட்டது.

நாகரிகம் என்ன என்பதை மக்கள் அறியாது வாழ்ந்த காலத்தில் மக்களுக்குத் தேவை மிக மிகக் குறைவாகவே இருந்தது. தங்களிடம் இருந்த பொருள்களைக் கொண்டே அக்காலத்தில் மக்கள் தங்கள் தேவையை நிறைவேற்றிக் கொண்டனர். நாகரிக வளர்ச்சி பெறத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பல வகையான தேவைகள் நாள்தோறும் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டிருந்தன. அவர்களால், தங்களிடம் உள்ள சில பொருள்களைக் கொண்டு மன நிறைவு பெற இயலவில்லை. எனவே, தங்கள் தேவைக்கு மிகுதியாகத் தங்களிடம் மிஞ்சிய பொருள்களைத் தங்களுக்குத் தேவையான பொருள்களை வைத்துள்ளவர்களிடம் கொடுத்து, அதற்கு மாற்றாக

1. தொல். கற்பி. 52.
2. 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பாக்கமும்' —தொல். புறத். 20.

அவர்களிடம் உள்ள பொருள்களைப் பெற்றுக் கொண்டனர்.. இதனைப் பண்டமாற்று என்பர். காலம் செல்லச் செல்ல. மக்கள் நாகரிகத்தில் முன்னேற்றம் அடைந்தவண்ணம் இருந்தனர். அயலூர்களிலும் அயல் நாடுகளிலும் வாழ்ந்த மக்களோடு தொடர்பு கொண்ட பொழுது அவர்களிடம் இருந்து பல புதிய பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறையினையும் கற்றனர். அந்தப் புதிய பழக்க வழக்கங்களைப் பின்பற்ற முன்வந்த மக்கள் அவர்கள், பயன்படுத்திய பொருள்களைத் தங்கள் ஊர்களிலும், நாடுகளிலும் கொண்டு சென்று விலை பெற்றனர். அவ்வாறே தங்கள் ஊரில் அல்லது நாட்டில் கிடைக்கும் பொருள்களை அயல் நாடுகளுக்குக் கொண்டு சென்று வாணிகம் செய்து வந்தனர். நாளடைவில் வாணிகத்தில் ஈடுபட்ட மக்கள், அவர்கள் செய்த தொழிலில் திறமையும், சிறப்பும் பெற்ற தோடு செல்வர்களாகவும் விளங்கினர். அவர்களுடைய வழித்தோன்றல்கள் வாணிகத்தினைக் குடும்பத்தொழிலாகக் கொண்டு அதனைச் செம்மையாகச் செய்து வந்தனர். வாணிகத்தின் மூலம் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொண்ட வணிகர்கள், தனிப்பட்ட பண்பும், பிழக்க வழக்கும் உடைய மக்களாகச் சமுதாயத்தில் சிறப்புற்றனர்.

நிலத்தினை உழுது உணவுப் பொருள்களைப் பயிரிட்ட உழவர்கள், பன்னெடுங்காலமாக உழவினைத் தங்கள் குடும்பத்தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தமையால் அவர்கள் உழவர்கள் என்றும்; உணவுப்பொருள்களைப் பயிரிட்டு, மற்ற மக்களுக்கு எல்லாம் உண்ண உணவு தந்துதவியமையால் வேளாளர் (உதவிபுரிவோர்) என்றும் போற்றப் பட்டனர். அவர்கள் மக்கள் சமுதாயத்தில் வேறு பல தொழில் புரிந்த மக்களுக்கு உண்ண உணவுப் பொருள்களைத் தந்துதவியமையால், அவர்களுடைய தொழில் பிற தொழில்களைக் காட்டிலும் சிறந்தது எனக் கருதப்பட்டது.

இவ்வாறு தோன்றியதே தொல்காப்பியர் காலத்திய தமிழ் இனத்தில் காணப்பட்ட நால்வகை மக்கள் பிரிவுகளாகும். "இம்முறை பிற்காலத்தில் தமிழகத்தில் புகுத்தப்பட்ட 'சாதி'ப் பிரிவு அன்று; சமுதாயத்தில் சிறந்த தொழில் புரியும் மக்கள் பாகுபாடே ஆகும்; இப்பாகுபாடு

உலகில் உள்ள பல நாடுகளிலும் காணப்படுவதாகும்''.[1] பண்டைத் தமிழரிடை இன்று நம்மிடையே உள்ளதைப் போன்ற 'சாதிகள்' இல்லை. தொழில் செய்யும் குழுக்கள் (Guilds) பல இருந்தன என்பது இங்கு நினைவு கூரத் தக்கதாகும்.

அகமும் புறமும்

பண்டைத் தமிழ்ச் சான்றோர் வாழ்க்கையில் அடைய வேண்டிய பெரும் பேறுகளை அகம், புறம் எனப் பகுத்து அவற்றிற்கு உரிய நெறிகளைப் போற்றினர். 'உயிர்கள் எல்லாம் இன்பத்தை நாடுகின்றன'.[1] இன்பம் உலக இன்பம் எனவும், கடவுள் இன்பம் எனவும் இரு வகைப்படும். உலக இன்பம் நிலையில்லாததே யாயினும், அதனை நுகர்ந்து கழிந்த பின்பே, உயிர்கள் வீட்டின்பத்தைப் பெரிதும் விரும்பும். உள்ளத்தின் கண் தோன்றுவதாய்ப் புறக்கண்ணிற்குப் புலனாகாத உணர்ச்சிகள் யாவும் 'அகம்' என்ற சொல்லால் சுட்டுவதற்குரியனவாகும். அவ்வுணர்ச்சிகளுள் சிறந்தது இன்ப உணர்ச்சி. உள்ளத்தால், உணர்வால், அறிவால், பண்பால், அன்பால் தம்முள் பொருத்தம் மிக்க காதலன் காதலி என்பார் கூடி வாழ்வதனால் உண்டாகும் இன்பமே, உலக இன்பங்களுள் தலை சிறந்ததாகலின் அதனையே அவ்வின்பங் காரணமாய் நிகழும் ஒழுக்க முறையை 'அகப்பொருள்' என்பர். இதனை ''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கு ஒருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்தது எனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்து உணர்வே நுகர்ந்து இன்முறுவதோர் பொருளாதலின் அதனை அகம்

---

1 P. T. S. Aiyangar-pre-Aryan Tamil Culture, p. 19.

1. தொல். பொருளியல். 29.

என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகு பெயராம்'' [1] என்பதனால் அகப் பொருளைப் பற்றிப் பண்டைத் தமிழர் கொண்டிருந்த கருத்துத் தெளிவாகின்றது.

ஒத்த அன்புடையார் தாமேயன்றி, எல்லார்க்குந் துய்த்துணரப்படுதலானும், இவை இவ்வாறிருந்ததனைப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அறம் பொருள், போர், முதலியன 'புறம்' எனப்படுவதாயிற்று. எல்லோரும் அறியும்படி சொல்லவும் செய்யவும் கூடிய செய்திகள் எல்லாம் புறப்பொருளாகும்.

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலினை வரையறை செய்து அகப்பொருள், புறப்பொருள் என இரண்டனுள் அடக்குவர்.[2] இன்பமும் பொருளும் அறத்தை அடைவதற்குரிய படிகள் எனக் கருதினர். [3]

அன்பின் ஐந்திணை :

மகளிரும் மைந்தரும் ஒருவரை ஒருவர் கண்டு காதலித்து இல்லறத்தில் ஈடுபடுதலே தொல்பழங்காலத் தமிழரிடை இருந்து வந்த வாழ்க்கை நெறியாகும். பிறர் அறியாவண்ணம் சில நாட்களேனும் திங்களேனும் மறைந்து ஒழுகும் காதல் ஒழுக்கம் 'களவு' எனவும், பலர் அறிய மணந்து கிழவன் கிழத்தியாய் இல்வாழ்க்கையில் ஈடுபட்டு இல்லறம் நடத்தும் ஒழுக்கம் 'கற்பு' எனவும் போற்றப்பட்டது. களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டு, பிறகு திருமணம் புரிந்து கற்புநெறியினை மேற்கொள்ளுவதே சிறந்ததாகக் கருதப்பட்டது.

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழும்பொழுது, தலைவன் காதலியை விட்டுப்பிரிந்து, தன் கடமைகளைச் செய்வதற்காகச் செல்லும் பொழுது உண்டாகும் துன்பம் பொறுத்தற்கு அரிது. அதனைப் 'பிரிவு' என்பர். பிரிந்தவர் வருவார் என்று அவர் வரவை எதிர்நோக்கித் துன்பத்தைப்

1. தொல். அகத்திணை இயல்-நச்சி. உரை.
2. தொல். செய்யுள். 105.
3. தொல். களவு-1.

பொறுத்துத் தலைவி ஆற்றியிருத்தல் 'இருத்தல்' என்றும், 'திரும்பி வருவாரோ?' என்று நம்பிக்கையற்ற நிலையில் அவரை நினைந்து நினைந்து தலைவி ஏங்கிக் கண்கலங்கி உள்ளம் உருகி வாழும் நிலை 'இரங்கல்' என்றும், தலைவன் அன்பு மறந்து புறத்தே பிரிந்து சென்று மீண்டு வந்த போது தலைவி உரிமையோடு ஊடுதல், 'ஊடல்' என்றும் பலவாறு காதலரின் மென்மையான உள்ளத்தே எழும் நுட்பமான உணர்வுகளைக்கொண்டு, இல்வாழ்க்கையினை ஐந்து வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். இவ்வை வகை ஒழுக்கங்களை ஐந்து வகை நிலங்களுக்கு உரியதாக்கிப் போற்றினர்.

காதலர் கூடியிருந்து மகிழ்தல் குறிஞ்சி ஒழுக்கம் என்பர். மனிதன் மலைகளில் வாழ்ந்த காலத்து ஆடவரும் மகளிரும் பிறர் அறியாவண்ணம் கூடி இன்பம் துய்த்து மணந்து கொண்டனராதலின், புணர்தலும் அது காரணமாயுள்ள பொருள்களும் குறிஞ்சிக்கு உரித்தாக்கப் பட்டன. முல்லை நிலத்தில் ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் வாழ்க்கையில் ஆடுமாடுகளை மேய்க்கப் பிரிந்து சென்ற கணவர் திரும்பிவரும்வரை, அந்தப் பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து மீண்டும் கூடுவோம் என்ற நம்பிக்கையுடன் இருத்தலை 'முல்லை' நிலத்திற்கு உரிய கற்பு நெறியாகக் கருதினர். கற்பு எனப்படுவது அன்பின் வெற்றியாகும்.

கடற்கரையில் வாழும் மகளிர், மரக்கலங்களில் கடல் மீது சென்ற காதலர் திரும்பி வருவர் என்ற நம்பிக்கை இழந்து சோர்ந்து நைந்து உருகுதல் 'நெய்தல்' எனப்பட்டது. பொருள் தேடுதல், அரசர் ஏவலை நிறைவேற்றுதல் முதலிய காரணங்களை முன்னிட்டுக் காதலர் காதலியைப் பிரிந்து செல்கின்றபொழுது, இருவர் மாட்டும் உண்டாகிய துன்பத்தைப் 'பாலை' நிலத்திற்கு உரிய பிரிவு ஒழுக்கமாகப் போற்றினர். "பிரிவினுல் காதலர் இருவரிடத்தும் அருள் நினைவு நன்கு வலுப்பெறுவது இயற்கை. அருள்நினைவு இன்ப ஒழுக்கமாகிய அகவாழ்வில் மிகச் சிறந்ததாய்த் திகழ்கிறது."

வளமான வாழ்க்கை காரணமாக அன்பு மறந்து, காதலியைப் பிரிந்து, வரைவின் மகளிரிடத்து இன்பம்

நுகர்ந்து ஆடவர் திரும்பி வந்தபோது, மகளிர் உரிமை யோடு ஊடுதல் நீர்வளமும் நிலவளமும் மிக்க மருத நிலத் திற்குரிய ஒழுக்கமாகக் கருதினர். இவ்வொழுக்கங்கள் எல்லாம் ஒவ்வொரு நிலத்திற்கே சிறப்பாக உரியதாகக் கூறப்பட்டாலும் ஐவகை நிலங்களிலும் நிகழத்தக்கன என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலத்திற்கும் உரிய புணர்தல் (அன்பு) இருத்தல் (நட்பு), ஊடல் (அறிவு) இரங்கல் (இரக்கம்) பிரிதல் (அருள் நிலை), ஆகியவையும், அவற்றின் நிமித்தமும் எனப்படும் ஐவகை ஒழுக்க நெறியை "அன்பின் ஐந்திணை" என்பர்.

"ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் வாழ்க்கை நெறியைக்—காதல் வாழ்வையே பண்டைத் தமிழர் சிறப்புடையதாகக் கருதினர். ஆதலினால்தான், அதனை 'அன்பின் ஐந்திணை' எனப் பெரிதும் பாராட்டினர். இவ்வைந்திணை ஒழுக்கம் போன்று சிறப்புடையதாகப் பண்டைத் தமிழ் மக்களால் கருதப்படாத 'கைக்கிளை,' 'பெருந்திணை' ஒழுக்கங்களும் மக்களிடையே அருகிய வழக் கில் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. அவற்றை ஆராயும்போது பலபடியான இன்ப உணர்வு களும் அவை தோன்றுவதற்கும் உருவாவதற்கும் முதிர் வதற்கும் ஏதுவாயிருக்கின்ற பல வகையான உலகியல்பு களும் நமக்குப் புலனாகின்றன."[1]

ஒருவன் ஒருத்தி ஆகிய இருவருள், ஒருவரிடத்து மட்டும் காதல் உணர்வு தோன்றுவதை—ஒருவர் மட்டும் அன்பினால் கூடி வாழ்தலைப் பெரிதும் விரும்புவதை— உணர்ந்து கொள்ள முடியாத மற்றொருவர் நிலையைக் 'கைக்கிளை' என்பர். எனவே கைக்கிளை என்பது ஒருதலைக் காமமாகும். கைக்கிளை என்பதற்கு 'ஒரு பக்கத்து உறவு, ஒருவர் உள்ளத்தில் உண்டாகும் இன்பம்' என்று பொருள் கூறுவர்.

ஆண், பெண் ஆகிய இருதிறத்தாரும் ஒவ்வொரு வர் நலங்களில் அன்பு கொண்டிருந்து அது ஒத்த அள

1. தொல்- களவு. 1.

வாய் அமையாமல், அதனால் உண்டாகும் இன்பத்தை, ஏற்றதாழ்வாய் அடையும் பொருந்தாக்காதல் 'பெருந்திணை' எனப்படும். இது இழிவினால் வந்த பெயர்: மூரட்டு ஒழுக்கம் என்பது கருத்து.[1] இவ்விரு திணைகளுக்கும் உரிய நிலங்கள் குறிக்கப்படவில்லை. மேலும் கடியப்பட வேண்டிய ஒவ்வாக் காதல் என்று இவற்றைப் பண்டைத் தமிழர் ஒதுக்கியுள்ளனர்.

காதல் வாழ்வு

இல் வாழ்க்கையில் ஈடுபடும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பத்துப் பண்புகள் ஒத்திருத்தல் வேண்டும் என்பது தமிழ்ச் சான்றோர்களின் கருத்தாகும். மணமக்கள் இருவரும் ஒத்த குடியிற் பிறந்தவராகவும், தாம் பிறந்த குடிக்கு ஏற்ற ஒழுக்கம் உடையவராகவும், தாம் மேற்கொள்ளப்போகும் குடும்பப் பொறுப்பைச் செம்மையாக நடத்தும் ஆள்வினைத் திறம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்ற நெறிமுறையைப் பண்டைத் தமிழர் கைக்கொண்டிருந்தனர். திருமணம் செய்து கொள்ளத் தக்க ஆணிற்குப் பதினாறாண்டு நிரம்பி இருக்க வேண்டும்; பெண்ணிற்குப் பன்னிரண்டாண்டுகளேனும் நிரம்பி இருத்தல் நல்லது என்று கருதினர். தோற்றப் பொலிவால் இருவரும் ஒத்திருத்தல் நலமாகும். தோற்றப் பொலிவு அன்பு தோன்றுவதற்குக் காரணமாகக் கருதப்பட்டது. மனத்தை ஒருவழி நிறுத்தும் 'நிறை' என்னும் பண்பும் இருவரிடத்தும் வேண்டப்படுவதாக இருந்தது. அருளும் இருவருக்கும் இன்றியமையாதது; இருவரும் அறிவினால் ஒத்திருத்தல் சாலச் சிறந்தது. செல்வம் நிரம்பியுள்ள காலத்து விரும்பியும், குறைந்த காலத்து வெறுத்தும் வாழும் மனநிலையை ஒழித்து, எக்காலத்தும் மனநிறைவு உடையவராய் இருவரும் வாழ்தல் வேண்டும். கணவனும் மனைவியும் ஒத்து வாழ்வதற்கு இன்றியமையாத இத்த

1 —2 தொல். அகத். 1.

கைய பண்புகளைப் பண்டைத் தமிழ் மக்கள் சிறந்தவை யாகப் போற்றினர்.[1]

ஆண்மகன் பொருள், கல்வி, அன்பு முதலிய நிலைமை களில் மனைவினிய விடச் சிறந்தவனாக இருப்பினும், அவர் கள் இருவரும் இல்வாழ்க்கையில் ஈடுபடுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாகவே கருதப்பட்டனர்.[2] அவன் அறிவும், பண்பும், பெருந்தன்மையுமுடைய இளைஞன்.[3] அவளின் கரவு இல்லா மடப்பம் வியப்பூட்டிய நோக்கும், அன்பு காரணமாகத் தோன்றும் அச்சமும், உயிரினும் சிறந்ததாகக் கருதப்படும் நாணமும் உடையவள். அவள் அடக்கமும், மனவமைதியும், நேர்மையும், தகுவன கூறலும், அருமைப் பாடும் அணியெனப் பூண்டவள்.[4] இத்தகைய இரண்டு உள்ளங்களையும் பிணைப்பது காதல்! காதலால் ஒன்றுபட்ட ஈருயிர்களும் ஓருயிர்போல் அறநெறியில் தம்வாழ்வை நடத்துவதே இல்லறம் எனப்படும். அவ்வில்லறத்தின் அடிப்படை அன்பாகும்; முடிவு அறமாகும். அன்பே இல் வாழ்க்கையின் தனிப்பண்பு; அறமே இல்வாழ்க்கையின் தலையாய பயனுகும். இதனைத் தொல்காப்பியர் காலத்திய தமிழர் நன்கறிந்திருந்தனர். அதனைத் தங்கள் வாழ்க்கை யின் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஒழுகினர்.[5] காத லும் பொருளும் வாழ்க்கைப் படிகள்; அறமே வாழ்க்கை யின் உயர்நிலை என்பதை உணர்ந்து, இல்லறத்தை நல்லற மாக்க ஒல்லும் வகையெல்லாம் ஓயாது உழைத்தனர்.

---

1. "பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு,
உருவு நிறுத்த காமவாயில்,
நிறையே, அருளே, உணர்வோடு, திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"
—தொல். மெய்ப். 25.

2. தொல். களவு. 2.

3. தொல். களவு. 7.

4. "அச்சமும் நாணும் மடனும்முந்(து) உறுத்த
நிச்சமும் பெண்பாற்(கு) உரிய என்ப" — தொல். களவு. 8.
"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான"—தொல். பொருள். 15

5. "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம்....."
—தொல—களவு—1.

ஒருவனும் ஒருத்தியும் பல பிறவிகளில் கணவனும் மனைவியுமாக ஒன்றி வாழ்ந்தமையால் நிரம்பிய அன்புடையார் இருவர் வெவ்வேறிடங்களில் பிறந்து வளர்ந்தனர். ஆயினும் நல்லூழின் செயலால் ஓர் இடத்து எதிர்ப்பட்டு நெஞ்சு கலந்து அன்பினுல் அளவளாவிக் கூடி இன்பம் துய்ப்பர். அவர்களிருவரும் பிறர் அறியாவண்ணம் தங்கள் காதல் ஒழுக்கத்தைச் சில நாட்கள் மறைத்து, குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறித்த ஒரு நேரத்தில் கூடி மகிழ்வர். இவ்வாறு உற்றுழி உறவினர் யாவரும் அறியாவண்ணம் காதலன் காதலி ஆகிய இருவரும் மறைவாக அன்பு முதிரப் பழகும் இன்ப வொழுக்க நெறியைக் 'களவு' ஒழுக்கம் என்பர். தலைவன் தலைவி ஆகிய இருவரும் முதன்முதல் எதிர்பாராத நிலையில் சந்திப்பதற்குரிய காரணங்கள் மூவகைப்படும். அவை பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என்பனவாகும்.

ஓரிளமங்கை வேங்கை மரத்தில் மலர்பறிக்க விரும்புவாள். அவளுடன் வந்த பெண்களும் முயல்வர், மலர் பறிக்க இயலாது விழிக்கும் நிலையில் அவ்வழியே போகும் ஓர் இளைஞன், மலர்களைப் பறித்து அன்புததும்பிய நோக்கொடு அம்மங்கையிடம் கொடுப்பான். அப்பொழுது இருவர் கண்களும் சந்திக்கும். இவ்வாறு காதல் தோன்றி வளரும். இதனைப் 'பூத்தரு புணர்ச்சி' என்பர்.

சுனையில் நீராடுங்கால், மகளிர் சிலர் கால்வழுக்கிச் சுனையில் வீழ்ந்துவிடுவது உண்டு அந்நிலையில் அங்குள்ள மகளிர் அலறல் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்களுள் இளைஞன் ஒருவன் ஓடோடி வந்து சுனையில் குதித்து அப்பெண்ணை மீட்பான். தன் உயிரைக் காத்த வீரனையே மணம் செய்து கொள்ள வேண்டும் என்று அம்மகள் உறுதிகொள்ளுவாள். இவ்வாறு காதல் அரும்புவது 'புனல்தரு புணர்ச்சி' எனப்படும்.

பருவ மகளிர் பலர் தம் தோழியருடன் மலர்க்காடுகளில் விளையாடும்போது மதம்பிடித்த யானை ஒன்று காட்டை அலைக்கழித்து வரும். இதனை அறிந்து பெண்கள் அஞ்சி நடுங்கி மூலைக்கு ஒருவராக ஓட முயல்வர். அந்நிலையில் யானையை எதிரில் கண்ட நங்கை ஒருத்தி செய்வது

அறியாது கண்ணீர் வடித்து அலறுவாள். அங்கு வேட்டை யாட வந்த இளைஞன் அலறலைக் கேட்டு, அத்திசை நோக்கி ஓடோடிவந்து, தனது இடக்கையால் அப்பெண்ணைத் தழுவிக் கொண்டு வலக்கையிலுள்ள வேலை யானைமீது எறிந்து அவளைக் காப்பாற்றுவான். இவ்வாறு உயிரைக் காத்த இளைஞன், அவள் உளக்கோயிலில் இடம்பெறுவான். அவர்களிடையே காதல் ஊற்றெடுக்கும். இதைக் 'களிறுதரு புணர்ச்சி' என்பர்.

களவு ஒழுக்கத்தில் காதலன் காதலியைச் சந்திப்ப தாக இடமும் நேரமும் குறித்துச் செல்லுவான். அவ்விடத் திற்குக் குறித்த நேரத்தில் பல இடர்ப்பாடுகளுக்கு இடையே இருவரும் குறி இடத்திற்கு வந்து சேர்வர். சில நாட்களில் தலைவன் வர இயலாமல் போய்விடும். தலைவி நெடு நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பு வாள்.[1] அந்நிலையில் அவளுடைய மனநிலையைக் கண்ட அவளின் ஆருயிர்த் தோழி, அவளுக்கு ஆறுதல் மொழி பல கூறி, மனக்கலக்கத்தைப் போக்க முயலுவாள்.[2] ஆயி னும் தலைவி தீராத காதல் வேட்கையோடு, இடைவிடாது 'அவனையே' நினைத்துக் கொண்டு துன்புறுவாள். அதனால் உடல் மெலிந்து வாடுவாள்.[3] அதைக் கண்ட அவளுடைய தாய் அவளை வீட்டை விட்டு வெளியே போகாமல் காத்து வருவாள். அச்சமயத்தில் தலைவி தலைவனைப் பல நாட்கள் சந்திக்க இயலாமல் சொல்லொணாத் துன்புறுவாள்; பாலும் உண்ணாள்; படுக்கையை விட்டு நீங்கமாட்டாள்.

தலைவியின் துன்பத்தைக் கண்டு ஆற்றாளாகிய தோழி தலைவனைக் கண்டு தலைவியின் துன்பநிலையை எடுத்துரைப் பாள். அவன் அவளை அடைய வேண்டுமானால் தான் சொல்லுவதைப் போல் தலைவன் நடந்தாக வேண்டும் என்று வற்புறுத்துவாள். அவனிடம் 'உன் வீட்டாரை அனுப்பி மணம் பேசுவதே அந்நிலையில் சிறந்த செய லாகும்' என்று தோழி கூறுவாள். அவனும் வேறு வழி யின்றித் தோழியின் அறிவுரைப்படி மணம் பேசத் தன்

1. தொல். களவு. 16.
2. தொல். களவு. 23.
3. தொல். களவு. 6, 16.

உற்றூர் உறவினர்களை அனுப்பிவைப்பான். மணம் பேசு தலை 'வரைவு கடாவுதல்' என்பர் [1]

சிற்சில சமயங்களில் தவிர்க்க முடியாத காரணங் களால் மணப்பேச்சு நிகழாமல் போவதும் உண்டு. வீட் டில் அடைபட்டு இருக்கும் தலைவியைக் காணும் வேட்கை யுடைய தலைவன் தோழியின் உதவிபெற்று இரவில் தலைவி யைச் சந்திப்பான். தலைவன் தான் வந்துள்ளமைக்கு அறி குறியாக யாதாகிலும் ஓர் ஒலியை எழுப்புவான். அவ் வோசை கேட்ட தோழி தலைவியை அழைத்துச் சென்று அவனிடம் சேர்ப்பாள். சில சமயங்களில் மரங்களில் உள்ள பூக்கள், காய்கள், பழங்கள் முதலியன வீழ்வதனால் ஓசை உண்டாகும். அதைத் தலைவன் வந்ததாகக் கொண்டு தலைவி வெளியே வருவாள். தலைவனைக் காணாது ஏமாற்ற முறுவாள். இது 'அல்லகுறி' எனப்படும்.[2]

இந்நிலையில் தோழி தலைவனிடம் இரவு நேரங்களில் அவன் வரும்வழியில் உள்ள இன்னல்களையும், இடர்ப்பாடு களையும் சுட்டிக்காட்டி விரைவில் மணந்து கொள்ளுமாறு வேண்டுவாள்.

இந்நிலையில் தலைவி தனக்கு நேரும் இடையூறுகளை யும் இன்னல்களையும் நன்மை பயப்பனவாகக் கருதுவாள்; நாணத்தின் வரம்பைக் கடந்து வாய்விட்டுத் தனது துன் பத்தைத் தானே சொல்லிக் கொள்ளுவாள். தான் காண் பன எல்லாம் காதலனின் காட்சியாகத் தோன்றி, அவன் நினைவை மிகுதிப்படுத்தித் தன்னைத் துன்புறுத்துவதாக உணர்ந்து பெருந்துன்பமடைவாள். எவ்வாறேனும் காதலனைச் சந்தித்தே தீருவது; சந்திக்க இயலவில்லை என்றால் இறக்கத் துணிவாள்.[3]

தலைவன் இரவு நேரங்களில் வரும் பொழுது சில சமயங் களில் நாய் குரைக்கும். காவலர் எதிர்ப்படுவர். தாய் விழித்துக் கொள்வாள். இத்தகைய இடையூறுகளால் தலைவியைக் காண இயலாதுபோகும். இவ்வாறு தலைவன்

---

1. தொல். பொருளியல். 16.
2. தொல். களவு. 12.
3. தொல். களவு. 9.

வந்து செல்லுவதை ஊரார் அறியும் வாய்ப்பு உண்டாகி விடும். முதலில் ஊரார் சிலர் தங்களுக்குள் இதைப்பற்றி மறைமுகமாகப் பேசிக்கொள்வர். இந்நிலை 'அம்பல்' எனப்படும்.[1] இம்மறை பலர்க்கும் வெளிப்படின் 'அலர்' எனப்படும்.[2] இவற்றைத் தோழி தலைவனுக்குச் சுட்டிக் காட்டி, விரைவில் மணக்கும்படி வற்புறுத்துவாள்.

வீட்டில் அடைக்கப்பெற்ற தலைவி முன்போலத் தலைவனைக் காணுமையால் உணவும் உறக்கமும் இன்றி நாளுக்குநாள் உடல் மெலிவாள். தன்மகள் மீடல்மெலிந்து படுக்கையில் படுத்துவிட்டதைக் கண்டு, பெற்றமனம் மகளுக்கு ஏதோ நோய் வந்துவிட்டது; அல்லது அவளை ஆவி பிடித்துக்கொண்டது என்று எண்ணி உள்ளம் நைந்து உருகும்.[3] மகளுக்கு உண்டான நோயின் உண்மைக் காரணத்தை உணராத தாய், மகளுக்கு ஏன் நோய் வந்தது என்பதை அறியக்குறி கேட்பாள். வேலனை அழைத்து வந்து தன்மகளுக்கு உண்டான நோய் தீர்வதற் காக முருகனுக்குப் பூசை (வெறியாட்டு) போடுவாள். அந்நிலையில் தோழி தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள நட்பைக் கூறுவாள். செவிலித்தாய் நற்றாய்க்கும், நற்றாய் தன் தணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அறிவிப் பாள். இதனை அறத்தொடு நிற்றல் என்பர்.[4] பின்னர்த் தலைவியின் விருப்பம்போல மணம் முடிப்பர்.

பெற்றோர் தாமாகவே அத்தலைவன் தலைவியர் இரு வருக்கும் திருமணம் செய்துவைக்க இசையாராயின், தோழி தலைவனை நள்ளிரவில் அழைத்து எல்லாவற்றையும் விளங்க உரைப்பாள். தலைவியை உடனே அழைத்துக் கொண்டு போகுமாறு வற்புறுத்துவாள். தலைவியின் கைகளைத் தலைவன் கைகளில் வைத்து 'இன்று போல் என்றும் இவளைக் கவனித்துக் கொள்ளுமாறு' அவனிடம் ஒப்படைப்பாள். அவ்விரவே, தலைவனும் தலைவியும் யாரும் அறியாதவண்ணம் ஊரைவிட்டு வெளியூருக்குச்

1. தொல். களவு. 48.
2. தொல். களவு. 24, 25, 26.
3. தொல். பொருளியல், 12. 13.
4. தொல். கற்பி. 2.

செல்லுவர். இதற்கு 'உடன் போக்கு' என்று பெயர்.[1] தலைவன் தனது ஊருக்கு அழைத்துச் சென்று, அங்கு அவளைத் திருமணம் செய்து கொள்ளுவான். அல்லது அயலூருக்கு அழைத்துச்சென்று அங்குள்ள சான்றோர் களின் உதவியால் திருமணம் செய்து கொள்ளுவதும் உண்டு.

இங்ஙனம் ஒருவனும் ஒருத்தியும் தம்முள் எதிர்ப் பட்டு உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டு மறைவாகப் பழகிவருதல் களவு மணம் என்கப்படும்.

எல்லா உயிர்களுக்கும் உரிய இன்ப உணர்வும், அவ் வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும், அப்பொருளை ஈட்டுவதற்குரிய நெறியாகிய அறமும் நிகழும் அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தினுள் காமக்கூட்டத்தை ஆராயுங்கால், வேத வழக்கினை உடையாரிடத்தில் நிகழும் எண்வகை மணத்துள்ளும் நல்ல யாழ் அமைத்து இசைப்பாடுவதில் வல்லவரான எக்காலத்தும் ஆணும் பெண்ணும் இணைந்தே சொல்லும் இயல்பினையுடைய கந்தருவரது மணவியல் போடு ஒரு வகை ஒப்புமையுடையது என்று தொல்காப் பியர் குறிப்பிட்டுள்ளார்.[2] இதனால் தமிழர் மணமுறை வடவர் மணமுறையைப் பின்பற்றியது என்று கூறுவது எவ்வாற்றானும் பொருத்தமுடையதாகாது. அவர்கள் கூறும் எண்வகை மணமுறை தமிழர் மணமுறைக்கு மாறு னவை. இவ்விருவகை மணமுறைக்கும் அடிப்படையிலே பல வேறுபாடுகள் உள்ளன.

"தொல்காப்பியர் காலத்தே வடவர் நாகரிகம் தமிழ கத்தில் மெல்ல மெல்லப் பரவத் தலைப்பட்டமையால், மறையோர் தேஎத்து மணமுறைக்கும் தென்தமிழ்நாட்டு மணமுறைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளங்க உணர்த்தல் அவரது கடனாயிற்று. ஒருவன் ஒருத்தியென் றும் இருவரிடையே உண்டாகும் கூட்டுறவை ஒருதலைக் கேண்மையாகிய கைக்கிளை, ஒத்த கேண்மையாகிய அன் பின் ஐந்திணை, ஒவ்வாக் கேண்மையாகிய பெருந்திணை

1. தொல். களவு. 1
2. வெள்ளைவாரணன்: தொல்காப்பியம்: 115—6.

என மூவகையாகப்ப் பகுத்துரைத்தல் தமிழ் மரபு. பிரமம், பிரசாபத்தியம் ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாகம் என எட்டு வகையாகப் பகுத்தல் வடநூல் மரபாகும்...இவையெட்டும் வடமொழியாளர்க்கே உரியனவென்பார் 'மீறையோர் தேயத்து மன்றல் எட்டு' என்னூர் தொல்காப்பியனார். எனவே, இவ்வெண்வகை மண முறைகளும் தமிழர்க்குரியன அல்ல என்பது பெறப்படும்.[1]

இதனால் பண்டைத் தமிழரிடை காதல் மணவாழ்வே பெருவழக்காக இருந்தது. களவு மணம் நடைபெறுது கற்புமணம் நடைபெறுவதில்லை என்பதைத் தொல்காப் பியர் எடுத்தியம்பியுள்ளார்.[2]

திருமணம் :

காதலர் ஒருவரை யொருவர் மணந்து வாழுங்கால் அவர்களுடைய மனவுறுதியை உலகத்தார் அறியப் புலப் படுத்துவது 'திருமணம்' எனப்படும் காரணமாகும்.

காதலர் இருவரும் இல்லறத்தில் ஈடுபடுவதற்குத் தலைவாயிலாக இருப்பது திருமணம். உற்றார், உறவினர், ஊரார் அறிய அன்பும் அறனும் பண்பும் பயனுமாகக் கொண்ட இல்வாழ்க்கையை இனிது ஒம்புவதற்கு யாவரும் அறியச் செய்யப்படும் நல்வினையே திருமணமாகும்.

தொல்பழங் காலத் தமிழரிடை திருமணச் சடங்கு யாதும் இருந்ததாகத் தெரியவில்லை ஒருவனும் ஒருத்தியும் ஒத்த அன்புடையவராய்க் கண்டு காதலித்துக் கூடி இன்புற்று இல்வாழ்க்கை நடத்தி வந்தனர். அன்பின் பிணைப்பால் கணவன் மனைவியாகக் கூடி வாழத் தொடங்கிய இருவரும் அறம் பிறழாது உள்ள உறுதியுடன் வாழ்ந்து வந்தனர். இத்தகைய காதல் வாழ்வு பெரும் பாலும் மனிதன் மலைகளில் வாழ்ந்த நாகரிகமற்ற காலத்தில் பெருவழக்கமாக இருந்தமையால் அதனைக் குறிஞ்சி நிலநாகரிகத்தின் சிறந்த பண்பாகப் போற்றினர்.

---

1. ''வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைத லாறே'' —தொல். களவு 49.

நாகரிகம் வளர்ச்சியுற்ற காலத்தில் மக்கள் அறத்தி டத்துக் கொண்டிருந்த நம்பிக்கை நெகிழ்ந்து பொய்யும் வழுவும் தோன்றின. ஆண்களில் சிலர் தங்கள் காத லியரைக் கைவிட்டுச் சென்றனர்; தாங்கள் உரைத்த உறுதி மொழியை மறந்து வேறு ஒருத்தியோடு வாழத் தொடங் கினர். வேறு சிலர் இளம் பெண்களிடம் இன்பம் துய்த்துச் சில நாட்கள் கழிந்த பிறகு தங்களுக்கும் அம்மகளிர்க்கும் எத்தகைய தொடர்பும் இல்லையெனக் கூறிச்சென்றனர்.— இவ்வாறு பொய்யும் வழுவும் மக்களிடையே பெருகிய காரணத்தால் பல பெண்களுடைய வாழ்க்கை கவலைக்கிட மாவதைக் கண்ட தமிழ்ச் சான்றோர்கள், சமுதாய வாழ்வு சீர்குலைந்து விடுமோ என்று பெரிதும் அஞ்சினர்; தமிழ்ச் சமுதாயத்தின் கட்டுக்கோப்பையும், குடும்ப வாழ்க்கை யில் அன்பும் அமைதியும் நலிவுற்று அழிந்து ஒழியா வண்ணம் காக்க வேண்டியது தங்களுடைய கடமை என உணர்ந்தனர். அறிவிலும் அனுபவத்திலும் மிக்க சான் றோர்களாகிய குடும்பத்தலைவர்களும் சமுதாயத்தலைவர் களும் கலந்து சிந்தித்துக் கணவனும்மனைவியும் பிரிவின்றி வாழ்வதற்குரிய 'திருமணம்' என்னும் மணமுறையை வகுத்து அதற்குரிய சடங்குகளைப் பலர் அறியச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர். அதற்குரிய திட்டம் ஒன்றைத் தீட்டித் தந்தனர். சமுதாய வாழ்வில் நேர்மை யையும், ஒழுக்கத்தையும், அறத்தையும் நிலைநாட்டி, மணமக்களிடையே 'பிரிதல் அறியா பிணைப்பினை' உண்டாக் கினர். இவ்வாறு திருமணச் சடங்குகளை வகுத்துத் தந்த வர்கள் அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் தலைவர்களாக விளங்கிய அறிஞர் பெருமக்களே ஆவர்.[1]

இவ்வாறு சான்றோர்களால் சிறப்புடையதாகக் கருதப் பட்ட சடங்குகளுடன் தலைவியின் தந்தை, தமையன்மார்

---

1. 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப' —தொல். கற்பு. 4.

ஐயர் என்னும் சொல் முதல்வர், தலைவர் என்னும் பொருள் படுவதாகும். இச்சொல் இக்காலத்திற்போன்று முற்காலத்தில் சாதிபெயராக வழங்கப் பெறவில்லை. விசயநகரப் பேரரசின் காலத் தில்தான் ஐயர், ஐயங்கார் என்று 'சாதியைக் குறிப்பிடும் வழக்கம் தோன்றிற்று. அதற்கு முற்பட்ட காலத்திய இலக்கியங்களிலோ கல்வெட்டுகளிலோ இத்தகைய வழக்கினைக் காண்பது அரிது. இன் றைய வழக்கத்தை மனத்திற் கொண்டு 'ஆரியமேலோர்' எனப் பொருள் கூறுதல் வரலாற்று முறைக்கு ஒவ்வாத வரலாற்று வழு (Anachronisms) வாகும்.

முன்னிருந்து நடத்தி வைப்பது கற்புத்திருமணம் என்று தொல்காப்பியர் காலத்திய தமிழர் கருதினர்.[1]

கற்பு நெறி :

காதலர் இருவர் கருத்தொருமித்துத் தங்கள் திருமணத்திற்குப்பின் இல்லறம் என்னும் நல்லறம் புரிதலே கற்பு ஒழுக்கம் எனப்படும். பெற்றோர் தம் மகளுக்குக் கணவனைவிடச் சிறந்த தெய்வம் இல்லை எனவும், அவனை எவ்வாறு பேணிப் போற்றி வழிபட வேண்டும் என்பதையும் 'கற்பித்தலால் கற்பு' எனும் பெயர்பெற்றது என்பர். அறவோர், அந்தணர், சான்றோர், விருந்தினர் முதலியோர் இடத்து இன்னவாறு நடந்துகொள்ள வேண்டும் எனத் தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் பெரியோர் கற்பித்தலால் 'கற்பு' எனப்பட்டது என்றும், உன் மனைவியை இவ்வாறு பாதுகாப்பாயாக எனத் தலைவனுக்கும், உனது கணவனுக்கு இவ்வாறு பணி செய்து ஒழுகுவாயாக எனத் தலைவிக்கும் சான்றோர் கற்பித்தலான் இவ்வதுவைச் சடங்காகிய காரணமும் 'கற்பு' எனப்படுவதாயிற்று என்றும் நச்சினார்க்கினியர்[2] விளக்கம் தந்துள்ளார். தலைவியின் உள்ளம் இல்வாழ்க்கையில் உண்டாகும் இன்னல்களையும் இடையூறுகளையும் கண்டு கலங்கா நிலைமையாகிய திண்மையே—அவரின் வெற்றியே கற்பு என்பதைக் 'கற்பு என்னும் திண்மை' என்ற வள்ளுவர் வாய்மொழியால் அறியலாம். தற்காலச் சான்றோர்கள் 'இல்வாழ்க்கைக்கு உரியன கற்பு, கற்ற நெறியில் நிற்றல்' கற்பு என்பர். மகளிர்க்கு உயிரினும் சிறந்தது நாணம்; நாணத்தைக் காட்டிலும் குற்றமற்ற விளக்கம் பொருந்திய கற்பு மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது.[3]

கற்பு எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது திருமணச் சடங்கோடு பொருந்த, பெண் கொள்ளுவதற்கு உரிய முறைமையினையுடைய தலைவன் கொடுத்தற்குரிய முறைமையினையுடைய இருமுதுகுரவர் முதலாயினர் தலைவியைக் கொடுப்பக் கொள்ளுவது ஆகும். 'கொடுப்போர்

---

1. தொல் கற்பு. 1.
2. தொல். கற்பு. நச்சி. உரை.
3. தொல், களவு 22

இன்றியும் கரணம் உண்டே'[1] என்பதனால், திருமணத்திற்குக்—கற்பு நெறிக்குச்—சடங்கு இன்றி அமையாது வேண்டப்படுவதாகும் என்பது புலனாகின்றது. ஆகையால் கரணமொடு கூடிய கற்புத் திருமணமே சிறப்புடைய தாகக் கருதப்பட்டது என்பது தெளிவாகின்றது. அக்காலத்திய திருமணத்தில் தீயினுக்கோ, 'புரோகிதர்'களுக்கோ வேலை இருந்ததாகத் தெரியவில்லை. வயது முதிர்ந்த 'வாழ்வரசி'களாகிய முதுபெரும் மகளிர் சிலர் கூடியே திருமணச் சடங்குகளைச் செய்ததாக அகநானூற்றால்[2] அறிகிறோம். தொல்காப்பியர் காலத் தமிழர் திருமண முறை, தமிழர்க்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் ஒப்பற்ற முறையாகும்.

இல்வாழ்க்கை :

காதலர் இருவர் திருமணத்திற்குப் பிறகு இல்லின்கண் இருந்து தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றத்தார் ஆகியோரை ஓம்பி, அறம்பல செய்வதனால் இல்வாழ்க்கையை 'இல்லறம்' என நமது முன்னோர்கள் சிறப்புடையதாகப் போற்றினர். அவ்வில்லறம் இனிது நடத்தும் இல்லக் கிழவனும் கிழத்தியும் பண்பட்ட உள்ளம் உடையவர்களாக இருந்தனர். மகளிர் கற்புநெறி பிறழாத நல்லொழுக்கமும், அன்பும், தம் குடிப்பெருமைக்குஏற்ப ஒழுகுதலும் உடையவர்களாக இருந்தார்கள். மேலும், மென்மையான அருள்உள்ளம் உடையவர்களாய்ப், பொறுமையின் நிலைக்களமாய் விளங்கினர். மறை புலப்படாமல் நிறுக்கும் நெஞ்சுடைமையும், வறுமையும் செல்வமும் கருதாது விருந்தினரைப் பாதுகாத்து அவரை மகிழ்வித்தனர்; சுற்றத்தாரை ஓம்பினர்; உணவு சமைப்பதில் திறமையுடையவராய்த் திகழ்ந்தனர்.

மனையின்கண் இருந்து அறம்புரியும் உரிமை தலைவிக்குரிய சிறப்பாகும். இச்சிறப்புரிமை கருதியே மனைவி, இல்லாள் என்னும் பெயர்கள் குடும்ப வாழ்வில் ஈடுபட்ட மகளிரைக் குறிப்பிடுனவாயின. கணவனுடைய வாழ்க்கைக்கு உகந்த துணையாய் நின்று, இல்லறத்தில் இன்னெளி

1. தொல். கற்பு 1.
2. அகம். 86.

வீசும் ''மனைவிளக்காய்'' மங்கையர் திகழ்ந்தனர். மனைவி அன்புடன் ஆக்கிய உணவினை ''நீ கை தொட்டது வானோர் அமிழ்தினைப் போன்று மிக இனிதாக இருக்கின்றது'' எனத் தன் இன்புறு மனையினை இனிது பாராட்டிக் கணவன் உண்ணுவதைக் கண்டு மனைவி உள்ளம் பூரிப்படைவாள்[1].

இல்லறத்தை இனிது நடத்துவதற்கு இன்றி அமையாத பொருளைத் தேட ஆடவர் அயல்நாடுகளுக்குச் செல்வது உண்டு. பொருள் தேடும் பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லத் தலைவன் உள்ளமே மறுக்கினும் கடமையைப் பெரிது எனக் கருதித் தலைவியிடம் விடை பெற்றுச் செல்லுவான். வேறு பல கடமைகளைச் செய்வதற்காகவும் காதலியை விட்டுப் பிரிந்து செல்லுதலும் உண்டு. இவ்வாறு கற்பு ஒழுக்கத்தில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுதல் ஆறுவகைப்படும்[2].

உயர்கல்வி கற்பதற்குத் தலைவன் தலைவியைப்பிரிந்து செல்வான்[2]. நாடு காத்தற் பொருட்டும் பிரிவான்[3]. இருபெரும் வேந்தர் போர் புரிய முற்பட்ட பொழுது அவரிடைத் தூது சென்று அவர் தம் பகை தணித்தற் பொருட்டும் தலைவன் மனையைப் பிரிய நேரிடும்[4]. பொருள்தேடும் பொருட்டுப் பெரும்பாலும் பிரிதல் உண்டு[5]. போரில் அரசனுக்கு உதவி செய்யவும் பிரிவான்[6]. இவை அல்லாமல், பரத்தையரிடம் சென்று இன்பம் நுகருவதற்காகத் தலைவியை விட்டுப் பிரியும் கொடிய பண்பும் தலைவரிடம் இருந்ததாகத் தெரிகிறது[7].

கல்வி கற்பதற்காகச் செல்லும் தலைவன் மூன்றாண்டுகளுக்குமேல் மனைவியை விட்டுப் பிரிந்திருப்பது இல்லை; தூதின் பொருட்டும், போரின் பொருட்டும் பிரிந்து சென்ற தலைவன் ஓராண்டிற்குள் திரும்பி விடுவான். இவ்வாறு

1. தொல். கற்பு. 5.
2. தொல். கற்பு. 27' 2a. தொல் கற்பு, 47.
3. தொல். கற்பு. 34, 48.
4. தொல். அகத். 25, 26.
5. தொல். கற்பு. 49.
6. தொல். கற்பு. 26.
7. தொல். கற்பு. 46.

தலைவன் பிரிந்த போதெல்லாம் தலைவி ஆற்றியிருந்து இல்லறத்திற்குரிய கடமைகளைச் செம்மையாய்ச் செய்து வருவாள்.

தலைவனும் தலைவியும் காவிரியும், தண்பொருநையும். ஆன்பொருநையும், வையையும் போன்ற ஆறுகளிலும் குளிர்ச்சிமிக்க குளங்களிலும், கண்ணுக்கினிய பல்வகை வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் செடி கொடிகளும், தீஞ்சுவைமிக்க கனிவகைகள் கனிந்து தொங்கும் மாங்களும், செடிகளும் நிறைந்த பூஞ்சோலைகளுக்குச் செல்லுவர். அங்கு இன்புற விளையாடி இனிதாகப் பொழுதைக் கழித்துத் தலைவனும் தலைவியும் தங்கள் இல்லத்திற்குத் திரும்புவர்[1].

இவ்வாறு பிறர் புகழும் வண்ணம் மனையறம் பேணி ஒன்றி வாழும் தலைமக்களது இன்பவாழ்வில், சில சிறு பூசல்களும் ஒரோவழி நிகழ்தல் உண்டு. இப்பூசல்களை ஊடல், துனி, புலவி என்பர். அவ்வூடல் முதலியன காதலரிடையே வாழ்க்கை இன்பத்தை மிகுவிப்பதற்கு ஓரளவாக இருக்க வேண்டும் என்று பண்டைத் தமிழர் கருதினர். ஊடல் தலைவியிடத்தே நிகழ்வதாகும். ஊடல் நிகழ்வதற்குப் பல காரணங்கள் அடிப்படையாக இருந்தன.

அவற்றுள் முதன்மையானது தலைவனது பரத்தையிற் பிரிவாகும். அவ்வாறு பிரிந்து செல்லும் தலைவன் காமக்கிழத்தியர், காதல் பரத்தையர் வீடுகளிலேயே பல நாட்கள் தங்கி விடுதலும் உண்டு. தலைவன் திரும்பி வரும் போது தலைவி அவனிடம் வெறுப்புணர்ச்சியோடு பேசாது வாளா இருப்பாள். அந்நிலையில் தலைவன் சார்பில், தோழி, செவிலி, பார்ப்பான் பாங்கன், பாணன், கூத்தர், விறலியர், விருந்தினர், அறிவர் முதலியோர் தலைவியிடம் சென்று, தலைவன் செய்த தவற்றினை மறந்து அவனை அன்புடன் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுவர்[2] அறம் பிறழாத நெஞ்சினளாகிய தலைவி, தன் பிள்ளையைப் பார்த்து "தந்தையர் ஒப்பர் மக்கள் என்பர்; எனவே

1. தொல். கற்பு. 50.
2. தொல். கற்பு, 52.

நீயும் உன் தகப்பனைப் போல் கொடியவனுக இருப் பாயோ?'' என்று மகனைப் பழிப்பதுபோலக் கணவனைக் கண்டிப்பாள். தலைவனை அன்பிலன் கொடியவன் என்று இடித்துரைத்து அவனிடம் நெருங்குவாள். அப்பொழுது தலைவன் தான் அவளுக்குச் செய்த கொடுமையைப் பொறுத்து அருள வேண்டும் என்று அவளடி வீழ்ந்து வேண்டுதலும் உண்டு. அவன் தன் தவற்றிற்கு உடன் பட்டு மனக்கலக்கம் அடைவான்[1].

தான் செய்த தவற்றை உணர்ந்து தன்னடி வீழ்ந்து வணங்கிய கணவனைத் ''தங்களிடம் காதல் கொண்டுள்ள பரத்தையர் தங்களுடைய இச்செயலைக் காணின் நன் றெனத் தங்களைப் பாராட்டுவார்கள்''[2] என்று கூறி அவனுடைய விரும்பத்தகாத ஒழுக்கத்தைக் கடிந்து உரைப்பாள். தன்னைவிடத் தன் கணவன் உயர்ந்த பண்புகளை உடையவன் என்பதை நினைந்து அவனை ஏற் றுக் கொள்வாள். அச்சமயத்தில் 'மேனின்று மெய் கூறுங் கேளிராகிய' தாயைப் போல் அவனுக்கு அறிவுரை கூறி அவன் மனக்கவலையை மாற்றுவாள். தான் நடத்தும் இல்லறத்தால் கணவனுக்கு இழுக்கு உண்டாகாமல் பார்த் துக் கொள்ளவேண்டியது தன்னுடைய கடமை என்பதனை உணர்ந்து, தலைவி என்றும்போல அவனிடம் அன்புடைய வளாக அவனொடு கூடி இன்புறுவாள்[3]. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சிற்சில சமயங்களில் தலைவன் தான் பரத்தையர் மாட்டுச் சென்று ஒழுகுதலை நிறுத்திக் கொள்ளுவான். தலைவன் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்ட மனைவியோடு வருங்கால் அவனுடைய இல்லத்தரசியாகிய தலைவி அன்புடன் எதிர் சென்று மணிவிளக்கு முதலிய மக்கலப் பொருள்களைக் கையில் கொண்டு அவர்களை வர வேற்பாள். தலைவி தன்னுடைய அணிகலன்கள் பூண்ட குழந்தையைக் கொண்டு சென்று தலைவனின் இரண்டாம் மனைவியிடத்துக் கொடுத்துக் குழந்தையிடம் கொஞ்சு வாள். தலைவன் தன் இன்புறு மனைவியரை விட்டுப் பிரிந்து பரத்தையரிடத்துச் சென்று ஒழுகிய தீயொழுக்

1. தொல். கற்பு. 19.
2. தொல். கற்பு. 20.
3. தொல். கற்பு. 6.

கத்தை நினைந்து உள்ளம் நைந்து வருந்துவதனாலும் தலைவன் உள்ளம் திருந்துதல் உண்டு[1].

காதலர் இருவரிடையே உண்டாகும் பூசலும் ஊடலும். இவ்வாறு பெரும்பாலும் நீங்கிவிடும். தலைவிக்குப் பூப்புத் தோன்றி மூன்று நாள் கழிந்த பிறகுள்ள பன்னிரண்டு நாளும் கருத்தோன்றும் காலமாதலின், தலைவன் அக்காலத்தில் தன் மனைவியை விட்டுப் பிரிந்து பரத்தையரிடம் சென்று தங்க மாட்டான்.

நற்புலமங்கையர் பிள்ளைப் பேறு வாய்ப்பதற்கும், கணவரது செயல் நிறைவேறுவதற்கும் கணவரோடு சேர்ந்து தெய்வத்தினை வேண்டி வழிபடுவர்[2]. மக்களைப் பெற்று வாலாமை நீங்கிய தலைவியைக் கருதி, அறன் பல புரிந்து மூத்த அறிவுடையோர்களாகிய தன் குல முதல்வர்களைத் துணையாகக் கொண்டும் அமர் அகத்து அஞ்சா மறவர்களாய்த் துறக்கம் புக்க வீரர்களை எண்ணியும் சிறப்புப் பல செய்து வழிபடுவர்[3].

அன்பும் அறனும் அணியெனப் பூண்ட காதலர் இருவரும் இல்லறத்தை இனிது நடத்தி இயன்றவகை எல்லாம் பிறர் துன்பங் களைந்து நன்மக்களைப் பெற்று வாழ்வில் நுகர வேண்டிய இன்பம் அனைத்தையும் நுகர்ந்து இன்புறுவர். இவ்வாறு இவ்வுலக இன்பத்தினை நன்கு நுகர்ந்த பிறகு, பாதுகாவல் அமைந்த மக்களுடனே நெருங்கி, அறத்தினை விரும்பும் சுற்றத்தாருடனே தலைவனும் தலைவியும், வீட்டின்பத்தினைப் பெறுதற்குரிய சிறப்பினை அருளும் முழுமுதற் பொருளை இடைவிடாது எண்ணிப் போற்றும் நன்னெறியில் பழகுதல் இல்லற வாழ்க்கையின் முடிந்த பயனாகும்[4] எனப் பண்டைத் தமிழர் கருதினர். இதுவே தமிழன் கண்ட துறவறநெறியாகும்.

---

1. தொல். கற்பு. 32, 33.
2. தொல். கற்பு. 31 & 5.
3. தொல். கற்பு. 5.
4. ''காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு, துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும், கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' —தொல். கற்பு. 51.

பழக்க வழக்கங்கள்

'மக்கள் கூடிவாழும் இயல்புடைய விலங்குகள்' என்று அரிஸ்டாட்டில் மொழிந்துள்ளார். பலகால் கண்டும் பேசியும் இன்புறுதல் மக்கள் இயற்கை. அவ்வாறு ஒரு மக்கள் வாழ்வாங்கு வாழுங்கால், அவர்களிடையே பயிற்சியின் முதிர்ச்சியால் உண்டான சில இயல்புகளைக் காணலாம். அவ்வியல்புகளே பண்பாட்டின் அடித்தடமாக இருக்கிறது. அத்தகைய பயிற்சியின் முதிர்ச்சியே பழக்கம் எனப்படுவதாகும். பழம் என்னும் சொல் முதிர்ந்து கனிந்தது எனும் பொருளுடையதாகும். பழகுதலும் நெருங்கிப் பயிலுவதனால் உண்டாகும் முதிர்ச்சியாகும். பலகாலும் கண்டும் சொல்லாடியும் மருவுதலே பழக்கம் எனப்படும். மக்களின் உளப் பண்பாட்டிற்கு ஏற்பப் பழக்கம் மூன்று வகையாகச் சான்றோர்களால் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

மனிதன் மனத்தினால் பலவற்றை நினைந்து நினைந்து, எண்ணி எண்ணிப் பார்க்கிறான். இவ்வாறு எண்ணும் இயல்பு நாளடைவில் மனப்பழக்கமாக அமைந்து விடுகிறது. மனிதன் உள்ளத்தால் வாழ்கிறான் என்று சொல்லுவது உண்டு. மனிதனுடைய 'எண்ணமே வாழ்வாக' மலருகிறது. அவ்வெண்ணங்கள் ஊற்றெடுக்கும் அருஞ் சுனையாக இருப்பது மனம். மனத்தின் இயல்புக்கு ஏற்ப, மனிதனது உள்ளத்தில் எண்ணங்கள் எழுகின்றன. இயற்கையில் மக்களின் மனம் எல்லாம் ஒரே வகையான பண்புடையனவாகவே உள்ளன. ஆனால், நாளடைவில் ஒவ்வொரு மனிதனுடைய மனமும், அவன் உள்ளத்திற்குக் கொடுக்கும் பயிற்சிக்கு ஏற்ப விரிந்தும், சுருங்கியும் வளர்கிறது. இவ்வாறு மனம் பண்படுத்தப்படுவதனால், உள்ளத்தில் எழும் எண்ணங்களும் பண்பட்டுவிளங்குகின்றன. ஒருவன் நல்லனவற்றையே நினைப்பதில் தன் மனத்திற்குப் பயிற்சி தந்தால், அவன் உள்ளம் பண்பட்டுவிளங்குகிறது. தீய எண்ணங்களே எண்ணுவதில் தன் மனத்திற்குப் பயிற்சி தருவானானால், அவன் உள்ளம் பண்படாத கொடிய விலங்குகள் வாழும் காடாக மாறுகிறது.

இவ்வாறு மனம் நல்லவற்றையோ, தீயவற்றையோ எண்ணுவதில் பழகி விடுமானால், நாளடைவில் அந்தப்

பழக்கத்திற்கு மனம் அடிமையாகிறது. தீயனவற்றைச் சிந்திப்பதில் பழகிய மனத்தில் மாசு படிந்து விடுகிறது. இதனை நன்குணர்ந்த வள்ளுவர் பெருந்தகை, 'மனத்துக் கண் மாசிலன் ஆதல்' வேண்டும் என்றார். மனிதனது மனப்பழக்கம் நன்றாக இருந்தால் தான், அவனுடைய வாழ்வு சிறக்கமுடியும். எனவே, எல்லாப் பழக்க வழக்கங்களுக்கும் அடிப்படையாக இருப்பது மனப்பழக்கமாகும். ஒரு சமுதாயமாக வாழும் மக்களுடைய மனப்பழக்கம், அந்தச் சமுதாய மக்களுடைய சிந்தனைக் கருத்துக்களாகவும், கலைகளாகவும், இலக்கியங்களாகவும், கடவுள் நெறிக் கோட்பாடுகளாகவும் உருவெடுக்கின்றன.

மனப்பழக்கத்திற்கு ஏற்ப மனிதனது சொற்பழக்கமும் அமைகிறது. மனிதனது உள்ளம் நல்லனவற்றைச் சிந்திக்கும் மனப்பழக்கம் உடையதாக இருக்குமானால், தீய வழுக்கியும் வாயால் சொல்வதைக் காண இயலாது. ஆனால், அதற்கு நேர்மாறாக இருக்குமானால் பயனற்ற தீய சொற்களைக் கூறும் சொற்பழகக்ம் அமைந்து விடுவதைக் காணலாம். மனிதன் சொலல் வல்லனாகச் சோர்விலனாக விளங்குவதற்குச் சொற்பழக்கம் இன்றியமையாததாகும். ஆக்கமும் கேடும் ஒரு மனிதனுக்கு அவனுடைய சொற் பழக்கத்தால் வருவனவாகும். இனிய, எளிய, இதமான சொற்களைச் சொல்லுதலும் பேசுதலும் பழக்கத்தால் வருவனவேயாகும். சொற்பழக்கம் நாகரிகப் பண்பாட்டினைத் தூய நிலையில் விளக்குவதாகும். சொற்பழக்கம் மொழியின் வளர்ச்சிக்கும், இசையின் நுட்பத்திற்கும் காரணமாக உள்ளது.

பண்டைத் தமிழ்ச்சான்றோர் எதை, எப்பொழுது, எவ்வாறு சொல்லவேண்டும் என்கின்ற நல்லதொரு பழக்கத்தைக் கடைப்பிடித்தனர் என்பதைத் 'தகுதியும் வழக்கும்'[1] என்னும் தொல்காப்பியர் கூற்றால் நன்கு அறிகிறோம். மங்கல வழக்கு, இடக்கரடக்கல், குழூஉக்குறி முதலியன சொற்பழக்கத்திற்கு இன்றியமையாதன. சொல்லுகின்றபொழுது, தகுதியான—சொல்லுவதற்கு ஏற்ற-சொற்களைச் சொல்லுதல் வேண்டும். அதைத்தான் 'தகுதி வழக்கு' என்ற சொற்றொடரால் நமது முன்னோர்கள் வழங்கினர்.

---

1. தொல். கிளவி. 17.

வேம்பினையும் கடுவினையும் (கடுக்காய்) போன்ற கடுஞ் சொற்களைத் தன்னகத்தே கொள்ளாது, வருங்காலத்தில் நன்மை விளைப்பதற்கும் என்ற நல்ல நோக்கத்தோடு பாதுகாத்தற்குரிய சொற்களால் உண்மையை அறிவுறுத்தும் சொற்பழக்கத்தைப் பண்டைத்தமிழர் 'வாயுறைவாழ்த்து'[1] என்பர்.

பெரியோர்கள் கூடியிருக்கும் அவைநடுவில் முன்னும் பின்றி அடங்கித் தாழ்ந்து ஒழுகுதல் கடன் எனச் செவிக்கண் அறிவுறுத்தும் 'செவியறிவுறூஉம்' சொற்பழக்கத்தைச் சார்ந்ததாகும்.[2]

உள்ளம், உரை ஆகிய இரண்டும் செயலைத் தூண்டுவனவாகும். செயற்பழக்கம் சிறந்து விளங்க உள்ளத் தூய்மையும், உரைக்கும் சொல் தூய்மையும் இன்றியமையாததாகும். மனப்பழக்கமும் சொல்பழக்கமும் தூய்மையுடையதாக இருக்குமானால், ஒரு மனிதன் செய்யும் செயல்களும் தூய்மை உடையதாக விளங்கும். உள்ளத்து எழும் உணர்வே, சொல்லாகவும், செயலாகவும் வெளிப்படுகின்றது. ஒரு செயலைச் செய்வதற்குப் பழக்கம் தேவைப்படுகிறது. சிற்பம் செதுக்குவதில் பழக்கம் இல்லாத ஒருவன் சிற்பியாக முடியாது; இசையில் பயிற்சி இல்லாத ஒருவன் இசைவாணனாக முடியாது. ஆகவே, எச்செயலையும் செம்மையாகச் செய்வதற்குப் பழக்கம் இன்றியமையாதது. இவற்றை நன்குணர்ந்த அவ்வை,

> "சித்திரமும் கைப்பழக்கம்! செந்தமிழும்
> நாப்பழக்கம்
> வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
> நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
> கொடையும் பிறவிக் குணம்"

என்று தெளிவுறுத்தியிருத்தல் இங்கு நினைவுகூரத்தக்கது.

வழக்கம் என்பது சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கும், வாழ்க்கையில் மன நிறைவைப்பெறவும் மக்கள் கடைப்பிடித்து ஒழுகும் ஒழுக்கத்தால் அமைவது. பன்னெடுங் காலமாகப் பழக்கத்தில் இருந்துவரும் சிறந்த நெறியே

1. தொல். செய்யுள். 111.
2. தொல். செய்யுள். 113.

வழக்கம் எனப்படுவதாகும். உயர்ந்தோர்களாகிய சான்றோர்களிடத்துத் தோன்றி நிகழ்வனவே வழக்கு எனப்படும்.[1] வாழ்க்கையில் எளிய முறையில் செயல்களைச் செய்யவும், அரிய கருத்துக்களை எளிதில் அறியவும் வழக்குப் பெருந்துணையாகிறது. வழக்கு இருவகைப்படும். அதனை இயற்கை வழக்கம், செயற்கை வழக்கம் எனலாம். உலகியல் வழக்கு, புலனெறி வழக்கு (செய்யுள்)[2] என்றும் கூறுவர். 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்'[3] என்ற பாகுபாடும் தொன்று தொட்டு இருந்து வருவது கருதத்தக்கது.

உலக மக்கள் யாவரும் அறியத்தோன்றியது வழக்கு; அவர்களை ஒரு நெறிப்படுத்தி முறையாக வாழச்செய்வது வழக்கு;[4] உலகத்தோடு ஒட்ட ஒழுகத்தூண்டுவதே வழக்கம். 'மெய்த்தலைப்பட்ட வழக்கு', 'ஒட்டுதற்குரிய வழக்கு' என்பன யாவும் வழக்கினது மேன்மையினை உணர்த்துவனவாகும்.

பழக்கவழக்கம் ஆகிய இரண்டினைக் கடைப்பிடித்து ஒழுகும் நெறியே 'ஒழுக்கம்' எனப் பண்டைத் தமிழ்ச்சான்றோர் வழங்கினர். 'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்'[5] என்னும் நூற்பாவால் பழக்கவழக்கத்தினைக் கடைப்பிடித்து ஒழுகுதலே ஒழுக்கம என்பது பெறப்படுகின்றது.

ஒரு நாட்டு மக்களிடத்துக் காணப்படும் பழக்கவழக்கங்கள, அந்நாட்டு மக்களிடத்தே தொன்றுதொட்டு நின்று நிலவி வருகின்ற பண்பாட்டினைச் சுட்டிக்காட்டும் சிறப்புடையதாகும். ஒரு நாட்டு மக்களின் உளப்பண்பாடு எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை அந்நாட்டு மக்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்களைக் கொண்டே முடிவு செய்யலாம். பழக்க வழக்கம் என்னும் வித்திலிருந்து முளைக்கும் நன்மரத்தில் கனிந்த கனியே நாகரிகம் எனப் போற்றப்படுகிறது.

---

1. "வழக்கு எனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான;' —தொல். மரபு. 13.
2. 'வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்'—தொல். சிறப்புப் பாயிரம்.
3. தொல். அகத்திணை. 53.
4. தொல். வே. மயங். 21.
5. தொல். கிளவி. 17.

பழக்க வழக்கங்களுள் சிறந்தனவும் உள்ளன. தீயனவும் உள்ளன. சில பழக்க வழக்கங்கள் அறிவுக்குப் பொருந்தாத மூடப்பழக்க வழக்கங்களாக இருக்கலாம். ஆனால், அவை சமுதாயத்தின் கட்டமைப்பிற்கும், மக்களின் நலவாழ்விற்கும் உற்றதுணையாக இருப்பன. ஒரினமக்களிடையே தோன்றும் 'உள்ளார்ந்த உணர்ச்சி வேட்கையை' நிறைவேற்றுவனவாக அறிவாராய்ச்சிக்குப் பொருந்தாத பழக்கவழக்கங்கள் ஒவ்வொரு மக்கள் சமுதாயத்திலும் இருந்தே தீரும். மக்கள் வாழ்க்கையில் அதன் செல்வாக்கை நாம் புறக்கணிக்க முடியாது.

தொல்காப்பியர் காலத்திய தமிழகத்தில் எண்ணற்ற பழக்க வழக்கங்கள் தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் உருவாக்கி வந்தன. பெரும்பாலான பழக்கவழக்கங்கள் தமிழர்க்கே உரிய தனிப் பண்பாட்டினைத் தெள்ளத்தெளிய விளக்குவனவாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. அவை அன்றைய தமிழகத்தின் அரசியல் நிலையினையும், சமூகப் பொருளாதார சமய நிலையினையும் நன்கு எடுத்தியம்புகின்றன.

பண்டைத் தமிழரின் வாழ்க்கையில் அகத்தினைச் சார்ந்து நிகழும் வாழ்க்கை நெறியினை அகப் பொருள் பற்றியன என்றும், அகத்திற்குப்புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்ட வாழ்க்கை நெறியினைப் புறப்பொருள் பற்றியன என்றும் கூறுதல் மரபு. பண்டைத் தமிழகத்து மக்களிடையே காணப்பட்ட பழக்க வழக்கங்களை அகப்புற வொழுக்கத்தைப் பற்றியனவாகப் பாகுபடுத்தி ஆராயலாம்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டு காதலித்துக் கூடி இன்புறும் அகவாழ்வில் காணப்படும் பழக்க வழக்கங்கள் பல. தாங்கள் விரும்பிக் காதலிக்கும் காதலரையே தங்கள் கணவராகத் தேர்ந்து எடுக்கும் உரிமை அன்றைய தமிழ்ப் பெண்கள் அனைவரும் பெற்று இருந்தனர்.[1] அவ்வாறு காதல்வாழ்வில் ஈடுபடும்பொழுது பெற்றோர் உடன்பாட்டைப் பெறவேண்டும் என்ற நியதி இல்லை. மணமகன் மணமகளுக்குக் 'கையுறை' (பரிசம்) கொடுக்கும் வழக்கம் இருந்ததே ஒழிய, மணமகனுக்குப் 'பெண் வீட்டார்

1. தொல். களவி-1-5.

'கையுறை' (Dodry) கொடுக்கும் தீய பழக்கம் அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் இருந்ததில்லை. தான் விரும்பும் பெண்ணைத் தனக்கு, அவளது பெற்றோர் திருமணம் செய்து கொடுக்க மறுப்பின், அப்பெண்ணிடம் காதல் கொண்டுள்ள ஆண்மகன், பனங்கறுக்கினால் செய்யப்பட்ட குதிரையின் மீது அமர்ந்து கையிலே அப்பெண்ணின் ஓவியம் தீட்டப்பட்ட படத்தினை ஏந்தி, சிறுவர்கள் அக் குதிரையைத் தெருத்தெருவாக இழுத்துவரச் செய்து, அதனைக் கண்டு ஊரார் அப்பெண்ணின் பெற்றோரை எள்ளி நகையாடச் செய்யப் போவதாக (மடல் ஏறப போவதாக) அச்சுறுத்துவது உண்டு. ஆனால், மகளிர் அவ்வாறு மடல் ஏறுவேன் என்று கூறும் பழக்கம் இல்லை. அது அவர்களுடைய இயல்புக்கு மாறுபட்ட பொருத்தமற்ற செயலாகக் கருதப்பட்டது.[1]

பெண்ணின் பெற்றோர்கள் திருமணத்திற்கு இசையவில்லையென்றால், காதலர் இருவரும் இரவோடு இரவாகத் தங்கள் ஊரை விட்டு அயலூருக்குச் சென்று தங்கி, அங்குள்ள பெருமக்களைக் கொண்டு திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்துவந்தது. இவ்வாறு ஓர் ஆடவனோடு, ஒரு பெண் உற்றார் உறவினர் அறியாமல் சென்றுவிட்டால், இன்று அவள் 'ஓடிவிட்டாள்' எனப் பழித்துரைக்கப் படுவாள். ஆனால் அந்தக் காலத்தில் அதைத் தவறாகக் கருதாது, காதலனுடன் போவதைப் பெருந்தன்மையோடு 'உடன் போக்கு'[2] என்று குறிப்பிட்டனர். இது அன்றைய சமுதாயத்தில் காணப்பட்ட சிறப்பியல்பாகும்.

ஆண்கள் கடல் வழியே அயல்நாடுகளுக்குச் செல்லும் பொழுது பெண்களை உடன் அழைத்துக் செல்வதில்லை[3]. அவ்வாறே அயல்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று பாசறையில் தங்கும் பொழுதும் குடும்பப் பெண்களை அரசர்களும் வீரர்களும் உடன் அழைத்துச் செல்லுவதில்லை[4]. வேற்று நாடுகளுக்கு வாணிகத்தின் பொருட்டோ, அரசியல் தொடர்பான கடமைகளை மேற்கொண்டோ சென்று

---

1. தொல். களவு. 35.
2. தொல். கற்பி. 5. பொருளியல். 31,
3. தொல். அகத். 34.
4. தொல். கற்பு. 34.

லும் ஆண்கள் தம் மனைவியரை உடன் அழைத்துச் செல்லும் பழக்கம் இல்லை[1].

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் கற்பிற்குச் சிறப் பிடம் கொடுக்கப் பட்டிருந்தாலும், அது பெண்களுக்கே பெரிதும் வற்புறுத்தப் பட்டது. பெண்களுக்குக் 'கற்பு இன்றி அமையாதது; உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றப் பட்டது.

ஆனால், ஆண்களுக்கும் கற்பு இன்றியமையாதது என்னும் குறிப்பைக் காணேம். அதற்கு மாறாக ஆண் மகன் பரத்தையர் மாட்டும், காமக்கிழத்தியரிடத்தும் செல்லுவது அக்காலத்திய ஆண்மக்களுக்கு ஒரு பொழுது போக்காக இருந்தது.[2] அன்று முதல் இன்றுவரை தமிழ்ச் சமுதாயத்தில் இருந்துவரும் பெருங்குறைபாடு இது. வள்ளுவர் ஒருவர் தான் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் விழுமிய குறிக்கோளை மக்களிடையே எடுத்துரைத்தார். ஆயினும் சமுதாய வாழ்வில் பெரும்பாலான ஆண்கள் கற்பு நெறியைப் பேணவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை.

இல்லறத்தில் ஈடுபடும் ஆணும் பெண்ணும் ஒன்றாக இணைந்தே இல்லறக் கடமைகளைச் செய்தனர். காவலா யிருந்து ஊதவும் தெய்வத்தினை வழிபடும் பொழுதும், அறம்பல செய்யும்பொழுதும் தலைவி கருவுற்ற பொழுது செய்யப்படும் சடங்குகளின் பொழுதும் அறவோர், ஆசான், துறவிகள் ஆகியோருக்குச் செய்யும் தொண்டின்கண்ணும் கணவனும் மனைவியும் இணைந்து இருந்தே எல்லாக் கடமைகளையும் செய்வர்[3]

ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கே இல்வாழ்க்கை யில் பெரும் பொறுப்பு இருந்ததாகத் தெரிகிறது. கற்பும், அன்பும், நன்னடையும், மென்மையும், பொறுமையும், தீய துறையில் நெஞ்சம் செல்ல வொட்டாது நிறுத்தும் திறமாகிய நிறையும், துன்புற்றாலும் விருந்தினரை விரும் பிப் போற்றுவதும், சுற்றத்தாரை ஓம்புவதும் இல்லத்தின் தலைவியாகிய மனைவிக்கே உரிய கடமைகளாக இருந்தன[4].

1. தொல். கற்பு. 5.
2. தொல். கற்பு. 5, 6, 9, 10, 31, முதலியன.
3. தொல். கற்பு. 5.
4. தொல். கற்பு. 11.

சீருடைப் பெரும் பொருளாகிய இல்லறத்தைத் தலைவி யிடத்து ஒப்படைத்துத், தலைவன் அறம் செய்வதற்கும், பொருள் ஈட்டுவதற்கும், இசையும் கூத்துமாகிய இன்பம் நுகர்தற்கும் தலைவியை மறந்து ஒழுகுதல் உண்டு. அக் காலத்துச் 'சீருடைப் பெரும் பொருளாகிய' இல்லறத்தை இனிது நடத்துதல் தலைவியின் கடமையாகும்.[1]

மகப்பேறு ஈன்ற மகளிர், வாலாமை நீங்கும் பொருட்டுச் சில நாட்கள் கழித்து எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வழக்கம். அதனை 'நெய்யணி மயக்கம்' என்பர். தாய் தீராடியபின் பிறந்த குழந்தையைத் தகப்பன் காண் பான். அன்று குழந்தைக்கு 'ஐம்படைத் தாலி' அணிந்து பெயரிடுதல் வழக்கம். பிறகு அறம்பல செய்தல் மர பாகும்.[2] இப்பழக்கம் பெரும்பாலும் இக்காலத்திலே 'குழந்தையைத் தொட்டிலில்' இடும் விழாவைப் போன்ற தாகும்.

குழந்தைகளுக்குப் பாட்டன் பெயரை இடுதல் தொன்று தொட்டுத் தமிழரிடை இருந்து வரும் பெரும் பழக்கமாகும். தந்தையைப்போன்ற பண்புடையவர்களே மக்கள் என்னும் நம்பிக்கை அக்காலத்திலும் இருந்தது.[3]

மனைவிக்குப் பூப்புத் தோன்றிய மூன்றுநாள் கழிந்த பின்னருள்ள பன்னிரண்டு நாளும் கருத்தோன்றும் கால மாதலின் கணவன் எக்காரணத்தாலும் மனைவியை விட்டுப் பிரிந்து செல்லமாட்டான்[4].

கணவன் மேற்கொண்ட கடமைகளைச் செம்மையாக முடித்துப் பெருமித உள்ளமோடு வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது அவனை எதிர்கொள்ளும் பொருட்டு மகளிர் மாலை ஏந்திய வண்ணம் வாயிலில் காத்து நின்று வந்தவுடன் அதனை அணிவித்து வரவேற்பர்[5].

அக்காலத்தில் ஒருதார மணம்தான் வழக்கில் இருந் தது என்று சொல்லுவதற்கில்லை. பலதார மணம் கடிந்து ஒதுக்கப்படவும் இல்லை. ஓர் ஆடவன் தொன்முறை மனைவி

---

1. தொல். கற்பு. 9.
2. தொல். கற்பு. 5.
3. தொல். கற்பு. 7.
4. தொல். கற்பு. 6.
5. தொல். கற்பு. 5.

இல்லத்தில் இனிது இருக்க, அவளை விட்டுப் பிரிந்து இன்னோர் இளம்பெண்ணுடன் காதல் வாழ்க்கையில்—களவு ஒழுக்கத்தில் ஈடுபடுதலும், திருமணம் செய்து கொள்ளுதலும் தவருகக் கருதப்படவில்லை. பல மனைவியர் பெற்ற பிள்ளைகள் ஓர் ஆண்மகனுக்கு இருந்தனர் என்றும் அறிகிறோம்.[1]

ஆண் எத்துணைப் பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ள உரிமை இருந்தது. ஆனால் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பெண்கள் மட்டும் ஒருவனோடு வாழ்ந்து தீரவேண்டும் என்ற கொடிய பழக்கம் இருந்ததை மறுக்க முடியாது.

திருமணத்திற்கு நாளும் கோளும் பார்த்தல் பழக்கத்தில் இருந்தது.[2] குழந்தைத் திருமணம் செய்யும் வழக்கம் தமிழரிடையே இருந்ததில்லை. பன்னிரண்டு ஆண்டுகள் நிரம்பிய மகளிர் தாம் திருமணத்திற்கு உரியவராவர். இவ் வயதிற்குக் குறைந்த பெண்களை ஆண்கள் விரும்புவதே தவறு எனக் கருதி, அதனைக் 'கைக்கிளை' என ஒறுத்து ஒதுக்கினர்.[3]

கணவனை இழந்த மகளிர் தவநெறியில் ஈடுபடுவர், அல்லது உடன்கட்டை ஏறுவர்.[4] விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்ததில்லை. மனைவியை இழந்த கணவர் மறுமணம் செய்து கொள்ளாது அறநெறியில் ஈடுபடுதலும் உண்டு. இதனை 'தபுதாரநிலை' என்பர்.[5]

பண்டைத் தமிழகத்தில் 'பரத்தையர்' என்னும் பொதுமகளிர் சமுதாயத்தின் சிறப்பிற்குக் களங்கம் விளைவிப்பவர்களாக இருந்தனர். மருத நிலத்தில் நாகரிகமிக்க நகரங்களில் அவர்கள் வாழ்ந்தனர். ஆடலிலும், பாடலிலும், பிற கலைகளிலும் வல்லவர்களாகவும், பெரிதும் 'வரைவின் மகளிராயும்' திகழ்ந்தனர். பாணர்கள் இவர்களுக்கு உதவி புரிவோராக விளங்கினர். வாழ்க்கையில் வளமும் வசதியும் உடைய ஆண்கள், தங்கள் ஆருயிர் மனைவியரை விட்டுப் பிரிந்து பரத்தையரிடமும் சென்று

1. தொல். கற்பு. 5, 6, 10, முதலியன.
2. தொல். களவு. 44.
3. தொல். களவு. 22, கற்பு 11.
4. தொல். புறத். 24.
5. தொல். புறத். 24.

இன்பம் நுகர்வதைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். மனைவி கருவுற்ற காலத்தும், குழந்தைக்குத் தாயாகிய பிறகும் செல்வக் குடியில் தோன்றிய இளைஞர்கள் பரத்தையர் சேரியில் சென்று பல நாட்கள் அவர்களோடு தங்கி இருப்பதும் உண்டு. பரத்தையருள் சிலரைத் தலைவன் தன் இன்பக்கிழத்தியாகக் கொண்டு ஒழுகுவான். அத்தகையோர் 'காதற் பரத்தையர்' எனப்படுவர். இல்லக் கிழத்திக்கு வேறுகத் தலைவன் விருப்பங்காரணமாகப் பரத்தையருள் சிலரை ஒரே வழி மணம் செய்து வாழ்வான். அவ்வாறு மணம் செய்துகொள்ளப் பட்டவர்களே 'காமக் கிழத்தியர்' எனப்பட்டனர்.[1]

பரத்தையர் என்னும் புறப் பெண்டிரை விரும்பி மனைவியை விட்டுக் கணவன் பிரிந்து செல்லுவதைப் 'பரத்தையர் பிரிவு' என்று கூறுவர். பெரும்பாலும் செல்வக் குடியில் பிறந்த ஆண்களே அவ்வாறு பரத்தையர் மாட்டுச் சென்றனர். அரசர்களும், செல்வர்களும் அரசியல் ஒருமைப் பாட்டிற்காக—ஒற்றுமைக்காகப் பல மனைவியரை மணம் செய்து கொண்டனர். தங்களுடைய வரம்பில்லாத செல்வத்திற்கும், சமுதாயத்தில் தாங்கள் பெற்றிருக்கும் சிறப்பிற்கும், மதிப்பிற்கும் அறிகுறியாகப் பரத்தையரிடம் சென்று இன்பம் நுகர்வது பெருமை எனக் கருதினர் போலும்.

ஆண்பெண் உறவைப் பற்றியும், கற்பு நெறியைப் பற்றியும் விழுமிய நோக்கமும் கருத்தும் தொல்காப்பியர் காலத்தில் சிறப்புற்று இருந்தது. அக்காலத்தில், 'பரத்தையர்' என்ற தனிப்பட்ட பெண்கள் குழு தமிழர் சமுதாயத்தில் இருந்தது என்பது வெட்கப்படத் தக்கதாகும். பரத்தையரிடம் பிரிந்து செல்லுவது குற்றமன்று என்று பல காரணங்களை உரையாசிரியர்கள் காட்டினாலும், அது தமிழர் நாகரிகத் தண்மதியில் காணப்படும் களங்கமேயாகும்.

நாளடைவில் பரத்தையர் கூட்டம் சமுதாயத்தின் இழிந்த நிலையில் இருந்து, 'தேவதாசிகள்' என்றும்,

1. தொல். புறத். 10.

'தேவர் அடியார்' என்றும் பட்டங்கள் பல பெற்று உயர்ந்த நிலையை அடைந்தது. சற்றேறக்குறைய, கி. பி. ஆரும் நூற்றாண்டில் தான் கோயில்களில் பணிபுரியும் 'தேவர் அடியாராக'ப் பரத்தையர் கூட்டம் 'பதவி' பெற்றிருக்க வேண்டும். தமிழர் சமுதாயத்தில் இப்பரத்தையர் குழு எவ்வாறு தோன்றியது என்பது ஆராய்ச்சிக்குரியது.

அன்றைய தமிழ் மக்கள் ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு நாளும் கோளும் பார்த்துக் குறித்த நாளில் தொடங்கியதோடு அமையவில்லை. தாங்கள் ஒன்றைப் பற்றி நினைக்கின்ற பொழுது தற்செயலாக நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டு உண்டாகப் போகும் நன்மை தீமைகளை உய்த்து அறிந்தனர். குறி சொல்வோரிடம் நற்சொல் கேட்டனர். கட்டினும் கழங்கினும் பிற்காலத்தில் நிகழக் கூடியதை முன் கூட்டியே அறிய முயன்றனர்.[1]

தமிழகத்தின் முடியுடை வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் தொல்காப்பியர் காலத்திலேயே தங்களது குடிக்குரிய அடையாளமாகப் பனை, ஆத்தி, வேம்பு ஆகிய வற்றின் பூக்களை மாலையாக அணியும் வழக்கத்தினைக் கைக்கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழ்ப் பெண்கள் தம் அரசன் போரில் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பத்தால் முருகனை வாழ்த்தி வணங்கி வள்ளிக் கூத்து ஆடினர் என்பதைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம். இதனால் 'வள்ளி திருமணம்' தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக ஆடப்பட்டு வரும் கூத்தென்பது புலனாகிறது.

'திருவுடை மன்னரைக்காணின் திருமாலைக்கண்டேனே என்று நம்மாழ்வார் மொழிந்தருளிய கருத்துத் தொன்று தொட்டு நம் நாட்டில் இருந்து வருவதாகும். காயாம்பூ மேனியானுகிய மாயோனைப் போன்று, தம் நாட்டினைக் காக்க வல்லவன் மன்னன் எனத் தொல்காப்பியர் காலத் தமிழர் கருதினர்.[2]

இக்காலத்தில் நாட்டின் நன்மை கருதி அரும்பெரும் செயல்களையாற்றும் பெரியார்களுக்கும் அரசினர் பட்டங்

---

1. தொல். அகத். 36.
2 தொல். புறத். 5.

கள் வழங்கிப் பாராட்டுவதைப் போன்று, அக்காலத்தில் போரில் செயற்கரும் செயல்களைச் செய்து மாபெரும் வீரர்களாய் விளங்கியவர்கள் வேந்தர்களால் சிறப்புப் பெயர்களும், பட்டப்பெயர்களும் வழங்கப்பெற்றுப் பாராட்டப் பெறுவர். இதனை 'மாராயம்' வழங்குதல் என்பர்.[1]

பண்டைக் காலத்தில் அரசர்கள் முடிதுறக்கும் பழக்கமும் இருந்தமை குறிப்பிடத் தக்கது.[2] ஓரரசன் பகையரசன் மீது படையெடுத்துச் சென்று அவன் கோட்டையை முற்றுகை இடுவதற்குப் புறப்படும்பொழுது நல்ல நாளினைப் பார்த்து, அந்நந்நாளில் தன்னுடைய குடையையும், வாளையும், சேனையையும் அத்திசை நோக்கிப் புறப்படுமாறு செய்வது மரபு.[3]

சொத்துரிமை:

அக்காலத்தில், தந்தையின் சொத்து மகனுக்கே உரியதாகக் கருதப்பட்டது.[4] பிள்ளைப்பேறு கருதி ஒருவன் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. பண்டைத் தமிழர் தனிமனிதனுக்குச் சொத்துரிமை உண்டு என்பதனை நன்கு அறிந்திருந்தனர். ஆடுமாடுகள், பொன்பொருள், அடிமைகள் முதலியன சிறந்த சொத்துக்களாகக் கருதப்பட்டன. நிலத் தலைவர்களுக்கு உரியதாகப் பெரு நிலப் பரப்புகள் பல இருந்தன. வேளாளரில் உழுதுண்போர் உழுவித்துண்போர் என்ற பிரிவுகள் இருந்தமையால், நிலம் உடையவர்கள் சிலரும், நிலமற்றவர்கள் பலரும் இருந்தனர். உழுபவனுக்குத்தான் நிலம் முரியது என்னும் சிறந்த பொருளியல் நெறியினைத் தொல்காப்பியர் காலத் தமிழகத்தில் காணமுடியவில்லை.

ஊர்திகள்:

தேர் (வண்டி), யானை, குதிரை முதலியன அக்காலத்திய மக்களின் ஊர்திகளாக இருந்தன.

---

1. தொல். புறத். 8.
2. தொல். புறத். 21.
3. தொல். புறத். 12.
4. தொல். பொருளியல் 27.

பொழுதுபோக்கு:

பண்டைத் தமிழ்மக்கள் ஆடல், பாடல், புனல் விளையாடல், குதிரை, தேர் முதலியன ஓட்டல், 'வல்' என்னும் காய்களைக் கொண்டு ஆடும் சதுரங்க ஆட்டம்[1] முதலியவற்றைத் தங்கள் பொழுதுபோக்கிற்குரிய விளையாட்டுக்களாகக் கொண்டிருந்தனர். ஆடலில் வல்லார் கூத்தர், விறலியர் எனப் பட்டனர். காதலன், காதலியர் ஊருக்கு வெளியே உள்ள பூஞ்சோலைக்குச் சென்று தங்கி, ஆற்றிலும் குளத்திலும் மூழ்கி விளையாடி இன்புறுவர்.[2]

ஆடை அணிகலன்கள்

பலவகை ஆடைகளைத் தமிழ்மக்கள் அணிந்திருந்தனர். குறிஞ்சி நில (நாகரிக) மக்கள் மானின் தோல், புலியின் தோல் முதலியவற்றை ஆடையாக உடுத்தினர். இத்தகைய தோல்களை ஆடையாக உடுப்பதற்கு முன்பு, பசுந்தழைகளை ஆடையாக, அணிந்திருந்தனர் என்பதைத் 'தழையுடை' தருதல் என்னும் அகப்பொருள் கிளவியால் அறிகிறோம்.[3] நாகரிகம் மருதநிலத்தில் மலர்ச்சியுற்ற காலத்தில், பருத்தியினைக் கொண்டு ஆடை நெய்யக் கற்றனர். தொல்காப்பியர் காலத்தில் பலவகையான ஆடைகளை மகளிர் மாற்றி மாற்றி அணிந்தனர் என அறிகிறோம்.[4] செய்கின்ற வேலைக்கும் நேரத்திற்கும் ஏற்றவாறு காதல் வாழ்க்கையில் ஈடுபடும் மங்கையர் ஆடைகளை மாற்றி உடுத்தனர். அதனை 'உடைபெயர்த்து உடுத்தல்' என்பர்[5]. இதனால் ஆடைகளை அவரவர்களுக்கு ஏற்றவாறு உடைகளாகச் செய்து மக்கள் உடுத்தனர் என்பது புலனாகின்றது.

மகளிர் பொன்னால் செய்யப்பட்ட அணிகள் பலவற்றை அணிந்திருந்தனர். தோடு, வளையல், இழை முதலியன பெண்கள் அணிந்த அணிகலன்களில் குறிப்பிடத்தக்கன.[6] அரசர்களின் முடிகள் பொன்னால் செய்யப்பட்டன.[7]

---

1. தொல். புள்ளி. 78.
2. தொல். கற்பு. 50.
3. தொல. மெய்ப். 16.
4. தொல். மெய்ப். 14.
5. தொல். மெய்ப். 14 களவியல். 4.
6. தொல் மெய்ப். 14.
7. தொல். மரபு. 71.

ஒன்பது

அரசியல்

1. அரசு

"முன்னை நாளில் மன்னன் இல்லை
பின்னை நாளில் வந்தனர் அவரே;
தொன்மை மரபில் நன்மை வழிவழி
வளர்ந்தவர் மன்னராய் வளம்பல செய்தனர்."

—திரு. வி. க.

தொல்காப்பியர் காலத்திய அரசியல் அமைப்பினை நாம் விரிவாக அறிய இயலவில்லை. எனினும், தொல்காப்பியத்தில் பொதிந்துள்ள அரசியல் கருத்துக்களை அகழ்ந்தெடுப்போமானால், பண்டைத் தமிழக அரசியலைப் பற்றி ஓரளவிற்கு விளக்கம் பெறலாம். தமிழரின் போர் முறையைப் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளுவதற்குத் தொல்காப்பியம் பேருதவியாக இருக்கிறது.

அரசின் தோற்றம் :

நிலவியல் அடிப்படையில் பண்டைத் தமிழ்ச் சமுதாயம் ஐவகை இனங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. குறிஞ்சி நிலமக்களாகிய குறவர், வேட்டுவர், முல்லைநில

மக்களாகிய ஆயர், இடையர், மருதநில மக்களாகிய உழவர், நெய்தல்நில மக்களாகிய பரதவர், பாலைநில மக்களாகிய எயினர் எனப்பட்ட ஐவகை இனமக்களைக் கொண்டதே அன்றைய தமிழ்ச் சமுதாயமாகும். இவ் வினங்கள் யாவும் குடும்பத்தைத் தங்கள் அடிப்படை உறுப்பாகக் கொண்டிருந்தன. பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்ததே ஓரினம். ஓரினமக்கள் பலர் ஒன்றுகூடி வாழும் இடமே சிறுகுடி, குறிச்சி, பாடி, சேரி, ஊர், பட்டினம், பாக்கம், பறந்தலை என நிலவியல்பிற்கு ஏற்பப் பெயர் பெற்றன. மக்கள் கூட்டம் கூட்டமாக ஊர்ந்து வந்து ஒன்று சேர்ந்து நிலையாக வாழத்தொடங்கிய இடத்தை, 'ஊர்' எனப் பொதுப்பெயரால் குறிப்பிட்டு வந்தனர். இவ்வாறு நிலையாக ஓரிடத்தில் வாழத் தொடங்கிய காலத்தில் இவ்வைந்திணைமக்களிடையே ஒருவகை 'அமைப்பு' இன்றியமையாத தேவையாயிற்று. குடும்ப அமைப்புக்கள் பல சேர்ந்து இன அமைப்புக்களாக அமைந்தன. அவ்வினங்களுக்குத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன் வழித்தோன்றியவர்களும் அவ்வினத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இவ்வாறு தந்தை வழித்தாய முறையில் இனமக்கள் அமைப்பு வளர்ந்து வந்தது. இத்தமிழ்ச் சமுதாய அமைப்பு நிலவியலின் அடிப்படையில் தோன்றியதைக் கண்டோம். அதோடு அமையாமல், வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் மக்கள் வாழ்க்கை அடைந்த முன்னேற்றத்தின் ஐந்து நிலைகளைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன. இத்தகைய பாகுபாடு நிகரற்றதும் சிறப்புடையதுமாகும். முல்லை மருத நிலங்களில் இச்சமுதாய அமைப்பு தனது அடிச் சுவட்டை அழியாவண்ணம் பொறித்திருக்கிறது. மருத நிலத்தில் மக்களினம் நிலையாக வாழத்தொடங்கியது. மக்கள் பெருக்கம் உண்டான காலத்தில், மருதநில மக்கள் சுற்றுப்புற நிலங்களில் சென்று குடியேறினர். நாளடைவில் சுற்றுப்புற நிலங்களும் அவ்வினமக்கள் வாழும் நிலப் பகுதியாகவே (திணையாகவே) கருதப்பட்டன. இவ்வின மக்களின் தலைவனாக இருந்தவன், பகைவரிடம் இருந்து தம்மினத்தைச் சார்ந்த மக்களைக் காப்பாற்றும் போர் வீரனாகவும், தம்மின மக்களுக்கிடையே உண்டாகும் பூசலையும், வழக்குகளையும் தீர்த்துவைக்கும் அறங்கூறும் அவைத் தலைவனாகவும் விளங்கினான். பெருநிலப் பரப்

பிணக் கட்டியாள நேர்ந்தபோது இவ்விரு செயல்களையும் செய்துவந்த இனத்தலைவனே மன்னனாக மாட்சிமை பெற்றான்.

மக்கள் இனத்தின் தலைவர்களே மன்னர்களாக ஏற்றம் பெற்ற கூர்தலற வளர்ச்சியை நாம் முல்லை மருத நில வாழ்க்கையில் காணலாம். "மனிதன் நாகரிகம் பெற்று வளரத் தொடங்கியது முல்லை நிலத்திலேயே ஆகும். மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்தது முதல் முதலில் முல்லை நிலத்திலேயே. அதனால்தான், முல்லை நிலத்தில் பசுக்களை மேய்ப்பதற்கு ஊதவும் கருவியாகிய கோல், மக்களினத்தின் தலைவனுடைய ஆட்சிக்கு அறிகுறியாக அமைந்தது. அவன் ஏந்திய கோல் அவனுடைய குடிமக்கள் வணங்கும் கோலாக நின்றது. அவன் நல்ல முறையில் நேர்மையாக ஆளும் காலத்தில் அந்தக் கோல் செங்கோல் எனப் புகழப்பட்டது. அவன் நெறி முறை தவறி ஆளும் காலத்தில் அதுவே கொடுங்கோல் எனப் பழிக்கப்பட்டது. நாகரிகத்தின் தொடக்கமாகிய அக் காலத்தில் அந்தத் தலைவனுக்குச் செல்வமாக விளங்கியவை மாடுகளே. அதுபற்றியே மாடு என்றால் செல்வம் என்னும் பொருளும் அமைந்தது.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை.'

—குறள்-400.

இவற்றால், இனமாய்க்கூடி ஆட்சிமுறை அமைத்துச் செல்வம் சேர்த்த நாகரிகம் முல்லை நிலத்தில் தோன்றியதை உணரலாம்."[1]

உழவு மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையாகிய உணவுப்பொருள்களை விளைவித்துத் தருவதனால் ஒரு நாட்டின் சிறந்த தொழிலாகக் கருதப்பட்டது. மக்கள் நாகரிகம் அற்றவர்களாய் அலைந்து திரிந்து, கொள்ளையும் கொலையும் புரிந்து வாழ்ந்த காலத்தில், உழவுத்தொழிலுக்கும் உழவர்களுக்கும் பாதுகாப்புத் தேவைப்பட்டது. அதன் பயனாகத் தோன்றியதே 'அரசு' எனும் அமைப்பாகும். இவ்வரசமைப்பின் தலைவனே 'வேந்தன்' என்று தெய்வமாகப் போற்றப்பட்டான்.

---

1. Dr. மு. வ: முல்லைத்திணை. பக். 5-6.

வேந்தன் மாபெரும் வீரனாகவும், சிறந்த நீதிபதியாகவும் விளக்கம் பெற்றான். அவனுடைய ஆட்சிக்குட்பட்ட நிலப் பரப்பு மக்கள் கவலையின்றி வாழ வசதியாக இருந்தமை யால் மக்கள் பெரிதும் அந்நிலப்பரப்பில் வாழவிரும்பினர். இவ்வாறு மக்களால் விரும்பப்பட்ட நிலப்பரப்பு 'நாடு' (விரும்பு அல்லது விரும்பப்படுவது) எனப்பெயர் பெற்றது. இவ்வாறு பண்டைத் தமிழ்ச் சமுதாயம் குடி, ஊர், நாடு எனப் படிப்படியாக வளர்ச்சியுற்று, இறுதியில் மூவேந்த ரது ஆட்சிக்குட்பட்ட முப்பேரரசுகளாகச் சிறப்புற்றது.

குடி :

சமுதாயத்தின் முதன்மையான உறுப்பாகக் குடும்பம் கருதப்பட்டது. குடும்பத்தின் தலைவனாகத் தகப்பனும், குடும்ப வாழ்வினைத் திறம்பட நடத்தும் இயக்குநராகத் தாயும் விளங்கினர். குடும்ப வாழ்க்கையில் கடமைகளை அறநெறி பிறழாமல் கருத்துடன் செய்யும் பொறுப்பு தாய்மாருக்கே உரியதாக இருந்தது. குடும்பம், மக்கள் பலருக்கும் பணிபுரியும் நல்லதோர் அமைப்பாகச் சிறப் புற்றது. குடும்பத்தலைவன் கிழவன் எனவும், தலைவி மனையோள் (கிழவி) எனவும் அழைக்கப்பட்டனர்.[1] அறி வர், அந்தணர், விருந்தினர், பாணர், புலவர், விறலியர் முதலியோருக்கு உதவி புரிந்தனர். இத்தகைய குடிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பண்புகள் இருந்தன. அவற்றைக் 'குடிமை' எனச் சுட்டினர்.[2] குடும்பத்தின் உறுப்பினர்கள் கணவன், மனைவி, குழந்தைகள், ஏவலாட் கள் முதலியோராவர்.

இக்குடும்பங்கள் பல சேர்ந்து வாழும் இடம் **சேரி** எனப்பட்டன. 'சேர்' என்றால் நெருங்கு, கூடு, திரள் என்பது பொருள். மக்கள் கூட்டமாகத்[3] திரண்டு நெருக் கமாகச் சேர்ந்து வாழ்ந்த இடம் 'சேரி' எனப் பெயர் பெற் றது.

ஊர் :

பல சேரிகளைக் கொண்டது ஓர் ஊர். ஊரில் மக்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்ததோடு, தங்கள் தொழில்களை

1. தொல். செய்யுள். 194.
2. தொல். மெய்ப். 25
3. தொல். செய்யுள். 189.

முறையாகச் செய்து வந்தனர். ஊரின் தலைவனை ஊரன் என்று கூறுவது மரபு. ஊர்கள்தாம் மனிதனுடைய வயிற்றுப் பசியைப் போக்கி அறிவுப் பசியை வளர்த்தன.[1]

நாடு :

மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை முதலிய எல்லாவற்றையும் தருவதாகவும் கவலையற்று அமைதியாக வாழ்ந்து இன்புற ஏற்றதாகவும் உள்ள நிலப்பரப்பே நாடு. ஊர்கள் பலவற்றைத் தன்னகத்தே உடையதாய், நீர்வளமும் நிலவளமும் குறைவில்லாமல் பெற்றிருப்பது சிறந்த நாடாகக் கருதப்பட்டது.[2]

தொல்காப்பியர் காலத்தில் 'தமிழ் கூறும் நல்லுலகம்' எனத் தமிழகத்தைக் குறிப்பிட்டனர். தமிழ்மொழி வழங்கிய நாட்டின் எல்லையாக வடக்கே வேங்கடமும், தெற்கே குமரியும், கிழக்கும் மேற்கும் கடல்களும் விளங்கின. அந்நிலப்பகுதியில் தண்ணிய பொழில்கள் மிகப்பலவாக இருந்தன. வளப்பம் காரணமாகப் புகழ்பெற்ற முடியுடை மூவேந்தர்கள் ஆண்டு வந்தனர்.[3]

அன்றைய தமிழகம் 1. செந்தமிழ் நாடு, 2. பொங்கர் நாடு, 3. ஒளி நாடு, 4. தென்பாண்டி நாடு, 5. குட்டநாடு, 6. குடநாடு, 7. பன்றி நாடு, 8. கற்கா நாடு; 9. சீத நாடு, 10. பூழி நாடு, 11. மலை நாடு, 12. அருவா நாடு, 13. அருவா வடதலை நாடு எனப் பதின்மூன்று நாடுகளாகப் பிரிந்து இருந்தன.[4]

அரசர் :

தமிழகத்தில் 'அரசு' மக்கள் வாழ்க்கைச் சூழ்நிலையிலிருந்து தோன்றியதைக் கண்டோம். "போரே மன்னர் கலைப் படைத்தது" War begot kings) என்னும் அரசியல் கொள்கையே தமிழகத்தில் அரசு தோன்றுவதற்கு அடிப்படையாகவும், தூண்டுகோலாகவும் இருந்தது எனலாம். முதன் முதலில் இனத்தலைவனாக இருந்தவன், நாளடை

1. தொல். மரபியல். 76.
2. நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி—தொல். களவு—23.
3. தொல். சிறப்பு பாயிரம்; செய்யுள் 78.
4. தொல். புறத். 17.

வில் நாடாளும் தலைவனுக மாறியதை மருதநில மக்கள் வாழ்க்கையில் விரிவாகப் பார்த்தோம். தற்காப்பிற்கும், பிற மன்னர்களின் மண்ணாசையைப் போக்கவும் தன்னுட்டு மக்கள் தலைவனுக நின்று போராடினான் மன்னன். அற நெறி பிழையாது குடிமக்களைக் காப்பாற்றியதனால், மக்கள் மன்னனை 'இறைவனுகக்' கருதினர்.[1] அறத்தைக் கருதாது, தனது வலிமையை முதன்மையாகக் கருதிப் போருக்கு எழுந்த பகைவர்களை எதிர்த்துப் போரிட்டு, அவர்கள் தலைமையைக் குலைக்கும் ஆற்றல் உடையவராகப் பண்டைத் தமிழ் வேந்தர்கள் விளங்கினர்.[2]

மாற்றருக்குப் புறங்கொடாத மைந்துடை மன்னனை தெய்வத்தன்மை வாய்ந்த 'உன்ன' மரத்திற்கு ஒப்பிட்டுக் கூறப்படுவதாலும், திருமாலிற்கு ஒப்பாக வேந்தனை ஒப்பிட்டுக் கூறும் 'பூவை நிலையாலும்' தொல்காப்பியர் காலத்தில் மன்னர்கள் தெய்வத்தன்மை உடையவர்களாகக் கருதப்பட்டமை புலனுகின்றது.[3] கல்வி கற்றல், மக்களைக் காத்து ஓம்புதல், அறத்தினை விரும்பிச் செய்தல், வறுமையில் வாடுவோருக்கும் துன்புறுவோருக்கும் ஈதல், ஒழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் தவறியோரை அந்நெறியில் நிறுத்துதற்பொருட்டு ஒப்ப நாடி அதற்கு ஏற்பத் தண்டித்தல் ஆகிய ஐவகைத் தொழில்களை அரசர்கள் கண்ணுங்கருத்துமாகச் செய்துவந்தனர்.[4]

மக்கள் மன்னனது தலைமையை ஏற்று அவனுடைய ஆணைக்குப் பணிந்து நடந்தனர். குடிமக்கள் மன்னனுக்குச் செலுத்திய இறைப்பொருளும், போரில் தோற்ற பகைவர் செலுத்தும் திறைப்பொருளும், அரசனுக்குரிய பொருள் வருவாய்த் துறைகளாகும்.[5]

அக்காலத்தில் அறம் வழங்கும் மன்றங்கள் இருந்தன. தொல்காப்பியத்தினை நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையில், அதங்கோட்டாசான் என்னும் பெரியார் ஆராய்ந்து விழுமிய நூல் என முடிவு செய்தார் என்று பனம்பாரனுர் கூறுவதனால், அறங்கூறும் அவைகள் இருந்

1. தொல். புறத். 1.
2. தொல். புறத். 4.
3. தொல். புறத். 20.
4. தொல். புறத். 36 நச். உரை.

திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.[1] மேலும் 'எட்டு வகை நுதலிய அவையத்தானும்'[2] என்று தொல் காப்பியர் குறிப்பிடுவதனுல், அக்காலத்தில் குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை எனப்பட்ட எட்டுவகைப் பண்புகளையுடையோர் மன்ற உறுப்பினர்களாக இருந்தனர் என்பது தெரிகிறது. இத்தகைய விழுமிய பண்புகள் பொதுவாக எல்லாவகையான மன்ற உறுப்பினருக்கும் தேவையானவை ஆயினும், அறம்வழங்கும் மன்றத்தார்க்கு மிக இன்றியமையாதனவாகும். இவ்வெண்வகைப் பண்புகள் உடையவர்கள்தாம் அக்காலத்தில் அறங்கூறும் அவையத்திற்குத் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். ஆகவே, அறங்கூறும் அவையத்தில் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ச்சியுற்ற முதுபெரும் மக்கள் கூடிய மன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அம்மன்றத்தின் தலைவனுக மன்னன் அமர்ந்து வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்பு வழங்குதல் மரபாகும்.

அரசர்க்குரிய சின்னங்கள் :

பண்டைக் காலத்தில் மன்னர்களுக்குரிய சின்னங்கள் சிறப்புடையனவாகப் போற்றப்பட்டன. படை, கொடி, குடை, முரசு, குதிரை, களிறு, தேர், மாலை (தார்), முடி, செங்கோல் ஆகிய பத்தும் அரசனுக்குரிய அரசச்சின்னங்களாகக் கருதப்பட்டன.[3]

படை :

தானை, யானை, குதிரை, தேர் எனும் நால்வகைப் படைகளை உடையவனே அரசர்களுள் சிறந்தவன் என்று போற்றப்பட்டான்.[4]

கொடி :

கொடி என்பது அரசனது அடையாள வடிவம் எழுதிய துணி அல்லது பட்டினுல் செய்யப்பட்ட கொடி. அதனுள் எழுதப்பட்ட அடையாள வடிவினுல் அது பெயர்பெறும்.

---

1. தொல். சிறப்புப்பாயிரம்
2. தொல். புறத். 21.
3. தொல். மரபு. 72.
4. தொல். புறத். 17 & 21.

''கொடிநிலை'' என்பது ''போரைத் தொடங்குதற்குக் கடவுளை வாழ்த்திக் கொடியை நிறுத்துவதே'' ஆகும் என்று நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் தந்துள்ள விளக்கம் ஈண்டுக் கருதுதற்குரியது.[1]

குடை :

அரசன் தன் குடிமக்களைத் துன்பமாகிய வெயிலினின்று காத்து, அவர்களுக்கு இன்பமும் காவலும் ஆகிய நிழலைத் தருகிறான் என்னும் ஒழுக்கக் குறிப்பு விளங்க மன்னனுக்குப் பிடிக்கப்படுவது குடை. இதனை 'நடை மிகுத்து ஏத்திய குடைநிழல் மரபு' என்பதனால் அறிகிறோம்.[2]

முரசு :

சிறப்பான செய்திகளை அறிவிப்பதற்கு அடிக்கப்படும் பெரும்பறை 'முரசு' எனப்படும். அது கொடை முரசு, முறை முரசு, போர் முரசு என மூவகைப்படும். அவற்றுள் சிறந்தது போர் முரசு. படை திரட்டுவதற்கும், வீரர்களைப் போர்க்களத்தில் ஊக்குவதற்கும், வாகை சூடிய பொழுது வெற்றி ஆரவாரம் செய்வதற்கும் போர் முரசு முழக்கப்பட்டது. இதனைத் 'துடிநிலை' என்பர்.[3]

குதிரை :

அரசன் ஊர்ந்து செல்லும் குதிரை, பட்டத்துக் குதிரை என்று அழைக்கப்பட்டது.

களிறு :

அரசன் ஊர்ந்துசெல்லும் யானையைப் 'பட்டத்துயானை' என்று கூறுதல் மரபு.

தேர் :

அரசன் ஏறிச் செல்லும் தேர், மற்றத் தேர்களைக் காட்டிலும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

---

1. Dr. ச. சோ. பாரதியார் : பழந்தமிழ்நாடு—பக். 89.
2. தொல். புறத். 6.
3. தொல். புறத். 4.

மாலை :

அரசர் தம் குடியினை உணர்த்தும் அடையாளமாக அணியப்படும் மாலை, 'தார்' எனப்படும். முடியுடைய மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் முறையே பனை, ஆத்தி, வேம்பு என்னும் உயர்ந்த மூவகைப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலைகளைச் சூடிக்கொள்ளும் மரபு[1] இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

முடி :

அரசர் தலையில் சூடும் மகுடம். பண்டைக் காலத்தில் தமிழகத்தை ஆண்ட அரசர்கள் பலருள், சேர, சோழ, பாண்டிய வேந்தருக்கே முடி அணியும் உரிமை இருந்ததெனத் தெரிகிறது. அதனால் அவர்கள் **'முடியுடை மூவேந்தர்'** எனச் சிறப்பாகப் போற்றப்பட்டனர். பிற அரசர்கள் முடி அணியும் உரிமை அற்றவர்களாவர். மன்னன் பொன்முடி புனைந்த நாளைச் சிறப்பாகக் கருதி விழாக் கொண்டாடுவர். இதனை 'மண்ணு மங்கலம்' என்பர்.[2]

செங்கோல் :

அரசன் அதிகார முறையில் வீற்றிருக்கும் போதும், வெளியில் செல்லும் போதும் கையில் பிடித்திருக்கும் தண்டு 'கோல்' எனப்படும். கோல் ஆட்சிக்கு அறிகுறியானதால், அரசனுடைய ஆட்சி நேர்மையானதாய் இருக்கவேண்டும் என்பதைக் குறித்தற்கு அது நேரானதாகச் செய்யப்பட்டிருக்கும். அதனால், அதற்குச் செங்கோல் என்று பெயர் உண்டாயிற்று. தனது நாட்டில் நன்றும் தீதும் ஆராய்ந்து அதற்குத் தக்க தண்டனை விதிப்பதற்கு உரியதாகச் செங்கோல்[3] விளங்கியது.

அரசன் அவையில் வீற்றிருக்கும் பொழுதும், உலா வரும் பொழுதும் பகையரசர்களின் மீது படையெடுத்துச் செல்லும் போதும் ஒவ்வோர் அரசனுக்கும் உரிய சின்னங்கள் இன்றியமையாத சிறப்புடையனவாகக் கருதப்பட்டன. அரச சின்னங்களுக்கும் மக்கள் மதிப்புத்தரத்

---

1. தொல். புறத். 5.
2. தொல். புறத். 36.
3. தொல். மரபு. 72 பேராசிரியர் உரை.

தவறினால், அரசனுடைய தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சம் மக்களிடையே இருந்து வந்தமை புலனு கிறது.

அரசுரிமை :

அரசுரிமை தகப்பன் வழி மகனுக்கு—மூத்த மகனுக்கு—உரியதாயிற்று. தாய்வழி அரசுரிமை இருந்த தாகத் தெரியவில்லை. அரசனைத் தேர்ந்தெடுப்பது குடி மக்களின் ஒருமித்த நல்லெண்ணத்தைப் பொறுத்திருந்த தாகப் 'பிள்ளையாட்டு' என்னும் துறையால் அறிகிறோம். போர்க்களத்தில் வாட்போர் புரிந்து பெருவெற்றி பெற்ற அரசிளங்குமரனை அந்நாட்டு மக்கள் கண்டு மகிழ்ந்து அவனுடைய வெற்றிக்கு விழாக்கொண்டாடி, பிறை அறைந்து அரசனை அவனுக்குக் கொடுப்பர்; அப்பிள்ளைப் பருவத்தோனை அரசனுகக் கொள்ளும் வழக்கத்தினைப் 'பிள்ளையாட்டு' என்பர்.[1] மேலும் அக்காலத்தில் அரசன் அரச உரிமையை—முடியைத் துறக்கும் வழக்கம் இருந்த தெனத் தெரிகிறது.[2]

மூவேந்தர் :

தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் மூவேந்தரது ஆட்சி தழைத்திருந்தமையை, அவர் புறத்திணை இயலுள் மட்டும் வேந்தன் என்ற சொல்லைப் பத்து இடங்களுக்குமேல் கையாண்டுள்ளமையாலும்,

> "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
> நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்"[3]

என்று முடியுடை மூவேந்தரைக் குறிப்பிடுவதாலும்,

> "..... உறுபகை
> வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
> போந்தை வேம்பே ஆரென வரூஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும்"[4]

என்று மூவேந்தருக்குரிய அடையாளப் பூக்களைக் குறிப்பிடுவதனாலும் நன்கு அறியலாம்.

---

1. தொல். புறத். 5.
2. தொல். புறத். 21.
3. தொல். செய். 78.
4. தொல். புறத். 5.

தொல்காப்பியம் நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து அரங்கேற்றம் செய்யப்பட்டதாகத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் குறிப்பிடுவதனால், தொல்காப்பியர் காலத்தில் பாண்டியர் குடி சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதை எளிதில் உணரலாம். மூவேந்தர்களுள் சேரர் குடி தலைசிறந்து விளங்கியதை முதலில் சேரர் மாலையையும், அதனையடுத்துப் பாண்டியர், சோழர் மாலையையும் தொல்காப்பியர் கூறியுள்ளமையால் உய்த்துணரலாம். மூவேந்தரும் வேளாளர் குடியில் பெண் கொண்டனர். வேளாளரில் உயர்ந்தோர் வேளிர் எனப்படும் குறுநில மன்னர்களாவர். வேளிர்கள் மூவேந்தர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

2. போர்

''தன்னலமும் செருக்கும் மனிதர்களிடையே தொன்று தொட்டு இருந்துவரும் இயற்கைப் பண்புகளாகும். அவை மக்களை ஒயாது அதிகார வெறிபிடித்து அலையுமாறு செய்கிறது. அதன் பயனாக இயற்கை ஒருபெரும் போர்க்களமாகக் காட்சி அளிக்கிறது''.[1]

ஆப்ஸ் (HOBBES)

சிறப்பியல்பு :

நாட்டின் அமைதியைக் காப்பதும், குடிமக்களுக்கு நன்மைகள் பல செய்வதும், பகைவரிடமிருந்து நாட்டைக் காக்கப் போர்புரிவதும் பண்டைக்கால அரசர்களின் கடமைகளாகும். அரசருடைய ஆற்றலை வெளிப்படுத்தவும், அவர்களுடைய நாட்டின் பரப்பைப் பெரிதாக்கவும் போர் பேருதவியாக இருந்ததால், பண்டைத் தமிழிலக்கியத்தில் (அரசருக்குரிய) 'வினை' என்னும் பொதுச்சொல்லால் குறிக்கப்பெறும். போரினை விளக்கமாகக் கூறுவது 'புறப்பொருள்' எனப்படும். தொல்காப்பியத்தில் இப்போர் ஒழுக்கத்தினைக் கூறும் பகுதி 'புறத்திணை இயல்' என்பதாகும். இவ்வியலுள் கூறப்படும் கருத்துக்கள் பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டில் மலர்ந்த நறுமணமிக்க மலர்

1. The Social and Political Ideas of the 16th & 17th Centuries—Edited by F. J. C. Hearushaw. P. 150.

களாகும்...வேறு எந்நாட்டு அரசியலிலும் காணப்படாத— காணமுடியாத போர்முறையினைத் தமிழ்மக்கள் கடைப் பிடித்து ஒழுகியதைக் தொல்காப்பியத்தில் காணுகிறோம்.

தமிழகத்தில் போரிடுவதற்கு என்று ஒரு தனி 'சாதி' இருந்ததில்லை. 'போரென்றால், நாட்டைக் காக்க வீட்டிற்கு ஒரு வீரன் போருக்குப் புறப்படும் வழக்கம் பண்டைத் தமிழக அரசியலின் சிறப்பியல்பாகும். இதனால், முறை யாகப் பயிற்சி பெற்ற படை இருந்ததில்லை என்பது பொருளன்று. அரசன் தனது தற்காப்பிற்காக நால் வகைப் படைகளை உடையவனாக இருந்தான்.[1] காலாட் படையின் மறவர்கள் யாவரும் ஒரு குடிப்பிறந்தோர் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் பழங் குடி மக்களான மறவரும் எயினரும் படையின் பெரும் பான்மையான வீரர்களாவர். உழவுத்தொழில் புரியும் வேளாளரும் படைக்கலம் தாங்கி அரசனது ஏவல்படி போர் புரிந்தனர்.[2] ஆகவே, தமிழகத்தில் போருக்கு என்று வடநாட்டைப் போன்று 'சத்திரியர்' என்ற சாதி யினர் இருந்ததில்லை. நாட்டைக் காப்பதில் குடிமக்கள் எல்லாருக்கும் ஒத்த உரிமையும் பொறுப்பும் இருந்தமை இங்கு நினைவு கூரத்தக்கது.

விளக்கம் :-

போர் என்னும் தமிழ்ச்சொல் 'பொரு' என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த பெயர்ச் சொல்லாகும். 'பொரு' அல்லது 'பொருவு'தல் என்பது, ஒப்புதல், ஒத் திருத்தல் என்னும் பொருள்படும். பொருதலில் வல்லவன் 'பொருநன்' எனப்பட்டான். பொருநர் பண்டைத் தமிழ கத்தில் சிறந்து விளங்கிய வீரர்களாவர். பொருநன் என்பதற்கு நச்சினார்க்கினியர் "தனக்குப் பிறர் உவமமாவ தன்றித் தான் பிறர்க்கு உவமிக்கப்படுவான்"[3] என்று உரை விளக்கம் தந்துள்ளார். எனவே 'போர்' என்னும் சொல் 'ஒத்திருத்தல்' என்னும் பொருளைப் புலப்படுத்து கின்றது. போர் முறையைப் பற்றிய பண்டைத் தமிழர் கொண்டிருந்த விழுமிய கருத்தினை இச்சொல்லே விளக்கு கிறது.

---

1. தொல். புறத். 17 & 21.
2. தொல். மரபு. 83.
3. பத்து. மதுரைக். வ. 42. நச்சி. உரை.

பண்டைத் தமிழ் வேந்தர்கள் போர்வெறி கொண்டவர் அல்லர். அவர்கள் பெருமைக்காகவோ, பொருளாசைக்காகவோ போர் புரியவில்லை. நாடு பிடிக்கும் மண்ணாசை அவர்கள் உள்ளத்தைப் பேயாட்டம் ஆடச் செய்யவில்லை. ஆயிரக்கணக்கான அப்பாவி வீரத்தின் பெயரால் கொன்று குவித்துத் தங்கள் ஆற்றலைக் காட்ட வேண்டும் என்ற செருக்கோடு போர் புரியவில்லை.

அறத்தைக் கருதாது புறவலிமை ஒன்றைப் பெரிதாகக் கருதிப் போருக்கு எழுந்த பகைவேந்தனை எதிர்த்துப் போரிட்டுப் புறமுதுகிடச் செய்தலே பண்டைத்தமிழர் மரபாகும். அவர்கள் தற்காப்பிற்காகவே போர் செய்தனர்; மண்ணாசை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு போர் செய்தனர் என்று கூறுவது பொருத்தமற்றதாகும்.[1] தமிழ்மன்னர்களைக் கொலையும் கொள்ளையும் புரியும் கொள்ளைக் கூட்டத்தினர் என்றும், குருதிப்பசி கொண்ட போர்வெறியர் என்றும் உண்மையை உணராத சிலர் உரைத்துள்ள கருத்துக்கள் முற்றிலும் தவருகும்.

போரிற்குரிய காரணங்கள் :

பகைவர் படையெடுப்பிலிருந்து தனது நாட்டையும் மக்களையும் காப்பதற்காகப் போரிடுதலே பெருவழக்காக இருந்தது. அறத்தைப் போற்றாது படைவலியும் உடல் வலியும் பொருளாகக் கொண்டு அயலார் நாட்டைக் கைப் பற்றி, உலகில் தனது பெயரையும் புகழையும் நிலைநிறுத்த வேண்டும் என்ற அவாவினால் ஒரோவழி போரிடுதலும் உண்டு. தொன்மைச்சிறப்பு வாய்ந்த வீரர்குடியில் தோன்றிய மகளை மணம் செய்துகொள்ள விரும்பிய மன்னனுக்குப் பெண்கொடுக்க முதுகுடி மறவர் மறுப்பின், மன்னர் போருக்குப் புறப்படுதலும் உண்டு[2].

போருக்குரிய பருவம் :

போர் என்றால் 'பொழுது போக்கென' அஞ்சாது கூறிய பண்டைத் தமிழர்கள், போர் புரிவது என்றால், குறிப்பிட்ட பருவகாலம் ஒன்றில்தான் அதனைச் செய்ய வேண்டும் என்று வரைபறை செய்து கொண்டிருந்தனர்.

1. தொல். புறத். 15.
2. தொல். புறத். 24.

போரினால் ஆட்சிக் குழப்பமோ, நாட்டில் பஞ்சமோ, மக்கள் செய்யும் தொழிலுக்கு இடையூறோ உண்டாகக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர். அதற்காகவே உழவுத் தொழில் செய்வோர் அறுவடையை முடித்து ஓய்வாக இருந்த கூதிர்ப் (குளிர்காலம்) பருவமுதல் வேனிற்காலம் வரையுள்ள இடைக் காலத்தைப் போர்புரிவதற்கு ஏற்ற காலமாகக் தேர்ந்தெடுத்தனர். பருவமழை தொடங்குவதற்குள் பெரும்பாலும் போரை முடிக்க முயலுவர். போர் முடியவில்லை என்றால் தற்காலிகமாகப் போரை நிறுத்திவிட்டுத் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச் செல்வர். மீண்டும் கூதிர்ப் பருவம் தொடங்கியதும் போருக்குப் புறப்பட்டு வருவர். ஓராண்டிற்குள் போரை முடித்தலே பெரு வழக்கமாக இருந்தது.[1] போருக்குரியது கூதிர்ப்பருவமும் வேனிற் காலமும் என்பதை அரசன் போர்க்களத்தில் தங்கும்போது அமைக்கப்படும் பாசறை, கூதிர்ப் பாசறை, வேனிற் பாசறை என இருவகையாக அமைக்கப் பட்டமையால் அறிகிறோம்.[2]

படை :

போருக்குப் புறப்படும் பொழுது மன்னன் தேரில் வெண்கொற்றக் குடையின் கீழ் அமர்ந்து செல்லுவான். அவனை உடன் சுற்றம் புடை சூழ, நால்வகைப் படைகளும் முன்னும் பின்னுமாக அணிவகுத்துச் செல்லுதல் மரபு. ஒவ்வொரு மன்னருக்கும் தனிச் சிறப்புடைய கொடியும் மாலையும் உண்டு. சேர சோழ பாண்டியர்களின் வில், புலி, கயல் ஆகியவற்றைப் பொறித்த கொடிகளைத் தங்கள் படைகளின் அணிவகுப்பின் முன்னர் உயர்த்திப் பிடித்துச் செல்லுவர். மன்னரும் படைவானுற வீரர்களும் அணிந்த மாலை அவர்கள்குடிகளை உணர்த்தும்.

படையினைச் சேனை, தானை எனப் பண்டைக் காலத்தில் வழங்குவர்.[1] படை, அணி, உண்டை, ஒட்டு என முப்பிரிவுகளை உடையது. படை அணிவகுப்பில் முன்னணியாக நிற்பதைக் கொடிப்படை என்றும், 'தார்' என்றும் கூறுவர். மன்னனுக்குப் பின்வரும் படையின் இறுதி

1. தொல். கற்பு. 48.
2. தொல். புறத். 15.
3. தொல். புறத் 3. 17.

யில் உள்ள பின்னிப் படையைக் கூழை என்பர்.[1] தொல்காப்பியர் காலத்திய தமிழ்வேந்தர்கள் காலாட் படை, (தாணை) யாணைப்படை, குதிரைப் படை, தேர்ப் படை என்ற நால்வகைப் படையைப் பெற்றிருந்தனர்.[2] குதிரைகள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப் பட்டன. யானைகள் தமிழகத்தில் தொல்பழங்கால முதல் மிகுதி யாக் இருந்து வந்தமையால், அவற்றைப் போருக்கும் பிற அரசியல் வினைகளுக்கும் பயன்படுத்தினர்.

போருக்குரிய படைக்கலன்கள் பலவற்றுள் பெரிதும் வில், வாள், வேல், அம்பு முதலியன குறிப்பிடத் தக்கன. தற்காப்பிற்காகத் தோலினால் செய்யப்பட்ட கேடயங்களும், கச்சைகளும், கவசங்களும் வீரர்களால் பயன்படுத்தப் பெற்றன.[3]

மரக்கலங்களில் கடல்வழிச் செல்லும் வழக்கம் இருந்தமையாலும், அவ்வாறு செல்லும்போது மகளிரை உடன் அழைத்துச் செல்லாமையாலும் 'கடற்படை' அக் காலத்தில் இருந்திருக்கலாம் என்பதை உய்த்துணரலாம்.

போர்முறை :

பண்டைத் தமிழர் தாங்கள் புரிந்த போர்த்தொழிலை அக வாழ்க்கையில் காணப்படும் சூழ்நிலைக் கேற்பவும், தாங்கள் வாழ்ந்த நிலத்தின் இயற்கை அமைப்பிற்கு ஏற் பவும் பல நிலைகளாகப் பாகுபாடு செய்திருந்தனர். போர் வினையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, என ஐந்து பிரிவுகளாக்கியுள்ளனர். அக வொழுக்கத்திற்குரிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்தி ணைக்கும் உரிய புறத்திணைகளாக அவை தொன்று தொட் டுக் கருதப்பட்டு வருகின்றன. இப்போர் ஒழுக்க நெறிகள் முறையே வெட்சி, வஞ்சி முதலிய ஐவகைப் பூக்களைக் கொண்டு பெயர் பெற்றுள்ளன. ஒவ்வொரு நிலையிலும் வீரர்கள் ஒவ்வொருவராக ஒழுக்கத்திற்குரிய பூமாலைகளை அணிந்து போரிட்டனர். அந்தந்தப் பூக்களைக் கொண்டே போர்த்தொழிலின் ஐந்து நிலைகளும் பெயர் பெற்றன. இப்போர் ஒழுக்க நெறிகள் 'திணை' எனப்படும். ஒவ்வொரு

1. தொல். புறத். 17.
2. தொல் புறத். 17.
3. தொல். புறத். 12, 13, 16 முதலியன.

போர் ஒழுக்க நிலையிலும் பல படிகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிற்கும் ஏற்ற மலர்மாலைகளை அணிந்து வீரர்கள் ஆரவாரம் செய்வர். மூவேந்தர்களுடைய படைவீரர்கள் தத்தம் மன்னர்களுக்குரிய அடையாள மாலைகளைச் சூடிப் போரிடுவர். எனவே, போர்த்தொழிலின் ஒவ்வொரு கட்டத்தையும் உணர்ந்தும் பூமாலைகளை அணிவதோடு, இன்னருடைய படைவீரர் என்பது எளிதில் விளங்கும் பொருட்டுச் சேரர் படை பனம்பூ மாலையையும், பாண்டியர் படை வேப்பம்பூ மாலையையும், சோழர் படை ஆத்திப்பூ மாலையையும் அணிந்து போரிடுதல் வழக்கம்.[1]

வெட்சி :

பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லக் கருதிய வேந்தன், அந்நாட்டில் வாழும் யாதொரு தீங்கையும் செய்ய இயலாத அறவோர், மகளிர், நோய்வாய்ப் பட்டோர் முதலிய மக்களைப் போரினால் உண்டாகும் துன்பங்களிலிருந்து காப்பாற்றக் கருதி, 'யான் போர் கருதி உமது நாட்டின்மீது படையெடுக்கப் போகிறேன்; நீங்கள் உங்களுக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் செல்லுங்கள்' என்று அறிவிப்பான். அவனுடைய அறிவிப்பை உணர்ந்து வெளிச் செல்லக்கூடிய பகுத்தறிவு இல்லாத பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வருமாறு தன்னுடைய படை வீரர்களை யாரும் அறியாவண்ணம் நள்ளிரவில் அனுப்புவான். அவ்வாறு அனுப்பப்பட்ட படை வீரர்கள், பகைவர் நாட்டிற் புகுந்து அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டு வருவர். அவ்வாறு பகைநாட்டுப் பசுக் கூட்டங்களைக் கவரச் செல்லும் வீரர்கள் தமது போர்முறையைப் பகை வேந்தர்க்கு அறிவிக்கும் அடையாளமாக வெட்சிப் பூவைச் சூடிச் செல்லுதல் வழக்கம். பசுக் கூட்டங்களைப் பறி கொடுத்தோர் அவற்றை மீட்பதற்கு முயலுவர். இவ்விரு செயல்களும் 'வெட்சி' என்னும் போர் நெறியினுள் அடங்கும்.[2]

நிரை கவர்வதற்குப் புறப்பட்ட படை பாடிப்புறத்தில் திரண்டு பெரும் ஆரவாரம் செய்யும். போர் வீரர் பாக்கத்தில் நள்ளிரவின்கண் நற்சொல் நிமித்தம் கேட்பர்;

1. தொல். புறத். 5.
2. தொல். புறத். 2.

பகைவர் நாட்டு ஒற்றர் அறியா வண்ணம் அவர் நாட்டுள் புகுவர்; புகுந்தபின் தங்கள் நாட்டு ஒற்றர் வாயிலாகப் பகைவர் செயலை அறிவர்; அறிந்த பின் பகைவரது ஊர்ப் புறத்தே தங்குவர். அங்குள்ள பசுக் கூட்டங்களை வளைத்துக் கொண்டு, காவல் புரியும் நிரைகாவலரைக் கொன்று குவிப்பர். எதிர்ப்போர் இல்லாத காரணத்தினால் பசுக்கூட்டத்தைக் கைப்பற்றித் தங்கள் நாடு திரும்புவர். தங்களைப் பின் தொடர்ந்து படையுடன் வரும் பசுக்கூட்டத்திற்குரிய பகை வேந்தனின் வீரர்களை இடை வழியில் எதிர்த்துப் போர் செய்து வெற்றி கொள்வர். இவ்வாறு, இடைவழியில் சிலர் போர் செய்யும் போது மற்றுமுள்ள வீரர்கள் ஆநிரைக்குப் புல்காட்டி இளைப் பாற்றிக் கொண்டு போவர்; போரில் வெற்றிபெற்ற வீரர்களோடு சேர்ந்து நிரையினைக் கவர்ந்தோர் தங்கள் நாட்டிற்குச் செல்வார்கள். நிரையினை ஊருக்கு வெளியே நிறுத்துவர். அவர்களை எதிர்பார்த்து இருக்கும் சுற்றத்தார் கண்டு மகிழ்ச்சி அடைவர். வேந்தனது ஆணையின் படி அவற்றைக் கொண்டுவரும் போர்த்தொழிலில் ஈடுபட்ட வீரர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். தாங்கள் மேற்கொண்ட வினையினைச் செய்துமுடித்த மகிழ்ச்சியால் கள்ளுண்டு களிப்புறுவர். இரவலர்க்குப் பசுக்களைப் பரிசிலாகக் கொடுத்து மகிழ்வர்.

தனது நாட்டிலுள்ள பசுக்களைப் பகை வேந்தன் கவர்ந்துசென்றதை அறிந்த மன்னன், தன்படை வீரர்களை அனுப்பி அப்பசுக்களை மீட்டுவருமாறு கட்டளை யிடுவான். நிரையினைக் கவர்ந்து சென்றோர்க்குரிய செயல்கள் அனைத்தும் நிரையினைப் பகைவரிடமிருந்து மீட்க முயலுவோருக்கும் உரியனவாகும்.[1] அவர்கள் கரந்தைப் பூவினை அணிந்து போருக்குப் புறப்படுவர்.[2]

வீரத் தொழிலை முடிக்கும் ஆற்றல் வாய்ந்த மற்க்குடியில் பிறந்தவர்களுடைய தறுகண்மையினை வளர்க்கும் தெய்வமாகிய வெற்றிவேல் தடக்கைக் கொற்றவையை வீரர் வழிபடுவர்.[3]

---

1. தொல். புறத். 3.
2. தொல். புறத். 5.
3. தொல். புறத். 4.

'நிரை கவர்தலாகிய போரொழுக்கம் பண்டைத் தமிழ்மக்கள் உழவுத் தொழிலை அரைகுறையாகச் செய்த தமிழர் சமுதாயத்தின் நிலையை விளக்குவதாகும். 'அக் காலத்தில் (குறிப்பிடத்தக்க) நன்முறையில் அமைந்த அரசுகளும் நாடுகளும் தமிழகத்தில் இல்லையென்பது புலனுகின்றது' என்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[1] இதனுல் தொல் பழங்காலத்திலேயே பண்டைத் தமிழர் அப்போர் முறையினை மேற்கொண்டு இருந்தனர் என்பது தெரிகிறது. நாகரிகத்தில் சிறந்து விளங்கிய தொல்காப்பியர் காலத்திலும் அப்போர் முறையினைச் சிறந்ததாகக் கருதியதோடு, கடைப்பிடித்தும் வந்தனர்.

இவ்வாறு போரினைத் தொடங்குவதற்கு முன்பு ஆநிரைகளைக் கவர்வது ''ஆரிய மக்கள் வழக்கு அன்று என்பதற்கு காமந்தகம் முதலிய அர்த்த சாஸ்திரங்கள் அவற்றைப் பற்றி ஒன்றும் கூறுமையே சான்றும்..... ஆகவே, தமிழ்மக்களது போர்முறை ஒரு காலத்தில் பரத கண்டம் எங்கும் வழங்கியதாகல் வேண்டும் என்று தோன்றுகிறது''[2] எனவேதான், பாரதத்தில் ஆநிரைகளைக் கவர்தல் பாரதப்போருக்கு முன்னுடியாக இருப்பதைக் காணுகிறோம்.

வஞ்சி :

மண்ணுசை கொண்ட வேந்தன் ஒருவன் பிற மன்னர்களது சேர்வு நோக்கியிருப்பதை அறிந்த பிற வேந்தர்கள், அவன் தன்மேல் படையெடுத்து வருவதற்கு முன்பே தாங்கள் அவனை வெல்லுவதற்கு ஏற்ற காலம், இடம், வலி முதலியனவற்றை நினைந்து அவனது நாட்டின்மேல் போருக்குப் புறப்பட்டுச் செல்லுவர். அவன் அஞ்சும் படி பெரும்படையுடன் படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித்திணை எனப்படுவதாகும்[3].

அந்நிலையில் எதிர்த்துப் போரிடும் அரசனும் தன் பெரும்படைகளுடன் மாற்றுன் படையைச் சந்திக்கப் புறப்படுவான்.

---

1. Tamilian Antiquary, No. 5, P. 132.
2. மு. இராகவையங்கார்: தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி பக். 94.
3. தொல். புறத். 7.

இருதிறத்துப் படைகளும் போருக்குப் புறப்படும் பொழுது பெரும் ஆரவாரம் செய்யும். இருவகைப் படை வீரர்களும் விரைந்து சென்று ஓரிடத்தே சந்திக்க முயலுவர். படையெடுத்துச் செல்லுவோர் பகைவர் நாட்டில் விரைந்து சென்று தீயினை எடுத்துச் சுடுவர். ஒருவர் இன்னொருவர் மீது படையெடுத்துச் செல்லும்போது, பிற வேந்தர்கள் தங்களுடைய படைகளுடன் அவர்களுக்குத் துணையாக வருவதைக் கண்டு பெருமிதம் அடைவர். போரிடச் செல்லும் வேந்தர் தங்கள் படைவீரர்களுக்குப் படைக்கலம் முதலியன கொடுப்பர்; பரிசிலர்க்கு அளித்தலாகிய கொடைத் தொழிலையும் செய்வர். பகைவர் நாட்டை அடைந்த படைகள் நாடுகாத்து நின்ற வீரர்களைக் கொல்லுவர். போரில் அரும்பெரும் வீரச் செயல்கள் புரிந்த தானைத் தலைவருக்கு ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களைச் சூட்டுவர்; நாடு, ஊர் முதலியவற்றைப் பரிசாக அளிப்பர். வேந்தர்கள் பகை வேந்தரை ஒரு பொருளாக மதியாது படையினை முன் செலுத்திப் போராண்மை உடையவராய் விளங்குவர். தம்படை எதிர்த்து நிற்க இயலாது பின் வாங்கிய இடத்து, விசையோடு வரும் பெரும் வெள்ளத்தினைக் 'கல்லணை' தாங்குவது போன்று தாமே தடுத்துப் பெருமை அடைவர்.

போர் செய்த மறுநாள், வேந்தன் போர் புரிந்த படையாளரும் தானும் உடன் உண்ணுவது போன்ற ஒரு முகமன் செய்வதற்குக் குறித்து வைத்த 'பெருஞ் சோற்றினைக்' கொடுப்பான். இரு வேந்தருள் ஒருவன் அருந்திறல் உடையவனாக இருப்பதைக் கண்டு அஞ்சிய பகைவன் கருமச்சூழ்ச்சியினைக் கருதித் திறை கொடுப்பான். திறை பெற்ற மன்னவன் புகழுடன் விளக்கமுறுவான். தோற்றோன் பழியுடன் பொருந்திய குறைபாடுறுவான். பகைவர் நாடு அழிந்தமைக்கு இரங்கித் தோற்ற மன்னவனைச் சிறப்பித்துப் புலவர் 'கொற்ற வள்ளை' பாடுவர். தோற்ற வேந்தன், தம் படைவீரர்கள் முன்பு எறிந்த கணையும் வேலும் பாய்ந்து துன்புற்றோரைத் தாமே நேரில் சென்று வினவியும் தழுவியும் பொருள் கொடுத்து உதவுவான்[1].

1. தொல். புறத். 8.

உழிஞை :

படையெடுத்துச் சென்ற வேந்தன் பகைவனது அரணை வளைத்து முற்றுகையிடுதலும், உள்ளே இருந்த வேந்தன் தன் அரணைக் கை நெகிழ விடாது பாதுகாத்தலும் உழிஞைத்திணையாகும்[1].

இருபெரு வேந்தர்களுக்கிடையே பகைமை மூண்டெழுங்கால், பகைவேந்தன் நாட்டினைக் கைப்பற்றுவதற்கு முன்பே தனக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பதாகத் தெறலருந்திறல் வாய்ந்த மன்னன் குறிப்பிடுவான். குறிப்பிட்டவாறு முடிக்கின்ற வேந்தனுடைய சிறப்பினை அவன் படைத் தலைவர் தூதர் முதலியோர் புகழ்ந்து பாராட்டுவர். என்றைக்கும் அழிக்க முடியாத அருந்திறல் வாய்ந்த மதிலை இன்று பகல் முடிவதற்குள் அழித்து விடுவதாகக் கூறி, அவ்வாறு அழித்தலை விரும்பி மதில்மேல் செல்லுவர். மதிலின் உள்ளே உள்ள படைவீரர் எறியும் அம்புமாரியைத் தடுப்பதற்குக் கிடுகு, கேடயம் ஆகிய தோற் கருவியை மிகுதியாகக் கொண்டு செல்வர்.

முற்றுகையிடப் பட்டதனுல் மதிலினுள் அடைந்துள்ள மன்னன் தனது படை, குடி கூழ், அமைச்சு நட்பு, நீர் நிலை முதலியவற்றைக் கொண்டு வளத்துடன் உள்ளமையால் முற்றுகை இட்டவனைத் தன் செல்வத்தாலும், போர்த் தொழிலாலும் துன்பம் அடையுமாறு செய்வான். தன்னுடைய மதில் அழிந்துவிடும் என்பதை அறிந்தவுடன் கோட்டைக்கு வெளியே வந்து போர் செய்ய அறை கூவி அழைப்பான்[2].

அவ்வாறு போர் செய்வதற்காக இருதிறத்தாரும் நாளும், ஓரையும் பார்த்து, அந்நாளில் குடையையும் வாளையும் போர்புரியப் போகும் திசை நோக்கி முன்னே செல்லு விடுவர். முற்றுகை யிட்டோரும் முற்றுகையிடப் பட்டவரும் ஏணிமீது ஏறி நின்று மதிலிடத்துப் போர் செய்வர். அவ்விரு பகைவரும் கோட்டைக்கு அகத்தும் புறத்தும், தம் படையினரைக் கொண்டு போர் செய்வர். மாற்றாரைத் தொலைத்து அம்மதிலைக் கைப்பற்றுவர். உள்

1. தொல். புறத். 10.
2. தொல். புறத். 13.

மதிலை வளைத்து நின்று வருபோர் செய்யும் கருத்தை விடாமலும், முற்றுகை யிடப்பட்டவன் மதிலை விடாமலும் காத்து நிற்க விரும்புவர். இதனை நொச்சி என்பர். மதில் காவல் என்பது இதன் பொருளாகும். இடைமதிலில், அகத்தோன் இடத்தைப் புறத்தோனும், புறத்தோன் இடத்தை அகத்தோனும் விரும்பிக் கைப்பற்றுவர்; அவ் விருவரும் மதில்புறத்துள்ள அகழியின் இருகரையையும் பற்றிக் கொண்டு, அங்கு நின்று போர் புரிவர். ஊரினுள்ளும் போர் புரிய விரும்பி நிற்பர். அரண்மனை மதில் மீது ஏறி நின்று இரு மன்னரும் போர் புரிவர். போர் செய்த மதிலினிடத்தே ஒருவன் மற்றொருவனைக் கொன்று விடுதல் உண்டு. அவ்வாறு இறந்துபட்ட வேந்தன் பெயரால் அவன் முடிக்கலம் முதலியவற்றைக் கொண்டு வென்ற வேந்தன் முடிபுனைந்து நீராடுவான். இதனை 'மண்ணு மங்கலம்' என்பர். வெற்றிக்கு ஏதுவாகிய தன் வாளினைக் கொற்றவை மேல் நிறுத்தி அதற்கு நீராட்டுவான். அந் நீராட்டு விழாவினை 'வாண் மங்கலம்' எனச் சிறப்பித்துக் கூறுவர். அதன் பின்னர், வெற்றி பெற்ற வேந்தன் தன் படைக்குச் சிறப்புச் செய்வதற்காக அவற்றை ஒருங்கு கூட்டி மகிழ்விப்பான்[1]. முற்றுகையின் பொழுது மதிலின் அகத்தே இருந்து தங்கள் கோட்டையினைக் காக்கப் போரிடும் வீரர்கள் நொச்சிப் பூவை அணிந்து போரிடுவர்.

தும்பை :

தனது வலிமையினை உலகம் போற்றிப் புகழ்தலை விரும்பிப் படையெடுத்துவந்த வேந்தனை மாற்று வேந்தன் எதிர்த்துச் சென்று அவனுடைய தலைமையினைச் சிதைக்கும் நிலையில் இருபெரு வேந்தரும் ஒரு களத்தில் போர் செய்தல் தும்பைத்திணை எனப்படும்[2].

பகைவர் அஞ்சத்தக்க யானை, தானை, குதிரை முதலிய படைகளையுடைய, வெற்றியையே நோக்கமாகக் கொண்ட வேந்தன், போர்க்களத்து முன்னின்று போர் செய்யும் போது மாற்றார் சூழ்ந்து மொய்ப்பர். இதனை அறிந்த படைத்தலைவன் வேறிடத்தில் போர் புரிவதை விட்டு,

---

1. தொல். புறத். 16.
2. தொல். புறத். 15.

வேந்தனுக்கு உதவியாக வந்து பகைவர்களைப் போரிட்டு அழிப்பான். சில சமயங்களில் இருதிறத்துப் படைத் தலை வரும் எதிர்த்து நின்று போரிட்டு மடிவர். தனது படை நிலைகுலைவதைக் கண்ட படைத் தலைவன் ஒருவன் சென்று அதன் பின்னணியை முதர்த்த எருமைபோலத் தாங்கி நிற் பான். படைவீரர்கள் கையிலிருந்த படையை எதிர்த்து விட்ட பின் வாளா இராமல் மற்போர் புரிவர். பகைவன் ஊர்ந்துவந்த களிற்றைக் கொன்று ஆரவாரம் செய்வர். ஒரோவழி இவ்விரு வேந்தர்களும் போர்க்களத்திலேயே மடிவதும் உண்டு. போரில் தன் வேந்தன் வஞ்சனையால் கொல்லப்பட்டதை அறிந்த படைத்தலைவன் சினங் கொண்டு தலைமயங்குமாறு போர்புரிவான். வஞ்சத்தால் கொல்லப்பட்ட வேந்தனுடைய நால்வகைப் படையும் புறங் கொடுத்து ஓடுகின்றபொழுது அவரைக் கொல்லு தல் அறம் அன்று என்று உணராது போரினுல் உண்டான வெறியால் அவரைக் கொன்று குவிப்பர்[1].

போர் வீரரின் உள்ள உரனையும், அஞ்சா நெஞ்சை யும் பலரும் அறிய விளக்கும் சிறப்புடையது இத் தும்பைப் போர் ஒழுக்க நெறியாகும். மைந்துடை வீரன் ஒருவனைப் பலரும் நெருங்கிப் போரிட அஞ்சித் தொலைவில் நின்று அம்பினை எய்தும், வேலினை எறிந் தும் போர் செய்வர். அவர்கள் செலுத்திய அம்பும், வேலும் அவ் வீரனது உடலில் செறிவாகத் தைத்தமை யால் உயிர் நீங்கிய அவனது உடம்பு, நிலத்திற் சாயாது நேராக நிற்கும். வாள் முதலியவற்றுல் வெட்டுண்டு வீழும் அவ் வீரனது தறுகண்மை விளங்கும் தலையே யாயினும் உடலேயாயினும் நிலத்தைத் தீண்டாது எழுந்து நின்று ஆடுதலும் உண்டு.[2] ஒரு களத்துப் போரிடும் இரு திறத்துப் படைவீரர்களிடத்தும் இச் செயல் கள் பொதுவாக நிகழும்.

தும்பைப் போர் ஒழுக்கம் மற்றப் போர் ஒழுக்கங் களுக்குப் பொதுவாகும். ஒவ்வொரு நிலையிலும், இரு திறத்தாரும் களத்தில் சந்தித்துப் போரிடவேண்டிய நெருக்கடி இருப்பதனல், இத் தும்பை ஒழுக்கம் எல்லா வற்றிற்கும் பொதுவாகும். ஆநிரைகளைப் பறிகொடுத்

1. தொல். புறத். 17.
2. தொல். புறத். 16.

தோன். அவற்றை மீட்கும்போது முற்குறித்த வீரச் செயல் காட்டுதலும், நிரை கொண்டோனும் அவ்வாறு காட்டுதலும் வெட்சிப் புறத்துத் தும்பை எனப்படும். இவ்வாறே மற்றத் திணைகளின் புறத்தும் இத் தும்பை ஒழுக்கம் நிகழ்தல் உண்டு[1]

வாகை.

வாகையாவது வலியும் வருத்தமுமின்றி, இயல்பாகிய ஒழுக்கத்தால் குற்றமற்ற கொள்கையினராகித், தங்களுக்குரிய அறிவு, ஆண்மை, பெருமை முதலிய பெறுதற்கரிய ஆற்றல் கூறுபாடுகளை நாற்பெருங்குடி மக்களும் அறவோரும் பெற்று, ஒப்பாரும் மிக்காருமின்றிச் சிறப்புற்று விளங்கும் ஒழுகலாறுமாகும்.[2] வாகை ஒழுக்கத்தில் இருவகை உண்டு. ஒவ்வொருவரும் தத்தமக்குரிய துறையில் ஒப்புமை உடைய பிறரைக் காட்டிலும் மேம்பட்டு விளங்குதலும், தமக்குரிய துறையில் எதிர்ப்பின்றி இயல்பாகச் சிறப்புற்று விளங்குதலும் வாகைத் திணைக்குரிய இருவகை ஒழுக்க நெறிகளாகும்.[3]

புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் பகைவரை வென்று வேந்தன் வாகைப் பூவைச் சூடி (வெற்றிவிழா) ஆரவாரித்தல் வாகைக்குரிய போர் ஒழுக்கம் என்பர்.[4]

போர் மரபு:

போரினைத் தொடங்க ஆநிரைகளைக் கவர்தல் முதற் கொண்டு வாகை சூடும்வரை நிகழும் பல நிகழ்ச்சிகளில் போர் ஒழுக்கங்கள் அனைத்திற்கும் பொதுவாக நிகழக் கூடிய நிகழ்ச்சிகள் சில சிறப்பிடம் பெற்று இருந்தன. அவை போரில் தமிழர் கொண்டிருந்த விருப்பையும் பழக்கவழக்கங்களில் காணப்படும் பண்பாட்டையும் தெளிவுறுத்துகின்றன.

செவ்வேளின் வேலைத் தாங்கிய வேலன், கார்த்தல் மலரைச் சூடித் தெய்வமேறி தங்கள் மன்னனுக்கு வெற்றிகிடைக்க வேண்டும் என்று ஆடியும் பாடியும்

---

1. தொல். புறத். 14 நச். உரை.
2. தொல். புறத். 19.
3. இதன் விளக்கத்தை 'அறநூல்' என்னும் தலைப்பில் காண்க.
4. புறப்பொருள் வெண்பாமாலை—வாகைத்திணை.

வேலனை வழிபடுவான். மகளிர் தங்கள் வேந்தனுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் எனறு முருகனை வணங்கி 'வள்ளிக் கூத்து' ஆடுவர்.

இளைஞன் ஒருவன் போரில் ஓடாது வீரச்செயல் காட்டி நிற்றதற்கு வியந்து அவனுக்கு வீரக்கழல் அணிந்து மற்ற வீரர்கள் கூத்தாடுவர். இதனைக் 'கழனிலைக் கூத்து' என்பர்.

போருக்குப் புறப்படுங்கால் வேந்தர்கள், பகை மன்னரை வென்று வாகை சூடவிலலை என்றால் 'நான் இத்தகைய சிறுமைகளை அடைவதாக' என்று வஞ்சினம் கூறுவர்.

போரில் சிறந்த வீரன் ஒருவன் அருஞ்சமர் புரிந்து அமர்க்களத்தில் உயிரிழந்தபோது, அவன் உயிர்துறந்த இடத்தில் கல் நடுவர். அவ்வாறு கல் நடுவதற்குத் தேவையான கல்லிருக்கும் இடத்தைக் கண்டு ஆராய்ந்து கொண்டு வருவர். கொண்டுவந்த கல்லில் அவ் வீரனின் உருவைச் செதுக்கி, அவன் பெயரும் புகழும் எழுதுவதற் குரிய நல்ல நாளைக் காண்பர். பின்னர்க் கல்லை நன் னீராட்டித் தூய்மை செய்வர். பிறகு குறித்த இடத் தில் நடுவர். அக் கல்லினை வாழ்த்தி வழிபடுவர். இதனை 'நடுகல் விழா' என்று சிறப்பிப்பர். இவ் வீர வழிபாடு பிற்காலத்தில் 'நடுகல்' வழிபாடாக விளங் கியது.[1]

வேளாளர் விளையுள் காலத்துக் களத்தில் நிகழ்த் தும் வினைகளை விளக்கித் தேரேறி வந்த கிணைப்பொரு நர் முதலியோர் அந் நெற்களத்தே 'ஏரோர் களவழி' பாடுவர். அதுபோல் வெஞ்சமர் புரியும் போர்க்களத்தே புலவர் தேர் ஏறி வந்து 'களவழிச் செய்யுள்' பாடுவர். போரில் வாகை சூடிய வேந்தன் வெற்றிக் களிப்பினால் தன் நண்பர்களாகிய அரசர்களோடும், தானைத் தலை வர்களோடும் சேர்ந்து கைகோத்துத் தேர்த்தட்டில் நின்று குரவைக் கூத்தாடுவர். தாங்கள் குறித்த செயலை நிறைவேற்ற முடியாத பொழுது மறக்குடி மற

1. தொல். புறத். 5.

வர் தம் உயிரை அங்கியங் கடவுட்கு அவிப்பலி கொடுப்பர்.[1]

போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்து கிடக்கும் தன் கணவனை, அவன் மனைவி பேய் தீண்டுதலை நீக்கித் தானும் தீண்டாது அருகில் நின்று காவல் புரிவாள்; உயிர் நீத்த கணவன்மேல் வேல் பாய்ந்த வடுவைக் கண்டு மனைவி அச்சமடைவாள் தன் கணவன் உடலைத் தழுவி, தலையைத் தன் முகத்தோடு சேர்த்துக்கொண்டு துன்பக் கடலுள் மூழ்கிய அம் மாவீரனின் மனைவி அங்கேயே இறந்து படுதலும் உண்டு.[2]

பெரும் புகழுடையவனுய்ப் போர்க்களத்தே மாண்ட மாவீரனது பெண்கிளைச் சுற்றம் அவனைச் சூழ்ந்து உள்ளம் உருகி 'ஒப்பாரி' வைப்பர்; அவர்களுடைய அழுகையொலி போர்க்களத்தில் பெரு மயக்கத்தை உண்டாக்கும். உற்றூர் உறவினரின்றி மாண்ட தம் கொழுநரைத் தழுவி மனைவியர் புலம்புவர். தன் கணவன் இறந்தபொழுதே சில மனைவியர் உடன் இறந்து போவர்; வேறு சிலர் தம் கணவனோடு உடன்கட்டை ஏறுதலும் உண்டு. மற்றும் சிலர் கணவனை இழந்த பின்பு கைம்மை நோன்பாகிய தவம்புரிந்து ஒழுகும் தாபதநிலையை மேற்கொள்ளுவர்.

தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடிய செய்தி கேட்டும், வீரச் செயல் பல புரிந்து களத்தில் மாண்ட செய்தி கேட்டும் வீரத்தாய்மார் இறந்து விடுவது பெருவழக்காகும்.[3]

சில வீரர்கள் போரில் உண்டான புண்ணைக் கிழித்துக்கொண்டு வாழ்க்கை நிலையாமை கருதி உயிர் நீத்துப் புகழ்கொள்ளுவர்.[4]

வேந்தன் ஒருவன் போருக்குப் புறப்படுங்கால் 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' பார்த்து நன்னாளில் புறப்படுவர்.[5] பார்ணர்களும் பாடினியரும்

1. தொல். புறத். 21.
2. தொல். புறத். 23.
3. தொல். புறத். 22.
4. தொல். புறத். 24.
5. தொல். புறத். 36.

கூத்தரும் அரசருடன் போர்க்களத்திற்குச் செல்வர். மனை வியரை மன்னர்கள் பாசறைக்கு உடன் அழைத்துச் செல்வதில்லை.[1] போர்க்களத்திற்குப் 'பொதுமகளிர்' வேந்தருடன் செல்வர்.

போர்க்களத்திற்குச் சென்று வேந்தரது வீரத்தினையும், புகழையும் பாடுவோர் 'பொருநர்' என்னும் பாணர் குடியைச் சேர்ந்தவராவர். அவர்கள் 'துடி' எனும் பறை அறைந்து வீரர்களுக்கு வீர உணர்ச்சியை மிகுவித்தும், வேந்தர் வெற்றிபெற்றதைப் பறை அறைவித்தும் மகிழுமாறு செய்வர்.[2]

போர் அறம் :

போரிடுங்கால் வெற்றி ஒன்றையே பொருளாகக் கருதிப் பண்டைத் தமிழர் போரிடவில்லை. போர்க்களத்திலும் அறத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தனர். எப்படியாகிலும் குறிக்கோளாகக் கொண்ட 'பயனை' அடைந்தால் போதும் என்று கருதாது, தங்கள் குறிக்கோளாகக் கொண்ட 'பயனை' அடைவதற்கு உரிய வழியாக 'அறநெறி' ஒன்றையே போற்றினர்.

அயலார் நாட்டை முற்றுகை இடுங்கால், "மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறுதோனையும், மயிர் குலைந்தோனையும், புறமுதுகிட்டோனையும், பெண்பெயரோனையும், படையிழந்தோனையும், ஒத்தபடை (க்கருவியினை) எடுத்துப் போரிடாதோனையும் பிறவும் இத்தன்மை உடையோரையும் கொல்லாது விடுதல்" சிறப்புடைய போர் நெறியாகக் கருதப்பட்டது. இதனால் போரிடும் பொழுதும், பண்டைத் தமிழர் போருக்கென அமைந்த அற நெறியினைப் பெரும்பாலும் பின்பற்றத் தவறியது இல்லை என்பது புலனாகின்றது.[3]

---

1. தொல். கற்பி. 34.
2. தொல். புறத். 36.
3. தொல். புறத். 10. நச்சி. உரை.

10

தொழில் இயல்

"தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!
எழிலே உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்,
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!"

— பாரதிதாசன்.

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை, அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதியின் இயற்கை அமைப்பிற்கும், வாணிலைக்கும் ஏற்ப அமைந்திருந்தது. வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு முயற்சி இன்றியமையாத தாகும். மனிதன் தன் உடல் உறுப்புக்களைக் கொண்டு முயலுவதனை உடம்பு முயற்சி என்றும், மனிதன் தன் மனத்தினுல் சிந்தித்துச் செயலாற்ற முயல்வதை அறிவு முயற்சி என்றும் சான்றோர் கூறுவர். முதலில் கூறப் பட்ட உடம்பு முயற்சியைத் 'தொழில்' என்றும், அறிவு முயற்சியைக் 'கலை' என்றும் பொதுவாகக் கூறுதல் மரபு. தொழில் வளர்ச்சிக்கு உடம்பு முயற்சி மட்டும் போதாது; அறிவு முயற்சியும் தேவை; ஆகவே 'தொழில் வளர்ச் சிக்குக் கலையுணர்ச்சி அடிப்படையானது.' கலையுணர்வி லிருந்துதான் ஒவ்வொரு நாட்டிலும் பல தொழில்கள் உருவாகியுள்ளன. பண்டைக் காலத்தில் நமது தமிழகத் தில் கலைஞர்களும் தொழிலாளர்களும் நிறைந்து இருந்த னர். மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பலவகைப் பொருள்களையும் படைத்துத் தருவதில் தொழில் வல்லார் சிறப்புற்று விளங்கினர்.

உழவு :

உலகத்தில் என்றும் அழியாது நிலைபெற்றிருக்கக் கூடிய சிறந்த தொழில் உழவு ஒன்றேயாகும். மக்கள் சமுதாயத்தின் அடிப்படையான தேவைகள் உண்பதற்கு உணவும் உடுப்பதற்கு உடையும், இருப்பதற்கு இடமும் ஆகும். அத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மக்களினம் அன்று முதல் இன்றுவரை அரும்பாடுபட்டு வருகிறது. தொல் பழங்காலத்தில் மக்களினம் முதன்முதல் செய்யக் கற்ற தொழில்கள் இரண்டு. அவை உழவும், நெசவுமே யாகும். வயிற்றுப்பசியைப் போக்க இயற்கையின் ஆற்றலை உதவியாகக் கொண்டு அவர்கள் நிலத்தை உழுது பயிரிடக் கற்றனர்.

தமிழ் மக்கள் தொன்று தொட்டே உழவுத்தொழிலில் வல்லவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உழவுத்தொழிலை முதன்முதல் செய்யக் கற்ற மக்களுள் தமிழர்கள் முதன்மையானவர்கள் என்று அறிஞர்கள் ஆராய்ந்துகூறியுள்ளனர். உழவர்கள் வைத்திருக்கும் உணவே உணவு; அதுவே பிறர்க்கு அறம் செய்வதற்கு உரியது[1] என்பது நம் முன்னோர்களுடைய கருத்தாகும். மருதநில மக்கள் நீர்வளமும் மிக்குடைய வயலை உழுது பயிரிட்டுத் தாங்கள் இனிது உண்டு வாழ்வதோடு, பிறரும் உண்டு வயிற்றுப்பசியைப் போக்கிக் கொள்வதற்குப் பேருதவியாக இருந்தனர். உழவர்கள் வயலில் நெற்கதிர்கள் முற்றியபின் அறுவடை செய்து களத்தில் கொண்டு வந்து குவித்துப் போரடித்து, எருதுகளைப் பூட்டி வளத்து நெற்போரை மிதித்து நெல்லாக்குவர். பிறகு சுற்றத்தாரோடு பகுத்து உண்பதற்கு முன்பு கடவுளுக்குப் பூசை செய்து அப்பொருளைப் படைப்பர். பாணர், கூத்தர், விறலியர் முதலிய கலைஞர்களுக்கும் பிற தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப நெல்லை அளந்து கொடுப்பர். இதனை 'ஏரோர்களவழி' என்பர்.[1] உழவுத்தொழில் மூலம் மண்திணி ஞாலத்து வாழும் மக்களுக்கு எல்லாம் உணவு அளித்த மருதநிலம் நாகரிகத்தின் பிறப்பிடமாகக் கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது.

வரகு, சாமை, முதிரை, ஐவனம், தினை, செந்நெல், வெண்ணெல் முதலிய கூலங்களும் எள்ளு, கொள்ளு,

1. தொல். புறத். 21. நச்சி. உரை.

பயறு, உழுந்து, அவரை. துவரை. கடலை, மொச்சை முதலிய 'முதிரை' களும் பயிரிடப்பட்டன.[1]

நிலத்தை உழுவதற்கு ஏருதுகளையும் எருமைகளையும் பயன்படுத்தினர். பகைவர் நாட்டை அழிக்கும் பொழுது கழுதைகளைப் பூட்டி உழுவதும் உண்டெனத் தெரிகிறது. குதிரைகள் தேர்களை இழுத்துச் செல்லப் பயன்பட்டன. நாய், ஆடு, குதிரை, மான், கழுதை, எருமை முதலிய விலங்குகளை நன்கு பழக்கி வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தினர்.[2]

நெசவு :

உழவுத் தொழிலிற்கு அடுத்து, மிகச்சிறந்த நிலையில் விளங்கிய தொழில் நெசவேயாகும். மக்களுக்குத் தேவையானபருத்தி நூலாடையில் பலவகைகள் இருந்தன அவ்வப் போது மக்கள் தங்களுக்கு விருப்பமான உடைகளைப் பருவ நிலைக்கு ஏற்ப மாற்றி உடுத்தனர் எனத் தெரிகிறது. பெண்களும் தங்களுக்கு ஏற்ற அழகிய ஆடைகளை அணிந்து மகிழ்ந்தனர்.[3] குடையும் கொடியும் அரசனுக்குரிய சின்னங்களாக இருந்தன. இவற்றால் தொல் காப்பியர் காலத்திலே தமிழ் மக்கள், நெசவுத் தொழிலில் கைத்திறன் வாய்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

ஆநிரை மேய்த்தல்

புல்வெளி நிறைந்த முல்லை நிலம் ஆநிரைகளை மேய்ப்பதற்கு ஏற்றதாய் இருந்தது. அங்கு வாழ்ந்த ஆயர் ஆடு மாடுகளை மேய்த்து வாழ்ந்தனர். அவர்கள் கையிலே நீண்ட கோலினைத் தாங்கி, ஆநிரைகளைக் கண்ணுங் கருத்துமாகக் குழிகளில் விழுந்து விடாமலும், பிறரால் திருடப் படாமலும், காடுகளில் வழிதவறிச் சென்று அலையாமலும் காத்து மேய்த்தனர். நாய்களை ஆநிரைகளோடு அழைத்துச் செல்வர். ஆநிரைகளைக் காப்பதில் நாய்கள் பெருந்துணையாக இருந்தன. இவர் களுடைய செல்வமாகக் கருதப்பட்டவை மாடுகளேயாகும்.

---

1. தொல். களவு. 18. நச். உரை.
2. தொல். பொருளி. 18.
3. தொல். மெய்ப். 14. பேராசிரியர் உரை.

மிக அதிகமாக மாடுகளை உடையவன் சிறந்த செல்வனாகக் கருதப்பட்டான். இவ்வாறு மாடு செல்வமாகக் கருதப் பட்ட காலத்தில் மாடு என்னும் சொல்லுக்குச் 'செல்வம்' என்ற பெயர் உண்டாயிற்று. பிறகு அச்சொல் செல்வத் தின் பொதுப் பெயராகி எல்லாச் செல்வங்களையும் குறிக்க லாயிற்று என்பதை 'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒரு வற்கு மாடு அல்ல மற்றை யவை' என்னும் இலக்கிய வழக்கால் அறிகிறோம்.

வேட்டையாடுதல் :

பண்டைத் தமிழ்மக்கள் உணவின் பொருட்டு நிலத்தை உழுது பயிரிட்டும், ஆநிரைகளைக் காத்து ஓம்பியதோடு, வேட்டையாடியும் உணவுப் பொருள்களைத் தேடி வாழ்ந்தனர். பொழுது போக்காக வேட்டையாடு தலும் உண்டு. ஆநிரைகளைக் காப்பதற்காகக் கொடிய விலங்குகளையும் வேட்டையாடிக் கொன்றனர். புலி, கரடி முதலிய கொடிய விலங்குகளை வேட்டை யாடியும், மான், மரை, புல்வாய் முதலியவற்றைக் கொன்று, அவற்றின் இறைச்சியை உணவாக உண்டும் வாழ்ந்தனர். யானையினைப் பிடித்துப் பழக்கப் படுத்திப் பல வேலைகளுக்கும் பயன்படுமாறு செய்து கொண்டனர்.

உலோக வேலை :

வில், வாள், வேல், கழல், குடை, தேர், துடி முதலியவற்றைச் செய்வதற்கு இரும்பு, செம்பு முதலிய உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றை உருக்கி வேண்டிய பொருள்களைச் செய்யும் தொழிலினைத் தமிழ் மக்கள் கற்றிருந்தனர்.

பொன் வேலை :

பொன் பொலிவுடையது[1] (உரி. 39) என்பதைப் பண்டைத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். காதணிகளும், கைவளைகளும், பல அரிய பொன்னால் செய்யப்பட்ட அணி களையும் இழைகளையும் பெண்கள் அணிந்திருந்தனர். அரசரின் முடிகள் பொன்னால் செய்யப்பட்டன. இதனால் பொன் வேலைப்பாட்டில் தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள் இருந்தனர் என்பது புலனாகின்றது.[2]

1. தொல். புறத் 5, 13, 16, 17.
2. தொல். மெய்ப். 14. & களவு. 14.

தச்சு வேலை :

கடலில் பெண்களோடு செல்லும் வழக்கம் இல்லை எனப்படுவதனால், அக்கால மக்கள் கடலில் மரக்கலங்களைச் செலுத்தி அயல் நாடுகளுக்குச் சென்றனர் எனத் தெரிகிறது. கடலில் செல்லுவதற்குப் பயன்பட்ட மரக்கலங்களைச் செய்ய வல்ல தச்சர்கள் இருந்தனர் என்பதும், அவர்கள் வலிமையும் திறனும் வாய்ந்த மரக்கலங்களைச் செய்வதில் நல்ல பயிற்சி உடையவராக இருந்தனர் என்பதும் தெளிவாக விளங்குகிறது. மேலும், நால் வகைப் படைகளுள் 'தேர்ப்படை' ஒன்றுக இருந்தமையால் கைத்திறன் வாய்ந்த தச்சுத் தொழில் வல்லார் பலர் இருந்தனர் என்பது வெளிப்படை.[1]

இவை அல்லாமல் தொல்காப்பியர் காலத்திய தமிழர்கள் வேறு பல தொழில்களில் ஈடுபட்டிருந்தனர் என்பது தொல்காப்பியத்தினால் தெரியவருகிறது.

வாணிகம் :

ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு உழவர், வணிகர், சான்றோர் இன்றியமையாதவர்களாகப் பண்டைத் தமிழர்கள் கருதினர். பொருள்களை எடுத்துச் சென்று விலைகூறி விற்பவர்களை வாணிகர் என்பர். வாணிகம் பண்டைக்காலத்தில் பண்டமாற்றுகவே இருந்தது. முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள், தங்களிடம் மிகுதியாக இருந்த பால், தயிர், நெய் முதலியவற்றை மருத நிலத்திற்கு எடுத்துச் சென்று கொடுத்து, நெல்லையும் வரகையும் பிற உணவுப் பொருள்களையும் பண்டமாற்றுகப் பெற்றனர். நெய்தல் நிலத்தில் வாழ்ந்தோர் உப்பையும் மீனையும் கொடுத்துத் தங்களுக்குவேண்டிய பொருள்களைப் பண்டமாற்றுகப் பெற்றனர். 'காசு' தொல்காப்பியர் காலத்திய தமிழர்களிடைப் புழக்கத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

கடல் வாணிகத்தில் பண்டைத் தமிழகம் பெரிதும் ஈடுபட்டிருந்தது. மரக்கலங்களில் தங்கள் பண்டங்களை ஏற்றிக்கொண்டு அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர். கடல் வழியாகச் சென்று பொருள் ஈட்டுவது

1. தொல். அகத். 34. & பொருளியல். 18.

சிறப்புடையதாகக் கருதப்பட்டது. கடல் வழியாக அயல் நாடுகளுக்குச் செல்லும்பொழுது பெண்களை உடன் அழைத்துச் செல்லும் வழக்கமில்லை. இல்லறத்தின் கடமைகளை இனிது நடத்த இன்றியமையாத பொருளைத் தன் உயிரினும் இனிய மனைவியை விட்டுப் பிரிந்து அயல் நாடுகளுக்குக் கலத்தினும் காலினும் சென்று வாணிகம் செய்து ஆடவர் ஈட்டி வருவர்.[1] தமிழகத்தின் வடகடகே உள்ள நாடுகளுக்குக் கால்நடையாகக் கழுதைகள் குதிரைகள் மீது சரக்குகளை ஏற்றிச்சென்று வாணிகம் செய்து வருவர். இவ்வாறு வாணிகத்தின் பொருட்டு மனைவியை விட்டுப் பிரிந்து செல்வோர் ஓராண்டிற்குள் தங்கள் ஊருக்குத் திரும்பிவிடுவர்.[2] அவ்வாறு ஈட்டிய பொருளைக் கொண்டு பகுத்துண்டு, பல்லுயிர் ஓம்பி அறம் பல செய்தனர்.

1. தொல். அகத். 37.
2. தொல். கற்பு. 49.

11

அறிவு இயல்

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப(து) அறிவு."

— திருவள்ளுவர்

அறிவு :

மக்கள் மனத்தைச் சென்ற இடத்தில் செல்லவிடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செலவிடுவதே அறிவாகும் என்பது ஆன்றோர் கண்ட உண்மை. மனிதன் அறிவுடையவனாய் விளங்குவதற்குக் கல்வி கற்றல் இன்றியமையாததாகும். கல்வியினுடைய நோக்கம் பொருள் ஈட்டுதல் அன்று ; அறிவுடையவராய் ஆக்குதலேயாகும். அறிவு இரு வழியில் நிரம்புவது. கற்றறிந்தோர் கூறுவனவற்றைக் கேட்டலால் அறிவு பெறுதல் ஒரு வழி ; இதனைக் 'கேள்வி அறிவு' என்பர். நூல்களைக் கற்றலால் அறிவு நிரம்பப் பெறுதல் மற்றொரு வழியாகும். இதனை 'நூல் அறிவு' எனலாம். மணலின் கண் தோண்டிய அளவுக்கு நீர் சுரப்பது போல, நூலினை ஆழ்ந்து ஆழ்ந்து கற்கும் அளவுக்கு அறிவு பெருக் கெடுக்கும் என்பது வள்ளுவர் வாய்மொழி. நூலறிவைப் பெற மக்கள் பயிற்சியுடையவர்களாக இருத்தல்வேண்டும். அப்பயிற்சியைத் தருவதே 'கல்வி'யாகும்.

கல்வி :

கல்வி என்னும் சொல் சிறந்ததொரு கருத்தினைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. 'கல்வி' எடுக்கப்படுவது 'கல்வி.' 'கல்லுதல்' தோண்டுதல் எனப் பொருள்படும். இயற்கையில் மக்கள் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் அறிவினை அகழ்ந்தெடுப்பது கல்வி.

நிலத்தின் அடியில் புதைந்துள்ள பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகப் பொருள்களைப் பெறுவதற்காக நிலத்தைத் தோண்டி அதனிடத்துள்ள மூலப் பொருள்களை வெட்டி எடுத்து அவற்றைத் தூய்மை செய்கிறோம். அதைப் போன்று மக்கள் உள்ளத்தில், பல உணர்வுகளோடு அறிவு உணர்வு உயிரின் உள்ளார்ந்த பண்பாக இயல்பாகக் கலந்து காணப்படுகிறது. அவ் வுணர்வை விளக்கமுறச் செய்ய உள்ளமாகிய நிலத்தை அகழ்ந்து அதனிடத்துப் பதிந்து கிடக்கும் அறிவு ஆற்றலை மற்ற உணர்வுகளினின்று பிரித்துத் தூய்மை செய்யவேண்டும். அதற்காக அதனை மனிதனது உள்ளத்தில் இருந்து அகழ்ந்து எடுக்க வேண்டும். அவ்வாறு மனிதனது மனத்தை அகழ்ந்து, உள்ளிருக்கும் அறிவாற்றலை வெளிப்படுத்துவதற்குரிய கருவியாக விளங்குவதே 'கல்வி'யாகும்.

கல்வி, மக்கள் உள்ளத்தில் பதிந்துள்ள இயற்கை உணர்வினை ஆழத்தோண்டி அறிவு ஊற்றுச் சுரக்கச் செய்கிறது. பல நல்ல நூல்களைக் கற்பதற்கு ஏற்ப அறிவும் வளர்ச்சி அடைகிறது அறிவிற்கு ஊட்டம் தந்து வளர்ப்பது கல்வி. மக்களுடைய அறிவை வளர்த்துப் பல அரிய பண்புகளைப் பெற உதவுவது கல்வி. உலக இயற்கையினை நன்கு ஆராய்ந்து பார்த்து, அதன் நுட்பத்தினை உணர்வதன் மூலம் தெளிந்த அறிவு பெறுதலே கல்வியின் முடிந்த பயனுகும்.

பண்டைத் தமிழர், 'கல்வி'யைக் 'கண்'ணெனப் போற்றினர். வாழ்க்கையின் விளக்கத்திற்கு உரிய கருவியாகக் கருதினர். கல்வி ஒன்றே மனிதனது அக இருளைப் போக்கும்; உள்ளத்தில் உண்மை ஒளியைப் பெருக்கும் என்பது அவர்கள் கண்ட உண்மை. கல்வி

பினுல் உண்டாகும் பயன் மெய்யுணர்வினைப் பெறுதல் என்ற கருத்துடன் வாழ்ந்தனர். மனிதன் சீரும் சிறப்பும் பெற்று வீறுடன் விளங்குவதற்கு இன்றியமையாதது கல்வி. மக்கள் பெருமிதம் கொள்ளுவதற்கு நிலைக்களனுக உள்ள பண்புகளில் முதன்மையானது கல்வி என்பதையும் நன்கு உணர்ந்திருந்தனர்.[1]

புறப்பொருள்களைக் கண்டு பயின்று, அவற்றை உள்ளத்தினுல் சிந்தித்துத் துருவி ஆராய்தலே பண்டைத் தமிழர் கண்ட கல்வி பயிலும் முறையாகும். புறத்தில் உள்ள பொருளைக் கண்டு பயின்றுவரும் பொழுதே, உள்ள உணர்வினுல் ஆழச் சிந்தித்துத் தெளிவு கண்டு செலுலுவது சிறந்த பயிற்சி முறை எனத் தேர்ந்தனர். உலக வழக்கினை நன்குணர்ந்து புலனறி வழக்கத்தோடு சேர்த்துச் சிந்தித்து உணருவது நன்மை தரத் தக்கது என்று கருதினர்.

உலகப் பொருள்களை அகப்பொருள் என்றும், புறப்பொருள் என்றும் நுட்பமாகப் பகுத்து உணர்ந்தனர். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன பொருள்பாகுபாடாகும். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத நிலைக்களனுக உள்ள நிலத்தையும் (Space) வாழ்க்கையினை வரையறுத்துக் காட்டும் காலத்தையும் (Time) முதற் பொருளாக—முதன்மை வாய்ந்த—தலைமை சான்ற பொருள்களாகக் கருதினர். நிலத்தினை இயற்கை அமைப்பிற்கும் சூழலுக்கும் ஏற்ப ஐவகையாகப் பகுத்து அறிந்தனர். அதைப் போன்றே காலத்தையும் (பொழுது) கூர்ந்து ஆராய்ந்து பெரும் பொழுது, சிறு பொழுதென இரு வகையாகப் பகுத்துள்ளமை அவர்களுடைய கூர்த்த மதியின் சிறப்பினை எடுத்துரைக்கிறது. ஓர் ஆண்டினை ஆறு பருவங்களாக இயற்கையில் உண்டாகும் தட்பவெப்ப மாறுதல்களுக்கு ஏற்பப் பிரித்து வரையறை செய்துள்ளனர். ஒரு நாளினைக் கதிரவன் தோன்றுவதற்கு முன்புள்ள நள்ளிரவுமுதல் மறுநாள் நள்ளிரவுவரை ஆறு சிறு பொழுதுகளாகப் பாகுபாடு செய்துள்ளனர். இவ்வாறு

1. "கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"
—தொல். மெய்ப். 9.

ஒருநாள் பொழுதை நுணித்து அறிந்து, ஆராய்ந்து ஆறுபிரிவுகளாகப் பிரித்துள்ளமை பண்டைத் தமிழரின் வகைப்படுத்தி வரையறை செய்யும் மதிநுட்பத்தினை விளக்குகிறது.

I. முதற் பொருள்[1]

நிலம்	பொழுது	
	பெரும்பொழுது (பருவ காலம்)	சிறுபொழுது (நாளின் உட்பிரிவு)
1. குறிஞ்சி	1. கார்	1. மாலை
2. முல்லை	2. கூதிர்	2. யாமம்
3. மருதம்	3. முன்பனி	3. வைகறை
4. நெய்தல்	4. பின்பனி	4. விடியல்
5. பாலை	5. இளவேனில்	5. நண்பகல்
	6. முதுவேனில்	6. எற்பாடு

கருப்பொருள்[2]

ஒரு நிலத்தில் கருக்கொண்டு எழக்கூடிய பொருள்கள் கருப்பொருள் எனப்படும். அவை ஒரு நிலத்திற்குரிய—தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப வளரும் செடி கொடிகள், விலங்குகள் முதலியனவாகும். தெய்வம், உணவு, விலங்கு, பறவை, பறை, தொழில் (செய்தியாழ், பூ, நீர், ஊர் முதலியனவற்றைக் கருப்பொருள் எனக் கூறுவர்.

நில நூலறிவு :

முதல் பொருளாகிய நிலத்தினைப்பற்றிய ஆராய்ச்சியும், அந் நிலத்தில் கருக்கொண்டு விளங்கும் கருப்பொருள் பற்றிய பாகுபாடும், காலவேறுபாட்டினால் உண்டாகும் பருவ நிலைகளைப் பற்றிய கருத்தும், பண்டைத் தமிழருடைய நில நூல் அறிவிற்கு அடிப்படையாக அமைந்திருந்தது எனலாம்.

---

1. தொல். அகத். 3, 4.
2. தொல். அகத். 18.

உரிப்பொருள் : [1]

ஒவ்வொரு நிலத்து வாழும் மக்களின் காதல் வாழ்விற்கு உரிய ஒழுக்கத்தினை எடுத்துரைப்பதாகும். மக்களுடைய ஒழுக்கம் அவர்கள் வாழும் நிலத்தின் இயல்பிற்கு—இயற்கை அமைப்பிற்கு ஏற்ப அமைவதை முன்பு கண்டோம்.

குறிஞ்சி நிலத்து மக்களுக்குரிய சிறப்பு ஒழுக்கம் ஒருவனும் ஒருத்தியும் புணர்ந்து இன்புறுதலாகும்; பாலையில் பிரிந்த காதலரிடையே பிரிவாற்றுமையால் உண்டாகும் ஆற்றொணாத துன்பமுறுதலாகும். முல்லை நில மகளிர் தம்மைப் பிரிந்த காதலர் மீண்டும் வருவார் என்று மனத்தைத் தேற்றிப் பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து ஆற்றி இருத்தலாகும். நெய்தல் நிலத்து வாழும் ஆடவர் காதலியரைவிட்டுப் பிரிந்து கருங்கடலில் கலம் செலுத்திச் செல்லுவர்; அவ்வாறு சென்ற தம் காதலர் திரும்பிவருவார் என்ற நம்பிக்கை அற்ற நிலையில் மகளிர் உள்ளம் நைந்து உருகி ஏக்கமே வடிவாகக் கடலை நோக்கிய வண்ணம் காத்திருப்பர்.

நூல் வகை :

கல்வியின் வளர்ச்சிக்கு நூல்கள் இன்றி அமையாதது என்பது நமமுன்னோர் கண்ட முடிவாகும். மக்கள் மனம் நூலறிவின் மூலம் பண்படும். அத்தகைய நூல்கள் பல தொல்காப்பியர் காலத்தில், தமிழில் இருந்தன. அந்நூல்களை இயற்றிய அறிஞர், புலவர் எனப்பட்டனர். புறத்தே காணும் உலக இயற்கைகளைப் புலனறிவுகளால் ஆராய்ந்து பயின்றோர் 'புலவர்' என்று போற்றப்பட்டனர். புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்கள் இருவகையாகப் பாகுபாடு செய்யப்பட்டிருந்தன.

சொல்ல எடுத்துக் கொண்ட பொருளைத் தொடக்கம் முதல் முடிவு வரை மாறுபாடின்றித் தொகுத்தும் வகுத்தும் காட்டித் தன் கண் அடங்கிய பொருளை விரித்துரைப்பதற்கு ஏற்ற சொல் அமைப்பொடு பொருந்தி, நுண்ணிய பொருள்களை விளக்கும் பண்பினை உடையதை 'நூல்'

1. தொல். அகத். 14.

என்பர்.[1] சூத்திரத்தின் உட்பொருளை விரித்து உரைக்கும் காண்டிகையுரையும். அதனை விளங்கக் கூறும் அகல உரையும் உடையதாகப் பத்துக் குற்றமுமின்றி நுண் பொருள் பயப்பனவாகிய முப்பத்திரண்டு உத்திகளோடும். பொருந்தி வருவதை 'நூல்' எனச் சிறப்பித்துரைத்தனர்.[2]

நூலிற்குரிய சிறந்த மரபு பிறழாமல் உரைக்கப்படும் நூல்கள் முதனூல், வழிநூல் என இருவகைப்படும். வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முதல்வனுல் செய்யப் பெற்றது முதனூலாகும்.[3] முதல்வன் செய்த நூலின் வழியே இயற்றப்படுவது வழிநூல் எனப்படும். விரிந்தும் பரந்தும் உள்ள பொருள்களைத் தொகுத்துக் கூறுவதும், தொகுத்துச் சொல்லப்பட்டவற்றை விரித்து விளக்குவதும், தொகையும் விரியும் ஆகிய அவ்விரு திறமும் ஒருங்கு அமைந்ததும் பிறமொழிநூல்களை அடியொற்றி மொழி பெயர்க்கப் பெறுவதும் என வழிநூல் நான்கு வகையாகப் பகுத்து உணரப்பட்டன.[4]

தொல்காப்பியர் காலத்தில் நூல்கள் பெரிதும் செய்யுளால் இயற்றப்பட்டன. எனினும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாலும், உலக வழக்கில் பாட்டின்றி தனியே வழங்கும் உரைநடையாலும் நூல்கள் இயற்றப்பட்டு இருந்தன.[5]

நூலின் உட்பொருளை விளக்குவதோடு, அதற்கு இன்றி அமையாது பொருந்துவன எல்லாம் அதனைத் தொகுத்துக் கூட்டிச் சொல்லுதல் உரை எனக் கருதப்பட்டது; மாறுபட்ட கொள்கையை நூலின் இடையே எடுத்துரைத்து விளுவுதலும், அதற்கு மறுமாற்றமாகிய விடைகூறுதலும் உடையதாய்த் தனக்கு முதனூலாகிய சூத்திரத்தானும் அதன் பொருள் முடிபினை யுணர்த்தும் பிறநூலானும் தெளிய ஒரு பொருளை ஒற்றுமைப் படுத்தி, இதுவே பொருளாகும் எனத் துணிந்து உரைப்பது உரையினது இயல்பாகும்.[6]

---

1. தொல். செய்யுள். 164.
2. தொல். செய்யுள். 166.
3. தொல். மரபு. 94, 95.
4. தொல். மரபு. 98.
5. தொல். செய். 171.
6. தொல். மரபு. 105.

மேற்கூறிய இலக்கணமெல்லாம் சிதையாது சிறப் புடன் விளங்கினும், முதனூலோடு பொருள் மாறுபாடு கொண்டால் அந்நூல் சிதைவுடையதாகக் கருதப்பட்டது. மூதல்வன் இயற்றிய நூலிலே இத்தகைய சிதைவுகள் இருக்காது என்பது பண்டைத் தமிழரின் நம்பிக்கை.[1] காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் புத்தம் புதிய இலக்கியங்களைப் படைத்துக் கொள்ளும் பழக்கமும் அக்காலத்திலிருந்ததை அறிகிறோம்.[2]

இவற்றால் தொல்காப்பியர் காலத்தில் தமிழ்மொழியில் அறிவுக்கு ஊட்டம் தரும் நூல்கள் பல நுட்பமாக நுனித்து அறிந்து எழுதப் பெற்றிருந்தன என்பது புலனாகின்றது. நூல் என்ற சொல்லைச் சாத்திரம் என்ற பொருளில் ஆன்றோர் வழங்கி வந்தனர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

பண்டைப் புலவர்கள் பலதிறப்பட்ட அறிவு நூல்களில் வல்லவர்களாக விளங்கினர். அவர்கள் இயற்றிய செய்யுள்களில் பலவகையான கலைகளின் மணங்கமழ்வதைக் காண்கிறோம். தொல்காப்பியர் காலத்தில் சிறப்புற்றிருந்த அறிவுக் கலைகள் பல. அவற்றுள் சிலவற்றைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம்.

வான நூல்:

தொல்பழங்கால மக்கள் சமுதாயம், விண்ணில் ஒளிவீசும் நாளையும் கோளையும் கொண்டே காலத்தையும், பருவகாலத்தையும் கணக்கிட்டு அறிந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. அவர்கள் இயல்பாகவே வான நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். நாளையில் வான நூலில் வல்லுநராக விளங்கவும் தலைப்பட்டனர். பண்டைத் தமிழரும் வானில் விளங்கும் கோள்களையும், நாள (நட்சத்திரம்) யும் நன்கறிந்து இருந்ததோடு அவற்றின் இயல்பினையும், போக்கினையும் தெளிவாகக் கண்டு அறிந்து, அவற்றின் இயல்பிற்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கை முறையினையும் அமைத்துக் கொண்டனர்.

---

1. தொல். மரபு 106, 107.
2. தொல். செய். 237.

நாள், கோள், பார்க்கும் வீழக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்த தமிழர் சமுதாயத்தில் நின்று நிலவி வருவதாகும். இதனால் நாண்மீனைப்பற்றிய அறிவு தமிழர்களிடை மிகப் பழங்காலத்திலேயே இருந்தமை அறிகிறோம். 'ஞாயிறு திங்கள்'[1] என்பதனால் ஏழு கோள்களைப்பற்றிய அறிவும், அவற்றால் பெயர் பெறும் ஏழு கிழமைகளையும் நெறிப்படுத்தி இருந்தமை தெரிகிறது. இதனால், பண்டைத் தமிழர் கோள்கள் ஏழு என்று கொண்டு, அவற்றிற்குரிய ஏழு நாட்களைக் குறித்து அதனை ஒருவாரம் எனக் கணக்கிட்டனர்.

'ஓரையும் நாளும்'...[2] என்பதனால் விண்ணில் கோள்களின் வீட்டுத் தொகுதியை (Signs of Zodiac) வரையறுத்து இருந்தமை புலனாகின்றது. 'காரும் மாலையும்'[3] கூதிர்யாமம்'[4] 'பனியெதிர் பருவம்' 'வைகுறை விடியல்'[5] எற்பாடு[6] 'நண்பகல் வேனிலொடு'[7] பின்பனி[8] என' ஓராண்டை அறுவகைப் பருவங்களாகவும், ஒரு நாளைச் சிறுபொழுதுகள் ஆறுகவும் பகுத்தறியும் அளவிற்கு நுட்பமான வானநூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். தொல்காப்பியர் காலத்தில் ஆண்டின் முதல் மாதம் ஆவணியாகவும், ஆண்டின் இறுதி மாதம் ஆடியாகவும் கருதப்பட்டது இதனை ஆண்டின் முதற் பருவம் கார்காலம் என்று தொல்காப்பியர் மொழிந்துள்ளமையாலும், அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "காலவரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்க ஓரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடக ஓரை ஈறுக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாகலின், அதனை இம முறையானே அறுவகைப் படுத்தி இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினர்" என்று விளக்கியுள்ளமையாலும் நன்குணரலாம்.

---

1. தொல். கிளவி. 58.
2. தொல். கிளவி. 44.
3. தொல். அகத். 6.
4. தொல். அகத். 7.
5. தொல். அகத். 8.
6. தொல். அகத். 9.
7. தொல். அகத். 10.
8. தொல். அகத். 12.

சிங்க ஓரை என்பது ஆவணித் திங்களாகும். இதனை முதல் மாதமாகக்கொண்டு அந்நாட்கள் ஆண்டுக் கணக்கிடப்பட்டதென அறிகிறோம். வானநூல் வல்லார் ஆவணி மாதத்தை ஆண்டின் முதல்மாதமாகக் கொண்டு கணக்கிடும் வழக்கம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலமுதல் இருந்து வந்ததாகவும் சித்திரை ஆண்டின் முதல் மாதமாகக் கடந்த ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளாகத்தான் கணக்கிடப்பட்டு வருகிறது என்றும் கருதுகின்றனர்.[1] இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியத்தின் காலத்தைக் கணித்த அறிஞர்கள் தொல்காப்பியம் மூவாயிரம் ஆண்டிற்கு முற்பட்டதாகலாம் என்பர்.

காலத்தைக் கணித்துக் கோள்களின் நிலையினை அறிந்துகூறும் வானநூல் அறிஞனைப் பண்டைத் தமிழர் 'கணியன்' என்று குறிப்பிடுவர். இவற்றால் பண்டைத் தமிழரிடை வானநூல் கருக்கொண்டு வளர்ச்சியுற்றமை புலனாகிறது.

கணக்கு நூல் :

கணக்கு நூல் அறிவியல் கலைக்கு அடிப்படையானதும், இன்றியமையாததுமாகும். அறிவியலின் எழிலரசியாகக் கணக்கியலை அறிஞர் போற்றுகின்றனர். இன்றைய உலகில் கணக்கியல் பெரும் வளர்ச்சியுற்றிருப்பதைப் போன்று அக்காலத்தில் திகழவில்லை. அன்றைய தமிழர் வாழ்க்கைக்கும் வாணிகத்திற்கும் தேவையான கணக்கினையும், வான் நூலிற்கு இன்றியமையாத கணக்கியலையும், ஓரளவிற்கு நன்கு அறிந்திருந்தனர் என்பதைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம்.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் பொருள்களைப் பிறருக்குக் கொடுக்கின்றபொழுது — விற்கின்றபொழுது — நிறுத்தும், அளந்தும் கொடுத்தனர். நிறுத்தற்கு உரிய நிறுத்தலளவைக் கணக்கும், அளப்பதற்கு உரிய முகத்தலளவைக் கணக்கும் மக்களால் கண்ணெனப் போற்றப்பட்டன. நாழி, உரி, துணி, பதக்கு, கலம்

---

1. தொல். எழுத்து. நச்சி. முன். கா. சு. பிள்ளை.

என்பவை முகத்தல் அளவைப பெயர்களாகும். அரை, குறை, பனை, கா முதலியன நிறைப் பெயர்களாக அக் காலத்தில் வழங்கப்பட்டன. கழஞ்சு சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை முதலியனவும் நிறைப். பெயர்கள் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.[1]

கணக்கியலுக்கு அடிப்படையான எண்களைப் பேரெண் கள் எனவும், சிற்றெண்கள் எனவும் பாகுபாடுசெய்து இருந் தனர். பேரெண்கள் சில ஐ, அம்பல் என்னும் இறுதி களுடன் முடியும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.[2] அவை தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் சொற் களாகும்.

1. ஆம்பல் என்பது 29 தானங்களை உடையது. அதா வது கோடி x கோடி x கோடி கோடி கொண்டது.

2. தாமரை என்பது 36 முப்பத்தாறு தானங்களை உடையது. அதாவது கோடி x கோடி x கோடி கோடி x கோடி கொண்டது.

3. வெள்ளம் என்பது 56 தானங்களை உடையது. அதாவது கோடி x கோடி x கோடி x கோடி x கோடி x கோடி x கோடி x கோடி கொண்டது.

இதனால் தொல்காப்பியர் காலத் தமிழ் மக்கள் ஆயிரத்திற்கு மேற்பட்ட பல பேரெண்களை அறிந்தி ருந்தமை புலனாகிறது. மேலும் ஓர் எண்ணினைப் பல குறை (கீழ்வாய்) Fraction எண்களாகப் பகுத்திருந்த னர்.

> "இரண்டுமுதல் ஒன்பா னிறுதி முன்னர்
> வழங்கியன் மாவென் கிளவி தோன்றின்
> மகர வளவொடு நிகர முரித்தே"-குற்றிய. 75

என்னும் நூற்பாவில், அன்றைய வழக்கில் இருந்த 'மா' என்னும் கீழ்வாய் இலக்கத்தினைத் (Fraction) தொல்காப்பியர் குறித்துள்ளார். 'மா' என்பது இரு பது கூறுகளில் ஒன்றினைக் குறிப்பிடுவதாகும்.

1. தொகை மரபு. 28, 26.
2. தொல். புள்ளி. 98.

$\frac{1}{20}$	=	மா	இருபது மா	=	1
$\frac{1}{10}$	=	இரு மா	நூறு மா	=	5
$\frac{1}{5}$	=	நான்கு மா	ஆயிர மா	=	50

இன்றைய கல்வி முறையில் இத்தகைய பழந் தமிழரின் சிறப்புவாய்ந்த கணக்கியல் கற்பிக்கப் படா மல் புறக்கணிக்கப்படுவது வருந்தத்தக்கதாகும்.

அறநூல் :

மக்கள் இனத்தின் செயல், ஒழுக்கம், வாழ்க்கையின் நோக்கம் முதலியவற்றை விளக்கும் கலையே அறநூல் எனப்படும். மக்கள் வழக்கமாகச் செய்யும் செயல் களுக்கு அடிப்படையாக விளங்கும் கருமுதல்களைப் பற்றி ஆராய்வதே அறநூலின் தலையாய குறிக்கோளாகும். மக்களுடைய செயல்களையும் பண்புகளையும் எந்த அளவு கோலினுல் அளந்து அறிவது என்பதனை விளக்குவதே அறநூலின் தொழிலாகும். முதிர்ந்த அறிவும், 'குணம் நாடிக் குற்றமும் நாடி'ச் சீர் தூக்கிப் பார்க்கும் மனப் பான்மையும் அறவுணர்வின் முக்கியக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. மெய்யறிவு, தன்னடக்கம், உள்ள உரம், நேர்மையில் நாட்டம் ஆகியவை அறத்தின் வேர்கள் என்பர் அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க நாட் டறிஞர்.

மக்கள் வாழ்க்கையில் கொள்ளத்தக்கனவும், தள் ளத்தக்கனவுமாகிய ஒழுக்கங்கள் இவையென அறுதியிட்டுக் கூறுவது—வரையறுப்பது—அறம் எனப் படும். விதியானும் விலக்கானும் செய்வன தவிர்வன வற்றை வரையறுப்பது அறம் எனப் பொருள் கூறுவர். காலத்திற்கும், நாட்டிற்கும், இயற்கைச் சூழலுக்கும் ஏற்ப மக்கள் வாழ்க்கையில் 'அறநெறி' வேறுபட்டு விளங்கு வதைக் காணலாம். ஒரு நாட்டில் வாழும் மக்க ளிடையே, அவர்கள் செய்யும் தொழிலாலும், அவர் களுடைய குடிப்பண்பாலும் ஒழுக்க நெறிகள் வேறு படலாம். ஆயினும், எல்லார்க்கும் எக்காலத்திற்கும் உரிய பொதுமைப் பண்பு வாய்ந்த அறநெறியின் கூறு களை அவர்களுடைய வாழ்க்கையில் காணலாம். பண்டைத்

தமிழர் வாழ்க்கையில் 'அறநெறி' சிறப்பிடம் பெற்றிருந்ததைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

அன்றைய தமிழகத்தின் நாற்பெருங் குடிமக்களுக்கு உரிய ஒழுக்க நெறியினை—அறத்தின் இயல்பை 'வலி'யும் வருத்தமும் இன்றி இயல்பாகிய ஒழுக்கத்தால் நாற்குடி மக்களும் அறிவரும் துறவிகளும் தம்முடைய தொழில் கூறுபாடுகளை மிகுதிப் படுத்திக் கூறும்? முகத்தான் தொல்காப்பியர் பண்டைத் தமிழர் கடைப் பிடித்து ஒழுகிய அறநெறியை விரிவாக விளக்கியுள்ளார்.[1]

பார்ப்பாருக்கு உரிய அறுவகை ஒழுக்கங்களாக ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் கருதப்பட்டன. ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் என்னும் ஐவகை ஒழுக்க நெறியினை அரசர்கள் கடைப்பிடித்து ஒழுகினர். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரை ஓம்பல் என்னும் அறுவகைத் தொழில்களாகிய அறநெறியினை ஏனைய மக்கள் மேற்கொண்டு ஒழுகினர். இல்லற ஒழுக்கம் உறவுத் தொடர்பும் கடமைப் பிணிப்பும் அமைந்த விழுமிய அறமாகக் கருதப்பட்டது.

மெய்யுணர்வு பெற்ற சான்றோர்களாகிய 'அறிவர்' எனப்படுவார் காமம், வெகுளி மயக்கம் என்னும் மூவகைக் குற்றமும் இல்லாத ஒழுக்கத்தினைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். அவர்கள் மூன்று காலத்தின் இயல்பையும் முறைப்படி முழுதுணர்ந்த பெரியோராவர்.

நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல் சடைபுனைதல், எரியோம்பல், ஊரை அடையாமை, காட்டில் உள்ள உணவு கொள்ளுதல், கடவுள வழிபாடு, முதலிய எண்வகைப் பட்ட ஒழுக்க நெறிகளில் வழுவாது வாழ்வது தவநெறியில் ஈடுபட்ட துறவிகளின் கடமையாகப் போற்றினர்.

குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறுமை, அவா இன்மை என்னும்

---

1. தொல். புறத். 20.

எட்டுவகைப் பண்புகளையுடையோர் சான்றோர்கள் என்று போற்றப்பட்டனர். அவர்கள் அடக்கமுடைமை, ஒழுக்க முடைமை, நடுவுநிலைமை, பிறர்மனை நயவாமை, புறங் கூறாமை, அழுக்காறாமை, தீவினை அச்சம், பொறை யுடைமை ஆகிய ஒழுக்க நெறிகளில் உயர்ந்து விளங்கி னர்.[1]

பழந்தமிழ்மக்கள் பேரா இயற்கைப் பெருநிலை யாகிய பேரின்பத்தினை அடைதற்குக் காரணமாக அறம், பொருள், இன்பம் என்ற முப்பேறுகளின் தன்மையினையும், அவற்றின் பகுதியாகிய உயிரும், யாக்கையும், செல்வமும், இளமையும் ஆகிய நிலைபேறு இல்லாத உலகஇயற்கையை யும் நன்கு அறிந்து 'பல்லாற்றானும் நில்லா உலகம்' என்ற மெய்யுணர்வு பெற்றிருந்தனர்.[2] இம் மெய்யுணர் வினை விளக்கும் நூலின் பகுதியைக் 'காஞ்சித்திணை' என்று கூறுவர்.

இவ்வொழுக்கங்களை உளத்தால் குறிக்கொண்டு ஐம் பொறியையும் வென்று தடுத்தல் வேண்டும் என்பதைக் 'கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்; இவற்றுள் இல்லறத்தார்க்குக் கூறப் படும் ஒழுக்க நெறிகளை வாகைத் திணையிலும், துறவறத் தார்க்குரிய ஒழுக்கத்தினைக் காஞ்சித் திணையிலும் வகைப் படுத்திக் கூறியுள்ளார்.

"அறத்தினுல் பொருளாக்கி, அப்பொருளினுல் இன் பம் நுகர்தல் சிறப்பானும், அதனுல் இல்லறம் கூறுதலா னும் இன்பம் முற்கூறினர். அறனும், இன்பமும் பொரு ளால் பெறப்படுதலின் அதனை இடை வைத்தார். போகமும் வீடும் என இரண்டும் சிறத்தலில் போகம் ஈண்டுக் கூறி வீடு பெறுதற்குக் காரணம் முற்கூறினர்" என்னும் நச்சினர்க்கினியர் விளக்கவுரையால் பண்டைத் தமிழர் அறத்தைப் பற்றிக் கொண்டிருந்த விழுமிய கருத்துப் புலனுகின்றது.[3]

அறம், பொருள், இன்பம் என்பது பண்டைத் தமிழ ருடைய அறநூல் பாகுபாடாகும். மக்கள் அறநெறியில்

1. தொல். புறத். 20, 21.
2. தொல். புறத். 23.
3. தொல். களவு. 1.

நின்று பொருளை ஈட்டி அப்பொருளால் இன்பம் நுகர வேண்டும் என்பது பண்டைத் தமிழர் அறநூல் கண்ட முடிபாகும். மனிதன் இல்லறத்தில் ஈடுபட்டு வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, பாதுகாவல் அமைந்த பிள்ளைகளுடன் நெருங்கி, அறத்தினை விரும்பும் சுற்றத்தாருடன் (தலைவனும் தலைவியும் வீடுபேருகிய சிறப்பினை அருளும் முழுமுதற் பொருளை இடைவிடாது எண்ணிப் போற்றும் நன்னெறியில் பழகுதல் இல்வாழ்க்கையின் முடிந்த பயனாகும். இதனைப் பண்டைத் தமிழன் கண்ட துறவறநெறி எனச் சான்றோர் போற்றுவர்.[1] இவையாவும், தொல் காப்பியர் காலத்தில் அறநூல்கள் பல இருந்திருக்க வேண்டும் என்பதனைச் செப்புகின்றன.

உளநூல் :

உள்ளத்தின் இயல்புகளை ஆராயும் கலையினை உளநூல் என்று பொதுவாகக் கூறுவது மரபு. ஆன்மாவின் இயல்பினைப் பகுத்தறியும் கலையே உளநூல் என்று அரிஸ்டாட்டில் முதலிய கிரேக்க அறிஞர்கள் கருதினர். இடைக்காலத்தில் உள்ளத்தின் விழிப்புணர்ச்சியை விரித்துரைக்கும் கலையாக அறிஞர்கள் அதனைப் போற்றினர். இன்று, தனிமனிதன் நடத்தையை — ஒழுக்கத்தை — அறிவியல் நோக்கோடு ஆராய்ந்து அறிவதே 'உளநூல்' என்று உளநூலார் விளக்கம் தருகின்றனர்.

பண்டைத் தமிழரிடை உளநூல் ஒரு தனிக் கலையாக வளர்ச்சியுறவில்லை. எனினும், மனிதன் அகவாழ்விலும் புறவாழ்விலும் நடந்து கொள்ளும் நடத்தையைப் பற்றி விளக்கும் அளவில், வாழ்வியல் கலையோடு இரண்டறக் கலந்து காணப்படுகிறது. இன்றைய உளநூலார் உளநூலிற்குத் தரும் விளக்கமும் பண்டைத் தமிழர் 'மெய்ப்பாடு' என்னும் சொல்லிற்குக் கூறிய பொருளும் பெரும்பாலும் ஒத்து விளங்குவது வியப்பிற்கு உரியதாகும்.

மக்கள் புறப்பொருள்களைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிவத'னால் ஐம்பொறிகளின் வழியாக உளத்தே நிகழும் நிகழ்ச்சிகள். அங்கு நிகழ்ந்தவாறு புறத்தார்க்கு மெய்யின்கண் புலப்படச் செய்வது, 'மெய்ப்

---

[1] தொல். கற்பு. 51.

பாடு' எனப்படும். மனிதன் உள்ளத்தே ஊற்றெடுக்கும் உணர்ச்சிகளுக்கு ஏற்ப, அவனது செயல்—நடத்தை—ஒழுக்கம் அமைகிறது என்பது மெய்ப்பாட்டின் உட்பொருளாகும். பண்டைக் காலத்தில் வளர்ச்சியுற்றிருந்த உளநூல் கருத்துக்களை 'மெய்ப்பாட்டியலில்' தொல்காப்பியர் நன்குவிளக்கியுள்ளார்.

உள்ளத்தில் எழும் அடிப்படை உணர்ச்சிகள் எட்டு என்பது பண்டைத் தமிழர் கொண்டிருந்த கருத்தாகும். அவ்வெட்டும் மக்களுடைய சூழ்நிலைக்கும் மனப் பழக்கத்திற்கும் ஏற்பப் பலவகையாகப் பெருகும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவ்வாறு அவை பெருகுவதற்குத் தூண்டுதலாகப் பல உள்ளப் பண்புகள் மக்களிடை இருப்பதை நன்குணர்ந்திருந்தனர்.

மெய்ப்பாடு எட்டுவகைப்படும். அவை நகை, அழுகை இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவாகும்.[1]

நகை :

நகை என்பது சிரிப்பு. அது புன்முறுவலுடன் நகுதல், அளவுடன் சிரித்தல், பெருகச் சிரித்தல் என மூவகைப்படும். நகை மனிதன் பிறரை எள்ளி நகையாடுதல் (இகழ்தல்) காரணமாகவும், இளமையின் மக்களிப்பாலும், அறியாமையாலும், மடமையாலும் தோன்றும்.

அழுகை :

அழுகை என்பது அவலம் (சோகம்). தானே துன்புறுதல், பிறர் துன்பம் கண்டு சோகமடைதல் என இரண்டு வகையாக அழுகை தோன்றுமாம். மனிதன் தனக்கு உண்டான இழிவினைத் தாங்க முடியாத பொழுதும், தன் உயிரினை உற்றார் உறவினரையும், பொருள்களையும் இழக்கின்ற பொழுதும், உடலில் தளர்ச்சி (அசைவு) உண்டாகின்ற பொழுதும் வறுமையினால் வாடுகின்ற பொழுதும் உலக மக்களிடையே இயல்பாக அழுகை தோன்றும்.

---

1. தொல். மெய்ப். 3—8.

இளிவரல் :

இளிவரல் என்பது இழிவுணர்ச்சி. அதாவது தாழ்வு மனப்பான்மை (Inferionty Complex) மனிதனுக்கு உண்டாகின்ற மூப்பும், அவனை அடைகின்ற பிணியும், இவை காரணமாக உண்டாகின்ற வருத்தமும், எளிமை (மென்மை)யும் காரணமாக இழிவுணர்ச்சி தோன்றும்.

மருட்கை :

மருட்கை என்பது வியப்பு. புதியனவற்றைக் காண்பதால், மிகப் பெரியனவற்றை நோக்குவதால், மிகச் சிறியனவற்றைப் பார்ப்பதால், ஒன்று பிறிதொன்றுகத் திரிதலைக் காண்பதால் அறிவின் அடிப்படையில் அமையாத வியப்புத் தோன்றும்.

அச்சம் :

அச்சம் என்பது உள்ளக் கலக்கம்.

தெய்வம், விலங்கு, கள்வர், அரசர் எனப்படும் நால்வரையும் மாறுபட்டு எதிர்க்க முடியாத காரணத்தினால் அச்சம் பிறக்கும்.

பெருமிதம் :

பெருமிதம் என்பது வீரமாகும். கல்வி, அஞ்சாமை, புகழ், கொடை என்னும் சிறப்பியல்புகளால் வீரம் தோன்றும்.

வெகுளி :

வெகுளி என்பது சினம் என்று பொருள்படும். கை குறைத்தல் கண் குறைத்தல் முதலியவற்றாலும், தன் கீழ் வாழ்வாரைத் துன்புறுத்துதலாலும், வைதல் அடித்தலாலும், அறிவு புகழ், உயிர் முதலியவற்றைக் கொலைசெய்வதாலும் வெகுளி பிறக்கும்.

உவகை :

இன்பத்தால் உண்டாகும் மகிழ்ச்சியை உவகை என்பர். இன்பநுகர்ச்சி, செல்வாக்கு, கல்வியறிவு, நட்பு, விளையாட்டு பொருளாக உவகைச் சுவை தோன்றும்.[1]

---

1. தொல். மெய்ப். 8-11.

இவை முப்பத்திரண்டும் அல்லாமல் உரிமை, நடுவு நிலைமை முதல் நடுக்கம் ஈருகக் கூறப்படும் முப்பத்திரண்டு பொருள்கள் காரணமாகவும் மக்களிடை மெய்ப்பாடு தோன்றும் என்பது தொல்காப்பியனுர் கருத்து.[1] மேற்கூறப்பட்ட அறுபத்து நான்கு வகையான மெய்ப்பாடுகள் மக்களுடைய அக வாழ்விலும், புற வாழ்விலும் தோன்றுவனவாகும்.

அக வாழ்வில் - காதல் வாழ்க்கையில் ஈடுபடும் காதலர்க்குரிய மெய்ப்பாடுகளை விரிவாகத் தொல்காப்பியர் விளக்குகின்ருர். ஒருவனும் ஒருத்தியும் எதிர்பாராத வகையில் சந்திக்கின்ற பொழுது அவர்கள் உள்ளத்தே எழும் காதல்உணர்ச்சிமுதல், அவர்கள் கூடி இன்புறும் வரை அவர்களிருவர் உள்ளத்தில் எழும் எண்ணற்ற உணர்ச்சிகளால் உண்டாகும் மெய்ப்பாடுகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் உள்ள வேறு பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

கண்ணுலும் செவியாலும் நுனித்து அறியும் உள்ள உணர்வுடைய மக்களால்தான் மெய்ப்பாடுகளை ஆராய்ந்து அறிந்துகொள்ள இயலும்; நுண்மையாக அறியும் உள்ளத்து உணர்வு இல்லாத மக்களால் மெய்ப்பாட்டின் நுட்பத்தை அறிய முடியாது என்பது தொல்காப்பியர் கருத்து.[2] மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியரால் கூறப்பட்டுள்ள இக் கருத்துக்கள், பண்டைத் தமிழரிடை உள நூல் ஆராய்ச்சி ஓரளவிற்கு வளர்ச்சியுற்றிருந்தமைக்குச் சிறந்த சான்ருகும்.

கலை :

கலை கடந்த காலத்தின் கன்னிகை, நிகழ்காலத்தின் மனைவி; வருங்காலத்தின் தாய் என்பர். கலை என்ருல் என்ன? என்பதை அறிந்தால்தான் இதன் உட்பொருளை நாம் உணர்ந்து போற்றமுடியும். 'கலை' என்ற சொல் முதன் முதல் வழங்கியபோது திறமையைக் காட்டுவதும், அழகு ஏற்படும் வகையில் பொருள்களைச் செய்வதும், சுவை பயக்க வல்லதும், பற்பல செயல்களுக்குப் பயன்படுவதும், உதவுவதுமான அறிவையும்

---

1. தொல். மெய்ப். 12.
2. தொல். மெய்ப். 27.

ஆற்றலையுமே குறித்தது. ஆகவே, அக் காலத்தில் மனி தனது நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களை யும் கலைகள் என்று கருதினர் என்பது புலனுகின்றது. கலையில் பயன்கூறு மிகுதியாக இருக்குமானுல் அது. பயன்கலை (Utilitrian Arts) எனப்படும். அதனைத் தொழிற்கலை எனலாம். இதைத் தொழில் இயல் என்ற பகுதியில் விரிவாகக் கண்டோம்.

கலையில் அழகின் கூறுமட்டுமே நோக்கமாகக் கையாளப் படுமாயின் அதனை அழகுக்கலைகள் என்பர். கலை கருத்தின் உறைவிடமாகும். கலை மனித இனத் தின் வழிமுறைஅனுபவத்தைக் காட்டுவதோடு, வாழ்க்கை யின் நோக்கத்தையும் நிறைவேற்றுவதாகும். கலை அழ கின் பிறப்பிடமாகும். ஒருவன் " நிறைந்த அழகை அனுபவிக்கும்பொழுது உண்டாகும் உணர்வு மீண்டும் வெளிவர முயல்கிறது; அங்ஙனம் வெளி வருகையில் அது கலை வடிவம் கொண்டு வருகிறது. வெளியிடுப வன் தன்மைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற கலையாக அது உருவாகிறது." அது உணர்ச்சியும் கற்பனையும் நிறைந் தது; அழகும் இன்பமும் அளிப்பது.

கலையின் பயன் இன்பம் எனலாம். கலை இன்பம் தருவதோடு மக்களிடையே அழகு உணர்ச்சியை வளர்க் கிறது; வாழ்க்கையைச் செம்மைப்படுத்த — திருத்த முயலுகிறது.

நூற் பொருள்களை அகம், புறம் எனப் பகுத்து ஆராய்ந்த நம் முன்னோர்களிடை கலையுணர்வு மிக்கிருந் ததைக் காணுகிறோம். இன்ப வாழ்க்கையாகிய அக வொழுக்கத்தைச் சிறப்பாகப் போற்றினமையால், அவர் கள் உணர்ச்சி என்னும் உள்ளப் பண்பை நுண்மை யாகப் பெற்றிருந்தனர் என்பது புலனுகின்றது. இக் காரணத்தினுல்தான் மெய்யறிவு நூல்களினும், அகப் பொருள் இலக்கியங்களே—பாவினலாகிய இலக்கியங்களே தமிழிடைச் சிறந்து விளங்கின. உள்ள உணர்வுகளை வடித்தெடுத்துப் பலவகையான சிறந்த கலைகளைப் படைக்கும் வல்லுநர்களாகப் பண்டைத் தமிழர் விளங் கினர். அவர்கள் படைத்த கலைகளில், கண்ணினுல், கண்டும், காதினுல் கேட்டும், உள்ளத்தினுல் உணர்ந்

தும் மகிழத் தக்க அழகுக் கலைகள் சிறப்பு வாய்ந்தன. அவை ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, இலக்கியம், நாட்டியம், நாடகம் என்னும் பல திறத்தன.

பண்டைக் காலத்தில் நமது முன்னோர்கள் கட்டிடக் கலையைச் சிற்பக்கலையோடு இணைத்து ஒரே கலையாகக் கருதினர் என்பது குறிப்பிடத்தக்கது. அதைப் போன்றே நாட்டியம், நாடகம் எனப்படும் இரு கலைகளையும் ஒன்றுகச் சேர்த்தே நாடகக்கலை என்ற பெயரில் வழங்கினர். எழுவகைப்பட்ட அழகுக் கலைகளை ஐந்தனுள் அடக்கிக் கூறுவது நமது நாட்டு மரபு என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

சிற்பக்கலை :

பண்டைத் தமிழக வேந்தர்களுடைய அரண்மனைகளைச் சுற்றி வலிமிக்க அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதனை 'முழுமுதல் அரண்'[1] என்பர் தொல்காப்பியனார். "முழு அரணுவது, மலையும் நாடும் நீரும் அல்லாத அக நாட்டுச் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்து, தோட்டிமுள் முதலியன பதித்த காவல் காடு புறஞ்சூழ்ந்து, அதனுள்ளே முதலை முதலியன உள்ளுடைத்தாகிய அகழி புறஞ் சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும், ஏனைய பொறிகளும் பதனும் ஏப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பும் (எழுப்பிடும் தாழ்ப்பாள்) முதலியவற்றுல் வழுவின்றி அமைந்த வாயில் கோபுரமும் பிற இயந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாகும்"[2] என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளமையால் அக் காலத்தே அரண்களை அமைப்பதில் வல்ல கற்கொல்லர் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனுகின்றது.

மதிலை, 'ஆரெயில்'[3] 'மதிற்குடுமி'[4] முதலிய அடைமொழி தந்து தொல்காப்பியர் சிறப்பிப்பதால் அக் காலத்தில் சிற்பக்கலை சிறந்திருந்ததை அறிகிறோம்

---

1. தொல். புறத். 10.
2. தொல். புறத். 10. நச்சி. உரை.
3. தொல். புறத். 12.
4. தொல். புறத். 13.

போரில் வெஞ்சமர் புரிந்து விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு வழிபாடுசெய்ய ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்து, அதில் மறைந்த் மாவீரனது உருவத்தைச் செதுக்குவர். அதற்கு அடியில் அவ் வீரனது அரிய செயல்களையும் புகழையும் பெயரையும் பொறித்து வழிபாடு செய்வர்.[1] இதனை 'நடுகல் வழிபாடு' என்பது மரபு. இந் நடு கல் வழிபாடே பிற்காலக் கோயில் வழிபாட்டிற்கும், உருவங்களைச் செதுக்கும் சிற்பக் கலையின் வளர்ச்சிக்கும் கருமுதலாக இருந்தன என்று கூறின் மிகையாகாது.

ஓவியக்கலை :

போரில் விழுப்புண்பட்டு மாண்ட மாவீரர்களின் நினைவுச் சின்னமாக அவர்களுடைய உருவினைச் செதுக் கிப் பெயரும் புகழும் பொறித்து நடுகல் நட்டு வழிபாடு செய்யும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந் ததைக் கண்டோம். அவ்வாறு கற்களிலே வீரர்களின் உருவங்களைச் செதுக்குவதற்கு முன்பு, கற்கொல்லர் தாங்கள் செதுக்கப்போகும் உருவத்தை முதலில் வரைந்து பார்த்து, பின்பு அவ் வோவியத்தைச் சுற்றிலும் செதுக் கிக் கல்லில் உருச்சமைத்தல் வழக்கம். இதிலிருந்து ஓவியக்கலை யுணர்வு பண்டைத் தமிழரிடை வேரூன்றி இருந்தது என்பதனை உய்த்துணரலாம்.

மங்கையரும் மைந்தரும் தங்கள் தோள்களிலும் மார்புகளிலும் சந்தனக் குழம்பினால் வள்ளிக்கொடி, மான், மயில், கிளி முதலிய ஓவியங்கள் எழுதும் பழக்கம் காதலரிடை ஓர் இன்ப விளையாட்டாக இருந்ததை அறி கிறோம். இதனை 'வள்ளி,' என்றும், 'தொய்யில்' என்றும் கூறுவர்.[2] இவை இரண்டும் அன்றைய தமிழ ரின் ஓவியக்கலைப் பயிற்சிக்குரிய சிறந்த சான்று களாகும்.

இசைக்கலை :

நம் தமிழ் அன்னை இயல் உயிராகவும், இசை உணர்வாகவும், நாடகம் உடலாகவும் கொண்டு பொன் ருப் புகழுடன் விளங்குகின்றாள். பண்டைத் தமிழர்

1. தொல். புறத். 5.
2. தொல். களவு. 4.

அமிழ்தினுமினிய தமிழ்மொழியினைக் கலையின் வடிவாகவே கண்டனர். உடலினுள் இருந்து எழும் உணர்ச்சியின் ஆற்றலால் உண்டாகும் ஒலியால் அமையும் மொழியை 'இயல் தமிழ்' என்றும், கேட்போரைத் தன் வயப்படுத்தும் ஆற்றலுடையதாய் உள்ளத்தில் எழும் எண்ணங்களை இன்னொலியுடன் புலப்படுத்தும் மொழியை 'இசைத் தமிழ்' என்றும், குறித்த செய்கையினை இயலும் இசையும் இணைந்து விளங்க நடிப்பால் புலப்படுத்துவது 'நாடகத் தமிழ்' என்றும் மூவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். இம் மூன்றையும் 'முத்தமிழ்' என்று முதுபெரும் புலவர்கள் போற்றினர். இவற்றுள் 'இசைத் தமிழ்' கேட்போர் உள்ளத்தை நெகிழ்வித்துத் தன்வயப்படுத்தி இசைவிப்பதனால் 'இசை' எனப்பட்டது.

இசைக் கலை ஒரு நாட்டின் நாகரிக வாழ்வினைப் புலப்படுத்துவதாகும். இசைத் தமிழ் மிகத் தொன்மை வாய்ந்தது. பன்னெடுங் காலத்திற்கு முன்பே தோன்றி வளம் பல பெற்றுச் விளங்கியதைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம். தொல்காப்பியனார் மக்கள் வாழ்வில் வளம் பல பெற்று சிறந்த நிலையை அடையக் காரணமாகவுள்ள பொருள்களைக் கருப்பொருள்கள் என்று வரையறுத்துள்ளார். மக்கள் வாழ்வதற்குரிய நிலத்தையும், வாழ்க்கைக்குத் துணையாகும் காலத்தையும் 'முதற் பொருள்' என்று பாகுபடுத்தியுள்ளதையும், மக்களுடைய அகப் பண்பாட்டினை 'உரிப் பொருள்' என்று எடுத்தியம்பியதையும் முன்பு கண்டோம். கருப் பொருள்கள் பலதிறப்பட்டவையாகும். எனினும், அவற்றை எல்லாம் எட்டுவகையுள் அடக்கிக் கூறுவர். அவை தெய்வம், உணா, ஊா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்பன.[1] யாழ் என்பது இசையையும் இசையைத்தரும் கருவியாகிய யாழையும் குறிப்பதாகும். பண் என்பது இசை; பாண் என்பது இசை எழுப்பும் கருவியினை—யாழினைச் சுட்டிற்று. தொல்காப்பியனார் யாழினை இசை என்னும் பொருளிலேயே வழங்கியுள்ளார். இவ்வைப்பு முறையில் காணப்படும் சிறப்பியல்பு உய்த்து உணரத்தக்கது. தெய்வத்திற்குரிய சிறப்பும் முதன்

1. தொல். அகத். 18.

மையும் பற்றி அதற்கு முதலிடம் தந்து சிறப்பித்துள்ளார். 'தெய்வம்' ஆன்மாக்களை இயைத்து இயக்கி இன்பப் பேற்றை அளிப்பது போன்று, இசையும் உயிர்களை—மக்களை அகம், புறம் ஆகிய வாழ்க்கையின் இரு வகை நிலைகளிலும் இயைத்து இயக்கி இன்பத்தில் திளைக்கச் செய்கின்றமையால் கருப்பொருள்களின் ஈற்றிலே 'யாழினை'ப் பெய்துள்ளார். இசை மக்கள் வாழ்க்கையின் கவலையை மறந்து இன்பத்தில் மூழ்கச் செய்கிறது. தெய்வம் மக்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து பேரின்ப வெள்ளத்தில் நீந்தச் செய்கிறது என்னும் உண்மையை உணர்த்தவே ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனார் கருப்பொருளின் முதலிலும் முடிவிலும் முறையே தெய்வத்தையும், யாழையும் குறித்துள்ளார் என்பது புலனுகின்றது.

"இசை கருப் பொருளாவது எங்ஙனம்?" என்பதை ஆராய்ந்த அறிஞர் கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள், "இசையைக் கருப்பொருள்களுள் ஒன்றுக்கச் சேர்த்த நுட்பத்தை சற்றே ஆழ்ந்து கருதல் வேண்டும்.

இசையை இன்பம் தருவதாக மட்டும் தொல்முது தமிழர் கருதினர் அல்லர். தெய்வ வழிபாட்டோடு ஒப்ப உயர்வை அளிக்கத் தக்கதாகக் கருதினர். உணவைப் போலப் பண்பாட்டிற்கு இன்றியமையாததாகக் கருதினர். செய் தொழில் போலவே இசைகளும் மக்களால் மேற் கொள்ளப் பட்டன; மா, மரம், புள் முதலியன போன்று வேறு வேறு நிலத்தில் வேறு வேறு திறத்தனவாகி அமைந்த பண்பாடு என்பதை, அதன் அடிப்படையைப் பழந்தமிழ் மக்கள் எவ்வாறு நுணுகி நுணுகி ஆராய்ந்துள்ளனர் என்பதைக் காண்க. இசை, மக்களுக்கு மக்கள் ஒழுக்கத்திற்குத் தரும் மேம்பாட்டைத் தமிழர் உணர்ந்தனர்; அது மனத்தைப் பண்படுத்துவதை அறிந்தனர். செவிப்புலன் உணர்வைச் செம்மை செய்து, நுண்ணிய தாக்குவதைத் தேர்ந்தனர். ஆதலின் இசையும் பண்பாட்டிற்கு ஓர் அடிப்படை எனக் கொண்டனர். கருப்பொருள்களில் ஒன்றுகச் சேர்த்தனர். அப்பழங் காலத்தே செய்த இப்பாகுபாடு, இக்கால விஞ்ஞான முறைப்படி அமைந்த பாகுபாடாவது வியக்கத்தக்கது. வழிபடு தெய்வத்

தோடும், உண்ணும் உணவோடும் உடனிருக்கு மாறு இசையை அமைத்தமை, தமிழ்நாட்டில் மிகு பழங்காலத் திலிருந்தே இசைபெற்ற மேம்பாட்டைக் காட்டுகின்றது[1] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.

பறை என்பது 'ஒடும் இசையை ஒழுங்குபெற நிறுத்தி ஓர் அளவோடு, சீரோடு, ஒத்த அழகோடு நடக்க இசைக்கு நடை கற்பிக்கும்' கருவி என்பர். பறை என்ப தனைக் கொட்டு அல்லது தாளம் என்று கூறலாம். இசைக்கு இன்றியமையாததாய்—நெருங்கிய தொடர்பு உடைய பண்ணினைத் தொல்காப்பியர் கருப்பொருள்களுள் ஒன்றாகக் கொண்டமை பண்டைத் தமிழரின் இசையறிவுக் குச் சிறந்ததொரு சான்றாகும்.

எழுத்துக்களின் ஒலி முறையினைக் கூற வந்த தொல் காப்பியனார் இசை ஒலிக்கும் எழுத்து ஒலிக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூற்கூறிய உயிரும் உயிர்மெய்யும் தனது ஒலி அள வில் மிக்கு ஒலித்தலும் ஒற்றெழுத்துக்கள் அரைமாத்திரை யிடத்து நீண்டொலித்தலும் யாழ் நூலிலிடத்தன என்று புலவர் கூறுவர் என்பது இதன் கருத்து. ஆகவே, தொல் காப்பியர் காலத்தில் இசைத் தமிழின் இயல்பினை எடுத் தியம்பும் இசையின் இலக்கணங்கூறும் நூல்கள் பல இருந்தன என்பது புலனாகிறது.

பல்வகைப்பட்ட பண்களைத் தங்கள் யாழிலே எழுப்ப வல்ல ஆற்றல் பெற்று அத் துணையினைவிட்டுப் பிரியா வாணர் (கந்தர்வர்)களைப் பற்றிய குறிப்பும் தொல்காப்பி யத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.[1]

ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு படைத்த மக்கள் வரை யில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் இசையின்பத்தில் மூழ்கித் திளைக்கும் என்பதைப் பண்டைத் தமிழ்ச் சான் றோர் நன்குணர்ந்து இருந்தனர். இத்தகைய இசையினைப் பலவகைப் பண்களாகப் பகுத்து இருந்தனர். மிகப் பழங் காலத்திலேயே ஐந்திணைக்கும் சிறப்பாக உரிய பண்களை வரையறை செய்திருந்தனர். குறிஞ்சிப்பண், முல்லைப்பண்,

---

1. பழந்தமிழ் இசை. பக். 6-7.
2. தொல். களவு. 1.

மருதப்பண், நெய்தற் பண், பாலைப்பண் என்ற இசைப் பண்கள் பெரு வழக்காய் மக்களிடையே நின்று நிலவின. இப்பண்களைப் பாட வேண்டிய நேரத்தையும் முறையையும் நன்கு அறிந்திருந்தனர்.

இசை, கூத்து, நாடகம் ஆகியவற்றையே தங்கள் உயிர்வாழ்க்கைக்குரிய தொழிலாகக் கொண்ட மக்கள் பலர் அக்காலத்திலேயே தமிழகத்தில் இருந்தனர் எனத் தெரிகிறது. அவர்கள் பிறிதொரு தொழிலினை அறியாது கலையையே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தமையால், அவர்கள் தனிப்பட்ட ஒருவகுப்பினராகவே வாழ்ந்து வந்தனர்.

பாணர் என்பார் யாழினை மீட்டி இசை எழுப்புவதிலே வல்ல இசைவாணராவர். யாழ்.பண்ணினை—பாட்டினை—இசையினை எழுப்புகின்றமையால் அதனைப் 'பாண்' என்று கூறுவது பண்டை மரபு. பாணினை (யாழினை) மீட்டி இசைவிருந்து அளிப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தமையால் அவர்கள் 'பாணர்' என்றும் பெயர் பெற்றனர். பாணர் வீட்டு மகளிர் வாய்ப்பாட்டில் வல்லவர்களாக இருந்தனர். இதனால்தான் ஆண்களைப் 'பாணர்' என்றும், மகளிரைப் 'பாடினி' என்றும் அழைத்தனர்.

இசைத்துறையில் ஈடுபட்ட இன்னொரு சாராரைப் 'பொருநர்' என்பர். அவர்களில் ஏர்க்களம் (ஏருழுது விளைந்த கூலத்தைக் குவிக்கும் களத்தைப்) பாடுவோர் போர்க்களம் பாடுவோர் என்ற இரண்டு பிரிவினர் இருந்தனர். இவர்கள் பிறரை ஏற்றிப் புகழ்ந்துபாடி வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்களுடைய பெண்களை 'விறலியர்' என்று கூறுவது மரபு. விறல் என்பதற்கு மெய்ப்பாடு, வெற்றி, திறமை என்பது பொருள். அம்மகளிர் தங்கள் உள்ளத்து எழும் உணர்ச்சிகளை உடல் உறுப்புக்களின் அசைவின் மூலம் உணர்த்துவதில்—நடனம் ஆடுவதிலும், இசை முதலியவற்றிலும் திறமையுடையவர்களாகவும் இருந்தமையால் 'விறலியர்' என்று பெயர் பெற்றனர்.

இசையொடு நெருங்கிய தொடர்பு உடையது கூத்து. குதித்தல்—கூத்து எனப்பட்டது. கூத்தினை ஆடுவதில்

வல்லவரைக் கூத்தர் என்பர். அவர்களுடைய தொழில் கூத்தாடுவதாகும். அவர்கள் கதை தழுவிய கூத்தையும், கதை தழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்ப அபிநயம் பிடித்தாடும் நாட்டியத்தையும் ஆடுவதில் நிகரற்று விளங்கினர்.[1]

நாடகக் கலை :

"நாடகம் என்பது நடி என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர். 'நடி+அகம்' சேர்ந்து நாடகம் என முதல்நிலை திரிந்த தொழிற் பெயராயிற்று. நடி என்பது நட என்னும் சொல்லின் திரிபாகும். முதன்முதல் நடித்தது ஒருவனைப் போல நடந்து காட்டியதே. 'நட' என்னும் சொல்லே 'அம்' ஈறுபெற்று 'நடம்' என்றுயிற்று எனின் பொருந்தும்" என்பர். மொழிநூல் அறிஞர்,[2].

பண்டைக் காலத்து, குதித்து ஆடுவது கூத்தெனப் பட்டது. முதன் முதலில் மக்கள் மகிழ்ச்சியால் குதித்து ஆடிப்பாடி இன்புற்றனர். பிற்காலத்தில்தான் கதை தழுவிய கூத்தினை ஆடத் தொடங்கினர். இவ்வாறு கதை தழுவிய கூத்தினை நாடகம் என்னும் பெயரால் குறிப்பிட்டனர். ஆகவே, நாடகம் என்பது பண்டைக் காலத்தில் இன்று நாம் காணும் நடனத்தை (Dance) யும், கதை தழுவி வரும் நாடகத்தை (Drama) யும் உணர்த்தும் ஒரு சொல்லாக வழங்கப்பட்டது.

தொல்காப்பியர் காலத்தில் மக்கள் தெய்வங்களை ஆடியும் பாடியும் வழிபட்டனர். முருக வழிபாட்டில், வெறியாடும் வேலன் காந்தள்மலர் சூடிக் கையில் வேலேந்தி ஆடிய கூத்தினைக் 'காந்தள்' என்று போற்றினர்.[3] முருகனின் மனைவியாகிய வள்ளியின் கோலம் புனைந்து பெண்கள் ஆடிய கூத்தினை 'வள்ளிக் கூத்து' என்று பாராட்டினர். இவை அல்லாமல் கழனிலைக் கூத்தும் கருங்கூத்தும் அக்காலத்தில் ஆடப்பட்டன. அவையாவும் பெரும்பாலும் போர்த் தொடர்பு உடையனவாகும்.[4]

---

1. தொல். கற்பு. 52.
2. தேவநேயப் பாவாணர் : ஒப்பியன் மொழிநூல். பக். 134.
3. தொல். புறத். 5.
4. தொல். புறத். 5.

கற்பனையாகப் புனைந்து உரைப்பதை நாடக வழக்கு என்றும், உலகிலே நடைபெறும் உண்மை நிகழ்ச்சிகளை உலக வழக்கு என்றும் தொல்காப்பியர் வழக்கத்தினை இருவகையாகப் பிரித்து விளக்கியுள்ளார். உலகத்தோர்க்கு நன்மை பயக்கக்கூடிய உயர்ந்த பண்புகளைக் கற்பித்துக் கூறுதலே நாடக வழக்காகும். இதனால் தொல்காப்பியர் காலத்தில் 'நாடகம்' இருந்தமை தெளிவாக விளங்குகின்றது.[3] 'கூத்தர், விறலியர், பொருநர்' முதலியோர் ஆடியும், நடித்தும் வாழ்வதே தங்களுக்குரிய தொழிலாகக் கொண்டு இருந்தனர்.[4]

இசையும் கூத்தும் ஆராய்ச்சிக்கெட்டாத தொல் பழங்காலமுதல் தமிழர் பண்பாட்டோடும் வாழ்க்கையோடும் ஒன்றுபட்டு, தமிழகத்தை இசைக் கலைக்கு ஊற்றுகவும், கூத்துக் கலையின் வளர்ப்புப் பண்ணையாகவும் இன்றுவரை பொன்போற் புகழுடன் பொலிவுறச் செய்தமை அறிந்து போற்றுதற்குரியதாகும்.

பாட்டுக் கலை :

கலைகளில் சிறந்தது பாட்டு (இலக்கிய)க் கலை தொல்காப்பியர் காலத்தில் இதனைப் 'பா' என்பர். "பா" என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஒதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" என்று பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

உயர்ந்த எண்ணங்கள் சிறந்த மொழிகளில் பண்ணமைதி தோய்ந்து சுவை பயப்பது பாட்டு; அழகும் இனிமையும், அருமையும் பெருமையும் உடையது பாட்டு; சீர், தளை, எதுகை, மோனை, அடி, தொடை ஆகிய உறுப்புக்கள் மூலம் உண்மைக்கு அழகை, அறிவிற்கு ஒளியைக் கொடுப்பது பாட்டு என்று கருதினர்.

பாட்டு முப்பத்து நான்கு உறுப்புக்களைக் கொண்டதாகும். அவை மாத்திரை, எழுத்து, அசைவகை, சீர்,

---

1. தொல். அகத். 53.
2. தொல். கற்பு. 52

அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை வகை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர்களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சவகை, முன்னும், பொருள், துறைவகை, மாட்டு, வண்ணம் எனவரும் யாப்பிலக்கணப்பகுதி இருபத்தாறும், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு எனப்படும் வனப்பு எட்டுமாக மொத்தம் முப்பத்து நான்கு உறுப்புக்களாகும்.[1]

பாவினது வகையைப் பற்றிய தெளிந்த அறிவு அக் காலத்து வழக்கில் இருந்தது. ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா என நான்கு வகைப்பட்ட இயல்பினையுடைய பாக்களைப் பற்றித் தொல்காப்பியம் விரிவாக எடுத்தியம்புகிறது. அப்பாக்கள் நான்கும் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று முதற் பொருட்கும் உரியன. நான்கு வகைப்பட்ட பாக்களின் உண்மை இயல்பினை நோக்கித் தொகுத்துரைப்பின் ஆசிரியப்பா, வெண்பா என இரண்டாய் அடங்கும். அவற்றுள் ஆசிரியத்தின் நடையினையுடையதாய் வஞ்சிப்பா அடங்கும. வெண்பாவின் நடையினை யுடையதாய்க் கலிப்பா அடங்கும்.[2]

ஆசிரியப்பாவின் அளவிற்கு கீழ் எல்லை மூன்றடி ! மேல் எல்லை ஆயிரம். வெண்பாவிற்குக் கீழ் எல்லை இரண்டடி ; பேரெல்லை பன்னிரண்டு அடி. கலிப்பாவிற்கு அடிவரையறை இல்லை.[3] பரிபாடலும், மருட்பா ஏனைய பாக்களிடமாகப் பிறப்பனவாகும். பரிபாடல் 'காமங் கண்ணியதாக' வரும் என்பது அக்காலத்திய மரபு.[4] இழுமென்மொழியால் விழுமிய கருத்துக்களை உணர்த்தும் பாக்களுக்கு இன்னோசை ஊட்டுவதற்கு இருபது வகையான முறைகள் இருந்தன. அவற்றை வண்ணம் என்பர். வண்ணம் என்பது பாட்டின் ஓசையில் உண்டாகும் சந்த வேறுபாடு.[5]

இவ் அறுவகைப் பாக்களும் பலவகைப் பொருள்களைக் (Different Themes) கருவாகக் கொண்டு பாடப்பட்டன. அவற்றுள் சிறப்பு வாய்ந்தவை ஆறு.

---

1. தொல். செய்யு. 1.
2. தொல். செய்யு. 104-106.
3. தொல். செய்யு. 155-158.
4. தொல். செய்யு. 120.
5. தொல். செய்யு. 211.

காமம் பொருள் : (Amatony Themes)

அறம், பொருள், இன்பம் என்ற மூப்பெரும் பேறு களன்றிக் கடவுள் வாழ்த்தினும் மலைவிளையாட்டினும் புனல் விளையாட்டினும் இது போன்ற பிற இன்ப விளையாடல்களையும் விளக்கிக்கூறும் பரிபாடல் காமப் பொருளீட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.[1]

வருணனைப் பொருளீடு :

பண்டைத் தமிழ் இலக்கிய வழக்கில் இருந்த புற்நிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து முதலியன வருணனைப் பொருளீடாகும்.

போர்ப் பொருளீடு :

போரைப் பற்றி விளக்கமாகக் கூறும் 'புறத்திணை' இயல் போன்றவை போரினைப் பொருளாகக் கொண்டவை.

கருதற் பொருளீடு :

நிலையாமையை உணர்த்தும் காஞ்சித்திணை கருதற் பொருளீடு.

பாடாண்திணை :

உலா, கொற்ற வள்ளை, இயன்மொழி வாழ்த்து, ஆற்றுப்படை, கடவுள் வாழ்த்து முதலிய வண்ணப் பொருளாகக் கொண்டவை பாடாண்திணை.

ஒழுக்க நெறி :

வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ ஆகியவற்றினை விளக்கி உரைப்பது.

செய்யுளின் நிலைக்களன் :

தொல்காப்பியர் காலத்தில் 'செய்யுள்' என்பது இலக்கியம் என்னும் பொருளில் வழங்கியது. அக்காலத்தில் செய்யுள் (இலக்கியம்) ஏழுவகையாகப் பிரிக்கப்பட்டு இருந்தன.

---

1. தொல். செய்யு. 120.

பாட்டு :

பாவினுல் செய்யப்படும் செய்யுள், பாச்செய்யுள் என்பர்.

உரை :

பாட்டின் இடையே வரும் உரைநடையும் பாக்களைப் பொழிப்புரை ஆக்குவதும், ஒரு பொருளை உணர்த்தும் நோக்கமின்றிக் கற்பனையாகச் சொல்லப்படும் கதைகளும், கருத்துச் செறிவுடைய நகைமொழி (Humour) யும் உரை நடையாகச் சொல்லப்படும். இவையாவும் உரைச் செய்யுள் என வழங்கப்படும்.[2]

நூல் :

நூற்பாவால் அமைந்த நூலிற்கே பெயராக வழங்கியது. முன்னும் பின்னும் மாறுபடாது தொகுத்தும் வகுத்தும் பொருளைத் தெளியக் காட்டி, தொக்கி நின்ற பொருள் விரிவாக விளக்கிப் பருப்பொருளை[3] விளக்காது நுண்பொருள்களை விளக்குவது. இந் நூலும் நான்கு வகைப்படும். அவை சூத்திரம், ஒத்து, படலம், பிண்டம் என்பனவாகும்.[3]

வாய்மொழி (மந்திரம்)

தாம் சொல்லிய சொல்லின் பொருண்மை என்றும் வழுவாது பயன்தரத்தக்க ஆற்றலுடைய நிறைமொழி மாந்தராகிய பெரியோர், "இவ்வாறு ஆகுக" எனத் தமது ஆணையாற் சொல்ல, அவ் வாற்றலனைத்தையும் தன்கண் பொதிந்து வைத்துள்ள செறிவுடைய நன் மொழியே 'வாய்மொழி' (மந்திரம்) எனப்படும். சான்றோர் எண்ணிய வண்ணம் வாய்க்கப்பெறும் ஆற்றல் சார்ந்த 'மொழியா'தலின் வாய்மொழி எனப்பட்டது.[4]

பிசி :

தன் கண் கிடந்த ஒப்புமைப் பண்போடு பொருந்தி வரும் உவமப் பொருளாகிய ஒப்பொடு புணர்ந்த உவமமும்,

---

1. தொல். செய்யு. 78.
2. தொல் செய்யு. 171.
3. தொல். செய்யு. 164.
4. தொல். செய்யு. 176.

ஒன்று சொல்ல ஒன்று தோன்றும் துணிவிறகுச் சொல்லும் மொழியும் எனப் பிசி இருவகைப்படும்.[1] இதனை இக் காலத்தில் விடு கதை (புதிர்) என்பர்.

முதுமொழி :

அறிவின் நுட்பத்தை விளக்குவதாய்ச் சுருங்கக்கூறி விழுமிய பொருள்களை எளிதாக விளங்கவைக்கும் வகையில் கருதிய பொருளை முடித்தற்கு வரும் காரணத்துடன் பொருந்தி விளக்கமுறுவது முதுமொழியாகும். தொன்றுதொட்டு மக்களின் வாழ்க்கை அனுபவத்தில் கண்ட சிறந்த கருத்துக்களையும், உயர்ந்த குறிக்கோள்களையும், நுண்ணிய அறிவையும், வாழ்க்கை நெறியையும் எடுத்தியம்பும் பழமொழியே அக்காலத்தில் முதுசொல் என்றும், முதுமொழி என்றும் குறிக்கப்பட்டன.[2]

குறிப்பு மொழி : (அங்கதம்)

ஏழுத்தின் இயல்பினாலும் சொல்லின் தொடர்ச்சியாலும் புலப்படாது சொல்லினால் உணரப்படும் பொருளுக்குப் புறத்தே பிறிதொரு பொருள் பயப்பதால் நிற்பது குறிப்புமொழி என்பர்.[3] "மேல் அங்கதமென்று சொல்லி ஈண்டுக் குறிப்பு மொழி என்றதனால் இச் சொல் வசை குறித்து வரும்" என்றும் கூறுவர்.[4]

இவற்றுள் பாட்டு நீங்கலார்க உள்ள மற்ற ஆறுக்கும் அடிவரையறை இல்லை என்பது தொல்காப்பியனார் கருத்து. பண்டைத் தமிழ் இலக்கியம் ஏழுவகைப்பட்ட கிளைகளை உடையதாய் விளங்கியது என அறிகிறோம் இலக்கியத்திற்கு எழிலும் கவர்ச்சியும் தரத்தக்க பண்புகள் எட்டு என வரையறை செய்துள்ளனர். அவற்றை 'எண்வகை வனப்பு' என்பர்.

எண்வகை வனப்பு :[5]

செய்யுள் உறுப்புக்கள் பலவும் ஒருங்கு திரண்ட வழி, இலக்கியத்தில் காணப்படும் அழகினைத் தொல்

---

1. தொல். செய்யு. 174.
2. தொல். செய்யு. 175.
3. தொல். செய்யு. 177.
4. தொல். செய்யு. 177. இளம். உரை.
5. தொல். செய்யு. 233-240.

காப்பியர் காலத்தில் வனப்பு என்பர். இவ் வனப்பு எட்டும் தொடர்நிலைச் செய்யுளுக்கே (காப்பியம் முதலியன) பெரும்பான்மையும் வருவன. சிறுபான்மை தனி நிலைச் செய்யுளுக்கும் இவ் வனப்பு உரியதாகக் கொள்ளப் பட்டது.

அம்மை :

சிலவாய, மெல்லியவாய சொற்களால் தொடுக்கப் பட்ட அடி நிமிர்வு இல்லாத செய்யுள் அம்மை என்னும் வனப்புடையதாகும். அழைதிப்பட்டு நிற்றலின் அம்மை என்றுயிற்று. ஆறடியின் மேற்படாமல் அறம், பொருள், இன்பம் மூன்றற்கும் இலக்கணம் கூறுவன போன்றும், அன்றுகியும் இடையிட்டு நிற்கும் இயல்பினது அம்மை எனப்படும்

அழகு :

திரிசொல் பயிலாது, செய்யுளுள் பயின்றுவரும் சிறந்த சொற்களால், ஓசை இனிதாகச் சீர் அறுத்துச் செய்யப்படும் யாப்பின் பொலிவுடையது அழகு.

தொன்மை

செய்யுளோடு உரை நடை கலந்து பழமையாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது தொன்மை என்னும் வனப்பாகும்.

தோல் :

இழுமென்னும் ஓசையுடைய மெல்லென்ற சொல்லால் அறம், பொருள், இன்பமாகிய விழுமிய பொருள் பயப்பச் செய்யப்படுவது. ஆசிரியப் பாட்டான் ஒரு கதைபோல் தொடுக்கப்பட்ட பொருள்தொடர்நிலைச் செய்யுளும் 'தோல்' என்பதாகும்

விருந்து :

புதிதாகத் தொடுக்கப்படும் தொடர்நிலைச் செய்யுள். 'புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்' என்பர் இளம்பூரணர். 'புதிதாகத் தாம் வேண்டியவாறு பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வது விருந்து' என்பது பேராசிரி

யர் கருத்தாகும். இதை இக்காலத்தில் 'புத்திலக்கியம்' (புதினம்-Novel) என்பர்.

இயைபு :

இடையினம், மெல்லினமாகிய பதினெரு மெய்யெழுத்துகளில் ஒன்றனை இறுதியாகக் கொண்டு முடியும் செய்யுள் 'இயைபு' எனப்படும். இயைபு என்றமையால் சொல்லும் பொருளும் இயைந்து வரும் என்பது கருத்து.

புலன் :

பலருக்கும் தெரிந்த வழக்கத்தில் உள்ள சொற்களினாலே செம்மையாகத் தொடுக்கப்பட்டுக் குறித்த பொருள் இதுவென ஆராயவேண்டாமல் தானே விளங்கத் தோன்றுவது 'புலன்' என்னும் செய்யுள் வனப்பாகும்.

இழைபு :

ஒற்றெரடு புணர்ந்த வல்லெழுத்துப் பயிலாமல் குறளடி முதல் ஐந்தடியினையும் ஒப்பித்து ஓங்கிய மொழியால் பொருள் புலப்படச் செய்வது 'இழைபு' என்னும் வனப்பு என்பர்.

இவ் எண்வகை வனப்புக்களுள் அம்மை, அழகு, இழைபு என்னும் மூன்றனையும் ஒளித்து ஏனைய வனப்புக்களுக்கு உரிய இலக்கணங்கள் காப்பியங்களோடு தொடர்புடையன. தோல், தொன்மை, விருந்து என்பன மூன்றும் கதைச் செய்யுளாகிய காப்பியத்தின் வகைகளாகும். இவற்றுல் அக்காலத்திலேயே, தமிழில் காப்பியங்கள் இருந்தன என்பதை அறிகிறோம்.

12. இறை இயல்

1. கடவுள் நெறி

"உலகை நோக்குக உலகை நோக்குக
தோன்றி ஒடுங்கலை ஊன்றி நோக்குக
பற்பல பொருள்களின் அற்புதம் விளங்கும்:
வளர்ச்சி இயல்கள் உளத்தில் படியும்,
படியப் படியக் கடவுள் உண்மையில்
திடமே நிலைக்கும் இடமே கோயில்"

— திரு. வி. க.

கடவுள் நெறி என்பது கடவுள் ஒருவர் உண்டு என்று உணர்ந்து, அவரை மனம், மெய், மொழிகளால் போற்றி வழிபட்டு மக்கள் பயனடையும் வழிபாட்டு நெறியாகும். இந்நெறிக்கு இன்றியமையாத அடிப்படை கடவுள் கொள்கை ஆகும். கடவுள் கொள்கை மக்கள் சமுதாயத்தில் தோன்றி வளர்ந்து சிறந்த நிலையை அடைந்தது நாகரிக வளர்ச்சியின் முக்கிய கூறாகும். தொல்பழங் காலத்தில் ஆதி மனிதன் இடி, மின்னல், நிலநடுக்கம், ஞாயிற்றின் தோற்றம், மறைவு முதலிய இயற்கையின் ஆற்றல்களை அறிந்துகொள்ள முடியாததாலும். அடக்கியாளத் தெரிந்து கொள்ளாததாலும், அவற்றைக் கண்டு அஞ்சினான். அவற்றின் அருளை எதிர்நோக்கிய வண்ணம் வாழ்ந்தான். இவ்வியற்கையின் ஆற்றல்களால் உண்டாகும் தீமைகள் ஒவ்வொன்றையும் தோற்றுவிக்கும் தெய்வங்கள் இருப்பதாக நினைந்து அஞ்சினான். எனவே, இயற்கையின் ஒவ்வொரு கூற்றையும் ஒவ்வொரு தெய்வ

மாகக் கருதிப் போற்றினுன். இவ்வாறு கடவுள் நெறி உலகில் அச்சத்தின் அடிப்படையில் தோன்றி வளர்ந்த தாக அறிஞர் கூறுவர்.

தமிழ்மக்கள் எண்ணத் தெரிந்து, கலைகளை வளர்த்து, கருத்து வகையால் உயர்ந்து, அறிவாராய்ச்சியில் சிறந்து, நாகரிகம் அடைந்த மக்களாகத் திகழ்ந்த காலத்து இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐந்தினையும் படைத்துக், காத்து, அழிக்கும் ''முழுமுதற் பொருள்'' ஒன்று உண்டென உணர்ந்தனர். அதன் பயனுய் ''முழுமுதற் பொருளிற்கும்'' உலக வாழ்க் கைக்கும் தொடர்பு அமைத்து, அதனை உணர்ந்து வழி பட்டனர். பண்டைக் காலத்தில் தமிழக மக்கள் முழு முதற் பொருளைக் ''கடவுள்'' ''இறைவன்'' என்னும் இரண்டு சொற்களால் குறித்துள்ளனர். ''கடவுள் வாழ்த் தொடு கண்ணிய வரும்''[1] என்பதனால், தொல்காப்பியர் காலத்தில் முதற்பொருளைக் 'கடவுள்' என வழங்கும் மரபு இருந்தமையை அறிகிறோம்.

மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்து நிற்பது கடவுள் எனப்படும். பொறி, உள்ளம், உயிர்ப்பு ஆகிய வற்றை எல்லாம் கடவுவது கடவுள் என்றும் கூறுவர். எல்லாப் பொருளிலும் உள்ளும் புறமும் யாண்டும் நீக்கமற நிறைபெற்றிருப்பவன் இறைவன் (இறுத்தல் — தங்குதல்) என்று அடியார்க்கு நல்லார் விளக்கம் தந்துள்ளார். முழுமுதற் கடவுளைப் பற்றிய உணர்வு பண்டைத் தமிழரிடைத் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பு, அவர்கள் ''தெய்வங்களிடத்து நம்பிக்கை கொண்டு அவற்றை வழிபட்டு வந்தனர். இதனால் தொல்காப்பியர் காலத் தமிழர், தெய்வங்களைப் பற்றிய கருத்துடையவராக இருந்தனர் என்பதனைத் தொல்காப்பியர் 'தெய்வம்' என்னும் சொல்லைப் பல இடங்களில் வழங்கியுள்ளமையால் அறிகிறோம்.[2]

---

1. தொல். புறத். 33
2. 'தெய்வம் சுட்டிய பெயரிலைக் கிளவி' — தொல். கிளவி. 4
'தெய்வம் உணவே புட்புறை — தொல். அகத். 18
'பால்வரை தெய்வம்' — தொல். கிளவி. 58
'தெய்வம் அஞ்சல்' — தொல். மெய்ப். 24
'தேவர்ப் பராய முன்னிலை' — தொல். செய்யு. 133
முதலியன.

"பழந்தமிழர் இயற்கை அழகையே உயர்ந்த பொருளாக—அதாவது கடவுளாகக்கொண்டு வாழ்ந்தனர். அவர் மலைமீது வாழ்ந்தபோது அவர் உள்ளத்தைக் காலையிலும் மாலையிலும் ஞாயிற்றின் செம்மையும், வானத்திற் படரும் செம்மையும், பிற செம்மைகளும் கவர்ந்தன. அச் செவ்விய இயற்கை அழகைச் 'சேய்' என்று போற்றினர். அம்மக்கள் தங்கள் கண்ணுக்குப் பச்சைப் பசேலெனக் காட்சி வழங்கிய காட்டின் இயற்கையை 'மால்' என்று வழுத்தினர். அவர் மருத நிலத்தில் குடிபுகுந்தபோது அங்கே பெரிதும் தம் இனமாகிய கூட்டத்துடன் நெருங்கிப் பழக நேர்ந்தமையால், மக்கள்மாட்டு ஒளிரும் இறைமை என்னும் இயற்கை அழகைக் கண்டு அதை வேந்து என்று கொண்டனர். அவர் கடற்கரை நண்ணியபோது கடலின் இயற்கை அழகை 'வண்ணம்' என்றனர். பழந் தமிழ் மக்கள் அவ்வந்நில இயற்கை அழகுக்கு இட்ட பெயர்கள் சேய், மால், வேந்து, வண்ணம் என்பன.....

இவ்வியற்கை அழகுப் பெயர்கள் தொல்காப்பியனார் காலத்திலேயே அன் (வண்ணம் - வர்ணம் - வருணம் - வருணன்) விகுதி பெறலாயின. பின்னை நாளடைவில் இப்பெயர்கள் பிரிவுபட்ட கடவுளாகச் சமயவாதிகளால் கொள்ளப்பட்டன. பழந்தமிழ் மக்கள் கொண்ட கடவுள், இயற்கை அழகு என்பதை மட்டும் நாம் மறத்தலாகாது[1] என்று காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார் பழந்தமிழரது கடவுட் கொள்கையைத் தெளிவாக விளக்கியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

நானிலத்து மக்களும் வழிபட்ட தெய்வங்களைத் தொல்காப்பியனார்,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"[2]

என்று குறிப்பிட்டுள்ளார்.

---

1. தமிழ் நூல்களில் பௌத்தம் பக். 28
2. தொல். அகத். 5

திருமால் வழிபாடு :

திருமாலினை 'மாயோன்' என்பர் தொல்காப்பியர் மாயோன் என்னும் பெயர் கரிய (மாமை) நிறமுடையவன் எனப் பொருள்படும். திருமாலினைக் கார்மேக வண்ணன், காயாம்பூ நிறமேனியன் என்று பிற்காலத்தில் ஆழ்வார்கள் போற்றி வழிபட்டமை இங்குக் குறிப்பிடத் தக்கது. முல்லை நில மக்கள் திருமாலைக் குலதெய்வமாக்கக் கொண்டு வழிபட்டனர். திருமாலுடைய காத்தல் தொழிலினை மன்னவர்க்கு உரியதாகக் கூறும் (பூவைநிலை) வழக்கம் காணப்படுகின்றமையால், திருமால் வழிபாடு தமிழ்மக்களிடையே சிறப்புற்றிருந்தமை புலனுகின்றது.

கண்ணனின் அண்ணனுகிய பலராமன் அக்காலத்திய மக்களால் வணங்கப்பட்டிருத்தல் வேண்டும். இதனைத் தொல்காப்பியனுர் பலராமனுடைய பனைக் கொடிக்குத் தனியே இலக்கணம் வகுத்துள்ளமையால் அறிகிறேம்.

முருகன் வழிபாடு :

முருகு என்ற சொல்லிற்கு மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு என்று பொருள் கூறுவர் தமிழ்ச் சான்ருேர். "இவ்வியல்புகளைக் கொண்ட ஒன்றைப் பண்டைத்தமிழ்மக்கள் முருகு என்னும் சொல்லால் அழைத்துப் போற்றினர்கள். முருகு என்பது பொருள் பொதிந்த ஒரு சொல். அம் முருகையுடையவன் முருகன். பண்டைத் தமிழ் மக்கள், இயற்கைவழி வாழ்வு செலுத்தி, அதற்கு அடிப்படையாயுள்ள அழகுண்மையைக் கண்டு, அவ்வழகால் இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ் வியற்கையை வழிபட்டு, முழுமுதற் பொருட்கு அழகு என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரணிந்தார்கள்."[1] செவ்விய இயற்கை அழகை முருகனுக்கு ஒப்பிட்டமையால், அவனைச் சேயோன் என்று போற்றினர்.[2]

முருக வழிபாடு பழந்தமிழ்மக்கள் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த தொல்பழங்காலத்திலேயே தோன்றிய தெய்வவழிபாடாகும். அக் காலத்தில் தங்கள் மகளிர்

1. முருகன் அல்லது அழகு பக். 10.
2. தொல். அகத். 5.

நோயுற்றபோழுது, முது பெண்டிர் வேலனை அழைத்து முருகபூசை செய்தனர். கையினில் வேலைத் தாங்கி, முருகனுக்குப் பூசைசெய்து வெறியாட்டம் ஆடுவோனை 'வேலன்' என்று அழைத்தல் பண்டைக்கால மரபாகும். அவன் முருகனுக்குச் செய்யும் கடன்களை நன்கறியும் சிறப்பினை உடையவன்; தெய்வம் ஏறி ஆடும்பொழுது காந்தள்மலரைச் சூடி ஆடுவான்; முருகனுக்கு உயிர்ப் பலி கொடுக்குமாறு அவன் கூறுதல் உண்டு.[1] அவனோடு அழகிய அணிகலன்களை அணிந்த பெண்கள் வள்ளிக் கூத்து ஆடுவது வழக்கம்.[2]

வேந்தன் வழிபாடு :

மருத நிலமக்கள் நீர்வளம் பெற விரும்பி மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த வேந்தனை வழிபட்டனர். மன்னன் அறநெறி பிறழாது ஆட்சி செய்வதனால் உலகில் மழை தவறாது பெய்கிறது என்று பண்டைக்கால மக்கள் நம்பினர்கள். எனவே, மக்கள் அரசனையே தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர். இவ்வாறு அரசனையே தெய்வ மாகக் கருதி மக்கள் வழிபட்டதை எகிப்து நாட்டு வர லாற்றிலும் காணுகிறோம். அறநெறியில் வழுவாது, தன் குடிமக்களைப் பிறர் துன்புறுத்தாமல் பாதுகாத்தலைச் செய்யும் அரசன், பிறப்பினால் மனிதனே ஆயினும், அவனுடைய செயலின் உயர்வினால் கண்கண்ட தெய்வ மாக மக்களால் சிறப்பித்துப் போற்றப்பெற்றான். தொல் காப்பியர் காலத்திலேயே மன்னன் கடவுளுக்கு ஒப்பாக மதித்துப் போற்றப்பெற்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

"மக்களாற் செய்யப்படும் உழவுக்கும், பிற தொழி லுக்கும் காவல் செய்யுங் கருத்தினால் நாளடைவில் உருவாகி நிலைபெற்ற குடும்பமே மன்னர் குடும்பமாகும். மன்னன் என்னும் பெயர் நிலைபெறுதல் என்னும் பொரு ளுடைய 'மன்' என்னும் உரிச்சொல்லின் அடியாகப் பிறந்த காரணப் பெயராகும். மக்களது நல்வாழ்வு நிலைபெற அவர்கள் வாழும் நாட்டை நிலைபெறக் காக்குங் கடமை பூண்ட ஆட்சித் தலைவன், மன்னன் என நன்கு மதித்துப் போற்றப்பெறுவானையினும். அதனால் அவனது

1. தொல். புறத். 5.
2. தொல். அகத். 5.

குடும்பமும் நாட்டில் வழிவழியாக நிலைபெற்று வருவதா யிற்று. உடம்பை வளர்ப்பனவாகிய நெல் முதலிய உணவுப் பொருள்களோ அவை விளைதற்கு உறுதுணையாகிய நீரோ இவ்வுலகில் உயிர்வாழ்வினை நிலைபெறச் செய்யும் ஆற்றலுடையனவாகா. மக்களை ஒரு நெறிப்படுத்தித் தம் முள் வேற்றுமையின்றி அன்பினுற் கலந்து வாழ வழி வகுக்கும் ஆட்சித் திறன் உடைய மன்னனே மலர்தலை யுலகிற்கு உயிராவான் எனத் தமிழ் முன்னோர் எண்ணினர் கள். அவர்கள் எண்ணிய வண்ணமே அக்காலத் தமிழ் வேந்தர்களும் தம் நாட்டு மக்களின் இன்னுயிரென இன்றியமையாதவராய் முறை பிறழாது ஆட்சி புரிந்தனர். நாகரிகம் உருப்பெறுதற்கிடனுகிய மருதநில மக்கள் தம் நாட்டு வேந்தனையே தெய்வமென மதித்துப் போற்றி அவனது ஆணைவழி ஒழுகினர்.[1] மேலும் வேந்தனைக், காத்தல் கடவுளாகிய திருமாலாகக் கருதிப் போற்றும் வழிபாட்டு நெறி வழக்கில் இருந்தமை தொல்காப்பியத் தால் தெரியவருகிறது.

வேந்தனை, 'இந்திரன்' எனப் பிற்காலத்தில் சான்றோர் கள் கூறிப் போந்தனர். தமிழ்மக்கள் வாழ்வும் வளனும் பெற்றுச் சிறந்து விளங்க வேந்தன் உறுதுணையாக இருந்ததைப் போன்று, ஆரியருடைய வாழ்வினை வள முடையதாக்கியவன் இந்திரன். எனவே, இருவகை மக்களுடைய வளமிக்க வாழ்விற்குக் காரணமான கடவுளர் இருவரும் ஒன்றெனக்கொண்டு பிற்காலத்திய மக்கள் வழிபட்டனராதல் வேண்டும்.

வருணன் வழிபாடு :

நெய்தல் நில மக்களாகிய பரதவர் கடல் வளங் குன்றுது தங்கள் வாழ்க்கைக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்தோடு முழுமதி நாட்களில் மணலில் சுருக் கோட்டினை நட்டு, வெண்டாளி மலரைச் சூடி ஆடிப்பாடி வழிபட்டனர். இத்தெய்வம் பண்டைத் தமிழருடையதே என்றும், பிற்காலத்தில் ஆரியமொழிவிர்கள் தங்கள் தெய்வக்

1. தமிழ் இலக்கிய வரலாறு — தொல்காப்பியம்—பக்கம் 131-32 க. வெள்ளை வாரணனார்.

கூட்டத்துள் இடங்கொடுத்து ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்பர் ஆராய்ச்சியாளர்.[1]

கொற்றவை வழிபாடு :

பாலை நிலத்திற்குரிய தெய்வத்தினைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை எனினும் பிற்காலத்தில் கொற்றவையைப் பாலை நில மக்கள் வழிபட்டனர் எனத் தெரிகிறது. தங்களுக்கு வெற்றியைத் தருகின்ற தெய்வமாகப் பாலை நில மக்கள் கொற்றவையைப் போற்றினர். போர்க்களத்து முறவர்களுடைய வீரத்தினை மிகுதிப்படுத்த வேண்டிப் போர்ப்பறை கொட்டி, போர்த் தொழில் சிறப்புறக் கொற்றவையை போற்றிப் புகழ்ந்து குருதிப் பலி கொடுத்து வீரரும் விறலியும் ஆடிப்பாடிமகிழ்வர். இதனைத் தொல்காப்பியர் 'கொற்றவை நிலை'' என்பர்.[2] இதனால் தொல்காப்பியர் காலத்தில் ''அன்னை வழிபாடு'' சிறப்புற்றிருந்தமை புலனாகின்றது.

சிவ வழிபாடு :

ஐந்திணை மக்களும் தத்தம் நிலத்திற்குரிய தெய்வங்களை வழிபட்டதோடு அல்லாமல், மனம், மொழி, மெய்களால் உணர்தற்கு அரியமுழுமுதற்பொருளைப் போற்றிப் பரவும் சமயப் பொது நெறியைப் பின்பற்றினர். இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவன் இறைவன், தூய மெய்யுணர்வே இறைவனது திருமேனி என்றும், அவன் ஒப்பாரும் மிக்காருமில்லாப் பொங்கு பேரொளியாகிய அறிவன் என்றும் கருதினர்.[3] ''ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும்'' தத்துவங் கடந்த பொருளாக விளங்கும் கடவுளைக் ''கந்தழியின்'' உருவில் அமைத்து வழிபட்டனர். 'கந்தழி' என்பதற்குப் பற்றற்றது

1. "Those Vedic Gods, the etymology of those names is not patent, and who have no analogies in other Indo-Germanic dialects must have been originally Dravidian deities. The Aryan God, Varuna was probably the God of the Dravidian triles, being on the borders of the sea, to whom the Rishis accorded a place in their pantheon."

— Dravidian India P. 101 T. R. Sesha Aiyangar.

2. தொல். புறத். 4.

3. தொல். மரபு. 95.

என்பது பொருள். இக்கந்தழி வழிபாடுதான் சிவலிங்க வழிபாடாகப் பிற்காலத்தில் மலர்ச்சியுற்றது என்பது அறிஞர் கருத்து.

முச்சுடர் வழிபாடு :

கொடிபோல் மின்னி எழுந்து முகில்களால் மறைத்து நின்ற மறைப்பை நீக்கிக் கண்டவிடத்து நிலைபெறத் தோன்றிய 'கொடிநிலை'யையும், வண்மைப் பண்பாகி விளங்கும் தெய்வமாகிய 'வள்ளி'யையும் முறையே ஞாயிறு திங்களாகக் கருதி வழிபட்டனர். "இனிக் கொடி நிலையைக் கீழ்த்திசை தோன்றும் ஞாயிறு எனவும், கந்தழி என்பதனைப் பற்றுக் கோட்டினை அழிக்கும் தீ எனவும், வள்ளியைத் தண்ணெளி வழங்கும் தீ எனவும் கொண்டு முச்சுடர்ப் பொருளாயும்"[1] தெய்வமாக வழிபட்டனர்.

பண்டைத் தமிழ் மக்கள் கடவுளை வழிபடுவது மக்களது முதற் கடமை என்று கருதினர். தமிழ்ச் சான்றோர் 'வழிபடு தெய்வத்தின் திருவருளால் குற்ற மற்ற பெருஞ் செல்வத்துடன் தம் குடும்பம் வாழையடி வாழையாக இவ்வுலகில் நிலைபெற்று வளர இன்புற்று வாழலாம்' என்னும் விழுமிய உண்மையினை மக்களுக்கு அறிவுறுத்தினர்கள்.[2] தாம் வழிபடு தெய்வத்திற்குத் திருவுரு அமைத்து முன்னின்று பரவி வழிபாடு செய்யும் போது, இறைவனது திருவருள் திறத்தினைப் போற்றிப் புகழ்ந்து பாடுவர்.[3] தெய்வத்தின்முன் சூளுரை செய்து, தம் உள்ளத்து உறுதியைத் தெளிவாகப் பிறர்க்கு எடுத்துரைக்கும் வழக்கும் இருந்தது. கற்புடைப் பெண்டிர் கணவனது வழிபடு தெய்வத்தினை இறைவனோடு கூடி வணங்கி ஒழுகும் பண்புடையராய் வாழ்ந்தனர்.[4] இவையாவும் தொல்காப்பியர் காலத்தில் தமிழ்மக்களது குடும்ப வாழ்க்கையில் இறைவழிபாடு சிறப்பிடம்பெற்றிருந்ததைத் தெளிவுறுத்துகின்றன.

---

1. Journal Oriental Research 1952 பக். 16-17.
2. "வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப
பழிதீர் செல்வமோடு வழிவழி சிறந்து
பொலிமின்", — தொல். செய்யு. 106
3. தொல். செய்யு. 137.
4. தொல். மெய்ப். 24.

பண்டைத் தமிழருடைய கடவுள்நெறி தொல்காப்பியர் காலத்தில், தனியொரு தெய்வீ வழிபாட்டு நெறியாக வளர்ச்சியுறவில்லை. இன்றுள்ள சமயங்கள் யாவும் உருவாகாத கர்லத்திய தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் தொல்காப்பியத்தினுல் அறிகிறோம். பல சமயக் கருத்துக்களைக் கொண்ட அறவோர், துறவோர் அக்காலத்தில் வாழ்ந்தனர். எனினும் அவர்கள் இச்சமயத்தினைச் சார்ந்தவர்கள் என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லை. இதற்குத் தக்க சான்று தொல்காப்பியனர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்பதைக் குறித்து எழுந்துள்ள பலதிறப்பட்ட ஆராய்ச்சியேயாகும். ஆகவே, தொல்காப்பியர் காலத்தில் பல சமயக் கூறுகள் தமிழருடைய கடவுள்நெறியில் இடம் பெற்றிருந்ததே ஒழிய, தனிப்பட்ட 'சமயம்' என்று சுட்டிக் கூறும் அளவிற்கு எச்சமயமும் தென்னுட்டில் வளர்ச்சியுற்றிருந்ததாகத் தெரியவில்லை. இதனுல் தொல்காப்பியத்தின் தொன்மையும், தொல்காப்பியம் காட்டும் தமிழர் நாகரிகத்தின் பழமையும் நன்கு புலனுகின்றன.

மெய்யறிவு :

மக்கள் தாங்கள் பெற்ற அனுபவத்தை ஆராய்ந்து அதன் பயனுக வாழ்வின் விடை காண முடியாத வினுக்களுக்கு விடைகாண முயலும் நிலையே மெய்யறிவாகும். மெய்யறிவு இயல் ஆராய்ச்சியில் தமிழர்கள் மிகப் பழங் காலத்திலேயே ஈடுபட்டிருந்ததைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம். "தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழ் நாட்டில் ஒவ்வொரு பொருளின் நுட்பங்களைக் கண்டு பிறருக்கு உணர்த்தும் சித்தர் அல்லது அறிவர் என்போர் தவமும் அறிவாற்றலும் உடையவராய் விளங்கினர். முதலில் நல்வாழ்க்கை பெற்ற மக்கள் உண்மை ஆராய்ச்சி செய்யப் புகுந்து உலகிற்கும் உயிருக்கும் வேறுக அவற்றை இயக்கும் முழுமுதற் கடவுள் உண்டென்பதனை அறிந்தனர். அவர்கள் உலகப் பொருள்களை அகம், புறம் என்றும் புகுத்து ஆராய்ந்தனர்."[1]

வரலாற்றின் ஒளிக்கதிர் சென்று வீசமுடியாத தொல் பழங்காலத்திலேயே உலகைப்பற்றியும், உயிரைப் பற்றியும், உடலைப்பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

---

1. கா. சு. பிள்ளை: தமிழர் சமயம் — பக். 75.

உலகம்:

உலகம் என்பது என்ன? அதன் இயல்பு எத்தகையது? என்பதைப்பற்றி ஆராய்ந்த பண்டைத் தமிழர்,

"நிலம் நீர் தீவளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"[1]

என்பதைத் தெளிவாக உணர்ந்து இருந்தனர். நிலம் முதலாயின அறிவில்லாத பொருள்தொகுதியின் அவை தாமாகக் கலத்தல் இயலாது. எனவே வாலறிவன் ஒருவன். கலக்க அவை கலந்தன என்பது தேற்றம். அவ்வாறு கலந்த அவை, தாம் கலந்த முறையே, தாமாகப் பிரிய வல்லன அல்ல. மேலும் அவை ஒத்த அளவில் கலந்து நில்லாமல், மிகுந்தும், குறைந்தும் மயங்கிக் கலந்து நிற்கின்றன. நிலப் பகுதியாகத் தனியே காணப்படும் அதன்கண் உண்மை நிலப் பகுதியின் பெரும் பங்கும் ஏனைய நீர், தீ, வளி, விசும்பு என்பவற்றின் சிறுசிறு பங்கும் கலந்தே உள்ளன. இவ்வாறு ஏனையவற்றுள் ஒவ்வொன்றிலும் தன்தன் கூறு மிகுதியாகவும், பிற வற்றின் கூறு குறைவாகவும் கலந்துள்ளன. இவை தாமும் இவ்வாறு கலந்து மயங்குவதற்கு முன் விசும்பி லிருந்து வளியும், வளியிலிந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் பூத்தன.'[2] என்பதனால் உலகத்தின் தோற்றத்தைப் பற்றிப் பண்டைத் தமிழர் கொண்டிருந்த கருத்துப் புலனாகின்றது.

இயற்கைப் பொருள்களின் தோற்றத்திற்கு 'வான்' மூலப்பொருளாகக் கருதப்பட்டாலும், "அதுவே முதல் என்று யாண்டும் கூறப்படாமல், 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனிவன்' என இறைவனே யாவற்றிற்கும் முதல்வனாகக் கூறப்பட்டிருந்ததால், அவ்விசும்பும் அவ் விறைவனிடத்தில் இருந்து தோன்றியது. பூத்தது என்று கொள்ளுதல் வேண்டும். எனவே பூதங்களுக்கும், அவை கலந்த மயக்கமாய உலகத்திற்கும் முதல்வனுவான் முனிவனுய இறைவனே என்பதை 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் தேற்றத்

1. தொல். மரபு. 90
2. Journal of Oriental Research 1952. பக். 4

துடன் உணர்த்தலானார்" என்று டாக்டர் மொ. அ: துரை அரங்கனார் மொழிந்துள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கது.

ஐம்பெரும் இயற்கைப் பொருள்களின் சேர்க்கையினால் உண்டான உலகம் நிலைபேறில்லாத தன்மையுடையது. அறம், பொருள், இன்பம் என்னும் பொருட் பகுதிகளும், அவற்றின் கூறுகளாகிய உயிரும், யாக்கையும், செல்வமும் இளமையும் பொருந்திய உலக இயற்கை நிலைபேறில்லாதது; அழியும் தன்மையுடையது என்பதனைத் தமிழ்ப் பெருமக்கள் அக்காலத்திலேயே நன்கு உணர்ந்திருந்தனர்.[1]

உயிர் :

உலகில் உள்ள உயிர்களை நுண்ணுணர்வுடைய தமிழ்ச் சான்றோர் அறுவகையாகப் பகுத்து அறிந்திருந்தார்கள். உற்றறியும் உணர்வு ஒன்றே சிறந்து நிற்கும் புல்லையும் மரத்தையும் ஓரறிவுயிர் என்றும், அம்மெய்யுணர்வினோடு நாவுணர்வு ஆகிய சுவையுணர்வைப் பெற்ற நத்தை, இப்பி, சங்கு, கிளிஞ்சல் முதலியன ஈரறிவுயிர் என்றும், இவற்றுடன் முகரும் உணர்வினையுடைய செல், ஈசல், எறும்பு, கரையான் முதலியன மூவறிவுடையன என்றும், இவற்றுடன் கண்ணுணர்வினை—ஒலியுணர்வினை உடையனவாகிய நண்டு, வண்டு, தும்பி, ஈ முதலியவை நான்கு அறிவு உடைய உயிர் என்றும், இந்நால்வகை உணர்வுகளோடு செவியுணர்வினை (ஒலியுணர்வினை)ப் பெற்று, உற்றும் உண்டும் உயிர்த்தும் கண்டும் கேட்டும் ஆடித் திரியும் பறவைகளும், விலங்குகளும் ஐயறிவுடைய உயிர் என்றும், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலன்களோடப் பேரவற்றல் வாய்ந்த மனம் என்னும் உணர்வினைப் பெற்றுச் சிறப்புற்றவை ஆறறிவுயிர் என்றும் பாகுபாடு செய்து, அவ்வவற்றிற்குரிய நுண்மையான இயல்புகளையும் பண்புகளையும் ஆராய்ந்து அறிந்திருந்தனர்.[2]

அறுவகைப்பட்ட உயிர்களுள் மக்களைத் தனியாகப் பிரித்து உயர்திணை உயிர் என்றும், ஏனைய ஐவகை உயிர்

1. தொல். புறத். 22
2. தொல். மரபு. 27—33

கள் அஃறிணை உயிர் என்றும் பழந்தமிழர் பிரித்து அறிந்தனர் என்பது, 'உயர்திணை என்பனர் மக்கள் சுட்டே' என்னும் தொல்காப்பிய நூற்பாவால் தெளிவாக விளங்குகிறது. "மக்களினத்துள் அடங்காமல், கடவுளாகிய முதற்பொருளுமாகாமல் இரண்டற்கும் இடைப்பட்ட நிலையில் தெய்வங்கள் காணப்படுகின்றன. இவை மக்களுயிர்போல் மனவுணர்வும், வினை செய்தலும், இன்ப துன்ப நுகர்ச்சியும் உடையவாய்ப் பிறத்தலும் இறத்தலும் செய்வன. இவற்றின் செயல் முறையும் வாழ்க்கையும் மக்களுயிரின் மேல் நிலையில் உள்ளன. 'தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவி' மக்கள் இனத்தன அல்லன வாகலின் 'இவ்வென அறியும் அந்தம் தமக்கு இல' என்றும், சொல்லுலகில் "உயர்திணை மருங்கின் பாற்பிரிந்து இசைக்கும்" என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்துரைக்கின்றார்.

பொருள்கள் உயிர் என்றும், மெய் என்றும் பிரித்து உயிருடம்பு உடலும் சேர்ந்தது உயிர்மெய் என்றும் மூவகையாகப் பகுத்தமையால், உயிர் என்பது தனிப் பொருள் என்றும், அது மெய்யோடு (உடலோடு) சேர்ந்து இயங்கும் தன்மையுடையது என்றும், உயிர் இல்லாத உடலில் இயங்காது என்றும் அறிந்திருந்தனர். உயிர்தான் உடலை இயங்கச் செய்கிறது என்னும் தெளிந்த மெய்யறிவின் பயனாகத் தமிழ்மொழியின் எழுத்துக்களில் தானே தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற எழுத்துக்கள் 'உயிர் எழுத்து' என்றும், தனித்து இயங்கும் ஆற்றலற்ற (உடல் போன்ற) எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் என்றும், தனித்து இயங்கும் உயிர், இயங்கும் ஆற்றலற்ற மெய்யொடு சேர்ந்து அதனை இயக்குவிக்கும்பொழுது 'உயிர்மெய்' என்றும் குறியீடுகள் தந்து வழங்கினர். "ஆய்தம் என்பது நுட்பமானது என்று பொருள்படும். எல்லா எழுத்தும் தோன்றுவதற்குக் காரணமாய் இருத்தலின் அதனைத் தனிப் பொருளாகிய கடவுளுக்கு ஒப்பிடுவார். 'தனி நிலை' என்றார். மெய்யானது சடவுலகில் ஒரு பகுதியாய் அதன் இயல்புடையதாய் இருத்தலின் அது ஒரு சிற்றுலகமாகும். உயிர் எழுத்தானது உயிரைக் குறிக்கும். எனவே, கடவுள், உயிர், உலகம் என்ற மூன்றுக்கும் குறிப்புச் சொற்கள் ஆதி இலக்கண நூலில் அமைந

ருத்தல் காண்க'[1] என்று பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் தமிழ் எழுத்துக்களின் பகுப்பு முறையில் மெய்யறிவியலின் கூறுகள் பொதிந்துள்ளதை விளக்கியுள்ளார். இதனால், உலகின் பகுதிகளில் வாழ்ந்தீ மக்கள் உடம்பினின்று உயிரை நன்கு பகுத்தறியாத காலத்தில், உயிரும் உடம்பும் வெவ்வேறு பொருள் என்று பண்டைத் தமிழர் பகுத்துணர்ந்ததோடு, அவற்றைத் தமிழ்மக்கள் அனைவரும் அறியுப்பொருட்டு இலக்கண நூலில் எழுத்துக்களுக்கு உவமை ஆகு பெயரால் உணர்த்தினர் என்பது புலனாகின்றது.

உடலிலிட்டுப் பிரிந்து உயிர்செல்லக்கூடியது உயிருக்கு உருவமும் நிறமும் கிடையாது. உயிர் மெய்யு (உடலு)டன் சேர்கின்றபொழுது உடலிற்குரிய பண்புகள் அனைத்தையும் பெற்று விளங்குகிறது.[2] அவ்வாறு உடலுடன் சேர்ந்து இயங்குகின்றபொழுது இன்பத்தினை விரும்பி நிற்கும் உயிர்களிடத்து வினைகள் தோன்றி நிலவுகின்றன.[3] மக்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்பப் பயன் அடைவது போல, உயிரும் வினைப்படியே அடைகின்றன. ஆகவே வினைப்பயனுக்கு ஏற்ப உயிர்கள் உடலையும் இன்ப துன்பத்தையும் பெறுகின்றன என்பது அக்காலத்திய தமிழறிஞர் எடுத்தியம்பிய கருத்துக்களாகும்.

ஊழ் :

"படைப்பில் ஒரு முறையான ஆட்சி இருந்துவருகின்றது. மண்ணிலும் விண்ணிலும் நிகழும் மாறுதல் நெடுங்காலமாகவே ஒருவகை ஒழுங்குக்கு உட்பட்டு நடந்து வருகின்றன. ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் கோள்களும் ஒழுங்காக இயக்கியும்இயங்கியும் வருகின்றன. காற்றும் மழையும் தட்பமும் வெப்பமும் மற்றவைகளும் ஒழுங்கு பெறவே அமைந்து வருகின்றன. ஓரறிவுயிர்கள் முதல் மக்கள் வரையில் பலவகை உயிர்களும் உடம்பெடுத்துப் பிறப்பது முதல் சாவது வரையில் எல்லாம் ஒருவகை ஒழுங்கு முறைக்கு உட்பட்டே நடந்து வருகின்றன.

---

1. தமிழர் சமயம் — பக். 76.77.
2. தொல். புறத். 16: பொருளி. 9: கிளவி. 18.
3. தொல். பொருளி. 29.

மக்கள் மனம் கொண்டு வாழும் வாழ்க்கையில் நிகழும் எழுச்சி, வீழ்ச்சி, உயர்வு, தாழ்வு, ஆக்கம், கேடு, நன்மை, தீமை, உடைமை, வறுமை, இன்பம், துன்பம் முதலிய பலவும் இவ்வாறே ஒழுங்கான முறையில் அமைந்து வருகின்றன. இந்த ஒழுங்கான ஆட்சி முறையை ஆராய்ந்து அறிவது அருமை; ஆனால் 'உண்டு என்று உணர்வது எளிது. இத்தகைய ஆட்சி முறையை "ஊழ்" என்று சான்றோர் குறித்து வந்திருக்கின்றார்கள்.[1]

தொல்காப்பியர் காலத்திய தமிழர் ஊழின் ஆற்றலை உணர்ந்ததோடு, அதன் ஆட்சியிலே அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். அன்பால், அறிவால் பண்பால் ஒத்த ஒருவன் ஒருத்தியாகிய இருவரிடையே உண்டாகும் காதல் பிணைப்பு ஊழ்வினையின் பயனாகத் தோன்றுவது என்று கருதினர்.[2] எல்லார்க்கும் இன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் (ஊழ்) வகுப்பது ஒரு தெய்வம் என்று நம்பினர். அதனைப் 'பால்வரை தெய்வம்' எனப் பெயரிட்டு வழங்கினர்.[3]

இவ்வாறு, மெய்யறிவு ஆராய்ச்சியின் முக்கியக் கூறுகளாகிய உலகம், உயிர், ஊழ் முதலியவற்றை நுட்பமாக ஆராய்ந்து தெளிந்த அறிவுடன் பண்டைத் தமிழர் 'ஆன்ம விசாரணை'யில் ஈடுபட்டிருந்தனர்.



1. மு. வ:- திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் பக். 410
2. தொல். களவு. 2
3. தொல். கிளவி. 58.